
## 64 Thiruvilaiyadal Puranam - 64 திருவிளையாடல் புராணம்

### 1. இந்திரன் பழிதீர்த்தப் படலம்!




ஒரு செயலைத் தொடங்கும் முன், அந்த செயல் பற்றிய முழு விபரங்களையும் தெரிந்து வைத்துக் கொண்டால், மிகவும் சிறப்புடையதாக இருக்கும். முன்பின் தெரியாத ஊருக்குச் செல்லும் போது, அந்த ஊர் பற்றிய விபரங்களை விபரமறிந்தவர்களிடம் கேட்டோ, இணையத் தளங்கள் மூலம் அறிந்தோ செல்வது அங்கு சென்று வர எளிதாக இருக்கும். புராணங்களைப் படிக்கும் முன்பும் அப்படியே. புராணக்கதைகளை மட்டும் படித்தால் போதாது. அதை எழுதியவர் யார், அவரைப் பற்றிய விபரம், எந்தச் சூழ்நிலையில் எழுதினார், அவரை எழுதத் தூண்டியவர்கள் யார் என்பது பற்றியும் தெரிந்து கொண்டால், படிப்பவர்களுக்கு அதுபற்றிய முழுமையான விபரமும் தெரியவரும். திருவிளையாடல் புராணம் இன்று துவங்குகிறது. கூடல்மாநகராம் மதுரையில் சிவபெருமான் செய்த அற்புதலீலைகளை ஹாலாஸ்ய மகாத்மியம் என்னும் வடமொழி நூலில் சொல்லியுள்ளார்கள். வியாசர் இயற்றிய ஸ்கந்த புராணத்தில் இந்த லீலைகள் சொல்லப்பட்டுள்ளன. நந்திதேவர் சனத்குமார முனிவருக்கு இந்த லீலைகள் பற்றி சொன்னார் என்றும், அதை வியாசருக்கு

சனத்குமாரர் சொன்னார் என்றும், வியாசர் அதை ஸ்கந்தபுராணத்தில் எழுதினார் என்றும் ஒரு தகவல் இருக்கிறது. ஹாலாஸ்ய மகாத்மியத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் பரஞ்சோதி முனிவர். அதை அப்படியே மொழி பெயர்க்காமல், தமிழுக்கே உரித்தான செய்யுள் நடையில் 3363 செய்யுள்களாக வடித்தார். இதில் முதல் 343 செய்யுள்கள் காப்பு, மதுரை நகர சிறப்பு உள்ளிட்டவற்றை உள்ளடக்கியது. 344 வது செய்யுள் முதல் தான் பெருமானின் திருவிளையாடல் துவங்குகிறது.
வேதாரண்யத்தில் வசித்த மீனாட்சி சுந்தர தேசிகரின் மகனே பரஞ்சோதி. தந்தையே குருவாக இருந்து, மகனுக்கு சைவ சித்தாந்த கருத்துக்களைப் போதித்தார். நீறிட்ட உடலுடன் வேதாரண்யத்து பெருமானை துதித்து வந்த பதஞ்சலி முனிவர் தமிழகத்திலுள்ள பிறகோயில்களையும் பார்க்க ஆவல் கொண்டார். மதுரையம்பதிக்கு வந்த அவர், மண்டபம் ஒன்றில் தங்கியிருந்த போது, அவரது கனவில் தோன்றிய அன்னை மீனாட்சி, சிவபெருமான் அந்நகரில் நிகழ்த்திய லீலைகளை அழகு தமிழில் பாடும்படி உத்தரவிட்டாள். அன்னையின் திருக்காட்சி கண்ட பரஞ்சோதி முனிவர் தெள்ளுதமிழில் இனிய பாடல்களை வடித்தார். அதுவே திருவிளையாடல் புராணம். இது 64 படலங்களைக் கொண்டது. முதல் 18 படலங்கள் மதுரை காண்டம் என்றும், 19 முதல் 48 வரையான படலங்கள் கூடற்காண்டம் என்றும், 49 முதல் 64 வரையான படலங்கள் திருவாலவாய் காண்டம் என்றும் பெயர் பெற்றுள்ளன.

பிரம்மா ஒருமுறை ஒரு தராசுத் தட்டில் கைலாயத்தை ஒரு தட்டிலும், மதுரையம்பதியை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்தார். அப்போது மதுரை இருந்த தட்டு தாழ்ந்தது. கயிலையை விட மதுரை மிகச்சிறந்த தலம் என்ற முடிவுக்கு வந்தார். அத்தகைய பெருமை பெற்ற மதுரை நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. திருவிளையாடல் புராணத்தை அரங்கேற்ற பரஞ்சோதி முனிவர் தயாராகி விட்டார். மக்கள் அனை வரும் சுந்தரேஸ்வர பெருமானின் திவ்ய லீலைகளைக் கேட்பதற்கு வரவேண்டும் பாண்டிய மன்னரின் சார்பில் பறையறைந்து தெரிவிக்கப் பட்டது. தேரோடும் வீதிகளை மக்கள் கோமயம் தெளித்து சுத்தமாக்கினர். அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டன. வாழை மரத் தோரணங்களை மக்கள் தங்கள் இல்லங்கள் முன்பு கட்டினர். இன்றைய சித்திரை திருவிழாவுக்கு நகரை அலங்கரிப்பது போல், மக்கள் வெகு விமரிசையான ஏற்பாடுகளை அவரவர் செலவில் செய்தனர். இந்த விபரத்தையறிந்து வெளியூர்களில் இருந்தெல்லாம் சிவனடியார்கள் மதுரையை மொய்த்தனர். எங்கும் சிவாய நம என்ற திருமந்திரம் ஒலித்தது. திருவிளையாடல் புராண அரங்கேற்றத்தை நடத்த பெரிய மண்டபம் வேண்டும், என்ன செய்யலாம் என யோசித்தனர் அமைச்சர்கள். கோயிலுக்குள் இருக்கும் ஆயிரங்கால் மண்டபத்தில் ஆயிரக்கணக் கான மக்கள் அமரலாம், மண்டபத்துக்கு வெளியேயும்

மக்களை கூடச் செய்யலாம் என்ற அடிப்படையில் மண்டபத்தை சீரமைத்தனர். அலங்கார மேடை ஒன்றில் பட்டுக் கம்பளம் விரிக்கப்பட்டு, பரஞ் சோதியார் எழுதிய திருவிளையாடல் புராண ஓலைச்சுவடிகள் வைக்கப்பட்டிருந்தன. பரஞ்சோதியார் விழா மேடைக்கு வந்தார். அப்போது திருச்சங்குகள் முழங்கின. முரசுகள் ஆர்ப்பரித்தன. மங்கல வாத்தியங்கள் முழங்கின. பாண்டிய மன்னர் பரஞ்சோதியாரை எதிர்கொண்டு வரவேற்று, பொன்னாடை போர்த்தினார். அனைவரும் அன்னை மீனாட்சியின் சன்னதிக்குச் சென்றனர். கற்பூரஒளியில் மரகதவல்லி மீனாட்சி தகதகவனெ ஜொலித்து ஆசிர்வதித்தாள். அடுத்து சுந்தரேஸ்வரப் பெருமானின் சன்னதிக்குச் சென்று, அரங் கேற்றம் மிகச்சிறப்பாக அமைய வேண்டினார் பரஞ்சோதி முனிவர். பின்னர் மண்டபம் திரும்பி, விநாயகப் பெருமானை மனதில் எண்ணி கணீர் என்ற குரலில் திருவிளையாடல் புராணத்தை சொல்ல ஆரம்பித்தார்.

சக்தியாய் சிவமாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதி செயச்
சுத்தியாகிய சொற்பொரு ணங்குள
சித்தி யானை தன் செய்பொற் பாதமே!
என்று விநாயகரை வணங்கிப் பாடினார்.

தொடர்ந்து மதுரையின் சிறப்பு, புராண வரலாறு ஆகிய முன்னுரைக்குப் பின், மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலுள்ள பொற்றாமரைக் குளத்தின் சிறப்பைச்சொன்னார். இந்தக் குளத்தைப் பார்த்தால் தர்மம் செய்த புண்ணியம் சேரும்.தீர்த்தத்தைத் தொட்டால் செல்வம் பெருகும். மூழ்கி எழுந்தால் மோட்சம்கிடைக்கும் என்றார்.

இந்திரன் பழிதீர்த்தப் படலம்

ஆசிரியரை மாணவர்கள் மதித்து நடந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக சிவபெருமானின் முதல் திருவிளையாடல் அமைந்தது. தேவலோகத்தின் அரசன் யார் என்றால் தேவேந்திரன் என்று பச்சைக்குழந்தை கூட பதில் சொல்லிவிடும். அவன் தேவேந்திரன் என்றாலும், அவனுக்கும் சட்டதிட்டங்கள் உண்டு. குறிப்பாக, தலைமை பொறுப்பில் உள்ளவன், சட்ட திட்டங்களை மதித்து நடக்க வேண்டும். தனது பொறுப்பில் பலர் இருக்கிறார்களே என்ற அக்கறை வேண்டும். இல்லாவிட்டால், பதவி பறிபோய் விடும். தேவேந்திரனுக்கும் ஒருநாள் அப்படியொரு நிலை வந்தது. பூலோகத்தில் புண்ணியம் செய்தவர்களே தேவர் என்ற அந்தஸ்தை அடைகிறார்கள். பூலோகத்தில் அவர்கள் அடைய நினைத்த

இன்பமெல்லாம் அங்கே கிடைக்கும். அதற்காக எதற்கும் ஒரு நேரம், காலம் உண்டல்லவா! அங்கும் நல்லநேரம், கெட்ட நேரமெல்லாம் உண்டு. தேவேந்திரனுக்கு ஒருநாள் கெட்ட நேரம் வந்தது பெண்களின் வடிவில்! தேவலோகத்தில் தேவர்கள் கூடிக்களித்திருக்க, நாட்டியத்தை ரசிக்க அப்சரஸ்கள் எனப்படும் தேவகன்னியர் உண்டு. அவர்களில் ரம்பா, ஊர்வசி, திலோத்தமா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களின் நடனத்தை ரசித்துக் கொண்டிருந்த தேவேந்திரன், பல அப்சரஸ்களின் அழகில் மயங்கி லயித்துக் கிடந்தான். அந்த நேரத்தில் தேவர்களின் குருவான பிரகஸ்பதி அங்கு வந்தார். இவர் யார் தெரியுமா? நவக்கிரக மண்டபத்தில் மஞ்சள் உடை உடுத்தி வடக்கு நோக்கி ஒரு சிற்பம் இருக்குமே! அந்த குரு பகவான் தான்! இவரது பார்வை ஒரு இடத்தில் பட்டாலே நல்லது நடக்கும். அதனால் தான் குரு பார்க்க கோடி நன்மை என்பார்கள்.

தேவேந்திரனுக்கு தான் கெட்ட நேரமாயிற்றே! இல்லாவிட்டால், பொறுப்புள்ள பதவியிலுள்ள ஒருவன், பெண்களுடன் பொது இடத்தில் கூடிக் களிப்பானா? மறைவிடத்து விஷயங்கள் பொது இடத்தில் நடந்தால், யாரால் கண் கொண்டு பார்க்க முடியும்! பிரகஸ்பதி, தேவேந்திரன் நிகழ்த்திய கூத்தைப் பார்த்து, அப்படியே கண்ணைப் பொத்திக் கொண்டார். குரு பார்வையை மூடினால், நிலைமை என்னாகும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. தேவேந்திரனுக்கு ஆரம்பமானது கெட்ட நேரம்.பிரகஸ்பதி, அப்படியே திரும்பிப் போய் விட்டார். தேவேந்திரன் தன் ஆட்டபாட்டத்தை முடித்துக் கொண்டு, தனது அந்தரங்க அறைக்குள் செல்லும் வேளையில், தேவர்களில் சிலர் அவனைப் பார்த்தனர். தேவேந்திரா! குருநாதர் பிரகஸ்பதி வந்திருந்தார். தாங்கள் அந்நேரத்தில் இருந்த நிலை கண்டு, கண் பொத்தி வெளியேறி விட்டார். உடனடியாக அவரைச் சந்தித்து, மன்னிப்பு கேளுங்கள். குருவின் ஆதரவு இல்லாவிட்டால் தங்களுக்கு மட்டுமல்ல! தங்களை நம்பியிருக்கும் எங்களுக்கும் சிரமம் வந்து சேரும், என்றனர். தேவேந்திரன் கதிகலங்கி விட்டான். குரு நிந்தை செய்தோமே! என்ன நடக்கப் போகிறதோ? உடனே அவரை சென்று பார்த்து வருகிறேன், என்று அவரது இல்லத்துக்கு தனது வெள்ளை யானையான ஐராவதத்தில் ஏறி விரைந்தான்.

குரு அங்கே இருந்தால் தானே! சிலருக்கு திருமணமாகாமலே இருக்கும். அதற்கு காரணம் என்ன தெரியுமா? குடும்பத்தினர் அல்லது முன்னோர் செய்த பாவத்தின் விளைவே அது. இவர்கள் மீது குருவின் பார்வை பட வேண்டுமானால், பெரும் பரிகாரங்களை எல்லாம் செய்தாக வேண்டும்! தேவேந்திரனின் பார்வையில், குரு படவே இல்லை. தனது தலைமை சீடனே இப்படியிருந்தால் மற்றவர்கள்

எப்படியிருப்பார்கள்? பெண் பித்தர்களான இவர்களுக்கு போய் பாடம் எடுத்தோமே என்ற வேதனையில் குரு மறைவான இடத்துக்குப் போய் விட்டார். தேவேந்திரன் அவரைத் தேடியும் காணாமல், அவன் பிரம்மாவைப் பார்க்க ஓடினான். குரு அபச்சாரம் செய்து விட்டதை அவரிடம் சொன்னான். பிரம்மா ஒரு யோசனை சொன்னார். தேவேந்திரா! குரு நிந்தனை கொடிய பாவம். இதற்கு தகுந்த பரிகாரம் செய்தால் தான் அவர் உனக்குத் தென்படுவார். அந்த பரிகாரத்தையும் நான் சொல்கிறேன் கேள். துவஷ்டா என்ற அசுரன் ஒரு மகனைப் பெற்றிருக்கிறான். அவனது பெயர் விஸ்வரூபன். அவனுக்கு மூன்று முகம். மிகவும் கொடியவன். ஆனால், ஆச்சார அனுஷ்டானங்களை சரியாகக் கடைபிடிப்பவன். அவனை உன் தற்காலிக குருவாக ஏற்றுக்கொள். வேறு வழியில்லை, என்றார். குரு பார்வை இல்லாவிட்டால் கெட்ட நேரம் விடவே விடாது. இந்திரன் அதற்கு விதிவிலக்கா என்ன! பெரியவர்கள் ஒன்றைச் சொன்னால், அதை நம்பிக்கையுடன் செய்ய வேண்டும்.

தன்னிலும் உயர் பதவியிலுள்ள, வேதநாயகனான நான்முகன் சொன்ன யோசனை இந்திரனுக்குப் பிடிக்கவில்லை. தேவலோகத்துக்கு ஒரு அசுரனை குருவாக நியமிக்கச் சொல்கிறாரே! இவருக்கு என்ன ஆயிற்று? என்று எண்ணியபடியே சென்றான். இருப்பினும், அவரது யோசனையை செயல்படுத்தாவிட்டால் அவரது பகையையும் சம்பாதிக்க நேரிடும். மேலும், தேவலோகத்துக்கு ஒரு குருவும் நிச்சயம் வேண்டுமே என்ற எண்ணத்துடன் விஸ்வரூபனை சந்தித்து அவனை வணங்கினான். என்ன இந்திரா! தேவலோகாதிபதி என்னைத் தேடி வந்திருக்கிறாய்! என்ன விஷயம்? என்றான். தங்களை குருவாக ஏற்க வந்துள்ளேன். தாங்கள் தேவலோக குரு பதவியை ஏற்க வேண்டும், என்றான். விஸ்வரூபனுக்கும் இதில் மனமில்லை. அசுரனான நாம், தேவர்களுக்கு குருவாக இருப்பதாவது! இருப்பினும், தானாக வலையில் வந்து சிக்கிய மானை விட்டு வைக்கலாமா! சிங்கமாக இருந்து இந்த தேவர்களை ஒரு வழி செய்து விட வேண்டும். ஏழு உலகிலும் அசுரக்கொடி பறக்க இதை விட அருமையான சந்தர்ப்பம் ஏது? என்று எண்ணி யவனாய், பதவி ஏற்க சம்மதித்தான். ஆக, மாணவனுக்கும் மனமில்லை, குருவுக்கும் வஞ்சக எண்ணம் என்ற ரீதியில் தேவர்கள் அசுரர்களின் கிடுக்கிப்பிடியில் சிக்கினர்.

ஒரு வழியாக விஸ்வரூபன் தேவர்களுக்கு குருவானான். தேவேந்திரனுக்கு தன் குலகுரு பிரகஸ்பதிக்கு செய்த துரோகம் மனதை அரித்துக் கொண்டே இருந்தது. அவரது அதிருப்தியில் இருந்து விடுபட்டு பாவம் நீங்குவதற்காக யாகம் ஒன்றை நடத்த எண்ணம் கொண்டான். தன்னுடைய விருப்பத்தை விஸ்வரூபனிடம் தெரிவித்தான். புதிய குரு விஸ்வரூபன் யாகம் நடத்த ஒப்புதல் கொடுப்பது போல

நடித்து, இதையே சந்தர்ப்பமாக்கி தேவேந்திரனை கொன்று தேவலோகத்தை நிரந்தரமாக கைப்பற்றி விடவேண்டும் என்ற எண்ணம் கொண்டான். ஒருவருக்கு குரு பார்வை இல்லாவிட்டால் துன்பங்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். தேவேந்திரனுக்கு இந்த யாகத்தின் மூலம் பெரும் துன்பம் வந்து சேர இருந்தது. யாகம் துவங்கியது. விஸ்வரூபன் யாகத்திற்கு தலைமை வகித்தான். யாக குண்டத்தில் நெய்யை வார்க்கும்போது, தேவர்குலம் தழைக்க வேண்டும் என்பதற்கு பதிலாக அரக்கர் குலம் தழைக்க வேண்டும் என்று சொல்லி நெய்யை ஊற்றினான். மந்திரங்களை மனதிற்குள் உச்சரித்தான். அவன் என்ன செய்கிறான் என்பதை யாராலும் அறிந்துகொள்ள முடியவில்லை. தேவேந்திரன் சுதாரித்துக் கொண்டான். தன் ஞானதிருஷ்டியால் எதிரே அமர்ந்திருக்கும் விஸ்வரூபன் குரு என்ற போர்வையில் தனக்கு எதிராக மந்திரங்களை உச்சரிக்கிறான் என்பதை தெரிந்துகொண்டான். அவனுக்கு கடும் கோபம் ஏற்பட்டது. தனது வஜ்ராயுதத்தை எடுத்து விஸ்வரூபன் மீது வீசினான். இந்திரனின் வஜ்ராயுதத்துக்கு தப்பியவர்கள் யாருமில்லை. விஸ்வரூபனின் மூன்று தலைகளையும் அது கொய்தது. அந்த தலைகள் மூன்று பறவைகளாக உருமாறி வானில் பறந்தது. எப்படியோ விஸ்வரூபனின் ஆவி பிரிந்துவிட்டது. ஏற்கனவே பிரகஸ்பதியின் சாபத்தை பெற்றுக்கொண்ட இந்திரன், இப்போது புதிய குருவான விஸ்வரூபனையும் கொன்றுவிட்டதால் பிரம்மஹத்தி தோஷம் (கொலை பாவம்)பற்றிக் கொண்டது. ஒருவருக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டால் அதற்கு மாபெரும்பரிகாரங்களை செய்தாக வேண்டும். அந்த பரிகாரங்களை எல்லாம் தேவர்கள்செய்தனர். இதன் மூலம் அந்த தோஷம் நீங்கியது. ஆனால் அசுரர்களின் பகையை அவன்அதிகமாக சம்பாதித்துக்கொண்டான்.

அவர்கள் வந்த காரணத்தை விளக்கினர். திருமால் இந்திரனிடம், தேவேந்திரா! திருப்பாற்கடலை கடைந்தபோது நீ உனது ஆயுதத்தை ததீசி முனிவரிடம் கொடுத்து வைத்தாய். ஆனால் அதை திரும்ப வாங்க மறந்துவிட்டாய். நீ வருவாய் என காத்திருந்த மகரிஷி வராமல் போனதால் அந்த ஆயுதங்களை விழுங்கிவிட்டார். அவை அனைத்தும் அவரது முதுகுத்தண்டில் சென்று சேர்ந்துவிட்டது. அந்த மகரிஷியிடம் வேண்டி அவரது முதுகுத் தண்டை பெற்று அதை ஆயுதமாக பயன்படுத்தி போரிட்டால் விருத்திராசுரன் மடிவான்.ஆனால் முதுகுத் தண்டை உனக்கு காணிக்கையாக கொடுத்துவிட்டால் மகரிஷி இறந்துவிடுவார். இனி அதை பெறுவது உன்னுடைய வேலை என்று சொல்லி ஆசீர்வதித்து அனுப்பினார்.தேவேந்திரன் ததீசி முனிவர் தவம்செய்துகொண்டிருந்த ஆசிரமத்திற்கு சென்றார். அவன் வந்த காரணத்தை அறியாத முனிவர் அவனை வரவேற்றார். ததீசி

முனிவருக்கு இந்திரன் தான் கொண்டு வந்த மங்கலப் பொருட்களை சமர்ப்பித்தான். பெரியவர்களைப் பார்க்க வெறும் கையுடன் செல்லக்கூடாது. பழம், பூமாலை முத லானவற்றை வாங்கிச் செல்வது உத்தமம். தேவேந்திரன் அதையே செய்திருந்தான். அவன் வந்த காரணத்தை ததீசி முனிவர் கேட்டார். தேவேந்திரா! திடீரென என்னைத் தேடி வந்த காரணம் என்ன?என்றார். ஒருவரிடம் எதை வேண்டுமானாலும் கேட்கலாம். ஆனால், முதுகுத்தண்டை கேட்பது என்றால்... முதுகுத்தண்டை சாதாரணமாகவா எடுக்க முடியும்? உயிர் பிரிந்தால் தானே அது சாத்தியம்... இருந்தாலும், நாராயணன் இப்படி சொல்லியிருக்கிறார் எனச்சொல்லி, அவரிடம் விஷயத்தை விளக்கினான் தேவேந்திரன். ததீசி முனிவரின் முகம் பிரகாசமானது. இப்படி ஒரு பாக்கியம் எனக்கா? தாராளமாக என் முதுகெலும்பை எடுத்துக் கொள் தேவேந்திரா. தேவர்களைப் பாதுகாக்க என் முதுகுத்தண்டு உதவுமென்றால் அதை விட வேறு என்ன பேறு எனக்கு வேண்டும்? என்று அகம் மகிழச் சொன்னார். உனக்காக உயிரையும் கொடுப்பேன் கண்ணே! என்று காதலன் காதலியிடமும், கணவன் மனைவியிடமும் வசனம் வேண்டுமானால் பேசலாம். ஆனால், அதற்கு தயாராக இருப்பவர்கள் எத்தனை பேர்? ததீசி மனப்பூர்வமாக சம்மதித்தார். பத்து உயிர் வாழ்வதற்கு ஒரு உயிர் போகிறது என்றால் அதுபற்றி கவலைப்படவே கூடாது. இங்கோ! முப்பத்து மூன்று கோடி தேவர்களின் உயிர், முனிவரின் முதுகுத்தண்டில் இருக்கிறது என்பதால், அவர் உளப்பூர்வமாக சம்மதித்தார். உடனடியாக, அவர் யோகாவில் ஆழ்ந்தார். அவரது பிராணன் பிரிந்தது. பிறருக்காக உயிர் விட்ட அந்த ஆவியை வானத்தில் இருந்து புஷ்பக விமானம் வந்து ஏற்றிக்கொண்டு சிவலோகம் நோக்கிச் சென்றது. இந்திரன், முனிவரின் முதுகுத்தண்டுடன் சென்று, விருத்திராசுரனுடன் போரிட்டான். அவனால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அசுரப்படைகள் முழுமையாக அழிந்து விட்டன. விருத்திரனுக்கு ஆச்சரியம். இப்படியும் ஒரு ஆயுதமா? இனியும் இவன் முன்னால் நின்றால் உயிரிழக்க நேரிடும் என்றெண்ணிய அவன் கடலுக்குள் போய், அங்கே ஏற்கனவே மறைந்திருந்த அசுரர்களுடன் போய் இணைந்து கொண்டான். தேவேந்திரன் பிரம்மாவிடம் ஓடினான். கடலுக்குள் மறைந் தவனை எப்படி பிடிப்பது என்று யோசனை கேட்டான்.

மகரிஷி அகத்தியரால் மட்டுமே அது முடியும். காவிரியையும், தாமிரபரணியையும் தன் கமண்டலத்துக்குள் அடக்கியவர் அவர். அவரைச் சந்தித்தால் இதற்கு விடிவு பிறக்கும், என்றார். இந்திரன் அகத்தியரைத் தேடிச் சென்று நமஸ்கரித்து வந்த விஷயத்தைச் சொன்னான். அதுபற்றி கவலை வேண்டாம், என அருள் பாலித்த அகத்தியர், அந்தக் கடலருகே சென்று உளுந்து அளவுக்கு மாற்றி, அதை உள்ளங்கையால் அள்ளி பருகி விட்டார். வற்றிப் போன கடலுக்குள் அசுரர்கள்

அங்குமிங்கும் ஓடினர். விருத்திராசுரனை நோக்கி முதுகுத்தண்டை வீசினான் தேவேந்திரன். அது அவனை விரட்டிச் சென்று தலையைக் கொய்தது. குரு நிந்தனை மிகவும் பொல்லாதது. எப்படி தெரியுமா? விருத்திராசுரன் மடிந்த அடுத்தகணமே கொலைப் பாவமான பிரம்மஹத்தி அவனைத் தொற்றிக் கொண்டது. குருவை ஒருமுறை அவமதித்ததால், அவன் தொடர்ந்து அவஸ்தைகளை அடைந்து வந்தான். இன்னும் அது தீர்ந்தபாடில்லை. நாராயணன், பிரம்மா ஆகியோர் இருந்தும், இரண்டு மகரிஷிகளின் உதவி இருந்தும் இப்படி ஒரு நிலை. அதனால் தான் தெய்வத்துக்கு முன்னதாக குருவுக்கு ஸ்தானம் கொடுத்தார்கள் பெரியவர்கள். கொலைப் பாவம் காரணமாக, இந்திரனுக்கு சித்த பிரமை ஆகி விட்டது. அவன் தரையில் உருண்டு புரண்டு அரற்ற ஆரம்பித்தான். பின்னர், ஒரு தாமரைத் தண்டுக்குள் சென்று அதனோடு ஐக்கியமாகி விட்டான். இப்போது தேவலோகத்தில் தலைமைப் பொறுப்பு காலியாகி விட்டது. தேவேந்திரன் போன இடம் தெரியவில்லை. இதனால் நகுஷன் என்ற தேவனை இந்தப் பதவியில் தேவர்கள் அமர்த்தினர். நகுஷன் பதவிக்கு வந்தவுடன் ஆட்டம் போட ஆரம்பித்து விட்டான். இந்திரப்பதவியில் இருக்கும் எனக்கு இந்திராணி சொந்தமாக வேண்டும் என்று வாதம் செய்ய ஆரம்பித்து விட்டான். இந்திராணிக்கு பல வகைகளிலும் தொந்தரவும் கொடுத்தான். இந்திராணி அதற்கு படியவில்லை.

ஒருநாள் இந்திராணியை தன் அந்தப்புரத்துக்கு இழுத்து வாருங்கள் என்று காவலர்களுக்கு உத்தரவு போட்டான். இந்த விஷயம் தேவகுருவிற்கு தெரிந்து விட்டது. ஆஹா... நம்முடைய பிடிவாதத்தால் இந்திராணிக்கு களங்கம் வரலாமா? அவளது கற்புக்கு பங்கம் வந்தால் நான் தானே பொறுப்பு, என்று முடிவெடுத்து, தேவலோகம் சென்றார். இந்திராணி அவரது பாதங்களில் விழுந்து, தன் கணவர் மீது கொண்ட கோபத்தை மறந்து விடும்படியும், தன் கற்பிற்கு பாதுகாப்பு கேட்டும் மன்றாடினாள். அவளது கண்ணீர் பிரகஸ்பதியைக் கரைத்தது. குரு பலம் குறைந்தவர்கள், நவக்கிரக சன்னதியில் உள்ள குருவிடம், கண்ணீர் விட்டு மன்றாடினால், இரக்க குணமுள்ள குரு, சோதனைகளைக் குறைப்பார் என்பது இதில் இருந்து நமக்கு கிடைக்கும் தகவல். குருதேவர், அவளை சமாதானம் செய்து, ராணி! கவலை படாதே. நகுஷன் உயர்பதவியில் இருக்கிறான், அவன் மாபெரும் வீரன் வேறு, அவனை அவ்வளவு எளிதில் யாராலும் அடக்க முடியாது. அந்த பராக்கிரமசாலியை அடக்க ஒரு உபாயம் சொல்கிறேன் கேள். அவனை ஒரு தங்கப்பல்லக்கில் அமர்ந்து, ஏழு ரிஷிகள் அதனை தூக்கி வர வேண்டும் என்றும், அவ்வாறு என்னை (இந்திராணி) காண வந்தால், நான் உமது மனைவியாவேன், என்று சொல்லியனுப்பு, என்றார். குருவின் கட்டளையை ஏற்ற இந்திராணியும் அவ்வாறே செய்தாள். நகுஷன் சப்தரிஷிகளை வரவழைத்தான். ஏ ரிஷிகளே! என்னை

இந்திராணியின் இருப்பிடத்துக்கு பல்லக்கில் அமர்த்தி தூக்கிச் செல்லுங்கள், என உத்தரவு போட்டான். பல்லக்கு புறப்பட்டது. அவர்களில், ஒரு ரிஷி மட்டும் சற்று மெதுவாகச் சென்றதால், மற்றவர்களும் மெதுவாக நடக்க வேண்டியதாயிற்று. நகுஷன் பல்லக்கில் இருந்தபடியே, மெதுவாகச் செல்பவன் யார்? என்று ஒருமையில் கத்தினான். அந்த முனிவர் அவனை எட்டிப்பார்த்தார்.

ஓ அகத்தியரா! இந்தக் குள்ளனால் தான் தாமதமா? அகத்தியரே! என் அவசரம் உமக்கென்ன தெரியும்? இந்திராணியை அடைய வேண்டும் என்ற விரகம் தாளாமல் அவதிப்படும் என்னைக் கொஞ்சமாவது புரிந்துகொண்டீரா? பருந்தைக் காணும் பாம்பு எப்படி வேகமாக ஊர்ந்து செல்லுமோ அதைப்போல் பல்லக்கை வேகமாகச் சுமந்து செல்லுங்கள், என உத்தரவிட்டான். அகத்தியர் சாதாரணமானவனரா? தன்னை அவமதித்த அந்த காமாந்தகாரனை விடுவாரா? நகுஷா! நீதிமுறை பிறழ்ந்து நெறிகெட்ட வார்த்தைகளைப் பேசினாய். உன் மோகத்தைத்தீர்க்க சப்தரிஷிகளான எங்களை பாம்பு போல் விரைந்து செல்லச் சொன்னாயே! அடேய், அந்தப் பாம்பாகவே நீ மாறுவாய். இப்போதே இறப்பாய்! என்றுசாபமிட்டார். பெரியவர்கள் நம்மைச் சுமப்பவர்கள். குடும்பத்தில் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்து, அவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு, இளையவர்களை வளர்ப்பவர்கள். அவர்களை நாம் மதிப்புடன் நடத்த வேண்டும். இல்லாவிட்டால் நகுஷனைப் போல் கடும் சாபத்துக்கு ஆளாகி, நம்மையே இழந்து விடுவோம். அகத்தியரின் சாபம் பொய்க்குமா? உடனடியாகப் பலித்து விட்டது. நகுஷன் பாம்பாக மாறி பல்லக்கில் இருந்து விழுந்து படமெடுத்து தன்னைச் சுற்றி நின்ற காவலர்களை கடிக்கச் சென்றான். உடனே காவலர்கள் அதைக் அடித்தே கொன்று விட்டனர். பாம்பு இறந்தது. அகத்தியரால் நகுஷன் மாண்ட செய்தி இந்திராணியை எட்டியது. தனது கற்புக்கு களங்கம் வராமல் காப்பாற்றிய அகத்தியரை அவள் மனதார வணங்கினாள். பின்னர் தேவகுரு பிரகஸ்பதி, தாமரை தடாகத்தில் மறைந்திருந்த இந்திரனைத் தேடிச் சென்று அவனை வரவழைத்தார். குரு பார்க்க கோடி நன்மை ஆயிற்றே! இந்திரன் தான் செய்த பாவத்துக்கு மன்னிப்பு கேட்டு அவரது பாதங்களைப் பற்றிக்கொண்டான்.

குருவே! அடியேன் தங்களைக் கண்டு கொள்ளாமல் இருந்ததன் விளைவை அனுபவித்து விட்டேன். தங்களுக்கு அவமானம் விளைவித்தும் அவற்றைப் பொருட்படுத்தாமல் என் மனைவியின் மானத்தைக்காப்பாற்றினீர்கள். தங்கள் கிருபை வேண்டும், என பிரார்த்தித்தான். பின்னர் பிரம்மஹத்தி தோஷம் நீங்குவதற்காக பூலோகம் சென்று அங்குள்ள புனிததீர்த்தங்களில் நீராடும்படியும், தேவர்கள் எல்லோருமே அங்கு செல்லலாம் என்றும் ஆலோசனை சொன்னார். அதன்படி

இந்திரனின் தலைமையில் புஷ்பக விமானத்தில் அனைவரும் பூலோகம் புறப்பட்டனர். பனிபொங்கும் கயிலைமலையில் இறங்கிய அவர்கள் சிவபெருமானையும், உமாதேவியையும் வணங்கி கேதாரம், காசி உள்ளிட்ட தலங்களைத் தரிசித்தனர். கங்கை, யமுனை, சரஸ்வதியில் நீராடினர். நாம் பூலோகத்தில் வாழ்கிறோம் என்றால் மிகவும் கொடுத்து வைத்தவர்கள். தேவர்கள் கூட அவர்கள் செய்த பாவம் நீங்க பூலோகத்து புண்ணிய தீர்த்தங்களை நாடித்தான் வர வேண்டியுள்ளது. ஆனால், அதன் அருமை தெரியாமல் நாம் ஆறுகளை பாழ்படுத்திக்கொண்டிருக்கிறோம். இனியேனும், நதிகளின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொண்டு அவற்றுக்குரிய மரியாதையைச் செய்ய வேண்டும். பின்னர் அவர்கள் கடம்பவனத்தை அடைந்தனர். அங்கே ஒரு லிங்கம் தென்பட்டது. அதைக் கண்ட இந்திரன் அவ்விடத்தில் ஒரு தாமரைக் குளம் இருந்ததையும் பார்த்தான். அந்த தீர்த்தத்தில் தங்கத் தாமரைகள் பூத்திருந்தன. அந்த லிங்கத்திற்கு பூஜை செய்த இந்திரன், தேவலோக சிற்பியான விஸ்வகர்மாவிடம், உடனடியாக லிங்கம் இருந்த இடத்தில் அழகிய விமானம் அமைக்குமாறு பணித்தான். எட்டு யானைகள் தாங்கும் அழகிய விமானத்தை விஸ்வகர்மா அமைத்தார். பலநாட்களாக அங்கேயே தங்கி இந்திரன் பூஜைகள் செய்தான். அவனது பிரம்மஹத்தி தோஷம் நீங்கி விட்டது. இறைவன் அவன் முன்னால் தோன்றி, இந்திரா! உன் மீதான சாபம் நீங்கியது. நான் இந்த தலத்தில் சொக்கநாதர் என்ற பெயருடன் எழுந்தருள்வேன். சோமசுந்தரர் என்றும் என்னை அழைப்பர். இத்தலத்துக்கு வருபவர்கள் தீராத பாவங்களும் நீங்கப்பெறுவர், என அருள் பாலித்தார். பின்னர் அனைவரும் தேவலோகம் சென்றனர். அங்கு சென்றதும், மற்றொரு புது பிரச்னை தோன்றியது.

## 2. வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம்!




இந்திரனின் வாகனமான ஐராவதம் அவனுக்காக காத்து நின்றது. கருடனால் பாம்பை பிடிக்க முடியும்... ஆனால், அது பரமசிவன் கழுத்தில் இருந்தால் கருடனால்நெருங்க முடியுமா! அதுபோல் தான் ஊரில் எத்தனை யானை இருந்தாலும் ஐராவத யானை வெள்ளை நிறம் என்பதால், அதற்கு மிகவும் கர்வம்.அகம்பாவிகளுக்கு என்றாவது ஒருநாள் அடி விழும். அப்படி ஒரு சோதனை ஐராவதம் யானைக்கும் ஏற்பட்டது. இந்திரன் தேவலோகம் வந்ததும், அவனை ஏற்றிக் கொண்டு இந்திரபுரிக்குள் அட்டகாசமாக நுழைந்தது. துர்வாசர் என்ற மகரிஷி இருந்தார். அவருக்கு ஒழுக்கம் ரொம்ப முக்கியம். சிறிது பிசகலாக பேசினாலோ, நடந்தாலோ கூட மூக்கு மேல் கோபம் வந்துவிடும். அப்படிப்பட்ட கோபக்காரரிடம் அந்த யானை மாட்டிக்கொண்டது. அன்று துர்வாசர் சிவபெருமானை மலர் தூவி வணங்கினார். அவரதுபக்திக்கு மகிழ்ந்த ஈசன், தன் ஜடையில் இருந்த பொற்றாமரை ஒன்றை கீழேவிழும்படி செய்தார். இறைவன் தந்த அந்த பிரசாதத்தை எடுத்து முனிவர் தன்கமண்டலத்தில் வைத்துக் கொண்டார். இந்திரனை தேவர்கள் ஆரவாரமாக அழைத்து வந்து கொண்டிருந்தனர். இவ்வளவு அடிபட்டும் இந்திரனுக்கு அலட்சிய குணம் மட்டும் மாறவில்லை. மேலும் விருத்திராசுரனையே வென்று விட்டோமே என்ற மமதையுடன் வந்தான். எதிரே வந்த துர்வாசர், அவன் நீடுழி வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் கமண்டலத்தில் இருந்த பொற்றாமரையை அவனிடம் கொடுத்தார். பிரசாதம் வாங்கும் போது பணிவு வேண்டும்.

இந்திரன் சற்றும் பணிவின்றி அந்த தாமரையை அலட்சியமாக வாங்கி அதை

யானையின் மத்தகத்தின் மீது வைத்தான். யானை அதை தும்பிக்கையால் எடுத்து கால்களில் போட்டு மிதித்து விட்டது. துர்வாசர் நெருப்பு பொங்கும் கண்களுடன் இந்திரனையும், யானையையும் பொசுக்கி விடுவது போல பார்த்தார். தேவேந்திரா... என்று அவர் கோபத்தில் எழுப்பிய சப்தம் அந்த பிரதேசத்தையே கிடுகிடுக்கச் செய்தது. விட்டது வினை என்று இங்கு வந்தால் இந்த துர்வாசரிடம் சிக்கிக் கொண்டோமே என்று இந்திரன் நடுங்கினான். அவன் எதிர்பார்த்தபடியே துர்வாசர் சாபமிட்டார். ஏ இந்திரா! கடம்பவன நாதனான எம்பிரானின் பிரசாதத்தையா அலட்சியம் செய்தாய்! அதை மரியாதையுடன் பெற்றிருந்தால், உன் நிலையே வேறு விதமாக இருந்திருக்கும்! ஆனால், கேடு கெட்ட இந்த யானையிடம் கொடுத்தாய். அது காலில் போட்டு மிதித்தது. தேவனாகிய நீ பூலோகத்தில் பாண்டிய மன்னன் ஒருவனிடம் தோற்றுப் போவாய். அவனுடைய சக்கராயுதம் உன் தலையைக் கொய்து விடும், என்றார். தேவேந்திரனும் தேவர்களும் நடுங்கி விட்டனர். யானையில் இருந்து குதித்த இந்திரன், ஐயனே! அறியாமல் செய்த பிழையை மன்னிக்க வேண்டும். ஏற்கனவே பிரம்மஹத்தி தோஷத்தால் பாதிக்கப்பட்டு பல்லாண்டுகள் பூலோகத்தில் வாடிக்கிடந்த நான் மீண்டும் பூலோகம் செல்வதா? அதிலும், ஒரு மானிடனிடம் தோற்றுப்போவதா? ஐயோ! இதை விட வேறென்ன கொடிய தண்டனையை நான் பெற முடியும்? தவங்களில் சிறந்தவரே! என்னை மன்னியும், என்றான். தேவர்கள் எல்லாருமே கிரீடங்கள் தலையில் பதியும்படி அவர் காலில் விழுந்து கிடந்தனர்.

துர்வாசர் இதுகண்டு மனம் மாறினார். கோபம் உள்ள இடத்தில் தானே குணமும் இருக்கும்! அவர் இந்திரனிடம், இந்திரா! கொடுத்த சாபத்தை திரும்பப் பெறஇயலாது. இருப்பினும், பாண்டிய மன்னன் பயன்படுத்தும் சக்ராயுதம் உன் தலையைக்கொய்ய வரும்போது, அது உன் கிரீடத்தை மட்டும் பறித்துச் செல்லும் நிலைவரும். தலைக்கு வருவது தலைப்பாகையோடு போகும், என்றவர் யானையைப் பார்த்தார். ஏ ஐராவதமே! பெரியவர்களிடம் பணிபுரிபவர்கள் தங்கள் அதிகாரத்தை தவறாகப்பயன்படுத்தக் கூடாது என்பதற்கு உன் வாழ்க்கை இந்த உலகத்துக்கு பாடமாகஇருக்க வேண்டும். உன் வெள்ளை நிறம் அழிந்து போகும். தேவலோக யானையான நீ பூலோகம் சென்று காட்டுக்குள் பிற யானைகளுடன் கலந்து, புழுதி படிந்து நூறாண்டு காலம் திரிவாய். பின்னர், இந்திர லோகத்தை அடைவாய், என சாபமிட்டார். வெள்ளை யானை கண்ணீர் வடித்தது. பின்னர் அது பூலோகம் வந்து பலஇடங்களிலும் சுற்றித் திரிந்தது. ஒருவழியாக நூறாண்டுகள் கடந்தன. பல வனங்களில் சுற்றிய அந்த யானை, கடம்ப வனத்துக்குள் புகுந்தது. அதுவே இந்திரனால் உருவாக்கப்பட்ட மதுரையம்பதி. அங்கிருந்த சொக்கலிங்கத்துக்கு அது பொற்றாமரைக் குளத்தில் இருந்து தும்பிக்கையில் தண்ணீர் எடுத்து வந்து அபிஷேகம் செய்தது. தங்கத் தாமரைகளைப்

பறித்து வந்து தூவி வழிபட்டது. அந்தயானையின் மீது இரக்கம் கொண்ட சொக்கநாதர் அதன் முன் தோன்றினார். ஐராவதமே! நீசெய்த சிவஅபச்சாரம் நீங்கியது. நீ இந்திரலோகம் திரும்பலாம்,என்றார். யானை சிவனிடம், எம்பெருமானே! இந்த வனத்தின் அழகில் நான் மெய்மறந்து விட்டேன்.மேலும் தங்களைப் பிரிய எனக்கு மனமில்லை. நான் இந்த வனத்திலேயே இருக்கிறேனே!தங்கள் விமானத்தை (கருவறைக்கு மேலுள்ள கோபுரம் போன்ற அமைப்பு) தாங்கும்யானைகளில் ஒன்றாக என்னையும் கொள்ள வேண்டும், என்றது. சிவபெருமான் அதனிடம், ஐராவதமே! இந்திரன் எனது பக்தன். அவனைச் சுமந்தால் என்னையே சுமப்பதுபோலாகும். நீ இந்திரலோகத்திற்கே செல், என்றார். மேலும், அதன் சுயவடிவத்தையும் தந்தார்.அந்த யானைக்கோ கடம்பவனத்தை விட்டு செல்ல மனமில்லை.அது கடம்பவனத்தின் ஒரு பகுதிக்குச் சென்று அங்கிருந்த ஒரு லிங்கத்திற்கு பூஜை செய்து அங்கேயே தங்கி விட்டது. வெள்ளை யானை வந்து தங்கிய அந்த இடத்துக்கு அதன் பெயரான ஐராவதநல்லூர் என்று அமைந்தது. பின்னர், இந்திரன் அந்த யானை பற்றி அறிந்து வந்து அதை அழைக்க வந்தான். சிவபெருமானிடம்யானையின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், தான் எழுப்பிய விமானம் தன்பெயரால் இந்திர விமானம் என அழைக்கப்பட வேண்டும் என்றும், வெள்ளை யானை தன்னைத் தாங்குவது போல், அந்த விமானத்தையும் ஐராவதமே எட்டு வடிவங்களில்தாங்குவது போன்ற தோற்றம் வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். அதன்படியே, எட்டு வெள்ளை யானைகள் மதுரை சொக்கநாதரின் விமானத்தை தாங்கியுள்ள காட்சியைஇப்போதும் காணலாம்.

## 3. திருநகரங்கண்ட படலம்!



மதுரை மாநகரம் இயற்கையாக எழுந்ததல்ல. அது உருவாக்கப்பட்ட ஒரு நகரம். அதை உருவாக்கி அருளியவரும் ஆலவாய் அழகனான சொக்கநாதனே! ஒரு காலத்தில், பாண்டியநாடு கடம்பவனங்கள் நிறைந்த வனமாக இருந்தது. அந்த வனத்துக்குள் ஏராளமான அருவிகள் இருந்தன. வனவிலங்குகள் வாழ்ந்த கொடிய காடு அது. இந்திரன் நிர்மாணித்து சென்ற சொக்கநாதர் திருச்சன்னதியை அஷ்டதிக்கஜங்கள் எனப்படும் எட்டு யானைகள் தாங்க, அந்தச் சன்னதி மட்டுமே காட்டுக்குள் இருந்தது. தனஞ்செயன் என்ற வணிகர் பாண்டியநாட்டில் வசித்து வந்தார். அவர் மாபெரும் சிவபக்தர். சிவனடியார்களை உபசரிப்பதில் ஆனந்தம் கொண்டார். வணிகம் செய்தததால், பெரும் செல்வந்தராகவும் திகழ்ந்தார். ஒருமுறை, அவர் வெளியூரில் வியாபாரத்தை முடித்து விட்டு, கடம்பவனத்துக்குள் புகுந்து வீடு நோக்கி நடந்தார். திடீரென வானம் இருண்டது. காட்டுக்குள் பாதை தெரியாத அளவு ஒளி சூழ்ந்தது. தனஞ்செயன் அசைவற்று நின்று விட்டார். என்ன செய்வதென தெரியவில்லை. அப்போது, மின்னல் வெட்டினாற்போல் ஓரிடத்தில் ஒளி தோன்றியது. தனஞ்செயன் ஒளி வந்த திசை நோக்கி நடந்தார். அங்கே, சொக்கநாதப் பெருமானின் விமானம் பளிச் சிட்டது.

உள்ளே பெருமான் ஜொலித்துக் கொண்டிருந்தார். இந்தக் கோயில் இங்கே எப்படி வந்தது? யார் கட்டியது? என்று தனஞ்செயனுக்கு குழப்பம். இந்திரனால் உருவான கோயில் அது என்பதை அவரால் எப்படி உணரமுடியும்? அருகில் இருந்த குளத்தில் பொற்றாமரைகள் பூத்துக் கிடந்தன? தங்கத்தில் தாமரையா? அவை தான்

ஒளிக்கீற்றைச் சிந்தி இங்கே வெளிச்சமாக இருக்கிறதா? அவர், சொக்கலிங்கத்தைப் பக்தியோடு வணங்கினார். திடீரென வாத்தியங்கள் முழங்கும் ஒலி கேட்டது. தனஞ்செயன் ஆச்சரியத்துடனும், அதிர்ச்சியுடனும் சப்தம் வந்த திசை நோக்கி திரும்பினார். ஏராளமானோர் பட்டாடைகள் பளபளக்க, தலையில் கிரீடங்களுடன், பூஜை பொருட்களை தங்கத் தாம்பாளத்தில் சுமந்தபடி வந்து கொண்டிருந்தனர். சொக்கலிங்கப் பெருமானுக்கு அவர்கள் பூஜை செய்ய ஆரம்பித்தனர். அப்போது தான் தனஞ்செயனுக்கு அவர்கள் தேவர்கள் என்பது புரிந்தது. வானத்து தேவர்களைக் காணும் பாக்கியம் எனக்கு கிடைத்ததே! அதிலும், அவர்கள் சிவபூஜை செய்வதைக் காண என்ன பாக்கியம் செய்தேனோ! அவரது உடல் சிலிர்த்தது. சில தேவர்கள் பொற்றாமரைக் குளத்தில் இறங்கிப் பூப்பறித்தனர். தனஞ்செயனும் தன்னையறியாமல் குளத்துக்குள் இறங்கி, அவர்களுக்கு பூப்பறித்துக் கொடுத்து உதவினார். அவர்கள் அவரை வாழ்த்தினர். பூஜை முடிந்ததும் தேவர்கள் அங்கிருந்து கிளம்பிச் சென்று விட்டனர். இந்த அதிசயம் குறித்து, நாடாண்ட மன்னர் குலசேகரப் பாண்டியனிடம் தெரிவித்தார் தனஞ்செயன்.

மன்னா! தாங்களும் அத்தகைய பூஜையைக் காண வேண்டும். நான் அந்த பூஜையை சோமவாரத்தன்று (திங்கள்கிழமை) கண்டேன். தாங்களும் அடுத்த சோம வாரத்தன்று அதைக் காண வரவேண்டும், என்று கேட்டுக் கொண்டார். மன்னனின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவனுக்கு தூக்கமே பிடிக்கவில்லை. அடுத்த சோமவாரம் எப்போது வருமென காத்து கொண்டிருந்தான். முதல்நாள் இரவு, பரபரப்புடன் இருந்த அவன், தூக்கம் பிடிக்காமல் இருந்தான். அதிகாலையில் தூக்கம் வந்துவிட்டது. அப்போது எழுந்த கனவில், சொக்கநாதர் அவன் முன்னிலையில் தோன்றி, குலசேகரா! தனஞ்செயன் கண்டது உண்மையே. நீ கடம்பவனத்தை சீர்திருத்தி ஒரு நகரமாக மாற்று. என் கோயிலை அடையாளமாகக் கொண்டு, அது நடுவில் இருக்க நகரம் சிறப்புற அமைய வேண்டும். வீதிகள், வீடுகள், மாளிகைகள் அமைய வேண்டும், என்று கட்டளையிட்டார், திடுக்கிட்டு எழுந்த மன்னன், உடனடியாக அமைச்சர்கள், படைகள் புடைசூழ, தனஞ்செயன் வழிகாட்ட காட்டுக்குள் சென்றனர். அங்கே எட்டு யானைகள் விமானத்தை தாங்க, அதன் கீழ் சொக்கநாதர் அருள்பாலித்துக் கொண்டிருந்தார். அனைவரும் சொக்கநாதரைச் சேவித்தனர். உடனடியாக விக்னேஸ்வர பூஜை நடந்தது. நகரம் கட்டும் பணியைத் துவங்கினான் மன்னன். அர்த்தமண்டபம், உற்சவ மண்டபம், வேள்வி மண்டபம், மடப்பள்ளி முதலானவை அமைத்தான். பின்னர் கோயிலைச் சுற்றி மாடமாளிகைகள், பெரிய வீடுகள், வீதிகள் ஆகியன அமைக்கப் பட்டன. பார்க்க மிக அருமையாக இருந்தது அந்த நகரம். உடனடியாக, கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடு செய்து சிறப்பாக முடித்தான். சிவபெருமான் அங்கே எழுந்தருளினார்.

தனது ஜடாமுடியில் அணிந்திருந்த சந்திரனின் கலைகளில் (பிறை) ஒன்றை நகரத்தில் சிந்தினார். எனவே அது ஒளி பெற்றது. சந்திரனே மனதிற்கு அதிபதி. மனதிடத்தை வழங்குபவர். அதனால், நகரில் வசித்த மக்கள் மனோதிடம் பெற்றனர். சந்திரனை பார்த்தால் மனம் இனிக்கும். இனிப்பை மதுரம் என்றும் சொல்வர். மதுரம் சிந்திய அந் நகரத்துக்கு மதுரை என்று பெயர் சூட்டினான் குலசேகரப்பாண்டியன். பின்னர் பலகாலம் அந்நாட்டில் செங்கோல் ஆட்சி நடத்தினான்.

## 4. தடாதகைபிராட்டியாரின் திருஅவதாரப் படலம்!




குலசேகர பாண்டியன் மதுரை நகரை நிர்மாணித்ததன் பலனாக அழகான மகனையும் பெற்றான். அவனுக்கு மலையத்துவஜன் என்று பெயரிட்டான் குலசேகரபாண்டியன். அந்த மன்னனின் மகளாக தன் மனைவி பார்வதிதேவியையே அவதரிக்கச் செய்தார் சிவபெருமான். ஆம்... அவளே தடாதகை பிராட்டி எனப்படும் மீனாட்சி. அவள் மலையத்துவஜனின் மகளாகப் பிறந்தது சுவை மிக்க வரலாறு. மலையத்துவஜனின் மனைவி காஞ்சனமாலை. இவள் இவ்வுலகில் தோன்றிய உயிர்களில் வித்தியாசமானவள். மனித நிலையில் இருக்கும் நம்மை, நாளையே கடவுள் அழைத்து, இன்று முதல் நீ தேவலோகத்தில் தேவனாக இருப்பாய், என்று சொன்னால், நாம் அடையும் ஆனந்தத்துக்கு அளவே இருக்காது. மனித நிலையில் தேவநிலைக்கு உயர்வதையே உயிர்கள் விரும்பும். ஆனால், காஞ்சனமாலை இதற்கு நேர் எதிரானவள். அவள் தனது முந்தையப் பிறவியில் மனித குலத்தை விட உயர்ந்த கந்தர்வ குலத்தில் பிறந்தாள். அந்தப் பிறவியில் இருந்து, தன்னை மனித குலத்திற்கு தாழ்த்திக் கொண்டாள். அப்போது அவளது பெயர் வித்யாவதி. இவளது தந்தை விசுவாவசு. இவளுக்கு அம்பிகையின் மீது பிரியம் அதிகம்.

தந்தையே! அம்பிகையை நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற வேண்டும், தாங்கள் தான் அதற்கு உதவ வேண்டும், என்றாள். விசுவாவசு அவளுக்கு சக்தி மந்திரத்தை உபதேசித்து, அதையே தொடர்ந்து பக்தியுடன் சொல்லி அம்பாளைக் காணும் பாக்கியத்தை பெறலாம் என்றார். அடுத்து அம்பாளைத் தரிசிக்க உகந்த இடம் எது எனக் கேட்டாள் வித்யாவதி. பூலோகத்தில் துவாதசாந்தம் என்று புகழ் பெற்றதும், கடம்பமரங்கள் நிறைந்த வனத்திலுள்ளதுமான மதுரை என்னும் புண்ணிய ÷க்ஷத்ரத்தில், யார் ஒருவர் அம்பாளைத் தரிசிக்கிறார்களோ, அவர்கள் பாக்கியசாலிகள்,என்றார் விசுவாவசு. தந்தையிடம் அனுமதி பெற்று கந்தர்வக்கன்னியான வித்யாவதி பூலோகம் வந்தாள். மதுரை ÷க்ஷத்ரத்தில் குழந்தை வடிவில் அருள்பாலித்த சக்திதேவியை வணங்கி வந்தாள். தந்தை உபதேசித்த மந்திரத்தை இடைவிடாது சொன்னாள். ஒரு ஆண்டு வரை கடுமையான விரதம் அனுஷ்டித்த அவளது பக்திக்கு அம்பாள் இரங்கினாள். வித்யாவதியின் முன்பு மூன்று வயது குழந்தையின் வடிவில் காட்சி தந்தாள். தாயே என அழைத்தாள். வித்யாவதி நெகிழ்ந்து போனாள்.

அம்மா மீனாட்சி! நான் உன்னை குழந்தையாகக் கருதி என் மனதால் பாராட்டினேன், சீராட்டினேன், நீராட்டினேன், அழுது அடம்பிடித்த உன்னை பொய்க்கோபம் கொண்டு கண்டித்தேன், பாலூட்டினேன், ஜடை முடிந்து பின்னலிட்டேன். இத்தனையும் கற்பனை தான் என்றாலும், இந்த எளிய பக்திக்கும் அகமகிழ்ந்து காட்சி தந்தாயே! பிறந்த பயனை அடைந்தேன், என்றாள் வித்யாவதி. குழந்தை மீனாட்சி சிரித்தாள். தாயே! பக்தர்கள் எனக்கு கொண்டு வரும் ஆடம்பர காணிக்கைகளால் நான் மகிழ்வதில்லை. கால் கடுக்க காத்திருப்பதால் மட்டும் என்னை அடைந்து விட முடியாது. இருந்த இடத்தில் இருந்தபடியே, உன்னைப் போல் மானசீகமான பக்தியை செலுத்துவதையே நான் விரும்புகிறேன். அவர் களுக்கு காட்சி கொடுப் பதையே பெருமையாகக் கருதுகிறேன். சரி...நீ ஏதாவது என்னிடம் கேள். வரம் தருகிறேன், என்றாள். தெரிந்தோ தெரியாமலோ உன்னை என் பிள்ளையாகக் கருதிவிட்டேன். அந்தப்பிணைப்பை என்னால் விட முடியாது. இந்த நிலை தொடர வேண்டும். இதைத் தவிரஎன்னிடம் எந்தப் பிரார்த்தனையும் இல்லை, என்றாள் வித்யா. இதுகேட்டு அகம் மகிழ்ந்த மீனாட்சி, அம்மா! அடுத்த முறை நீ மானிட ஜென்மம் எடுப்பாய்.சோழராஜனின் மகளாகப் பிறக்கும் உன்னை, மலையத்துவஜ பாண்டியன் திருமணம் செய்வார்.

உங்கள் இல்லத்தில் நான், இதே மூன்று வயதுக் குழந்தையாய் அவதரிப்பேன், என்று சொல்லி வித்யாவதிக்கு நல்லாசி கூறி மறைந்தாள். வித்யாவதி நினைத்திருந்தால், கந்தர்வ நிலையில் இருந்து தேவநிலைக்கு உயர்ந்து சக்திலோகத்திலேயே

இருந்திருக்கும்படியான வரம் கேட்டிருக்க முடியும். ஆனால், அவள் மானிடப்பிறவி பெற்றதன் மூலம், தெய்வத்திற்கே தாயான பெருமையைப்பெற்றாள். ஈசனுக்கு மாமியாராகும் தகுதியும் கிடைத்தது. மீனாட்சியின்அருள்வாக்கின் படி, அவள் சோழமன்னன் சூரசேனனின் மகளாகப் பிறந்தாள்.மலையத்துவஜ பாண்டியனை மணம் செய்தாள். நீண்ட காலமாயிற்று. அவர்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. தனக்குப் பிறகு நாடாள வாரிசு இல்லையே என்ற கவலை மன்னனை உருக்கியது. அவன் பல யாகங்கள் செய்தான். கோயில்களுக்கு கும்பாபிஷேகம் செய் வித்தான். கடைசியாக, அஸ்வமேதயாகம் செய்வதென முடிவுசெய்தான். இதன்மூலம் சகல லோகங்களும் தனக்கு அடிமை படுவதுடன், குழந்தை பாக்கியமும் சித்திக்கும் எனக் கருதினான். யாக ஏற்பாடுகள் ஜரூராக நடந்தது. வெற்றிகரமாக யாகம் நடந்து விடும் என்ற நிலை வந்ததும், தேவ லோகத்தில் இருந்த இந்திரனுக்கு பயம் வந்து விட்டது. யாகம் வெற்றி பெற்றால், மலையத்துவஜன் இந்திரலோகத்தையே கைப்பற்றி விடுவான். தன் பதவி போய்விடுமே என்று கவலையடைந்தான். ஒருநாள், மலையத்துவஜனின் முன்பு தோன்றினான்.

ஆச்சரியமடைந்த மலையத் துவஜன், ஐயனே! தாங்களே எங்கள் மதுரை நகருக்கு நேரில் வந்தீர்களா! நான் என்ன பாக்கியம் செய்தேன், என்று உபசார வார்த்தைகள் சொல்லி வரவேற்றான். இந்திரன் அவனிடம், மாமன்னனே! குழந்தை வேண்டும் என்பதே உனது கோரிக்கை. அதற்கு அஸ்வமேதயாகம் பலன் தராது. நீ பல யாகங்கள் செய்தாலும் புத்திரகாமேஷ்டி யாகம் செய்யத் தவறிவிட்டாய். அந்த யாகத்தை நடத்து. உனக்கு பராசக்தியே மகளாக அவதரிக்க காத்திருக்கிறாள். முற்பிறப்பில், உன் மனைவி செய்த புண்ணியத்தால் கிடைத்துள்ள பாக்கியம் இது, என்று சொல்லவும், அஸ்வமேத யாக திட்டத்தைக் கைவிட்டு, புத்திரகாமேஷ்டி யாகம் செய்வதற்கு ஒப்புக் கொண்டான் மன்னன். இந்திரனும் பயம் நீங்கி விடை பெற்றான். புத்திர காமேஷ்டி யாகம் தொடங்கியது. இந்த தகவல் பட்டமகிஷி காஞ்சனமாலைக்கும் தெரியவரவே அவளும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. கண்டோர் வியக்கும் வேள்விச்சாலை ஒன்றை அமைத்தான் மலையத்துவஜன். யாகம் கோலாகலமாகத் துவங்கியது. நாட்டுமக்கள் தங்கள் வாரிசை எதிர்பார்த்து ஆவலுடன் யாக பூஜையில் கலந்து கொண்டனர். மலையத்துவஜனும், காஞ்சனமாலையும் புனிதநீராடி, வேப்பிலை மாலை சூடி யாக குண்டத்தின் முன் அமர்ந்தனர். யாக குண்டத்தில் பல்வகை பொருட்கள் போடப் பட்டன. குடம் குடமாக நெய் ஊற்றப்பட்டது. வேள்விப்புகை மதுரை நகரெங்கும் பரவியது. இந்திரன் அந்த யாகத்தின் பலனைப் பெற்றுக் கொண்டு, அதற்கேற்ப பலனும் அளித்தான். அப்போது யாகசாலையில் பூமழை பொழிந்தது. மன்னனுக்கு வலது தோளும் வலது கண்ணும் துடித்தன.

ஆண்களுக்கு வலது கண், வலது தோள் துடித்தால் சுபமான நிகழ்ச்சிகள் ஏற்படும். பெண்களுக்கு இடது கண் துடித்தால் அது சுபசகுனம். அதற்கேற்பு காஞ்சனமாலைக்கு இடது கண் துடித்தது. அப்போது அந்த இடமே பிரகாசமானது. யாக குண்டத்தில் எரிந்த அக்னியின் மத்தியில், பளிச்சென வெளிச்சம் உண்டானது. அதன் மத்தியில் பச்சை நிறத்தில் மூன்று வயதுடைய ஒரு பெண் குழந்தை, நின்ற நிலையில் தோன்றியது. ஆம்... தெய்வத்தாயான மீனாட்சி பூமியில் அவதரித்து விட்டாள். காஞ்சனமாலை என்னும் பெண் தெய்வம் மதுரை மக்களுக்கு கொடுத்த மற்றொரு தெய்வம் அவள். மதுரைக்கு போகிறவர்கள் மீனாட்சியை மட்டும் வணங்கினால் போதாது. அவள் இந்த பூமியில் அவதரிக்க காரணமான காஞ்சனமாலையையும் வணங்கி வர வேண்டும். கோயில் கிழக்குவாசல் எதிரேயுள்ள புதுமண்டபத்தைக் கடந்தால் வரும் எழுகடல் தெருவில் இந்த அம்மைக்கு தனிக் கோயில் இருக்கிறது. அந்தக் குழந்தையைக் கண்டு அகமகிழ்ந்தாள் காஞ்சனா. அவளது மார்பில் தன்னையறியாமல் பால் சுரந்தது. அனலில் உதித்த அந்தச் சிறுமியின் கண்கள் கயல் என்னும் மீனுக்கு சமமாக நீண்டு பெரிதாக மிக அழகாக இருந்தது. என் அம்மையே, அங்கயற்கண்ணியே என அவள் அழைத்தாள். அம்+கயல்+கண்ணி என்பதே அங்கயற் கண்ணி ஆனது. அம் என்றால் அழகிய, கயல் என்றால் மீன். கண்ணி என்றால் கண்களையுயைடவள். அங்கயற்கண்ணி என்றால் அழகிய கண்களை உடையவள் என்று பொருள். இன்னொரு பொருளும் இதற்கு உண்டு.மீனுக்கு தனது பார்வையாலேயே குஞ்சுகளுக்கு இரையூட்டும் சக்தியுண்டு. அதுதனது கண்களை இமைப்பதே இல்லை. நாமே கூட பார்க்கலாம். மீனை தண்ணீரை விட்டுவெளியே தூக்கிப் போட்டு அது இறந்துவிட்டாலும் சரி தான். அதன் கண்கள்மட்டும் திறந்தே இருக்கும். ஆக, ஒரு கணம் கூட இமைக்காமல் மக்களை பாதுகாப்பவள் என்ற பொருளும் இதற்குண்டு. அதனால் தான் மீனின் ஆட்சிமதுரையில் நடக்கிறது. அன்னையையும் மீனாட்சி என்கிறோம்.

மலையத்துவஜன் மகளை வாரியணைத்தான். அதன் பட்டுக்கன்னங்களில் முத்தமழை பொழிந்தான். பட்டுத்துணி ஒன்றை குழந்தை மீது போர்த்தி மார்பில் சுரந்த பாலை தன் மழலைக்கு ஊட்டி பேரின்பம் கண்டாள் காஞ்சனமாலை. பாலூட்டி முடித்ததும் தன் குழந்தையின் முக அழகைப் பார்த்து பூரித்துப் போன காஞ்சனையின் கண்கள் சற்றே கீழிறங்க, அப்படியே அதிர்ச்சியில் ஆழ்ந்து விட்டாள். என்ன இது! உலகில் யாருக்குமே இல்லாத அதிசயம். ஐயோ! குழந்தைக்கு இரண்டு மார்புகள் தானே இருக்க வேண்டும், மூன்றாவதாக ஒரு தனம் இருக்கிறதே. இதென்ன கொடுமை. ஐயோ பராசக்தி! நீயே என் மகளாகப் பிறந்தாய். உன்னைப் பெற்றுமா நான்

துன்பத்தில் ஆழ வேண்டும்! சற்றுமுன் வரை இருந்த இன்பம் ஒரே நொடியில் தூளாகி விட்டதே, காஞ்சனா புலம்ப, மலையத்துவஜன் பதட்டத்துடன் என்ன ஏதென்று விசாரித்தான். விஷயத்தை அறிந்ததும் அவனது முகமும் சோகத்தில் ஆழ்ந்தது. ஆனாலும், அவர்கள் இதை வெளிப்படுத்த வில்லை. குழந்தையை எடுத்துக்கொண்டு சுந்தரேஸ்வரர் கோயிலுக்குச் சென்றனர். சன்னதியில் குழந்தையை கிடத்தி, ஐயனே, மழலைச்செல்வம் இல்லாத எங்களுக்கு குழந்தை தந்தாய். ஆனால், பிறந்த குழந்தை இப்படியிருக்கிறதே! இதனால், அவளது எதிர்காலமே பாதிக்குமே! என்ன செய்வேன்! என உருக்கமாக சுவாமியிடம் பேசினான் மலையத்துவஜன். அப்போது அசரீரி ஒன்று அவர்களுக்கு மட்டுமே கேட்கும் வகையில் ஒலித்தது.

மலையத்துவஜா, காஞ்சனா! நீங்கள் இருவரும் இதுபற்றி கவலை கொள்ள வேண்டாம். இவள் அன்னை பராசக்தியின் அவதாரம். இவள் பருவம் எய்தி திருமணம் நடக்க இருக்கும் வேளையில், இந்த தனம் மறைந்து விடும். எனவே இதுபற்றி நீ கவலை கொள்ள வேண்டாம். இவளுக்கு தடாதகை என்று பெயரிடுங்கள், என்றது. இறைவனே உத்தரவாதம் கொடுத்தபிறகு என்ன பயம். தம்பதியர் பயம் நீங்கி சுவாமிக்கு நன்றி தெரிவித்தனர். குழந்தை பிறந்த விழா பாண்டியநாடெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. மதுரை நகரம் விழாக்கோலம் பூண்டது. மன்னன் தன் மக்களுக்கு தானதர்மம் செய்தான். காஞ்சனமாலை சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம், பட்டுப்புடவைகளை தானமாக அளித்தாள். நீண்டதூரம் வரிசையில் நின்ற மக்கள் இந்த தானத்தைப் பெற்று மகிழ்ந்தனர். மன்னர்கள் மகிழ்ச்சியாக இருக்கும் வேளையில் மக்களுக்கு தாராளமாக சலுகைகள் கிடைக்கும். மலையத்துவஜனின் ஆட்சியில் வரிகள் குறைக்கப்பட்டன. கைதிகள் விடுதலை செய்யப் பட்டனர். புலவர்கள் கவுரவிக்க பட்டனர். பல இடங்களில் மக்களின் தாகம் தீர்க்கவும், விவசாயத்தை அதிகரிக்கவும் குளங்கள் வெட்டப்பட்டன. மீனாட்சி பிறந்தவுடனேயே பாண்டியநாட்டு மக்கள் மிகுந்த மகிழ்வுடன் வாழ ஆரம்பித்து விட்டனர். மன்னன் பெயர் சூட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்தான். இறைவனின் உத்தரவுப்படி தடாதகை பிராட்டியார் என்று பெயர் சூட்டினர். தடாதகை என்றால் என்ன? அவள் ஏன் மூன்று தனங்களுடன் இந்த பூமியில் பிறந்திருக்க வேண்டும்? தடாதகை என்றால் எல்லா வகையிலும் மாறுபட்டவள் என்று பொருள். அவள் முக்கண்ணனாகிய சிவனுக்கு வாழ்க்கைப்பட இருந்தாள்.

அவருக்கு தன்னை வித்தியாசமான முறையில் காட்டிக்கொள்ள அவரைப் போலவே மூன்று தனங்களுடன் பிறந்தாள். தமிழ் வளர்த்த மதுரையை ஆளப் போவதால் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழைக் குறிக்கும் வகையில் மூன்று

தனங்களுடன் பிறந்தாள் என்றும் சொல்வார்கள் அறிஞர்கள். அகரம், உகரம், மகரம் (அ,உ,ம) என்னும் எழுத்துக்களின் கோர்வையே ஓம் என்னும் பிரணவமாகும். அவளை பிரணவத்தின் வடிவம் என்றும் குறிப்பிடலாம். இப்படி, செல்வாக்கோடு பிறந்த மகள் செல்வாக்கோடு வளர்ந்தாள். அந்த மகள் பருவத்துக்கு வந்ததும் அவளைமதுரையின் மகாராணியாக பட்டாபிஷேகம் செய்து வைத்தான் மலையத்துவஜன். அவளது ஆட்சியில் காலாகாலத்தில் மழை பொழிந்தது. நீதி தவறாத ஆட்சி, தர்மத்தில் உயர்ந்த ஆட்சி என்று மக்கள் புகழ்பாடினர். மலையத்துவஜ மன்னன் தனது மகளிடம், நீ எட்டுத்திக்கும் சென்று எல்லா நாடுகளையும் உனதாட்சியின் கீழ் கொண்டு வர வேண்டும், தேவர் உலகமும் உனக்கு அடிமைப்பட வேண்டும். உன்னிலும் வீரமிக்கவர் உலகில் இல்லை என்ற நிலை வர வேண்டும், என்றான். தடாதகை பிராட்டியாரும் அவ்வாறே செய்தாள். இதனிடையே மலையத்துவஜமன்னன் நோய்வாய்ப்பட்டான். தன்னுடைய இறுதிக்காலம் நெருங்குவதை உணர்ந்த அவன் மந்திரி சுமதியை அழைத்து,மந்திரியாரே! அரசியாரைப் பற்றிய ரகசியம் ஒன்றைச் சொல்கிறேன். இதை உம்மைத் தவிர யாருக்கும் தெரிய வேண்டாம், எனச் சொல்லி, மூன்று தன ரகசியத்தையும், கயிலாசநாதனாகிய சிவபெருமான் அவள் முன் தோன்றியதும், ஒரு தனம் மறையுமென்பதையும், அவர்களுக்கு திருமணம் நடக்கும் என்ற விபரங் களையும் சொன்னான். பின்னர் அவனது உயிர் பிரிந்தது.

## 5. தடாதகையாரின் திருமணப் படலம்!



உலகத்துக்கே ஒரு தாயை ஈன்றெடுத்துக் கொடுத்த காஞ்சனமாலையும், உலகத்தாயான தடாதகைபிராட்டியும் தங்கள் குல தலைமையை இழந்து அடைந்த கவலைக்கு அளவே இல்லை. அவருக்குரிய ஈமச்சடங்குகளை தடாதகையே முன்னின்று செய்தாள். தந்தையில்லாத வீடு... மகளுக்கு திருமணம் செய்து வைத்துவிட்டால் வீட்டுக்கு மருமகன் வந்துவிடுவார். தடாதகையை நல்லபடியாக பார்த்துக் கொள்வார். இவளுக்குதிருமணம் செய்து வைத்துவிட்டால் நல்லதென முடிவெடுத்து, மகளிடம் சொன்னாள் காஞ்சனமாலை. மகள் அவளிடம், அம்மா! ஒரு தாயாக இருந்து உனக்குரிய கடமையை நீசொன்னாய். ஆனால், தந்தைக்கு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவது எனது கடமை. தந்தையார் என்னிடம் சொன்னபடி நான் உலகமெங்கும் சுற்றி, அனைத்து தேசங்களையும் என் ஆட்சியின் கீழ் கொண்டு வரவேண்டியிருக்கிறது. நீ என்னை வாழ்த்தி வழியனுப்பு! திரும்பி வந்ததும், உன் விருப்பப்படியே திருமணம் நடக்கும், என்றாள். மகளின் விருப்பத்திற்கு தாயும் குறுக்கே நிற்கவில்லை. அமைச்சர் சுமதி போருக்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். போர்க்கோலம் பூண்ட தடாதகை பிராட்டி, தாயிடம் நல்லாசி பெற்று புறப்பட்டாள். தாரை, தப்பட்டை ஆர்ப்பரிக்க, சங்குகள் முழங்க அவளது நால்வகைப் படையும் கிளம்பியது.

இவர்களது படையைப் பார்த்தவுடனேயே எதிரிகளெல்லாம் அஞ்சி நடுங்கி அவளை சரணடைந்தனர். பூவுலகில் வெற்றிக்கொடி நாட்டி தடாதகை பிராட்டியார், தேவலோகத்திற்குச் சென்றாள். புத்திரகாமேஷ்டி யாகம் செய்தால், குழந்தை பிறக்குமென மலையத்துவஜனுக்கு வாக்களித்த இந்திரன், கலங்கிப் போனான். நமது யோசனையால் பிறந்த குழந்தையே, நம்மை நோக்கி படையெடுத்து வருகிறதே என அஞ்சி நடுங்கினான். பதவியை விட்டுவிட்டு, ஓடி ஒளிந்து கொண்டான். தடாதகை பிராட்டியார் தேவேந்திரனுக்குச் சொந்தமான சங்கநதி, பதுமநிதி, சிந்தாமணி, காமதேனு, கற்பகதரு போன்ற மிகப் பெரிய செல்வங்களையெல்லாம் தனக்குச்சொந்தமாக்கிக் கொண்டாள். தேவ கன்னியர்களை தனக்கு பணிபுரிவதற்காக தன்னோடு வரச்சொன்னாள். பிறகு, கயிலை மலையையும் தன் வசமாக்கிக் கொள்வதற்காக படைகளுடன் அங்கு புறப்பட்டாள். தடாதகை பிராட்டியார் வாழ்க! அமைச்சர் சுமதி வாழ்க! என்ற கோஷம் விண்ணைப் பிளந்தது.கயிலையை அவள் அடைந்ததும், சிவபெருமான் அவளை முகம் மலர வரவேற்றார். தடாதகைபிராட்டியார் மதுரையிலிருந்து கிளம்பியபோதே, சுந்தரேஸ்வர பெருமானும் அவள் அறியாவண்ணம் அவளது தேரிலேயே அமர்ந்து வந்தார் என்பதை, அவளால் உணர முடியவில்லை. இதை அறியாத நந்திதேவர், பிராட்டியாரின் படை கண்டு நடுங்கி நின்றார். இப்படி ஒரு படை வந்திருக்கிறதே! நம்மையே அடிமைப் படுத்த வந்துள்ள

இந்தப் பெண் மணியை நீங்கள் வரவேற்கிறீர்களே! என் கட்டுக்காவலை மீறி இவர்கள் உள்ளே வந்துள்ளார்கள். இப்போது நாம் என்ன செய்வது? என சிவனிடம் யோசனை கேட்டார்.

சிவபெருமான் அவரிடம், போருக்கென வந்தவர்களிடம் மோதிப்பார்த்து விட வேண்டியதுதான். நீ நம் படைகளுடன் புறப்படு, என்றார். சக்திதேவியான தடாதகை பிராட்டியாரின் வீரத்தை உலகுக்கு உணர்த்துவதற்காக, சிவபெருமான் இப்படியொரு நாடகம் ஆடினார். நந்தி தேவரின் தலைமையில் புறப்பட்ட படைகள் அனைத்தும் தடாதகை பிராட்டியால் விரட்டியடிக்கப்பட்டன. சிவகணங்கள் ஓடி ஒளிந்து கொண்டனர். சூரியன், சந்திரன், அக்னி, வருணன் முதலான தேவர்களின் அஸ்திரங்களை எல்லாம் தடாதகை பிராட்டியார் அழித்தாள். பூதங்களின் வலிமை பிராட்டியின் வலிமை முன்னால் எடுபடவில்லை. வேறு வழியின்றி சிவபெருமானே அவளுடன் போர் செய்ய கிளம்பினார். அவர் அன்னையின் முன் வந்து நின்றதும், அந்த அதிசயம் நிகழ்ந்தது. அவளது தனங்களில் ஒன்று மறைந்தது. மன்மதனின் கணைகள் அவளைத் தாக்கியது போன்ற உணர்வு ஏற் பட்டது. ஆயுதங்களை கீழே போட்டு விட்டு, நாணத்தால் தலை குனிந்து நின்றாள் தடாதகை. அமைச்சர் சுமதி ஆச்சரியப் பட்டார். அவருக்கு தான் மீனாட்சியின் தன ரகசியம் தெரியுமே! எதிரே நிற்பது சிவபெருமான் என்பதும், அவளே அவரை மணந்து கொள்வார் என்பதும் தெரிந்து விட்டது. தடாதகை பிராட்டியார் குனிந்த தலைநிமிராமல், அவரது பாதத்தில் விழுந்தாள். அதுவரையில் இருந்த வீரம், காதலாக மாறிவிட்டது.

உலகையே வென்று நம் கைக்குள் கொண்டு வந்தாலும், மனிதன் இறைவனிடமே அடைக்கலமாக வேண்டும் என்பதை உணர்த்தியது இந்தக் காட்சி. சிவபெருமான் அவளைத் திருமணம் செய்து கொள்ளப்போவதாக அறிவித்தார். பின்னர் மீனாட்சி மதுரை திரும்பினாள். தாய் காஞ்சனமாலை வெற்றிக்கனி பறித்து வந்த மகளை வரவேற்றாள். உலகை வென்றதுடன், ஈசனின் இதயத்தையும் தன் மகள் வென்று வந்தாள் என்ற செய்தியறிந்து, மகளுக்கு மணநாள் குறிக்க ஏற்பாடு செய்தாள். இறைவனுக்கே திருமணம் நடத்தி வைக்கும் பாக்கியம் கிடைத்தது குறித்து அமைச்சர் சுமதி ஆனந்தம் கொண்டார். திருமண பட்டோலை எழுதி பல தேசத்து மன்னர்களுக்கும் அனுப்பினார். மதுரை மக்களுக்கு தடாதகை பிராட்டி யாருக்கு திருமணம் நடக்க இருப்பது குறித்து முரசறைந்து அறிவிக்க ஏற்பாடு செய்தார். மக்கள் மகிழ்ந்தனர். தங்கள் வீட்டு திருமணம் அல்லவா? நகரை அவர்கள் அலங்கரித்த விதம் அலாதியாக இருந்தது. தங்கள் வீடுகளை சுத்தம் செய்து வண்ண ஓவியங்களைத் தீட்டினர். நகர் முழுவதும் கமுகு, வாழை மரத்தோரணங்களைக் காண

முடிந்தது.இறைவனுக்கு அம்பாளின் அவதாரமான தடாதகை பிராட்டியுடன் நடக்கப் போகும் திருமணத்துக்கு முனிவர்களும், தேவர்களும் வந்து சேர்ந்தனர். சிவபெருமானுக்கும், தடாதகை பிராட்டியாருக்கும் செய்யப் பட்ட அலங்காரத்தை சொல்லி மாளாது. தடாதகை பிராட்டி தன் மக்களை மீன் போல் பாதுகாத்தவள். அதாவது, மீன்கள் தங்கள் கண்களாலேயே குஞ்சுகளுக்கு உணவூட்டுபவை. சற்றும் இமைக்காதவை. இக்காரணத்தால், எங்கள் மீனாட்சிக்கு கல்யாணம் என மக்கள் ஆரவாரம் செய்தனர்.

அந்த மீனாட்சிக்கு சரஸ்வதியும், லட்சுமியும் வந்திருந்து அலங்காரம் செய்தனர். ஊர் மகிழ்ந்திருந்த வேளையில், காஞ்சனமாலைக்கு மட்டும் கண்ணீர் வழிந்தது. இதையெல்லாம் பார்க்க தன் கணவர் மலையத்துவஜன் இல்லையே என்று! தந்தையில்லாத மீனாட்சிக்கு தந்தையாயும், தமையனாயும் இருந்து திருமணத்தை நடத்தி வைக்க அந்த மகாவிஷ்ணுவே வந்துவிட்டார். ஈசனுக்கு பட்டுஅங்கவஸ்திரம், விதவிதமான நகைகள் அணிவிக்கப்பட்டு மிக அழகாக இருந்தார்.இவரல்லவோ சுந்தரன் என்று மக்கள் ஆனந்தமாகப் பேசினர். சுந்தர ஈஸ்வரன் எங்கள்மீனாட்சியின் கரம் பற்ற வந்துள்ளான், என புகழ்ந்தனர். இதனால் சிவபெருமானுக்கு சுந்தரேஸ்வரன் என்ற பெயர் உண்டாயிற்று. அமைச்சர் சுமதிஆனந்தக் கண்ணீர் வழிய நின்றிருந்தார். மணமேடைக்கு மணமக்கள் வந்தனர்.அவர்கள் மாலை மாற்றி கொண்டனர். பிரம்மா வேதமந்திரம் முழங்க, திருமால் தாரை வார்த்துக்கொடுக்க, மணமகளுக்கு திருமாங்கல்யத்தை அணிவித்தார் சுந்தரேசர்.அவளது பாதத்தில் மெட்டி அணிவித்தார். எங்கும் பூ மழை பொழிந்தது. மீனாட்சிஅம்மியில் கால் வைக்கவும், திருமணத்துக்கு வந்திருந்த வசிஷ்டரின் மனைவிஅருந்ததி தேவி, மீனாட்சியின் முன்னால் வந்து நின்று, தங்களின் பார்வை என் மீது பட நான் இங்கே காத்திருக்கிறேன், என்று தலை வணங்கி கைகூப்பி நின்றாள்.அருந்ததிக்கு ஈசனும், பிராட்டியும் அருள் செய்தனர். மதுரையிலேயே தங்கி, தன் மகளுடன் நல்லாட்சி செய்ய வேண்டுமென காஞ்சனமாலை இறைவனிடம் வேண்டிக்கொண்டாள். இறைவனும் அந்தக் கோரிக்கையை ஏற்றார். மீனாட்சியுடன் இணைந்துமதுரை நகரை அரசாள முடிவெடுத்தார்.

## 6. வெள்ளியம்பல திருக்கூத்தாடிய படலம்!




எம்பிரானுக்கும், தடாதகை பிராட்டியாருக்கும் திருமணம் இனிதே நிறைவுபெற்றபின் திருமண விருந்து துவங்கியது. திருமணத்துக்கு வந்தவர்களையெல்லாம் விருந்துண்ண சுந்தரேசர் அழைத்தார். இருவரை தவிர எல்லோரும் விருந்துண்ண சென்றனர். அவர்கள் தான் சாஸ்திரங்களில் தேர்ந்த பதஞ்சலி முனிவரும், பக்தியில் முதிர்ந்த வியாக்ரபா முனிவரும்! அவர்கள் சிவபெருமானின் பாதம்பணிந்தனர். பதஞ்சலி முனிவர் சிவனிடம், சோமசுந்தரப் பெருமானே! நாங்கள் ஒரு உறுதி எடுத்துள்ளோம். அதாவது, தில்லையம்பலமாகிய சிதம்பரத்தில் நாங்கள் தங்கள் திருநடனக்கோலத்தை தரிசித்த பிறகே உணவு உண்போம். இங்கு என்ன செய்வதென தெரியவில்லை, என்றதும், அதற்கென்ன! அங்கு ஆடிய நடனத்தை இங்கும் ஆடுகிறேன். தாங்கள் இருவரும் கண்டுகளித்த பின் உணவருந்துங்கள், என்றார். முனிவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. சிவபெருமான் அவர்களை அழைத்துக் கொண்டு மதுரை கோயிலுக்குள் சென்றார். மேலும் சிவபெருமான் உலகனைத்தும் வடிவான விராட்புருடனுக்குத் தில்லைப் பதி இதயமாகும். மதுரையோ துவாத சாந்தத் தானம் என மொழிந்தார். இதைக் கேட்டு மகிழ்வுற்ற முனிவர்கள் வேந்தர் வேந்தே! பிறஉறுப்புகள் எது என தெளிவாக விளக்குங்கள் என கூறினர்.

இறைவடிவான சுந்தர பாண்டியர் கூறியதாவது மூலதாரமான இப்பூவுலகிலே எல்லையற்ற இறைத்தன்மைத் தானங்கள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைக்

கேளுங்கள். திருவாரூர் மூலதாரத் தானம், திருவானைக்கா சுவாதிட்டானத் தானம், திருவண்ணாமலை நாபி, தில்லைபதி இதயம், திருக்காளத்தி கண்டம், காசித் தலம் புருவமத்தியம், திருக்கயிலாயம் பிரமநாடி, இந்த மதுரைப் பதி துவாத சாந்தத்தானம். இது எவ்வாறு சிறந்ததென்று கேட்பீர்களானால், அது முன்னர் தோன்றிய முறையால் என்று தெளிந்த விளக்கத்தினை எடுத்து இயம்பினார். அதன்பின் அனைவரும் கோயிலுக்குள் சென்றார்கள். அங்கே ஓர் அற்புதத்தை அவர்களுக்கு நிகழ்த்திக் காட்டினார் சிவபெருமான். இந்திரனால் அமைக்கப்பட்ட தங்கவிமானத்தின் கீழ், ஒளி பொங்கும் வெள்ளி அம்பலம் ஒன்றை உருவாக்கினார்.பளபளவென மின்னிய அந்த அரங்கத்தில் மாணிக்க பீடம் ஒன்று வந்து அமர்ந்தது.கோடி சூரியர்கள் ஒரே சமயத்தில் உதித்தாற் போல் குருபரன் தோன்றினார். மனம், மொழி, பக்கம், மேல், கீழ், முன், பின் என்ற இவைகளைக் கடந்த மெய்ஞ்ஞானப்பேரொளி வடிவே அது. சிவகணங்கள் முழக்க, நந்தி தேவர் மத்தளம் அடிக்க, திருமால் இடக்கை முழக்க, தும்புரு நாரதர் இசைபாட தேவர்கள் பூமழை பொழிய, கடல்நிற மேனி படைத்த செந்தீப்புறமயிர் முயலகண் மேல் வடவைத் தீப்போல் அவனது செங்கண்கள் பிதுங்கவும், சினங்கொள்ளவும் முதுகு முறியவும் வலது திருவடியை ஊன்றி சிவபெருமான் அந்த பீடத்தில் நின்று நடனமாடினார்.

திருக்கூத்தாடும் இடது திருவடித் தாமரையும், பத்துத் திருக்கரங்களும், வலக்கரம் ஐந்தில் அபய அத்தத்திலே சூலமும், மற்ற நான்கு கரங்களில் உடுக்கை, அம்பு, வாள், மழு என்பனவும் இடக்கரம் ஐந்தில் வரத அத்தத்திலே பாம்பும், மற்றைய நான்கு கரங்களில் அக்கினி, வில், கேடகம், தண்டு என்பனவும், திருநீலகண்டமும், சங்க குண்டலம் பூண்ட திருச்செவியும், விரித்த செஞ்சடையும், வெள்ளிய திருநீற்றொளித் திருமேனியும், முக்கண்களும், அரவக் கச்சையும், அம்மையார் ஒதுங்கி நிற்கும் பக்கமும், அவ்வம்மையார் மேல் வைத்த திருநோக்கமும் திருநகையும் தோன்றத் திருநடனம் செய்தருளினார். அந்த முனிவர்களும் மதுரை மாநகர மக்களும் இறைவனின் நடன காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர். பின்னர் பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்கள் கருணாமூர்த்தியைப் பாக்களால் பலபடப் பூசித்துப் போற்றி மகிழ்ந்தனர். பரந்தாமன் அம்முனிவர்களிடம் நீங்கள் இன்னும் விரும்பியது யாது? அதை யாம் நிறைவேற்றி வைப்போம் என வினவினார். உடனே அவ்விருவரும், எந்தையே! இத்திருக்கூத்துடனம் எப்பொழுதும் இவ்வெள்ளியம்பலத்துள்ளே நின்று எல்லோருடைய பாச பந்தங்களையும் போக்கி அருள் செய்தல் வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள். திருமண விழாக்களில் பிறர் நடனமாடி நாம் ரசிப்பது வழக்கம் தான்! ஆனால், இங்கோ மணமகனே நடனமாடினார். அந்தக் காட்சியைக் கண்ட பிறகு முனிவர்கள் உணவருந்தச் சென்றனர்

## 7. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்!



அனைத்து மக்களும் சாப்பிட்டாயிற்று. லட்சக்கணக்கில் திருமணத்துக்கு வந்திருந்த மக்களும் சாப்பிட்டாலும், சமைத்ததில் பெரும் பங்கு மிஞ்சிவிட்டது. எவ்வளவு பரிமாறினாலும், உணவின் அளவு அப்படியே இருப்பது போல் தெரிகிறதே! இது ஏதோ மாயவித்தை போல் தெரிகிறதே! சமையல் குழுவினர் பிரமித்தனர். இதுபற்றி முறையிட அரசி மீனாட்சியிடம் அவர்கள் ஓடினர்.மீனாட்சி மடப்பள்ளியில் சென்று பார்த்தாள். சமைத்த உணவில், லட்சக்கணக்கானவர்கள் சாப்பிட்டிருந்தும் கூட, சற்று கூட குறையாமல் அப்படியே இருந்தது. இது இறைவனின் லீலை என்பதை அவள் எப்படி அறிவாள்? சுந்தரேசர் ஏதும் அறியாதவர் போல் இருந்தாள். மீனாட்சி தன் கணவரிடம் நாணத்துடன் சென்றாள். சுவாமி! எங்கள் இல்லத்தில் நாங்கள் சமைத்த உணவு அப்படியே மீந்துவிட்டது. லட்சக் கணக்கானவர்கள் மாப்பிள்ளை இல்லம் சார்பாக வந்திருந்தும் அப்படியே இருப்பது ஆச்சரியமூட்டுவதாக உள்ளது. உணவை வீணடிப்பது மகாபாவம் என்பது தாங்கள் அறியாததல்ல! அது அன்னபூரணிக்கு மாசு கற்பித்தது போல் ஆகும். இந்த உணவு காலியாக தாங்கள் தான் அருள்புரிய வேண்டும், என்றாள்.

அவளது பேச்சில் சற்றே ஆணவம் தொனித்தது போல் தெரிந்தது. மனிதனுக்கு சிறிதளவு ஆணவம் இருந்தாலும் இறைவனை அடைய முடியாது. அந்த ஆணவத்தைக் களைய அவன் சோதனைகளைத் தருவான். தன் மனைவியிடமும் விளையாடிப் பார்க்க இறைவன் திருவுளம் கொண்டார். அப்படியா! ஏராளமாகவா

சமைத்தீர்கள்! எல்லோரும் சாப்பிட்டாயிற்றே! சரி...என் பூதகணங்கள் சாப்பிட்டதா என விசாரித்து விடுகிறேன், என்றவர், பூதகணங்களை அழைத்து விசாரிப்பவர் போல் நடித்தார். குண்டோதரன் என்ற பூதகணத்தை தவிர மற்றவர்கள் சாப்பிட்டாயிற்று என்றனர். குண்டோதரனுக்கு திருமணப்பணிகள் அதிகமாக இருந்ததால், பிறகு சாப்பிடலாம் என இருந்துவிட்டான். குண்டோதரா! சாப்பிடாமல் அப்படி என்ன வேலை செய்து கொண்டிருக்கிறாய்! போ போ, முதலில் சாப்பாட்டை முடி! அப்புறம், பணிகளை செய்யலாம், என செல்லமாகக் கடிந்துகொண்டார் மாப்பிள்ளை சுந்தரேசர். குண்டோதரன் சாப்பிடச் செல்லும் போது மீனாட்சி அவரிடம், சுவாமி! இவன் ஒருவன் சாப்பிடுவதால் உணவு தீர்ந்துவிடுமா! இன்னும் சாப்பிடாதவர்கள் நிறைய இருப்பார்கள். அவர்களையும் வரச்சொல்லுங்கள், என்றாள்.

புன்னகையை உதிர்த்த சுந்தரேசர், இவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கட்டும், இன்னும் யார் யார் சாப்பிடவில்லை என விசாரித்து அனுப்பி வைக்கிறேன், என்றார். குண்டோதரன் மடப்பள்ளிக்குள் நுழைந்தானோ இல்லையோ, அவனது வயிற்றில் வடவைத்தீ எனப்படும் கொடும் பசித்தீயை எரிய வைத்தார் சுந்தரேசன். மடப்பள்ளிக்குள் நுழைந்த குண்டோதரன் ஒரு நிமிடத்தில் அனைத்தை யும் சாப்பிட்டு விட்டு, ஐயோ! பசி பொறுக்க முடியவில்லையே! திருமண வீட்டுக்குவந்தவர்களுக்கு வயிற்றுக்குச் சோறிட வேண்டாமோ, என புலம்பினான். மீண்டும் சமையல் செய்யப்பட்டது. அதுவும் கணநேரத்தில் காலியாகி விட்டது. மீனாட்சியும் அரண்மனையில் இருந்த மற்றவர்களும் அதிசய அதிர்ச்சியை அடைந்தனர். இதென்ன புதுமை! ஒரு தனிநபரால் இப்படி உணவுண்ண முடியுமா! இவன் வாயைத் திறந்ததும் எல்லாமே தானாக வயிற்றுக்குள் போய் விடுகிறதே! மீண்டும் மீண்டும் சமைத்து ஓய்ந்துவிட்டனர் சமையல்காரர்கள். அரண்மனையில் வாங்கி வைத்திருந்த சமையல் பொருட்கள் அத்தனையும் காலி. மீனாட்சிக்கு இதில் ஏதோ சூட்சுமம் இருப்பதுபுரிந்து விட்டது.

Read more: http://www.penmai.com/forums/spirituality/56460-64-thiruvilaiyadal-puranam-64-a.html#ixzz2np9ZdN5P

## 8. அன்னக் குழியும் வையையும் அழைத்த படலம்!



நாதா! இதென்ன அதிசயம்! பல லட்சக்கணக்கானோருக்கான உணவை இவன் ஒருவன் சாப்பிட்டு விட்டானே! இன்னும் இவனை விட்டால் சமையல்காரர்களையும், பாத்திரங்களையும் கூட தின்று விடுவான் போலிருக்கிறதே! அதற்கும் பசி அடங்கா விட்டால் உலகையை விழுங்கி விடுவானோ! ஐயனே! இதென்ன சோதனை! என்றாள்.மீனாட்சியை அமைதிப்படுத்திய சுந்தரேசர் நான்கு குழிகளை வரவழைத்தார். அவற்றில் பால் சோறு, தயிர்ச்சோறு உள்ளிட்ட அன்னவகைகள் குறைவின்றி கிடைக்க ஏற்பாடு செய்தார். குண்டோதரன் அவற்றைச் சாப்பிட்டு சாப்பிட்டு களைத்துப் போனான். அந்தக் குழியில் இருந்து வந்த சாப்பாடு குறையவே இல்லை. பசி தணியவே, தண்ணீர் குடிக்க நீர்நிலைகளை தேடியலைந்தான். மதுரையில் இருந்த பல குளங்களின் நீரும் வற்றும் வகையில் தண்ணீர் குடித்தும் தாகம் அடங்கவில்லை. ஐயனே! என் தாகத்தையும் தீர்க்க வேண்டும், என சுந்தரேசரிடம் வேண்டினான். அவர் தன் தலைமுடியைச் சாய்த்து கங்கையை கீழே இறங்கச் சொன்னார். கங்கா! நீ பிரவாகமெடுத்து ஆறாக இந்நகரின் வழியே ஓடிவா, என்றார்.

அவள் சுந்தரேசரிடம், சுவாமி! தங்கள் சித்தப்படியே செய்கிறேன். உங்கள் திருமணநாளன்று உருவாகும் பாக்கியம் பெற்ற என்னில் மூழ்கி எழுபவர்கள் பிறப்பற்ற நிலையாகிய மோட்சத்தை அடைய அருள்பாலிக்க வேண்டும், என வேண்டினாள். கங்கா! மோட்சத்தலங்களான வைகுண்டத்தின் முதல் எழுத்தாகிய வை கைலாயத்தின் முதல் எழுத்தாகிய கை இவை இரண்டையும் இணைத்து நீ வைகை என வழங்கப்படுவாய். உன்னில் குளிப்பவர்கள், தீர்த்தமாகப் பருகுபவர்களுக்கு மோட்சம் கிட்டும். அவர்கள் சகல செல்வங்களோடும் வசிப்பார்கள், என்றார். பின்னர் கங்காதேவி, ஆறாக வேகமாக ஓடிவந்தாள். அவளுக்கு வேகவதி என்ற பெயர் உண்டாயிற்று. குண்டோதரன் அந்த ஆற்றின் இருகரைகள் மீதும் கைகளை விரித்து

வைத்துக் கொண்டு ஆற்றின் போக்கை தடுத்து தண்ணீர் அருந்தி தாகம் தீர்ந்தான். இதனாலும் இந்த நதிக்கு வைகை என்று பெயர் வந்ததாக சொல்வர். தன் தாகம் தீர்த்த வைகை சிவனின் தலையில் இருந்து தோன்றிய தால் அதற்கு சிவதீர்த்தம் என்னும் புனித பெயரும் வைத்தான். சிவனின் திருமணத்திற்கு வந்து திருமணப்பணிகளை சிறப்பாக செய்த அவனுக்கு பூதகணங் களின் தலைமைப் பதவியை சுந்தரேசப் பெருமான் அளித்தார்.

9. ஏழுகடல் அழைத்த படலம்!



கவுதமர் என்னும் மகரிஷி, அரசி காஞ்சனமாலையைச் சந்தித்தார். ஸ்ரீராமபிரானால் கல்லாய் இருந்து சுயரூபம் பெற்றாளே அகலிகை, அவளது கணவரே இந்த கவுதமர். தேவேந்திரன் தப்பு செய்தாலும் அவனையே சபிக்கும் ஆற்றலுள்ளவர், மிகப் பெரிய தபஸ்வி. மீனாட்சி திருமணத்திற்கு வந்திருந்த அவர், சிவபெருமானிடம் விடைபெற்ற பிறகு, மரியாதை நிமித்தமாக காஞ்சனமாலை அம்மையாரையும் சந்தித்து விடை பெற்றுக் கொள்ள வந்தார். அவரை அரண்மனைக்குள் அழைத்து வந்த காஞ்சனமாலை தகுந்த மரியாதை செய்தாள். உயர்ந்த ஆசனத்தில் அவரை அமர செய்து, சிறிய ஆசனம் ஒன்றில் தான் அமர்ந்து கொண்டாள். பெரியவர்கள் ஒரு இடத்தில் அமர்ந்திருக்கும் போது, சிறியவர்கள் தரையில் அமர்ந்து கொள்ள வேண்டும். பெரியவர்களுக்கு தரப்படும் மரியாதை மிகப்பெரிய புண்ணியத்தையும், அவர்களின் ஆசியையும் நமக்குத் தரும். அவரிடம் காஞ்சனமாலை, மாமுனிவரே! என் மகள் மீனாட்சியின் திருமணம் நல்லபடியாக முடிந்து விட்டது. என் மருமகனாக அந்த ஈசனே வந்துவிட்டார். இனி மதுரையின் காலம் பொற்காலமாகவே திகழும். எனவே நான் பிறவாப் பெருநிலை அடைய விரும்புகிறேன். அதற்கு என்ன வழி என்று

தாங்கள் தான் உபதேசிக்க வேண்டும், என்றாள். குழந்தைகளுக்கு திருமணம் முடிந்தபிறகும், அவர்கள் விஷயத்தில் தலையிடாமல், அதன் பிறகு முக்திக்குரிய நிலையாகிய தெய்வ வழிபாட்டை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்பது இதன்மூலம் தெளிவாகிறது. பிள்ளைகளுக்கு திருமணமான பிறகும், வீட்டுக்கு வந்த மருமகள், மருமகனின் செயல்பாடுகளில் தலையிட்டால் நிம்மதியின்மையே ஏற்படும் என்பது இதன்மூலம் கிடைக்கும் அறிவுரையாக இருக்கிறது.காஞ்சனமாலையின் மன ஓட்டத்தை கவுதமரும் புரிந்து கொண்டார்.

அரசியாரே! உமையவளை மகளாகவும், ஈசனையே மருமகனாகவும் அடைந்த பெறற்கரிய புண்ணியத்தைப் பெற்ற மகராசியான உங்களுக்கு உபதேசிக்கும் தகுதி எனக்கில்லை. இருப்பினும், ஞானத்தை யாசிக்கும் போது அதை அருள்வதே ஒருவரின் கடமை. இதோ! பிறப்பற்ற நிலையடைய மூன்று வழிகளைச் சொல்கிறேன். தர்மம் செய்தல், உண்மையை மட்டுமே பேசுதல், இறைவனைத் தியானம் செய்தல், நம் மனத்தைக் கட்டுப்படுத்தி ஆசைகளைக் குறைத்தல் ஆகியவை ஒரு ரகம். சிவாயநம என்னும் மந்திரத்தை தினமும் ஓதுவது, வேதநூல்களை படிப்பது, யாகங்கள் செய்வது ஆகியவை இரண்டாவது ரகம். சிவபெருமானை வில்வத்தால் அர்ச்சனை செய்வது, கோயிலை வலம் வருவது, தல யாத்திரை செல்வது, தீர்த்தங்களில் நீராடுவது ஆகியவை மூன்றாவது ரகம். இதில், கடல் உள்ள இடத்தில் நீராடுவது மேலும் நலம் பயக்கும், என்றார். அவர் சென்றபிறகு, காஞ்சனமாலை தன் மகளிடம் வந்தாள். மீனாட்சி! எனக்குள் ஒரு ஆசை, பிறப்பற்ற நிலையடைய விரும்புகிறேன். கவுதம மகரிஷியின் அறிவுரைப்படி பார்த்தால் தீர்த்தமாடுவதே முக்திநிலைக்கு முதல் பாதையாக இருக்குமென கருதுகிறேன். அதிலும் ஆறும் கடலும் இருக்குமிடத்தில் நீராடுவது மிகப்புண்ணியமானதென்று அவர் கூறினார். நம் மதுரை நகரில் உன் கணவரின் அருளால் வைகை என்னும் மலர்க்கொடியாள் மலர்ந்து பரந்து ஓடுகிறாள். ஆனால், இங்கே கடல் இல்லையே! கடல் இங்கிருந்தால் நான் அதில் நீராடி பிறப்பற்ற நிலைக்கு பாதை காண்பேன், என்றாள். தாயின் விருப்பத்தை ஆண் பிள்ளைகள் இருந்தால் நிறைவேற்றி வைப்பார்கள். மீனாட்சியோ ஆணுக்கு ஆணாகவும் பெண்ணுக்கு பெண்ணாகவும் இருக்கிறாள்.

திருமணத்துக்குப் பிறகும் கூட கணவர் வீடான இமயத்துக்குச் செல்லாமல், கணவரையும் இங்கேயே தங்க வைத்து விட்டாள். மணாளனோ மகாதேவன். அவர் உத்தரவிட்டால் கடல்களே விழுந்தடித்துக் கொண்டு இங்கே வராதா என்ன! தன் அன்னையின் விருப்பத்தை அவள் தன் நாதனிடம் சொன்னாள். மாமியின் விருப்பத்தை நிறைவேற்ற அந்த சாமியும் முடிவு செய்து விட்டார். கடல்களே!

மதுரைக்கு வாருங்கள், என்றார். ஒன்றல்ல, இரண்டல்ல...ஏழு கடல்களும் மதுரைக்கு வந்து சேர்ந்தன. எங்கும் பேரிரைச்சல்... அலைகள் நர்த்தனமாடின. அவற்றில் கிடந்த சங்குகளும், முத்துச் சிப்பிகளும் ஒன்றோடொன்று உரசி எழுப்பிய ஓசை எல்லையே இல்லாமல் விரிந்து சென்றது. மக்களின் கண்களுக்கு கடல்கள் தெரியவில்லையே ஒழிய கடல் ஓசை தெளிவாகக் கேட்டது. அவர்கள் குலை நடுங்கிப் போனார்கள். அவர்கள் ஓடோடி வந்து மன்னர் சுந்தரேசரை வணங்கி, எம்பெருமானே! எங்கள் மன்னனே! இதென்ன ஓசை... கடல் அலைகளின் பேரிரைச்சல் கேட்கிறதே! என்ன இது! ஊழிக்காலமாகிய உலகம் அழியும் காலம் வந்துவிட்டதா! என பலவாறாகக் கேட்டனர். சுந்தரேசர் அந்தக் கடல்களை அடக்கினார். அமைதியாயிருங்கள்! நீங்கள் மீனாட்சி ஆலயத்தின் வெளிப்புறமுள்ள கிணற்றில் சென்று அடக்கமாய் இருங்கள், என்று கர்ஜித்தார். அவ்வளவுதான்! சத்தமே வரவில்லை. மக்கள் மகிழ்ந்தனர். சுந்தரேசர் குறிப்பிட்ட இடத்தில் சென்று பார்த்தனர். கிணற்றில் நீர்நிரம்பிக் கிடந்தது. கருணை வடிவான ஈசனை மனதார துதித்த காஞ்சன மாலைபரிவாரங்களுடன் கிணற்றுக்குச் சென்றாள். மதுரை மீனாட்சி கோயில் கிழக்குகோபுரம் எதிரேயுள்ள புதுமண்டபத்தைக் கடந்தால் வரும் தெருவுக்கு எழுகடல்தெரு என்று இப்போதும் பெயர் இருக்கிறது.

**10. மலையத்துவஜனை அழைத்த படலம்!**




காஞ்சனமாலைக்கு வருத்தம். ஏழுகடல் வந்தாயிற்று, புனித நீரும் ஆடலாம். ஆனால், சாஸ்திரம் என்ன சொல்கிறது தெரியுமா? தீர்த்தமாடினாலும் சரி, கோயிலுக்கு

போனாலும் சரி...திருமணத்துக்குப் பிறகு தம்பதி சமேதராகச்சென்றால் தான் சிறந்த பலன் உண்டு. மலையத்துவஜனோ இந்த பூமியிலேயே இல்லை.காஞ்சனா என்ன செய்வாள்? இவ்வளவு செய்தும், கணவரின்றி நீராடி பயனில்லாமல் போய்விடுமே! அவளது கண்களில் நீர் முட்டியது.சிவனடியார்களை அழைத்தகாஞ்சனமாலை, திருநீறு போல் வெள்ளை உள்ளம் படைத்த அடியவர்களே! அடியவளுக்காக எம்பெருமான், எழுகடலை வரவழைத்துள்ளார். அதில் நீராட வேண்டுமானால், கணவருடன் இணைந்தே நீராட வேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறது. அது என்னால் இயலாது என்பதை தாங்கள் அறிவீர்கள். இதற்கு மாற்று வழியிருக்கிறதா? எனக்கேட்டாள். அடியவர்கள் அவளது கவலையை உணர்ந்து, இதற்காக வாட வேண்டாம் தாயே! புனிததீர்த்தங்களுக்கு செல்லும் கணவனை இழந்த பெண்கள், தங்கள் புத்திரர்களின் கையைப் பிடித்தபடியே மூழ்கி எழுவதற்கு அனுமதியளிக்கிறது சாஸ்திரம். தங்களுக்கு புத்திரன் இல்லை என்பதும், ஒரே புத்திரி என்பதையும் நாங்கள் அறிவோம். இவ்வாறான சமயங்களில் பசுக்கன்றின் வாலை பிடித்தபடிநீராடுவது போதுமானதென்றும், அத்தகைய நீராடலுக்கும் புண்ணிய நீராடலின் முழுபலனும் கிடைக்கும் என்றும் சாஸ்திரம் தெரிவிக்கிறது.

தாங்கள் அதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள்,என்றனர். காஞ்சனமாலைக்கு கண்ணீர் இன்னும் அதிகமானது. தன் மகள் தடாதகையிடம் சென்று மகளே! நான் கொடுத்து வைக்காத பாவியாகி விட்டேன். கணவரை இழந்தேன், ஆண் குழந்தைகளைப் பெறவில்லை. ஒரு பசுக்கன்றின் வாலைப் பிடித்தபடி நீராடும் நிலைக்கு ஆளானேன். என்னவோ என் மனம் இதற்கு ஒப்பவில்லை. உன் மணாளரிடமே கேட்டு, இதையும் விட சிறந்த உபாயத்தை அறிந்து சொன்னால், அந்த ஈசனின் கட்டளையை நிறைவேற்ற சித்தமாயிருக்கிறேன், என்றாள். தாயின் வருத்தம் மகளைக் கலக்கியது. மீன் தன் குஞ்சுகளைக் காப்பது போல், மக்களைக் காக்கும் மாதரசி மீனாட்சியான தடாதகை பிராட்டியார் தன் கணவரிடம் சென்று, ஈசனே! என் தாய் நீராடுவதற்காக மதுரைக்கு புனித தீர்த்தங்களை வரவழைத்தீர்கள். ஆனால், கணவனை இழந்து, புத்திரனைப் பெறாத அவள், பசுக்கன்றின் வாலைப்பிடித்தபடி நீராடுவது குறித்து வருந்துகிறாள். இந்நிலைக்கு மாற்று ஏற்பாட்டைத் தாங்களே செய்ய வேண்டும், என்றாள். தன்னை முழுமையாக நம்புவர்க்கு கேட்டதை கேட்டபடி தரும் ஈசன் அவளுக்கு அருள்புரிய மனம் கொண்டார். தேவாதி தேவனான இந்திரனை நோக்கிப் பார்த்தார். அவன் ஓடோடி வந்தான். இந்திரா! என் மாமியார் புனித தீர்த்தமாட விரும்புகிறார். கணவனுடன் இணைந்து தீர்த்தமாடினால் தான் புண்ணியபலம் கிடைக்கும் என்பதால், சொர்க்கத்தில் இருக்கும் மலையத்துவஜ பாண்டியனை புஷ்பகவிமானத்தில் ஏற்றி தக்க மரியாதைகளுடன் மதுரைக்கு அனுப்பி வை, என்றார்.

அதன்படியே அவன் செய்ய, மலையத்துவஜன் எழுகடல் தீர்த்தக்கரையில் வந்து இறங்கினான்.

ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ என்ற பழமொழி ஈசனின் திருவருளால் பொய்யானது. காஞ்சனமாலை தன் கணவனைக் கண்டு கதறியழுது அவன் பாதம் பற்றி வணங்கினாள். தடாதகைபிராட்டியாரோ தன் தங்கத்தந்தையைப் பார்த்ததும் உணர்ச்சிப்பூர்வமானாள். மலையத்துவஜபாண்டியன் ஈசனை வணங்கினான். பெருமானே!எனக்கு ஆண்மகன் இல்லை என்ற வருத்தமே இல்லை. ஏனெனில், பெண்ணைப் பெற்றதால் பெருமையடைந்தவன் நான். ஈசனாகிய தாங்களே எனக்கு மருமகனாகக் கிடைத்ததை என்னவென்று சொல்வேன்! தங்கள் ஆசிர்வாதம் எனக்கு வேண்டும், எனச் சொல்லி அவரது பாதத்தில் விழச்சென்றான். சிவபெருமான் அதைக்கண்டு பின்வாங்கினார்.மாமனாரே! நான் பூமிக்கு மானிட அவதாரம் எடுத்து வந்துள்ளேன். தாங்கள் எனக்குமாமனார். மாமன் என்பவர் தந்தைக்குச் சமமானவர். எனவே, தங்களுக்குத்தான் நான் மரியாதை செய்யவேண்டும். ஈசன் என்ற அந்தஸ்துடன் என் பாதத்தில் விழதங்களை அனுமதிக்கமாட்டேன், என பணிவுடன் சொன்னார். மருமகன்கள் தங்கள்மாமனாருக்கு செய்ய வேண்டிய மரியாதையை, இந்த இடத்தில் தெளிவாக நடத்திக்காட்டியுள்ளார் ஈசன். பின்னர் சிவனடியார்களை அழைத்த அவர், அடியவர்களே! முறைப்படி இவர்களுக்கு தீர்த்த ஸ்நானம் செய்து வையுங்கள், என்றார். இறைவனின் கட்டளைக் கேற்ப சிவனடியார்களே அவர்களுக்கு தீர்த்தஸ்நானம்செய்வித்தனர். பின்னர் காஞ்சனமாலையும், மலையத்துவஜனும் பிறவாப்பெருவாழ்வுபெற்றனர். அவர்கள் சிவபெருமானுடன் ஜோதியில் கலந்தனர். என்னதான் பெருவாழ்வுபெற்றாலும், தாயையும், தந்தையையும் பிரிந்த மகளுக்கு வருத்தம் இருக்காதாஎன்ன! தடாதகைப் பிராட்டியாருக்கு கண்ணீர் முட்டிநின்றது. இருப்பினும், தன் மணாளனின் பாதம் பணிந்து தன் பெற்றோருக்கு நற்கதி கொடுத்ததற்காக நன்றி தெரிவித்தாள்.பின்னர் சுந்தரபாண்டியனான தன் கணவரிடம்,அன்பரே! என் தாய் தந்தை சிவலோகம் அடைந்து விட்டனர். எனக்கு சகோதரர்கள் இல்லை. பாண்டியவம்சம்நம்மோடு முடிந்து விடக்கூடாது. தாங்கள் தான் நம் வம்சவிருத்திக்குஅருளவேண்டும், எனக் கேட்டுக் கொண்டாள்.

## 11. உக்கிரபாண்டியன் திருஅவதாரப் படலம்!



ஈசன் அதற்கு ஏதும் பதில் சொல்லாவிட்டாலும், தடாதகை பிராட்டியாருக்கு அருள் செய்ய மனதில் எண்ணிவிட்டார். தன் மகன் முருகப்பெருமானை அழைத்தார். ஏறுமயிலேறி விளையாடியபடியே ஆறுமுகன் அவர் முன் வந்துநின்றான். தந்தையே! என்னைத் தாங்கள் அழைத்த காரணம் என்ன? என்றான். முருகனைத் தன் மடியில் அமர்த்திக்கொண்டார் ஈசன். சரவணா! அன்றொரு நாள் எனது நெற்றிக்கண்ணில் இருந்து பறந்த சுடரில் பிறந்த நீ, மக்கள் நலனுக்காக இந்த மதுரையில் பிறக்க வேண்டும். தடாதகைபிராட்டியாரின் வயிற்றில் நீ கருவாவாய், என்றார். முருகப்பெருமானும் தந்தையின் கட்டளைக்கு பணிந்து, தடாதகைபிராட்டியாரின் மணிவயிற்றில் குழந்தையாகத் தங்கினார். தான், கர்ப்பமுற்றதை அறிந்த தடாதகை மிகுந்த மகிழ்ச்சியுடன் கணவரின் மார்பில் சாய்ந்து, இந்த விஷயத்தை தெரிவித்தாள். அரசி தடாதகை கர்ப்பமுற்றதை அறிந்த அமைச்சர் சுமதி அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை. அவர் இந்த விஷயத்தை மக்களுக்கு தெரிவிக்கஉத்தரவிட்டார். மக்கள் தங்கள் எதிர்கால மன்னர் மதுரையில் பிறக்கப்போவதை எண்ணி மகிழ்ச்சியின் உச்சத்துக்கே சென்றனர். மீனாட்சி கல்யாண உற்சவம் போல, ஊரெங்கும் மாவிலை தோரணம் கட்டி, இனிப்புகள் சமைத்து, தானம் செய்து சந்தோஷத்தை வெளிப்படுத்தினர். கர்ப்பஸ்திரீக்கு என்னென்ன தேவையோ அவையெல்லாம் செய்து கொடுக்கப்பட்டன. கர்ப்பவதிக்கு புளிப்பு வகை மிகவும் பிடிக்குமே! இதனால் ருசியான புளியோதரையை சமைத்துக் கொடுத்தனர். குழந்தை

சிவப்பாக பிறக்க வேண்டுமே என்பதற்காக குங்குமப்பூ கலந்த பால், விதவிதமான பழரசங்கள் கொடுக்கப்பட்டன.

மிக முக்கியமாக வேத விற்பன்னர்கள் காலையும் மாலையும் வரவழைக்கப் பட்டு அரிய ஆன்மிகத் தத்துவங்கள், போதனைகள், கதைகள், இறைவனின் திருநாமங்களின் மகிமை ஆகியவை சொல்லப்பட்டன. இது மிகவும் முக்கியமான விஷயம். இந்தக் காலத்தில் கர்ப்பவதிகள் டிவியின் முன்னால் அமர்ந்து கண்ட கண்ட நாடகங்களைப் பார்த்து கண்ணீர் வடிப்பதும், உணர்ச்சிவசப் படுபவதும், ஆபாசமும், வன்முறையும் கலந்த பாடல்கள், திரைப்படங் களைப் பார்த்து அவற்றையே விரும்பும் குழந்தைகளைப் பெறுகிறார்கள். தாங்கள் தவறு செய்துவிட்டு, பிள்ளைகள் கெட்டலையும் போதும், ஒழுங்காகப் படிக்காமல் இருக்கும்போதும் அவர்கள் மீது தங்கள் கடமையைச் சரிவர செய்யவில்லை என பழி போடுகிறார்கள். கர்ப்பவதிகள் தயவுசெய்து டிவி பார்ப்பதை அறவே தவிர்க்க வேண்டும். சிறந்த ஆன்மிக நூல்களைப் படிக்க வேண்டும். யாருடைய துணையுடனாவது கோயில்களுக்குச் சென்று ஆன்மிக சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும். இப்படி செய்தால் மிகச்சிறந்த குழந்தைகள் பிறக்கும். இப்படியாக, தடாதகை பிராட்டியாரின் கர்ப்ப கால முடிவில், அவளுக்கு வளைகாப்பு, பூச்சூடல் ஆகிய மங்கள நிகழ்ச்சிகள் மிகுந்த ஆடம்பரத்துடன் நடத்தப் பட்டன. மதுரை வாழ் மக்கள் தங்கள் அரசியாருக்கு விதவிதமான கொழுக்கட்டைகள், வடை வகைகளை கொண்டு வந்து கொடுத்தனர். ஒரு திங்கள்கிழமை, நிறைந்த திருவாதிரை நட்சத்திரம், சகல கிரகங்களும் சுபவீட்டில் இருந்த சுபயோக சுபவேளையில் தடாதகை பிராட்டியார் தன்செல்வமகனைப் பெற்றெடுத்தாள். அவள் மட்டுமா! ஊரும் உலகமும்மகிழ்ச்சியடைந்தது. சுந்தரேச பாண்டியன் தன் மகனை பார்க்க வந்த போது, மரகதவல்லியான தடாதகை பிராட்டியாரின் பச்சைக் கன்னங்களில் சிவப்புஇழையோடியது. வெட்கமும், மகிழ்ச்சியும் ஒன்றுசேரும் நேரத்தில் தான்பெண்களுக்கு அழகே கூடும் போலும்!

சுந்தரேச பாண்டியன் தன் மனைவியின் பேரழகையும், செக்கச் சிவக்க பிறந்த மகனின் பேரழகையும் ஒருசேர ரசித்தார். குறிப்பிட்ட நாட்கள் கடந்த பிறகுகுழந்தைக்கு பெயர் சூட்டு விழா நடந்தது. உக்ரவர்மன் என்று பெயர் சூட்டினர்.பெயர் சூட்டு விழாவுக்கு தாய்மாமன் வந்தாக வேண்டுமே! திருமால் தன் கருடவாகனத்திலும், பிரம்மா அன்னவாகனத்திலும் அவரவர் தேவியரான ஸ்ரீதேவி பூதேவி, சரஸ்வதியுடன் வந்து சேர்ந்தனர். தேவ குரு பிரகஸ்பதி குழந்தையை ஆசிர்வதித்து, உரிய வயது வந்ததும் தானே நேரில் வந்து குழந்தைக்கு பாடங்களைக் கற்றுக்கொடுப்பதாகவும் சுந்தரேச பாண்டியனிடம் தெரிவித்தார்.ஐந்து வயதில் உக்ரவர்மனுக்கு பூணூல் அணியும்

வைபவம் நடந்தது. தேவகுரு பிரகஸ்பதி பாடங்களை ஆரம்பித்தார். எட்டுவயதிலேயே சகல கலைகளையும் கற்றான் உக்ரவர்மன். தந்தை சுந்தரேசபாண்டியன், அவனுக்கு பாசுபதாஸ்திரம் எய்யும் முறையை கற்றுக் கொடுத்தார். உக்ரவர்மனுக்கு 16 வயதானது. அவனுக்கு திருமணம்செய்து வைப்பதா அல்லது பட்டம் சூட்டுவதா என்று சுந்தரேசபாண்டியனும், தடாதகை பிராட்டியாரும் யோசிக்க ஆரம்பித்தனர். அமைச்சர் சுமதியுடனும், வேத பண்டிதர்களுடனும் இதுபற்றி கலந்தோலசித்தனர். திருமணமே சிறந்த வழி என அவர்கள் ஒருமித்த முடிவெடுத்துக் கூறவே பெண் பார்க்கும் படலம் ஆரம்பமானது.

## 12. உக்கிரபாண்டியனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலம்!



உக்ரவர்மனுக்கு பெண் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள் என்ற செய்தி பல தேசங்களுக்கும் பரவவே, ராஜாக்கள் தங்கள் பெண்களை அவனுக்கு மணம் முடித்து வைக்கக் கருதி, தங்கள் பெண்களின் ஓவியங்களையும், ஜாதகத்தையும் அனுப்பி வைத்தனர். மலைபோல் குவிந்து கிடந்த ஓவியங் களை அமைச்சர்கள் பரிசீலித்துக் கொண்டிருக்க, சுந்தரேஸ்வரப் பெருமான், மணவூர் என்னும் பகுதியை ஆண்ட சோமசேகரனின் கனவில், பார்வதிதேவியுடன் ரிஷப வாகனத்தில் எழுந்தருளினார். சோமசேகரா! உன் மகள் காந்திமதியை மதுரை அரசாளும் சுந்தர பாண்டியனின் மகன் உக்ரவர்மனுக்கு மணம் முடித்துக் கொடு. அவள் நல்வாழ்வு வாழ்வாள் என அருளினார். ஏற்கனவே, தன் மகளின் மணவாழ்வு பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருந்த மன்னனுக்கு, கனவில் இறைவனே கொடுத்த இந்தச் செய்தி பெரும்

மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவன் இந்தத் தகவலை மதுரையின் அமைச்சர் சுமதிக்கு தெரிவித்தார். சுமதியும் அவளது ஜாதகத்தை பரிசீலிக்க அத்தனை பொருத்தமும் பொருந்தியிருந்தது. அவளது ஓவியமே, அவள் பேரழகு பெட்டகம் என்பதை அறிவித்து விட்டது. இந்தப் பெண் உக்ரவர்மனுக்கு மனைவியாகத் தகுதியானவள் என்ற தகவலை சுந்தரபாண்டியனுக்கு அறிவித்தார் சுமதி. பெண் பார்க்க புறப்படுங்கள். சகல பணிகளும் வேகமாக நடக்கட்டும், என சுந்தரபாண்டியன் உத்தரவிட்டார். மதுரை மன்னரின் அமைச்சரும் உறவினர்களும் பெண் பார்க்க வந்து கொண்டிருக்கும் தகவலை காந்திமதியிடம் தெரிவித்தான் சோமசேகரன்.

அவளது குழி விழுந்த கன்னங்கள் சிவந்தன. ஈசனின் அவதாரமான சுந்தரபாண்டியனின் மகன் தன் மணாளனாக அமைந்தார் என்றால், அதை விட வேறென்ன பாக்கியம் வேண்டுமெனஆனந்தக் கண்ணீர் வடித்தாள். இதனிடையே சோமசேகரனின் அமைச்சர்கள் சிலர் அரசரிடம், அரசே! பெண் பார்க்கும் படலத்தை பெண் வீட்டில் வைத்துக் கொள்வது தான் மரபு. இருப்பினும், தங்கள் கனவில் பெருமானே ரிஷபாரூடராக வந்து, இந்த திருமணத்தை நடத்தி வைக்கும்படி சொல்லியுள்ளதால், நாமே பெண்ணுடன் மதுரை செல்வோம். அமைச்சர் சுமதி எதிரில் வருவார். அவரையும் அழைத்துக் கொண்டு மதுரை சென்று, உலகாளும் சோமசுந்தரரையும், தடாதகை பிராட்டியாரையும் சந்தித்து பேசி முடிப்போம். அதுதான் மரியாதையாக இருக்கும்,என்றனர். அரசனுக்கும் இந்த யோசனை நல்லதெனப்பட்டது. உடனடியாக பயண ஏற்பாடுகள் துவங்கின. காந்திமதியையும் அழைத்துக் கொண்டு சோமசேகரன் பரிவாரங்களுடன் மதுரை கிளம்பினான். தேர்கள் வேகமாகச் சென்றன. அவர்கள் மணவூர் எல்லையைத் தாண்டி மதுரை எல்லைக்குள் நுழையவும் சுமதியும் அங்கு வந்து சேர்ந்தார். நம் வேலையைக் குறைத்தது மட்டுமின்றி, மணமகளே நேரில் மதுரைக்கு வந்தால் சோமசுந்தரரும், தடாதகை பிராட்டியும் மகிழ்ச்சியடைவது மட்டுமின்றி, உக்கிரபாண்டியனும் பெண்ணை நேரில் பார்த்துவிடுவான். மாப்பிள்ளையும், பெண்ணும் நேரில் பார்த்துக் கொண்டால் நாளைக்கு நம்மைக் குறை சொல்ல முடியாது, என நினைத்து சிரித்தபடியே சோம சேகரனை அடையாளம் தெரிந்து கொண்டு எதிர்கொண்டழைத்து வரவேற்றார்.

எதிரே நிற்பவர் அமைச்சராயினும், அவர் மாப்பிள்ளை வீட்டுக்காரர் என்பதால் மன்னன் சோமசேகரன் தேரில் இருந்து இறங்கி பணிவுடன் வணக்கம் தெரிவித்தான்.அமைச்சர் சுமதி மன்னன் அருகில் நின்ற பெண்ணைப் பார்த்தார். அவர்மட்டுமென்ன! வந்தவர்கள் எல்லாருமே ராஜகுமாரியாயினும் அடக்கத்தின் வடிவாய்நின்ற காந்திமதியைப் பார்த்து மகிழ்ந்தார்கள். உலகத்துக்கே ராஜாவானசோமசுந்தர

பாண்டியனின் வீட்டுக்கு மருமகளாக இருந்தாலும், அவள் அமைச்சர் சுமதியை வணங்கினாள். பின்னர் அனைவருமாக மதுரை புறப்பட்டனர். இந்தத் தகவலை அமைச்சர் சுமதி முன்கூட்டியே மன்னருக்கு அறிவிக்க ஆட்களை அனுப்பி விட்டார். அவர்கள் அங்கு சென்று தகவல் சொல்லவே, தங்கள் வீட்டுக்கு குத்து விளக்கேற்ற வரும் குலக்கொடியை வரவேற்க சோமசுந்தரரும், தடாதகை பிராட்டியாரும் தயாரானார்கள். மாளிகையில் பாவை விளக்குகள் ஏற்றப்பட்டன. ஒளி வெள்ளத்தில் மிதந்தது அரண்மனை. மதுரை மக்களுக்கு தகவல் தெரிவிக்க முரசறையப்பட்டதால், அவர்கள் உடனடியாக நகரெங்கும் வரவேற்பு வளைவுகளை வைக்க ஆரம்பித்து விட்டனர். குறிப்பிட்ட நேரத்துக்குள் எல்லாம் தயாராகி விட்டது. மணவூர் அரசன் தன் மகளுடன் மதுரை வந்து அரண்மனைக்குச் சென்றான். அவர்களை சோமசுந்தர பாண்டியன் அன்புடன் வரவேற்றார். தடாதகை பிராட்டியார் தன் மகளின் அழகு தன்னழைகையும் விஞ்சியது என்பதைப் புரிந்துகொண்டு பெருமைப்பட்டாள். உக்கிரபாண்டியன் தன் வருங்கால மனைவியைப் பார்க்கும் சையை அடக்கிக் கொண்டு தன் அறையில் இருந்தான். மாப்பிள்ளையின் அவசரத்தை அவனைச் சுற்றியிருப்பவர்கள் புரிந்து கொண்டு வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தனர். காந்திமதியின் நிலையும் இதுதான்.

மாமா, அத்தையைப் பார்த்தாயிற்று....அவர் எங்கிருக்கிறாரோ? அந்தக் கட்டழகன் எப்போது வருவார்? என்று ஆவலுடன் யாருமறியாமல் கண்களைச் சுழல விட்டுக்கொண்டிருந்தாள். தடாதகைபிராட்டியாரும், சோமசுந்தரப்பாண்டியனும் இதை கவனிக்காமல் இல்லை. நிச்சயதார்த்தத்தை உடனடியாக முடித்துக் கொள்ள முடிவாயிற்று. காந்திமதியின் அவசரத்தைப் புரிந்து கொண்ட தடாதகை, உக்கிரவர்மனை வரச்சொல்லுங்கள், என்றாள். காந்திமதி நாணித் தலை குனிவது போல் பாசாங்கு காட்டினாலும், கண்கள் மட்டும் உயர்ந்து அவன் வரும் வழியைப் பார்த்தவண்ணம் இருந்தன. ஆஜானுபாகுவானதோற்றத்துடன் உக்கிரவர்மன் புன்னகை ததும்ப, கைகள் கூப்பி வந்து கொண்டிருந்தான். பெற்றோரைப் பணிந்த பின், மாமனாருக்கும் அவருடன் வந்திருந்த முக்கியஸ்தர்களுக்கும் நமஸ்காரம் தெரிவித்தான். மதுரை மன்னரும், மணவூர் மன்னரும், உக்கிரவர்மனும் சிம்மாசனங்களில் அமர்ந்திருக்க, தடாதகைபிராட்டியார், காந்திமதி ஆகியோர் தரையில் விரித்திருந்த ரத்தின கம்பளங்களில் அமர்ந்தனர். ஆண்களுக்குஅக்காலப் பெண்கள் தக்க மரியாதை அளித்ததை இந்த நிகழ்ச்சி தெளிவுபடுத்துகிறது. நிச்சயதார்த்தம் முடிந்து மணநாள் குறித்த பிறகு, பெண் வீட்டார் விடை பெற்றனர். உக்கிரவர்மனின் கண்களும், காந்திமதியின் கண்களும், ராமனும், சீதையும் திருமணத்துக்கு முன்னதாக நோக்கிக் கொண்டது போல நோக்கிக் கொண்டன. இந்த நிகழ்ச்சியின் போது மதுரை

வந்திருந்த தேவகுருவாகிய பிரகஸ்பதிகாந்திமதியை மிகவும் புகழ்ந்தார். அவள் சாமுத்திரிகா லட்சணம் பொருந்தியவள்என்றும், அவளுக்கு வாய்க்கும் கணவன் நீண்டகாலம் புகழுடன் வாழ்வான் என்றும்சொன்னார்.

இதனால் அனைவரது மகிழ்ச்சியும் இரட்டிப்பாயிற்று. நிச்சயதார்த்தத்துக்குப்பிறகு, திருமணநாள் வரையுள்ள நாட்கள் இருக்கிறதே... அது கழிவதற்கு மிகுந்த சிரமமாயிருப்பது போன்ற தோற்றம் எல்லா மணமக்களுக்குமே இருக்கும். உக்கிரவர்மன், காந்திமதியும் விதிவிலக்கல்ல. ஒவ்வொரு நாளும் ஒரு யுகம் போல் கழிய, மணநாளுக்காக அவர்கள் காத்திருந்தனர். அவர்கள் எதிர்பார்த்த அந்தத் திருநாளும் வந்தது. பிரம்மன் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் திருமணத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் ஹோமகுண்டத்தின் முன் அமர்ந்து மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தனர். மணமக்கள் சர்வ அலங்காரத்துடனும் மணப்பந்தலுக்கு வந்தனர். உக்கிரவர்மன் தன் மனையாட்டிக்கு மங்கலநாண் பூட்ட, தடாதகை பிராட்டிக்கு கண்கள் பனித்தது. பெண்ணைப் பெற்ற சோமசேகரனுக்கும் இதே நிலை. தாலிகட்டும் வேளையில் பெற்றவர்களின் உணர்ச்சிவெள்ளம் அவர்களைப் பெற்ற நாளை விட பெருக்கெடுக்கும் என்பதில் சந்தேகமென்ன! உக்கிரவர்மன்- காந்திமதி திருமணம் இனிதாக நிறைவேறி, வந்தவர்கள் அவரவர் இருப்பிடம் திரும்பினர். சிவபெருமானாகிய சோமசுந்தர பாண்டியனும், பராசக்தியாகிய தடாதகை பிராட்டியும் தாங்கள் பூமிக்கு வந்த பணி முடிந்ததால் தங்கள் உலகம் திரும்பமுடிவெடுத்தனர். இதை தங்கள் புத்திரனிடம் தெரிவித்து, உக்கிரவர்மா! இனிநீயே மதுரையின் அரசன். உனக்கு பட்டம் சூட்டிவிட்டு நாங்கள் சிவலோகம்திரும்பப் போகிறோம், என்றனர். பெற்றவர்களைப் பிரிவது எவ்வளவு கடினமானவிஷயம்! காந்திமதியும் வருத்தப்பட்டாள். அமைச்சர் சுமதி உள்ளிட்டவர்களும், மதுரை மக்களும் இந்த செய்தியறிந்து வேதனைப்பட்டனர். அவர்களைத் தேற்றியதடாதகைபிராட்டியார், என் அன்பு மக்களே! மீன்கள் தங்கள் கண்களை இமைக்காமல்தங்கள் குஞ்சுகளை எப்படி பாதுகாக்கின்றதோ, அதுபோல் நான் என்றும் உங்களைக்காப்பேன்.

சோமசுந்தரரும் சொக்கநாதராக இங்கே எழுந்தருளி உங்களுக்குத் தெரியாமலே ஆட்சிநடத்துவார். நாங்கள் இங்குள்ள கோயிலிலேயே ஐக்கியமாவோம், என்று ஆறுதல்வார்த்தைகள் சொன்னாள். மக்களும் மற்றவர்களும்ஒருவாறாக மனதைத் தேற்றிக்கொண்டனர். ஒரு இனியநாளில், உக்கிரவர்மனுக்கு பட்டாபிஷேகம் மிகச் சிறப்பாகநடந்தது. அப்போது, சோமசுந்தரர், தன் மகனிடம், உக்கிரவர்மா! இதோ நான் தரும்வேல், வளை, செண்டு ஆகியவற்றைப் பெற்றுக் கொள். மதுரை நகரை கடல் ஆட்கொள்ளும்சமயம் வரும். அப்போது, மக்களைக் காப்பாற்ற இந்த வேலை கடல்

மீது எறிந்தால் அது உள்வாங்கி விடும். இந்திரன் உன் மீது கொண்ட பொறாமையால் உனக்கு இடைஞ்சல் செய்வான். அப்போது இந்த வளையை அவனது மகுடத்தின் மீது வீசி அவனை அடக்கு. இதோ! இந்த செண்டால் (மலர்க்கொத்து) மேருமலையை அடித்து நொறுக்கு. ஒரு சமயத்தில் அது அகங்காரம் கொண்டு மக்களுக்கு இடைஞ்சல் செய்யும். அப்போது இது பயன்படும், என்று சொன்னார். அவற்றை பயபக்தியுடன் உக்கிரவர்மன் பெற்றுக் கொண்டான். பட்டாபிஷேகம் முடிந்ததும் உக்கிரவர்மனை உக்கிரபாண்டியன் என்று மக்கள் அழைக்கலாயினர். பின்னர், சோமசுந்தரபாண்டியனும், தடாதகை பிராட்டியாரும் கோயிலுக்குள் சென்று மறைந்தனர். அவர்கள் சொக்கநாதர் என்றும், மீனாட்சியம்மன் என்றும் போற்றப்பட்டனர். சொக்கநாதர் லிங்கவடிவில் எழுந்தருளினார்.

## 13. கடல் சுவற வேல் விடுத்த படலம்!

உக்கிரபாண்டியன் பொறுப்பேற்று சில மாதங்கள் கடந்தன. தந்தையைப்போலவே, உக்கிரபாண்டியனும் நல்லாட்சி நடத்தி வந்தான். அவனது மனைவி காந்திமதியும் கணவனின் மனம்கோணாமல் நடந்து புகுந்த வீட்டுக்கும், பிறந்த வீட்டுக்கும் பெருமை தேடித்தந்தாள். உக்கிரபாண்டியன் 96 யாகங்களைச் செய்து முடித்து, மதுரை நகர் செழிப்புடன் இருக்க வழிவகை செய்தான். இன்னும் நான்கு யாகங்களைபூர்த்தி செய்துவிட்டால், அஸ்வமேத யாகம் நடத்தி இந்திர லோகத்தையும் தன்வசம் ஈர்க்கலாம் என்பது அவனது திட்டம். அதாவது நாடு பிடிப்பது என்பது அவனது ஆசையல்ல. இந்திரலோகம் தன் கைக்குள் வந்தால், பாண்டியநாட்டில் மாதம் மும்மாரி பொழிய வைத்து மக்களை செழிப்புடன் வாழ வைக்கலாம் என்பது அவனது எண்ணம். மழைக்கடவுளான இந்திரனின் இடத்தைப் பிடித்தால் தான் இது சாத்தியம். இதை இந்திரன் தெரிந்து கொண்டான். உக்கிரபாண்டியனின் திறமையை அவன் அறிவான். மேலும், முருகப்பெருமானின் அவதாரமான அவனால் எதையும் சாதிகமுடியும் என்று தெரிந்து கொண்டு, தன் பதவியைக் காப்பதற்குரிய முயற்சியை எடுத்தான். வருணனை அழைத்து, வருணா! நீ மதுரைக்குச் செல். அங்கே சோமசுந்தரர் வரவழத்த எழுகடல்கள் உள்ளன. அவற்றைப் பொங்கச்செய்து மதுரையை அழித்து விடு. இல்லாவிட்டால், இந்திரலோகம் உக்கிரபாண்டியனின் வசமாகி விடும்.

நாம் அவனது அடிமைகளாகி விடுவோம். உன் பதவியைக் காப்பாற்றிக் கொள் என்று உத்தரவிட்டான். இந்திரனின் உத்தரவை தட்ட முடியாத வருணனும் வேறு வழியின்றி மதுரைக்குச் சென்றான். ஒருநாள் இரவு வேளையில் உக்கிரபாண்டியனும் காந்திமதியும் தங்கள் மஞ்சத்தில் சயனித்திருந்தனர். நள்ளிரவு வேளை பேய்கள் கூட உறங்கிப் போனதோ என்று சொல்லுமளவுக்கு பெரும் நிசப்தம். அப்போதுஎழுகடலில்

இருந்து பேரோசை எழும்பியது. மன்னனின் கனவில் தோன்றியசோமசுந்தரர், மகனே! இந்திரன் எழுகடலை பொங்கச் செய்து மதுரையை அழிக்கதிட்டமிட்டுள்ளான். நான் உன்னிடம் கொடுத்த வேலை கடல் மீது எறிந்து அதைவற்றச்செய், என ஆணையிட்டார். திடுக்கிட்டு எழுந்த உக்கிரபாண்டியன், உடனடியாக அமைச்சர் சுமதி மற்றும் பெரும்படையுடன் எழுகடல் பகுதிக்கு வேலுடன்சென்றான். எழுகடலும் மதுரையை நோக்கி உக்கிரத்துடன் வந்து கொண்டிருந்ததைப்பார்த்து திகைத்துப் போனான். சோமசுந்தரரை மனதில் நினைத்து துதித்து வேலை கடலை நோக்கி வேகமாக எய்தான். அந்த வேலின் நுனிபட்டதோ இல்லையோ, எழுகடல் தண்ணீரும் சொட்டு கூட இல்லாமல் அப்படியே வற்றிப்போனது. மன்னனும் மற்றவர்களும் ஆர்ப்பரித்தனர்.

சோமசுந்தரரையும், மீனாட்சியையும் போற்றிப் புகழ்ந்தனர். மறுநாள் காலையில்தான் மக்களுக்கு இந்த தகவல் தெரியவந்தது. எழுகடலும் காணாமல் போய் பெரும் நிலப்பரப்பு தங்கள் முன் இருந்ததை அவர்கள் கண்டனர். கடல் பொங்கியதும், உக்கிரபாண்டியன் அதை அடக்கியதும் கேள்விப்பட்டு மன்னனை வாயார வாழ்த்தினர். ஊரெங்கும் விழா எடுத்தனர். எழுகடல் நிலத்தையும் மன்னன் மீனாட்சியம்மன்கோயிலுக்கு பட்டயம் செய்து வைத்தான். வெற்றி வாகை சூடி, இனிய ஆட்சியை சிறிது காலம் தொடர்ந்த மன்னனின் வாழ்வில் விதி விளையாடியது. தெய்வங்களேமனிதராக பிறப்பெடுத்தாலும், அவர்கள் கிரகங்களின் ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும் என்பது ஜோதிட நியதி. இந்த நியதிக்கு உக்கிரபாண்டியனும் கட்டுப்பட வேண்டியதாயிற்று. நவக்கிரகங் களின் சாரமும் உக்கிரபாண்டியனுக்கு சாதகமாக இல்லாததால், சோதனைகள் அவனை நோக்கி படையெடுத்து வந்து கொண்டிருந்தன. திருமால், ராமனாகப் பிறந்து, காட்டுக்கு போனது போல, ஆட்சியையே ஆட்டம் காண வைக்கும் சோதனை அது!

### 14. இந்திரன் முடிமேல் வளை எறிந்த படலம்!

பாண்டியநாட்டிலும், சேர, சோழ நாடுகளிலும் திடீரென மழை பொய்த்தது. தமிழக நாடுகள் அனைத்திலும் பஞ்சம் தலைவிரித்தாடியது. மக்கள் பட்ட துன்பத்திற்கு அளவில்லை. அரண்மனை களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த பொருட்களும் மக்களுக்கு வாரி வழங்கப்பட்டு காலியாகிக் கொண்டிருந்தது. சண்டையும், சச்சரவும் செல்வம் இருக்கும் போது மட்டும் தான்! பசி வந்துவிட்டால் ஒற்றுமை வந்துவிடும் போலும்! தங்களுக்குள் யார் பெரியவர் என அடிக்கடி போரிட்டுக் கொள்ளும் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மதுரையில் ஒன்று கூடி பஞ்சம் போக்கும் முறை பற்றி ஆய்வு செய்தனர். இதற்குரிய தீர்வை பொதிகைமலையில் தங்கியிருக்கும் அகத்தியரைச் சந்தித்து கேட்பதென முடிவு

செய்தனர். அனைவரும் சோமசுந்தரப் பெருமானையும், மீனாட்சியையும் வணங்கி, அகத்தியரைத் தரிசித்த பிறகாவது மழை பெய்து, தமிழகம் செழிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டனர். பின்னர் முப்பெரும் மன்னர்களும் பொதிகை மலைக்குச் சென்றனர். அகத்தியர் தனது மனைவி லோபமுத்திரையுடன் ஆஸ்ரமத்தில் தங்கியிருந்தார். அந்த தம்பதியினரை அவர்கள் வணங்கினர். மூவரையும் வரவேற்று ஆசியளித்த அகத்தியர், அவர்கள் வந்த விபரத்தைக் கேட்டு மனவருத்தம் கொண்டார்.

மாமன்னர்களே! உங்களுடைய கிரக சஞ்சாரப்படி இன்னும் 12 ஆண்டுகளுக்கு நாட்டில் மழை பெய்ய வழியில்லை. இதற்கு ஒரே பரிகாரம் தேவலோகத் தலைவன் இந்திரனை நீங்கள் பிரார்த்திப்பது தான். அவனைப் பார்ப்பதற்குரிய ஏற்பாடுகளை நீங்கள் செய்து கொள்ளுங்கள். அவனது அருள் கிடைத்தால் வருணனை அனுப்பி மழை பொழிய வைப்பான், என்றார். சேர, சோழருக்கு இந்த யோசனையில் உடன்பாடு இருந்தாலும், இந்திரனுக்கும், தனக்கும் ஏற்கனவே பகைமை இருந்ததால், உக்கிரபாண்டியனுக்கு இதில் உடன்பாடில்லை. மாமுனிவரே! இந்திரன் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருப்பவன். நான் என் நாட்டு மக்களின் நலன் கருதி யாகங்கள் பல செய்தேன். ஆனால், இந்திரலோகப் பதவியைப் பிடிப்பதற்காக நான் அவ்வாறு செய்வதாக எண்ணிய இந்திரன், வருணன் மூலமாக ஏழுகடல்களையும் மதுரை மீது ஏவிவிட்டான். நான் அவற்றை என் தந்தை சோமசுந்தரர் கொடுத்த வேல் வீசி தடுத்து நிறுத்தினேன். இதனால், அவன் என் மீது ஆத்திரமாக உள்ளான். என்னைப் பகையாளியாகக் கருதும் அவன், சேர, சோழருக்கு வேண்டுமானால் உதவுவான். எனக்கு உதவி மறுப்பானே! எனவே, நான் அவனைப் பார்க்க விரும்பவில்லை. வேறு உபாயம் இருந்தால் சொல்லுங்கள், என பணிவுடன் விண்ணப்பித்தான். அகத்தியர் சிரித்தார்.

உக்கிரபாண்டியா! பகைவர்களையும் நண்பர்களாக மாற்றிக்கொள்ளும் பக்குவம் நமக்கு வேண்டும். அதற்கு விரதங்களும் உதவும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுமை வேண்டும். அவர்கள் மக்கள் நலன் கருதி, அனைவரையும் அனுசரித்து செல்ல வேண்டும். நீ இந்திரனிடம் நட்பு கொள்ள வேண்டுமானால், சோமவார விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அந்த விரதம் பற்றி சொல்கிறேன், கேள்! என்று அறிவுரை கூறினார். மன்னர்களே! சோமவார விரதத்தை கார்த்திகை மாத திங்கள் கிழமைகளில் துவங்க வேண்டும். மற்ற மாதங்களாக இருந்தால், வளர்பிறை திங்கள்கிழமையை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அமாவாசையும், திங்கள் கிழமையும் இணைந்து வரும் நாளாக இருக்குமானால் சிறப்பானது. முதல் நாள் சூரியவாரத்தன்று (ஞாயிறு) இரவு முதல் திங்கள்கிழமை இரவு வரை உபவாசம் (பட்டினி) இருப்பது நல்லது. அன்று சிவத்தலங்களுக்குச் சென்று வரவேண்டும். குறிப்பாக, மதுரை மாநகரில் இந்த விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் கோடிமடங்கு அதிகபலன் பெறுவர். இந்த விரதத்தால் பகைமை நீங்கும். இறைவனிடம் வைத்த வேண்டுகோள் நிறைவேறும், என்று அருளினார். அவர்கள் அந்த விரதத்தை அனுஷ்டிப்பதாக அகத்தியரிடம் உறுதியளித்து விட்டு நாடு திரும்பினர். சோமவார விரதத்தையும் அனுஷ்டித்தனர். சோமவார

விரதத்தின் பலனாக இந்திரன் மூவேந்தர்களையும் தேவலோகத்துக்கு வர அழைப்பு விடுத்து புஷ்பக விமானத்தை அனுப்பினான். அவர்கள் தேவலோகம் சென்றனர்.

இந்திரன் அவர்களை வரவேற்று ஆசனம் அளித்தான். சேர சோழ மன்னர்கள் அந்த ஆசனங்களில் அமர்ந்தனர். உக்கிரபாண்டியன் அதில் அமர மறுத்துவிட்டான்.இந்திரன் உயர்ந்த பீடத்தில் இருந்த சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டு, அவனுக்கு கீழே இருக்கும் வகையில் ஆசனம் அமைத்திருந்தது அவனுக்குபிடிக்கவில்லை. அவன் வேகமாக பீடத்தில் ஏறினான். இந்திரனுக்கு சமமாக அருகில்இருந்த இருக்கையிலேயே அமர்ந்து கொண்டான். இந்திரனுக்கு தர்மசங்கடமாகஇருந்தது. இருக்கையில் இருப்பவனை எழச்சொன்னால், சிறிய விஷயத்தை பெரிதுபடுத்தியது போலவும், தன்னை அற்பனாக பிறர் கருதி விடக்கூடும் என்பதாலும், பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, அதைக் கண்டு கொள்ளாதது போல் நடித்து, அவர்கள் வந்த விஷயத்தைச் சொல்லும்படி கேட்டான். சேர, சோழர்கள் தாங்கள் வந்த விபரத்தைக் கூறினர். இந்திரன் அவர்களிடம், என்னை நம்பி வந்த உங்களுக்கு, நீங்கள் கேட்டது போல மழை பெய்ய ஏற்பாடு செய்கிறேன்.ஆனால், இங்கே உக்கிரமாக வந்திருக்கும் உக்கிரபாண்டியருக்கு அதையும் விட சிறந்த பரிசளிக்க எண்ணுகிறேன், என்று சொல்லி, யாரங்கே! அந்த முத்துமாலையை எடுத்து வாருங்கள், என்றான். காவலர்கள் பத்து பேர் சேர்ந்து ஒரு தட்டில் வைக்கப்பட்டிருந்த முத்து மாலையை மிகவும் சிரமப்பட்டு தூக்கி வந்தனர். அந்த மாலையை அணிந்து கொண்டால், தலையே தொங்கிவிடும். அவ்வளவு கனம். அதை உக்கிரபாண்டியன் முன்னால் வைத்தார்கள். பாண்டியா! அதை எடுத்து அணிந்துகொள், என்றான் இந்திரன்.

இந்திரன் இந்த பரீட்சையை உக்கிரபாண்டியனுக்கு வைப்பதன் மூலம், அவனை அவமானப்படுத்த எண்ணினான். ஏனெனில், அந்த முத்துமாலையை தனிநபரால் தூக்கவே முடியாது. அவ்வாறு தூக்க முடியாமல் உக்கிரபாண்டியன் அவமானப்பட்டு நிற்கும்போது, கைகொட்டி சிரிக்கலாம் என்பது அவனது நினைப்பு! ஆனால், நடந்ததோ வேறு. அந்த மாலையை ஏவலர்கள் இறக்கி வைத்ததும், தன் இடது கையால் லாவகமாக எடுத்த உக்கிரபாண்டியன் கழுத்தில் அணிந்து கொண்டு அட்டகாசமாக நின்றான். இந்திரனும், தேவர்களும் அவனது பலம் கண்டு நடுங்கிவிட்டனர். உக்கிரபாண்டியா! உன் பலம் பாராட்டத் தக்கது. யாராலும் தூக்க இயலாத இந்த மாலையை ஒற்றைக்கையால் எடுத்து அணிந்து கொண்டாய். இனி உன்னை இந்த உலகம் ஆரம் சூழ்ந்த பாண்டியன் என சிறப்பித்து அழைக்கும், என்றான். இந்திரனின் இந்த பாராட்டை உக்கிரபாண்டியன் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. முப்பெரும் மன்னர்களும் இந்திரலோகத்தில் இருந்து புறப்பட்டு நாடு போய் சேர்ந்தனர்.சேர, சோழ நாடுகளில் மழை கொட்டியது. பாண்டிய நாட்டில் மட்டும் இந்திரனின் ஆணவத்தாலும், சதியாலும் மழை பெய்யவில்லை. இந்திரனை அடக்கி மழையைக் கொண்டு வருவதற்கான கடும் ஆலோசனையில் உக்கிரபாண்டியன் இருந்தான். அவனும், காந்திமதியும் சோமவார விரதத்தை தொடர்ந்து அனுஷ்டித்தனர். சோமசுந்தரப் பெருமானை மட்டுமே அவர்கள் நம்பினர். அந்த வழிபாட்டுக்கு ஒருநாள்

பலன் கிடைத்தது. உக்கிரபாண்டியன் பொதிகைமலை சாரலில் வேட்டையாடிக் கொண்டிருந்த போது, காளமுகி, துரோணம், புஷ்கலாவருத்தம், சங்காரித்தம் எனப்படும் நான்கு வகை மேகங்களின் அதிபதிகள் அந்த வனத்தில் உலவுவதைக் கண்டான். அவர்கள் இந்திரனின் கட்டளைக் கேற்ப பல திசைகளுக்கும் சென்று மழை பெய்விப்பவர்கள். அவர்களை உக்கிரபாண்டியன் விரட்டிப்பிடித்து கைது செய்தான். அந்த தேவதைகள் சிறையில் அடைக்கப்பட்டனர். இதுகண்டு தேவேந்திரன் கடும் ஆத்திரமடைந்தான். உலகில் எங்குமே மழை இல்லாமல் போய்விடும் இக்கட்டான நிலை ஏற்பட்டது. எனவே, தேவர் படை மதுரையை முற்றுகையிட்டது. அமைச்சர் சுமதி தலைமையிலான படை, தேவர் படைகளை எதிர்த்து கடுமையாகப் போரிட்டது.

தேவர் படைக்கு கடும் சேதம். இந்திரன் என்ன செய்வதென தெரியாமல் தவித்தான். வேறு வழியின்றி யாரையும் அழித்துக் கொன்று விடும் தனது வஜ்ராயுதத்தை உக்கிரபாண்டியன் மீது வீசினான். உக்கிரபாண்டியன் கலங்கவில்லை. தன் தந்தை தெய்வமாவதற்கு முன், தனக்கு அளித்த வளையைக் கழற்றி வஜ்ராயுதத்தை நோக்கி வீசினான். அந்த வளை, வஜ்ராயுதத்தை தூள் தூளாக்கி விட்டு, இந்திரனின் கிரீடத்தைத் தட்டிப் பறித்தது. சற்று தவறியிருந்தாலும், இந்திரனின் தலையே போயிருக்கும். இந்திரன் தலைகுனிந்து நின்றான். தலைவனின் நிலைகண்டு, தேவர் படை அடங்கி ஒடுங்கி உக்கிரபாண்டியனிடம் சரணடைந்தது. உக்கிரபாண்டியன் இந்திரனிடம், இந்திரனே! உன்னை இப்போது என்னால் ஒரு நொடியில் கொல்லமுடியும். ஆனால், எதிரிகளிடமும் பரிவுகாட்டும் இனம் மதுரை மண்ணை ஆளும்பாண்டிய இனம் என்பதைப் புரிந்து கொள். இங்கிருந்து சென்றுவிடு, என்று உயிர்ப்பிச்சை கொடுத்தான். தேவேந்திரன் அவமானத்துடன் தன்னுலகம் சென்றான்.மழை பெய்யாததால் உலகமக்கள் கஷ்டப்படுவார்களே என்பதற்காக, மேக தேவதைகளை விடுவிக்கும்படி உக்கிரபாண்டியனுக்கு ஒரு தூதன் மூலமாக ஓலை அனுப்பினான்.உக்கிரபாண்டியன் அந்த ஓலையைப் படித்து விட்டு, அவ்வாறு செய்ய இயலாது என்றும், இனி அந்த தேவதைகள் தனக்கு கட்டுப்பட்டு தங்கள் தேசத்தில் மட்டுமே மாதம் மும்மாரி மழை பொழியச் செய்வார்கள், என்றும் பதில் சொன்னான். அப்போது, அவையில் இருந்த ஏகவீரன் என்பவன் எழுந்தான். அரசே! பிடிவாதம் வேண்டாம்.இந்த பிடிவாதத்தால் நமக்கு தண்ணீர் கிடைக்கலாம். ஆனால், தண்ணீர் என்பது பொதுவான விஷயம். அது உலகம் முழுமைக்கும் வேண்டும். தயவுசெய்து நீங்கள்மேகாதிபதிகளை விடுதலை செய்யுங்கள். நான் இந்திரனின் நண்பன். அவனோடு பேசி, பாண்டியநாட்டில் தவறாமல் மழை பெய்ய ஏற்பாடு செய்து தருகிறேன். இது உறுதி.என்னை நம்பி இதைச் செய்யலாம், என்றான். முருகனின் அம்சமானஉக்கிரபாண்டியனும் சம்மதம் தெரிவித்தான். மேகாதிபதிகள் இந்திரனைப் போய்ச்சேர்ந்தனர். ஏகவீரன் இந்திரனைச் சந்தித்துப் பேசி பாண்டியநாட்டில் மாதம் மும்மாரி பொழிய ஏற்பாடு செய்தான். நாடு மீண்டும் செழித்தது.

## 15. மேருவை செண்டால் அடித்த படலம்!

மதுரை மீண்டும் செழிக்க, கவலை நீங்கிய உக்கிரபாண்டியன் மனைவி காந்திமதியுடன் இன்புற்று வாழ்ந்தான். காந்திமதி கர்ப்பமானாள். அவர்களுக்குஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு வீரபாண்டியன் என அவன் பெயர் சூட்டினான். குழந்தை வீரபாண்டியனுக்கு மூன்று வயதாகும் போதே அவனுக்கு எல்லா தெய்வ ஸ்லோகங்களும் அத்துப்படியாகி விட்டது. அவனது மழலைக்குரலில் அந்த ஸ்லோகங்களைக் கேட்க தேனாய் இனிக்கும். காந்திமதி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சோமவார விரதத்தை தொடர்ந்து அனுஷ்டிக்கும் தம்பதிகளுக்கு இதுபோன்ற புத்திசாலித்தனமான குழந்தைகள் பிறக்கும் என்பது நியதி. குழந்தையை குருகுலத்திற்கு அனுப்பினர் பெற்றோர். வீரபாண்டியன் மிகச்சிறப்பாகப்படித்தான். தந்தையைப் போலவே வாள்சண்டை, மற்போர் இன்னும் பல கலைகளில் வீரமிக்கவனாகத் திகழ்ந்தான். இந்த சமயத்தில் மதுரையில் மீண்டும் பஞ்சம் ஏற்பட்டது. இப்போது ஏற்பட்டுள்ள பஞ்சத்துக்கு காரணம் நவக்கிரகங்களின்சஞ்சாரம் காரணமாக ஏற்பட்டது. அரண்மனை ஜோதிடர்களையும், புரோகிதர்களையும் அழைத்த உக்கிரபாண்டியன் இந்த நிலையில் இருந்து மீளும் வழிமுறைகளை ஆலோசித்து சொல்லும்படி உத்தரவிட்டான். புரோகிதர்களின் ஆலோசனைப்படி, ஓராண்டு காலத்திற்கு நவக்கிரக சஞ்சாரப்படி மழையில்லை என கணிக்கப்பட்டது. இம்முறை, உக்கிரபாண்டியன் இந்திரனைப் பார்க்க விரும்பவில்லை. மாறாக, சோமசுந்தரப்பெருமான் கோயிலுக்குச் சென்று அந்த அண்ணலையும், அங்கயற்கண்ணி மீனாட்சியையும் பணிந்தான். அண்ணலோ அசையாமல் இருந்தார். இதென்ன சோதனை? என்று வருத்தம் பொங்க அரண்மனை வந்து சலிப்புடன் படுத்த உக்கிரபாண்டியனின் கனவில் சோமசுந்தரர் தோன்றினார்.

உக்கிரபாண்டியா! வருத்தம் வேண்டாம். மழை பெய்யவில்லை என்றால் மக்களின் பஞ்சம் போக்க வேறுமார்க்கம் தேட வேண்டும். நான் ஒரு வழி செல்கிறேன். இமயத்தைக் கடந்து சென்றால் மேரு என்னும் மலையரசன் இருக்கிறான். அவன் மலைவடிவிலேயே இருப்பான். அந்த மலையின் குகைக்குள் ஏராளமான செல்வத்தை ஒளித்து வைத்திருக் கிறான். அதன் ஒரு பகுதியை எடுத்து வந்தால் கூட உலகம் உள்ளளவும் மதுரை செழிப்புடன் இருக்கும். செல்வம் வளம் மிக்க மேரு ஆணவம் கொண்டு தலைநிமிர்ந்து நிற்கிறது. அதன் ஆணவத்தை நான் ஏற்கனவே உனக்குத் தந்த செண்டால் அடித்து தகர்த்து விடு. பின்னர், செல்வத்துடன் நாடு வந்து சேர். இது மிகவும் கடுமையான பயணம். செல்வம் சேர்க்க நினைப்பவன் அதை எளிதில் அடைய இயலாது. கடும் புயலையும், மழையையும், ஏற்றத்தையும், இறக்கத்தையும்

கடந்தாக வேண்டும். இதுவே வாழ்வியல் தத்துவம். உன் முயற்சியில் வெற்றி பெற போராடு. புறப்படு, என்று சொல்லி மறைந்தார். விழித்தெழுந்த உக்கிரபாண்டியன் அகம் மகிழ்ந்தான். செல்வம் கிடைப்பதுடன், பாண்டியநாட்டின் பெருமை இமயத்தையும் தாண்டி மேருமலையிலும் நிலைக்கப் போகிறது என்ற பெருமை மிளிர, படைகளை அங்கு புறப்பட ஆணையிட்டான். அமைச்சர் சுமதி அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். மக்களின் வாழ்த்தொலியுடன் படைகள் புறப்பட்டன. பல நாடுகளைக் கடந்து அவர்கள் காசியை அடைந்தனர். கங்கையில் நீராடிய படையினர் காசி விஸ்வநாதரையும், விசாலாட்சி அம்மையையும், அன்னபூரணி யையும் வணங்கி இமயத்தில் ஏறினர். அங்குள்ள நிடத நாட்டைக் கடந்து (நளச்சக்கரவர்த்தியின் நாடு) அவர்கள் மேருமலையை அடைந்தனர்.

மேருமலை செருக்குடன் மிக உயர்ந்து நின்றது. இந்த மலையைத் தான் சிவபெருமான் வில்லாக வைத்துள்ளார். அதனால், உக்கிரபாண்டியன் அந்த மலைக்கு பெரும் மதிப்பளிக்கும் வகையில், மேருமலை அரசனே! நான் பாண்டிய மன்னன் உக்கிரபாண்டியன். மிகுந்த சிரமமான பயணத்தின் பேரில் நான் இங்குவந்துள்ளேன். நீங்கள் உம்மிடமுள்ள செல்வக்களஞ்சியத்தை எங்கள் வறுமை நீங்கதர வேண்டும். என்ன காரணத்தாலோ எங்கள் நாட்டில் மழை பொழியவில்லை. மக்களைக்காப்பாற்ற வேண்டியது உம்மைப் போன்ற பேரரசர்களின் கடமை. பொதுநலன் கருதிவந்துள்ள எமக்கு உதவவேண்டும், என்றான். ஆணவம் கொண்ட மேருமலை அசையாமல் நின்றது. உக்கிரபாண்டியன் உக்கிரமாகி விட்டான். ஆணவம் பிடித்த மலையே இப்போது உன்னை என்ன செய்கிறேன் பார், எனச் சொல்லியபடியே, சுந்தரேசப்பெருமான் தனக்களித்த செண்டு என்னும் தங்கப்பந்தால் மேருவின் மீது ஓங்கியடித்தான். அவ்வளவு தான்! பலம்மிக்க மேருமலை ஒரு பந்தின் அடி தாங்க முடியாமல் பிளந்தது. ஆங்காங்கே தீப் பிழம்புகள் கொப்பளித்தன. அந்த மலையில் வசித்த தேவர்களின் மாளிகைகள் நொறுங்கி விழுந்தன. அவர்கள் பதைபதைப்புடன் வெளியே ஓடினர். மேருமலை அரசன் ஓடிவந்து உக்கிரபாண்டியன் முன்னால் வந்து நின்றான்.

யாராலும் அசைக்க முடியாத என்னை ஒரு சாதாரண செண்டால் அடித்து காயப்படுத்தி விட்டாய். இந்த செண்டு சாதாரணமானதாக இருக்க முடியாது. இதன் மகிமையைப் பற்றி சொல், என்றான்.மன்னரே! இது சுந்தரேஸ்வரப் பெருமானால் எனக்கு அருளப்பட்டது. அதைக் கொண்டு அடித்ததால் தான் உமக்கு வலி ஏற்பட்டது. நாம் கேட்ட செல்வத்தை இனியேனும் தந்தருள வேண்டும், என்ற உக்கிர பாண்டியன், மேருமலை தெய்வமே! எங்கள் நாட்டில் மழை பொய்த்துப் போனதற்குரிய காரணம்

மலையான உமக்கு தெரியாமல் இருக்க முடியாது. நவக்கிரக சஞ்சாரத்தை உம்மைப் போன்ற மலைகளால் தீர்க்க முடியாதா? என்றான்.மேரு அரசன் இதற்கு பதிலளித்தான். மன்னரே! உம் நாட்டில் மழை பொய்த்ததற்கு காரணம் நவக்கிரக சாரம் மட்டுமல்ல! எனது அசட்டையும் காரணம். நான் தினமும் அங்கயற்கண்ணி மீனாட்சியையும் சுந்தரேஸ்வரப் பெருமானையும் வணங்குவதற்கு விண்வழியில் சில மணி நேரங்களில் தினமும் வந்து வணங்கிச் செல்வேன். நான் வருவது யார் கண்களுக்கும் தெரியாது. என் வருகையால் பொதிகையில் இருந்து புறப்பட்டு வரும் காற்று தடுக்கப்பட்டு, உம் பூமியில் தவறாது மழை பெய்து வந்தது. ஒருமுறை இந்திரன் உமக்கு தந்த சோதனையால் மழை பொய்த்தது.

நீர் என்னால் உருவாக்கப்பட்ட மேக தூதர்களை மீட்டு மழை பெய்ய வைத்தீர். இப்போது, எனது பாவப்பட்ட செயலால் மழை பொய்த்திருக்கிறது. அதாவது சமீபத்தில் ஒருநாள் நான் அங்கு பறந்து வந்த போது, விண்வெளியில் ஒரு அழகியைப் பார்த்தேன். அவள் மீது கொண்ட மயக்கத்தால் என் மதுரைப் பயணம்தடைபட்டது. அவளுடன் நான் உறவு கொண்டேன். இதனால், இறைவனை வணங்காமல் தீட்டுப்பட்டேன். அதன்பிறகு, என்னால் மதுரைக்கு வர இயலாமல் ஆகிவிட்டது. ஆனாலும், என்னிடம் ஏராளமான செல்வம் இருந்ததால் இறுமாந்து இங்கேயே இருந்துவிட்டேன். சிவபெருமான் உனக்கருளிய செண்டால் அடிபட்டு பாவ விமோசனம் பெற்றேன். இனிமேல், நான் மீண்டும் பறக்கும் சக்தி பெறுவேன். நீர் விரும்பியபடி, குகையில் இருக்கும் செல்வத்தை முழுமையாக எடுத்துக்கொள்ளலாம், என்றது. பாண்டியப் படைகள் குகையை மூடியிருந்த பாறையை நகர்த்தின.அதற்குள் நம்ப முடியாத அளவிற்கு செல்வக்குவியல் இருந்தது. அந்தபொற்குவியலை மலை போலக் குவித்து பல குடிகளுக்கும் அளித்துப் பாதுகாத்தான் உக்கிர பாண்டியன். பாண்டி நாடு முழுவதும் மீண்டும் மழை வளம் பெற்றது.எங்கும் பெருவளங்கள் கொழித்தன. அதனால் உயிர்கள் எல்லாம் பசி நீங்கித்தழைத்து ஓங்கிற்று. உக்கிரபாண்டியனம் பல காலம் ஆட்சி புரிந்து தனது திருமகனாகிய வீரபாண்டியனுக்கு முடி சூட்டினான். அரசுரிமை தந்தான். பின்னர்சோம சுந்தரக் கடவுளின் திருவடி நீழலை அடைந்தான்.

## 16. வேதத்திற்கு பொருளருளிச் செய்த படலம்!

ஐம்பெரும் பூதங்களும் ஒரு காலத்தில தத்தம் நிலையில் இருந்து மாறுபட்டன. பதினான்கு உலகங்களும் அவற்றில் அடங்கிய அனைத்தும் தோன்றியவாறே அடங்கி ஒடுங்கின. ஊழிக்காலம் வரவே மறைகளும் ஒடுங்கின. பின் கால வேகத்தில்

கதிரவன் முன் மலரும் தாமரை போல், சிவபெருமான் திருமுன்னர் மீண்டும் யாவும் தோன்றலாயின. அப்போது சிவபெருமான் திருவாக்கில் பிரணவம் தோன்றிற்று. அதனின்றும் வேதங்கள் எல்லாம் தோன்றலாயின. நைமிசாரணிய வாசிகளாகிய கண்ணுவர், கருக்கர் முதலிய முனிவர்கள் அவ்வேதங்களை ஓதி, அவற்றின் உட்பொருளை அறியாது மயங்கி மனமும், முகமும் வாடிக் கவலையோடு இருந்தார்கள். அச்சமயத்தில் தவவலிமை பெற்று விளங்கிய அரபத்தர் என்னும் ஒரு முனிவர் அங்கு வந்தார். அங்கிருந்த முனிவர்கள் அவரை வணங்கினர். பின்னர் வரவேற்று ஆசனத்தில் அமர்த்தி கவலையோடு அமைதியாக உட்கார்ந்திருந்தனர். அரபத்தர் அம்முனிவர்களிடம், தாங்கள் முகம் வாடி இருக்கும் காரணம் என்ன? என்று வினவினார். முனிவர்கள் அரபத்தை நோக்கி, ஐயனே! நாங்கள் சிவபெருமான் அருளிச் செய்த வேதங்களைப் பயின்றோம், ஆனால் அதன் உட்பொருள் எங்களுக்கு தெரியவில்லை என்றனர்.

அரபத்தர், முனிவர்களே! வேதத்தை அருளிச் செய்த சிவபெருமானே அருளுருக் கொண்டு உங்களுக்கு தாம் அருளிய வேதத்தின் பொருளை உணர்த்துவார். நீங்கள் அவரை நோக்கித் தவம் இருங்கள் என்றார். அரபத்தர் கூறியதைக் கேட்ட மற்ற முனிவர்கள் மகிழ்ச்சியடைந்து மதுரையைச் சென்றடைந்தனர். திருக்கோயில் பொற்றாமரையில் நீராடு, சோம சுந்தரக் கடவுளை தரிசித்தனர். எம்பெருமானை நோக்கி வேதத்தின் பொருளை உணராது வாடிய எங்களுக்கு நீரே அவ்வேதங்களின் உட்பொருளாய் நின்று அருளினீர். அந்த வேதங்களுக்கு உம்மையன்றி வேறு பொருள் யாது? என்று கூறி வணங்கி விட்டு பின்னர் கல்லால மரநிழலில் எழுந்தருளியுள்ள தட்சிணாமூர்த்தி சன்னதியை அடைந்தார்கள். அங்கு முப்பத்திரெண்டு இலக்கணமும் அமையப் பெற்ற, பதினாறு வயது நிரம்பிய ஒரு பிராமணக் குரு வடிவம் கொண்டு எழுந்தருளினார் ஈசன். முனிவர்களை நோக்கி குற்றமற்ற தவமுடையீர்! நீங்கள் விரும்புவது யாது? என்றார். உடனே முனிவர்கள் அனைவரும் அறியும் படி வேதங்களின் பொருளை உபதேசித்தருள வேண்டும் என்று கூறினர். சிவலிங்கப் பெருமான் அவர்களுக்கு வேதங்களின் பொருளை அருளிச் செய்வாரானார். முனிவர்களே! கேளுங்கள், வேதங்களின் பொருள்களைனைத்தும் ரகசியமாகும். அவ்வேதப் பொருளை அறிதலே இம்மை இன்பப் பயனுக்கும் பாச பந்தத்தைப் போக்கும் வீடு பேற்றின் பயனுக்கும் கருவியாகும். சிவபெருமானின் சக்தியால் நான்கு வேதங்கள் தோற்றுவிக்கப்பட்டு பின்னர் அவை அளவற்று விரிந்தது.

சிவபெருமானின் ஈசான முகத்திலே சிவாகமங்கள் இருபத்தெட்டும் கிழக்கு முகமாகிய தற்புருட முகத்தினின்று 21 சாகைகளோடு ரிக் வேதமும், தெற்கு முகமாகிய அகோர

முகத்தினின்று 100 சாகைகளோடு யஜூர் வேதமும், வடக்கு முகமாகிய வாமதேவ முகத்தினின்று 1000 சாகைகளோடு சாம வேதமும், மேற்கு முகமாகிய சத்தியோசாத முகத்தினின்று 9 சாகைகளோடு அதர்வண வேதமும் தோன்றியது. வேதங்கள்நான்கு வகை. அதனால் வருணங்களும், ஆச்சிரமங்களும் நான்காயின. தருமங்களும்யாகாதி கருமங்களும் வேதங்களின் நெறியிலே தோன்றின. அவ்வேதங்கள் சிவனின் பூஜா விதிகளை குறிக்கும் கரும காண்டம், சிவனின் சச்சிதானந்த வடிவத்தைகுறிக்கும் ஞான காண்டம் என இருவகைப்படும். வேதத்தின் வழியே நடக்கும்அனைத்திற்கும் வேதமே பிரமாணமாகும். அதன் வழியே சென்று பொருந்தக் கூறும்ஸ்மிருதிகள் அனைத்தும் அம்மதங்களுக்கு அனுகுணப் பிரமாணமாகிய ஸ்மிருதிக்கொள்கைகள் ஸ்மார்த்தம் எனப்படும். ஸ்மார்த்தத்தைத் தழுவிய வேத நெறிகள்வைதிகம் எனப்படும். அவற்றும் மிக மேன்மையாகக் கூறப்படுவது சுத்தசன்மார்க்கமாகிய வைதிக சைவம் என்பதை உறுதியுடன் பற்றிடுக என்றார்.பாகத்திற்கும், வீட்டிற்கும் காரணமாக விளங்கும் சிவமயமாகிய மறைகளின்உட்பொருளை உங்கள் அறியாமை நீங்கும் வண்ணம் உரைத்தோம். நாம் கூறியஇப்பொருளைக் காட்டிலும் மேலான பொருள் வேறில்லை. இப்பொருள்கள் அனைத்தும்உங்களுக்கு மயக்கம் தீர அமைவதாக! என்று அருளி மறைந்தார். கண்ணுவர் முதலானமுனிவர்கள் மயக்கம் தெளிந்து மகிழ்த்தி வெள்ளத்தில் மூழ்கினர்.

## 17. மாணிக்கம் விற்ற படலம்!

மன்னன் வீரபாண்டியனுக்கு பல போகங்கள் விளைகின்ற நிலங்கள் ஏராளம் இருந்தன. அரண்மனையின் அந்தப்புரத்தில் ஆசைநாயகிகள் இருந்தனர். அவர்களுக்கு பேரழகு நிறைந்த புதல்வர்கள் பலர் பிறந்தனர். ஆனால் வீரபாண்டியனின் மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை. தெய்வ வழிபாடு நடத்தி அட்டமி, சதுர்த்தி, சோமவாரம் போன்ற விரதங்களை கடைபிடித்தனர். நாட்கள் சில கழிந்தன. ஈசனின் அருளால் அரசியார் வயிற்றில் ஒரு சற்புத்திரன் தோன்றினான். புத்திரனுக்கு வேதப்படி சாதகன்ம முதலாக பிற சடங்குகளை வீரபாண்டியன் சிறப்புற செய்து முடித்தான். ஒரு நாள் வீரபாண்டியன் வேட்டையாட காட்டுக்குச் சென்றான். விதி விளையாடியது. வீரபாண்டியன் புலிக்கு இரையாகி பொன்னாடு போய் சேர்ந்தான். மன்னன் விண்ணுலகம் அடைந்த செய்தி கேட்டு மக்கள் சோகத்தில் மூழ்கினர். நாடே சோகக் கடலில் மூழ்கியது. இந்த நேரத்தில் மன்னரின் ஆசைநாயகிகளும் அவரது புதல்வர்களும், அரண்மனையில் கிடைத்த பொன் ஆபரணம், மகுடம் போன்ற பிற பொருள்களையெல்லாம் கவர்ந்து கொண்டு தலைமறைவாகினர். அமைச்சர்கள் இளங்குமாரனைக் கொண்டு வீரபாண்டியனுக்கு இறுதி சடங்குகள் செய்து

முடித்தார்கள்.

வீரபாண்டியனின் மைந்தனுக்கு முடிசூட்ட அமைச்சர்கள் விரும்பினர். அரண்மனைப் பொக்கிஷத்தை திறந்து பார்த்த போது நவமணிகள் இழைத்த முடியும், வேறு சில பொருட்களும் காணாமல் போயிருந்தது. செய்வதறியாது நின்ற அமைச்சர்கள் திருக்குமாரனை அழைத்துக் கொண்டு திருக்கோயிலின் கோபுர வாயிலை அடைந்தனர். அங்கே சோம சுந்தரக் கடவுள் ஒரு வியாபாரியைப் போன்று வேடமணிந்து அவர்கள் முன் வந்தருளினார். தங்க வியாபாரி அவர்களைப் பார்த்து நீங்கள் கவலை கொண்ட முகத்தோடு இங்கு வரக் காரணம் என்ன? என்று கேட்டார். அமைச்சர்கள் அரண்மனையில் நிகழ்ந்த அனைத்தையும் அவரிடம் விளக்கமாகக் கூறினர். அதைக் கேட்ட வியாபாரி, அமைச்சர்களே! என்னுடன் வாருங்கள். கிரீடம் செய்வதற்கான தரமான நவரத்தினக்கற்கள் பல என்னிடம் உள்ளன. காணாமல் போன கற்களை விட இவை தரமானவை. மேலும், பாண்டிய மன்னர்களுக்கு எங்கள் குடும்பத்தினரே பரம்பரை பரம்பரையாக கிரீடங்கள் உருவாக்கித் தந்திருக்கிறோம். காணாமல் போன கற்களைப் பற்றிய கவலையை விடுங்கள். அவை மெதுவாகத் திரும்பக் கிடைக்கட்டும். பாண்டியனின் ஒற்றர்கள் திறமைசாலிகள். அவர்கள் எப்படியும் கற்களைக் களவாடியவர்களின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து விடுவார்கள். அவை கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டாம். புதிய கற்களை கிரீடத்தில் பதித்து தருகிறேன். அதைக் கொண்டு செல்வபாண்டியனுக்கு பட்டாபிஷேகம் செய்து விடலாம், என்றார். அமைச்சர்கள் அந்த தங்க வியாபாரியை இதற்கு முன் பார்த்ததே கிடையாது. இருப்பினும், தங்களை அறியாமலே அவர் பின்னால் சென்றனர். கோயில் மண்டபம் ஒன்றில் அவர்களை அமர வைத்த வியாபாரி, தன்னிடமிருந்த பட்டுக் கம்பளம் ஒன்றை விரித்து, அதில் நவரத்தினக் கற்களைப் பரப்பினார். அமைச்சர்கள் அயர்ந்து போய் விட்டனர். இந்தளவுக்கு ஒளிசிந்தும் நவரத்தினங்களை அவர்கள் தங்கள் வாழ்நாளில் பார்த்ததே இல்லை. பாண்டியனின் கிரீடத்தை அவை அலங்கரித்தால் நாட்டுக்கே பெருமை என எண்ணினர். முந்தைய கற்களை விட இவை தரத்திலும், அழகிலும் மிகையானவை என்பதைப் புரிந்து கொண்டனர். அவரை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு விரைந்தனர்.

கிரீடத்தில் அவற்றைப் பதித்துக் கொடுத்த வியாபாரி, அமைச்சர்களே! எனது சிறு வேண்டுகோளை நீங்கள் ஏற்க வேண்டும். விலைமதிப்பு மிக்க இந்த கிரீடத்தைக் கொண்டு பட்டாபிஷேகம் நடத்திய பிறகு, செல்வபாண்டியனை அனைவரும் அபிஷேகப் பாண்டியன் என வழங்க வேண்டும், என கேட்டுக் கொண்டார். அமைச்சர்களும் அதை ஏற்றனர். செல்வபாண்டியனும் அந்த கிரீடத்தை பார்த்து அகம்

மகிழ்ந்தான். ஒரு நன்னாளில் செல்வபாண்டியனுக்கு முடிசூட்டி, அபிஷேகப்பாண்டியன் என்ற சிறப்பு பெயரையும் சூட்டி மகிழ்ந்தனர் அமைச்சர்கள். அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த தங்க வியாபாரி திடீரென காணாமல் போய்விட்டார். அவரைத் தேடியலைந்து ஓரிடத்தில் கண்டுபிடித்து அவருக்கு தக்க மரியாதை செய்ய மன்னனும், அமைச்சர்களும் விரைந்தனர். அப்போதும்வியாபாரி அங்கிருந்து மறைந்து விட்டார். இதென்ன மர்மம் என அனைவரும் ஓரிடத்தில் அவரைக் கண்டுபிடிக்க அந்த வியாபாரி அன்னை மீனாட்சியுடன் சுந்தரேஸ்வரராகக் காட்சி தந்தார். தங்கள் நாட்டின் மானம் காக்க வந்த அந்த தெய்வங்களை அவர்கள் அனைவரும் பரவசத்துடன் வணங்கினர். அபிஷேகப் பாண்டியனை வாழ்த்திவிட்டு அவர்கள் மறைந்தனர். அபிஷேகப்பாண்டியனின் ஆட்சியில் தர்மம் தழைத்தது. அவன் தன் தந்தையின் ஆசைநாயகிகளையும் அவர்களது புதல்வர்களையும் தேடிப்பிடித்து பரம்பரை பரம்பரையாக பயன்படுத்திய நவரத்தினங்களையும் கைப்பற்றினான். என்ன தான் இருந்தாலும் தன் தந்தையோடு வாழ்ந்த பெண்கள் என்பதால், அவர்களையும், அவர்களின் புத்திரர்களையும் மன்னித்து விடுதலை செய்தான். அவர்கள் வாழ்வதற்குரிய வசதிகளையும் செய்து கொடுத்தான். அவர்கள் அபிஷேகப்பாண்டியனிடம் மன்னிப்பு கேட்டு, அவரவருக்கு ஒதுக்கப் பட்ட இடத்திற்கு சென்று விட்டனர். அபிஷேகப் பாண்டியன் பலகாலம் வாழ்ந்துநல்லாட்சி நடத்தினான்.

Read more: http://www.penmai.com/forums/spirituality/56460-64-thiruvilaiyadal-puranam-64-a-2.html#ixzz2nzEi7Nbk

## 18. கடலை வற்றச் செய்த படலம்!

பாண்டியனின் ஆட்சி தழைத்தோங்கிய நேரத்தில் ஆண்டுதோறும் மதுரையில் சித்ரா பவுர்ணமியன்று இரவில் சொக்கலிங்கப் பெருமானுக்கு நெய், பச்சைக்கற்பூரம், சந்தனம் ஆகியவற்றால் அபிஷேகம் செய்யும் முறையை உருவாக்கினான் அபிஷேகப் பாண்டியன். அதுவரை, தேவலோக தலைவனான இந்திரனே பவுர்ணமி அபிஷேகத்தை பூலோக மக்கள் அறியாத வண்ணம் நடத்திக் கொண்டிருந்தான். அபிஷேகப் பாண்டியன் மாலையில் அவனுக்கு முன்னதாகவே வந்து அபிஷேகம் செய்ததால், அவன் அங்கு வந்து காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒருமுறை சித்ரா பவுர்ணமிக்கு மறுநாள், வருணன் மதுரை சொக்கலிங்க பெருமான் கோயிலுக்கு வந்தான். வருத்தமான முகத்துடன் இருந்த இந்திரனைக் கண்ட அவன், தேவேந்திரா! உன் முகம் ஏன் வாட்டமாக இருக்கிறது? தேவலோக தலைவனான நீ இந்த பூலோகத்தில் வந்து வருந்துவதன் காரணம் என்ன? என்றான்.

வருணனே! சொக்கலிங்கப் பெருமானுக்கு சித்ரா பவுர்ணமியன்று நான் தான் முதலில் அபிஷேகம் செய்வேன். நேற்றோ, அபிஷேகப் பாண்டியன் முன்னதாக அபிஷேகம் செய்ய வந்துவிட்டதால், நான் காத்திருக்க வேண்டியதாயிற்று. சாதாரண மானிடனுக்கு கிடைத்த சிறப்பு தேவர் தலைவனான எனக்கு இல்லையே எனும் போது வருத்தப்படுவதைத் தவிர வேறு என்ன வழி? என்றான். இந்திரனே! யார் முதலில் அபிஷேகம் செய்தால் என்ன? முதன்முதலாக அபிஷேகம் செய்யுமளவுக்கு இந்த சொக்கநாதப் பெருமான் அவ்வளவு சக்தி வாய்ந்தவரா? என்று கேட்ட வருணனிடம், அதிலென்ன சந்தேகம்! என்றான் இந்திரன். அப்படியானால், எனக்கு தீராத வயிற்று வலி இருக்கிறது. தேவலோக வைத்தியர்கள் மருந்து தந்தும் குணமாகவில்லை. இதை இந்த சொக்கநாதர் குணமாக்கி விடுவாரா? எனக்கேட்டான் வருணன். நமது சொக்கநாதர் பிறவி என்றகொடிய நோயையே குணமாக்கக் கூடியவர். அவருக்கா உனக்கு வந்துள்ள சாதாரணவயிற்று வலியைக் குணமாக்க முடியாது! என இந்திரன் பதிலளித்தான். சரிஇந்திரரே! அப்படியானால் அந்தப் பெருமானின் மகிமையை உலகறியச் செய்யும்விதத்தில் நான் ஒரு காரியம் செய்யப் போகிறேன். அவரது திருவிளையாடலைக் காணஆவலாக உள்ளேன், என்றான் வருணன். அவன் என்ன செய்யப்போகிறான் என்பதைக் காணஆவலுடன் நின்றான் இந்திரன்.

வருணன், சமுத்திரராஜனை வரவழைத்தான். சமுத்திரராஜா! உடனே கடலை மதுரைக்கு அனுப்பு. பொங்கி வரும் கடல் மதுரையை அழிக்க வேண்டும், என்று

உத்தரவிட்டான். அதற்கு கட்டுப்பட்டான் சமுத்திரராஜன். பெரும் பிரளயம் ஏற்பட்டது. கடல் பொங்கி மதுரை நகருக்குள் புகுந்து விட்டது. மாட மாளிகைகள் தகர்ந்தன. மதுரை மக்கள் அலறியடித்து ஓடி என்ன பயன்? பலர் வெள்ளத்தில் மூழ்கி இறந்தனர். எங்கும் மரண ஓலம். தப்பிப் பிழைத்த அபிஷேகப்பாண்டியனும், இன்னும் சிலரும் சுந்தரேஸ்வரர் கோயிலை மட்டும் அழிக்காமல் சுற்றி நின்ற வெள்ளத்தைக் கடந்து கோயிலுக்குள் புகுந்தனர். சோமசுந்தரப் பெருமானிடம் தங்களை காப்பாற்றுமாறு விண்ணப்பித்தனர். இரக்கமே வடிவான சொக்கநாதனாகிய சோமசுந்தரர் அவர்கள் முன் தோன்றினார். மேகங்களை வரவழைத்து, மேகங்களே! இந்த கடல் நீரை உறிஞ்சுங்கள், என ஆணையிட்டார். கணநேரத்தில் மதுரையில் வெள்ளம் வந்த சுவடே இல்லாமல் மறைந்து விட்டது. பெருமானின் அருளால் மாண்ட மக்களெல்லாம் உயிர் பெற்றனர். எம்பெருமானின் கருணையை அனைவரும் போற்றினர்.

## 19. நான் மாடக்கூடலான படலம்!

வருணனுக்கோ தன் சக்தி எடுபடாமல் போனது குறித்து வருத்தமும், கோபமும் ஏற்பட்டது. எப்படியும் தன் சக்தியை வெளிப்படுத்த வேண்டுமே என்ற எண்ணத்தில், கடல் நீரை உறிஞ்சிச் சென்ற மேகங்களைத் தடுத்து, மேகங்களே! நீங்கள் உறிஞ்சிய நீரை மழையாகக் கொட்டுங்கள். ஒருவருக்கொருவர் மோதி பெரும்மின்னலையும், இடியையும் உண்டாக்குங்கள். நீங்கள் எழுப்பும் ஓசை கேட்டு மதுரையே நடுங்க வேண்டும். என்ன! நான் சொல்வது புரிகிறதா! என கர்ஜித்தான். தங்கள் எஜமானனின் உத்தரவை நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருந்த மேகங்கள், அவன் சொன்னதை அப்படியே செய்தன. கடல் அலைகளில் சிக்கி எழுந்த மக்களெல்லாம், ஐயோ! இந்த மதுரைக்கு இப்படி ஒரு சோதனையா? சொக்கநாதா! சோமசுந்தரப்பெருமானே! அம்மா மீனாட்சி! எங்களைச் சோதிப்பதே உங்கள் வாடிக்கையா? கடலில் மூழ்கி தப்பி எழச்செய்தீர்கள். இப்போது காற்றும், புயலும், மழையும் பிடித்துக் கொண்டதே! வெட்டும் கொடிய மின்னல் எங்கள் கண்களைப் பறித்து விடும்போலிருக்கிறது! இடிச்சத்தம் கேட்டு நாகங்களே நடுங்கும் போது, எங்கள் வீட்டில் இருக்கும் இளம் குழந்தைகளின் நிலையைக் கேட்க வேண்டுமா ஒடுங்கி அஞ்சிக் கிடக்கிறார்களே! எங்களைக் காப்பாற்றியருள், என்று கெஞ்சி அழுதனர்.

மனம் கலங்காத அபிஷேகப் பாண்டியனே கூட, தனக்கு வந்த தொடர் சோதனையால் ஸ்தம்பித்துப் போனான். அவனது நிலை கண்ட சொக்கநாதர், மகனே! கலங்காதே! மதுரைக்கு எத்தகைய சோதனை வந்த போதும் காப்பது என் கடமை, என்று

அருளினார். உடனடியாக தனது ஜடாமுடியில் இருந்த நான்கு மேகங்களை கீழே இறக்கி, மேகங்களே! வருணனால் அனுப்பப்பட்ட மேகங்கள் சிந்தும் மழை நீரை நீங்கள் உறிஞ்சி எடுத்து, மதுரையின் நான்கு புறங்களையும் சூழ்ந்து நின்று, நகருக்குள் தண்ணீர் விழாதபடி தடுப்பீர்களாக! என்று உத்தரவிட்டார். அதன்படியே நான்கு மாடங்களையும் மேகங்கள் சூழ்ந்து நின்று மழை நீரை உறிஞ்சி விட்டன. வருணனால் அனுப்பப் பட்ட ஏழு மேகங்களும் தங்கள் சக்தியை இழந்தன. இதுகண்டு வருணன் கலங்கிப் போனான். நான்கு மாடங்களையும் மேகங்கள் சூழ்ந்து நின்ற நான்மாடக்கூடலான மதுரை நகருக்கு அவன் வந்தான். சொக்கநாதப் பெருமானை வணங்கி, எந்தையே! என்னை மன்னியும்! இந்திரன் உம்மை பூசிக்க வந்து அயர்வுடன் நகர் திரும்பினார்.

அப்போது நான் என்னை வாட்டும் வயிற்று நோய் தீர வழி உண்டா? என்று கேட்டேன். உம்மைத் தொழுது வேண்டியருளும்படி கூறினான். உமது மகிமை அறியாது, நான் ஏளனம் செய்தேன். அதற்கு இந்திரன் உண்மை அறிய உம்மை சோதிக்கும்படி என்னிடம் கூறினான். அதனால் உம்மை சோதிக்கவே இந்த இழிசெயலில் ஈடுபட்டு விட்டேன். எனதுதவறை பொறுத்தருளும் என மன்னிப்பு கேட்டான். அவனை வாழ்த்திய சொக்கநாதர், வருணா! இது உன்னால் நிகழ்ந்ததல்ல! என்னால் நிகழ்ந்தது. உன் வயிற்றுவலி இன்றோடு நீங்கும், என அருள்பாலித்தார். வலி நீங்கிய வருணன், பொற்றாமரைக் குளத்தில் நீராடி எம்பெருமானை மலர்களால் அர்ச்சித்தான். பின் தன் இருப்பிடம் போய் சேர்ந்தான் வருணன். வருணன் விடுத்த மேகங்களைத் தடுக்கும் பொருட்டு சிவபெருமானது திருச்சடையினின்றும் நீங்கிய மேகங்கள் நான்கு மலைகள் போல் உயர்ந்தன. அவையே நான்கு மாடங்களாய் கூடுதலினாலே அன்று முதல் மதுரைக்கு நான்மாடக்கூடல் என்ற பெயர் உண்டாயிற்று.

## 20. எல்லாம் வல்ல சித்தரான படலம்!

அபிஷேகப் பாண்டியனின் ஆயுளை முடித்து தன் திருவடியில் சேர்த்துக் கொள்ள சிவபெருமான் விருப்பம் கொண்டார். தன்னை ஒரு சித்தர் போல உருமாற்றிக் கொண்டு கோயிலுக்குள் அமர்ந்திருந்தார். தங்கள் ஊருக்கு புதிதாக வந்துள்ள சித்தரைக் கண்ட மக்கள் அவரது தெய்வீக தோற்றம் கண்டு பணிந்து வணங்கினர். ஜடாமுடி, பூணூல், ஸ்படிகம், ருத்ராட்ச மாலைகள் அணிந்த மார்பு, உடலெங்கும் திருநீறு, காதுகளில் மகர குண்டலங்கள், கையில் தங்க பிரம்பு, மழு என்னும் ஆயுதம், கவுபீனம் (கோவணம்), புலித்தோல் அணிந்து புன்னகை சிந்த அவர் பிரகாரத்தில்

வீற்றிருந்தார். மதுரை நகருக்குள் அவ்வப்போது வலம் வந்து பல சித்து வேலைகளை அவர் செய்தததால், மக்கள் கூட்டம் அவரைக் காண அதிகமாக கூடியது. சித்து வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் போதே, திடீரென அந்த இடத்தில் இருந்து மறைந்து விடுவார். எங்கு தேடினாலும் கிடைக்காத அவர், அந்த தெருவின் இன்னொரு பகுதியில் ஏதாவது செய்து கொண்டிருப்பார். மக்கள் அங்கேஓடுவார்கள். வேடிக்கை பார்க்கும் முதியவர்களை இளைஞனாக்குவார். இளைஞர்களை முதியவனாக்கி விடுவார். ஆண்களைப் பெண்ணாக்கி விடுவார். பெண்களை ஆணாக்கி விடுவார். அது மட்டுமல்ல! ஊனமுற்றோரைக் குணப் படுத்துவார்.

பிறவியிலேயே பார்வையற்றவர்கள், காது கேளாதவர்கள், பேச முடியாதவர்களை பார்க்க, கேட்க, பேச வைத்து அதிசயம் நிகழ்த்துவார். கோடீஸ்வரர் களைஏழையாக்கி விடுவார். ஏழைகளை கோடீஸ்வரராக்கி விடுவார். உப்பு நீரை நல்லநீராக்கி மக்களுக்கு பயன்படச் செய்வார். பட்டமரத்தில் இலையும், பூவும் தழைக்கச் செய்து பசுமையாக்கினார். இப்படி, பல சித்து வேலைகளைச் செய்து மக்களின் மனம் கவர்ந்தார் அந்த சித்தர். மன்னன் அபிஷேகப்பாண்டியனின்காதுகளுக்கு சித்தரைப் பற்றிய அபூர்வத் தகவல் எட்டியது. அமைச்சர்களை அழைத்தமன்னன், நம் ஊருக்கு வந்துள்ள சித்தரைப் பற்றி உங்கள் காதுக்கு தகவல் எட்டியதா? மக்கள் எப்போதும் அவரைத் தான் சூழ்ந்து நிற்கிறார்களாமே! அவரைச்சந்தித்து, என்னைப் பார்க்க வரச்சொல்லுங்கள், என உத்தரவிட்டான். அமைச்சர்கள் சுந்தரேஸ்வரர் கோயிலுக்கு விரைந்தனர். அங்கு சித்தர் பல சித்து விளையாட்டுகளை செய்வதைக் கண்டு தங்களையும் மறந்து நின்று விட்டனர்.கோயிலுக்கு வந்த பக்தர்கள் எல்லாம் அவரைச் சுற்றியே நின்றனர். அனைவர்வாயிலும் ஆஹா...அற்புதம்... பிரமாதம் என்ற வார்த்தைகளே வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. அமைச்சர்கள் சித்தரை நெருங்கினர். மாபெரும் சித்தரே! நாங்கள்மதுரை மன்னர் அபிஷேகப் பாண்டியனின் அமைச்சர்கள். தங்கள் விளையாடல்களை அறிந்த எங்கள் மன்னர், தங்களை அரண்மனைக்கு அழைத்து வரச் சொன்னார். அவர்உங்களைக் காண வேண்டுமென விரும்புகிறார்.

தாங்கள் புறப்படுகிறீர்களா! என்றனர். சித்தர் அவர்களிடம் மிகவும்அலட்சியமாக பதிலளித்தார். மன்னனா! யார் அவன்! அவனால் எனக்கு ஒன்றும்காரியம் ஆக வேண்டியதில்லையே! ஒருவேளை, என்னால் அவனுக்கு ஏதாவது ஆக வேண்டுமென்றால், அவன் வந்தல்லவா என்னைப் பார்க்க வேண்டும், என்றார். சித்தரின் ஆணித்தரமான பதில் அமைச்சர்களை கலங்கடித்து விட்டது. மாபெரும் முனிவர் போல் தோற்றமளித்த அந்த ஜடாமகுடரை அவர்களால் குண்டு கட்டாகத் தூக்கிப் போக முடியுமா என்ன! மேலும், அந்த சித்தர் செய்யும் அற்புதங்களைப்

பார்த்தால் தங்கள் கட்டுகளை அறுத்துக்கொண்டு வர அவருக்கு எவ்வளவு நேரமாகி விடும்! அது மட்டுமல்ல! அவர் தங்களைத் தண்டித்து விட்டால் நிலைமைஎன்னாகும்! அவர்கள் அவரிடம் விடைபெற்று சென்று விட்டனர். அபிஷேகப்பாண்டியனை அணுகிய அவர்கள், மாமன்னரே! தங்கள் உத்தரவுப்படி சித்தரைக் காணச் சென்றோம். அவரது சித்து விளையாடல்கள் எங்களையே பிரம்மிக்க வைத்தது என்றால், சாதாரண மக்களைக் கேட்கவா வேண்டும்! அவரிடம், தங்கள் விண்ணப்பத்தைச் சொன்னோம். உங்கள் மன்னனை வந்து பார்க்கச் சொல்லுங்கள் என எவ்வித அச்சமும் இல்லாமல் சொல்லிவிட்டார். என்ன செய்வது? என்றனர். ஒருவேளை மன்னனுக்கு கோபம் வந்து தங்களை கையாலாகாத அமைச்சர்கள் என சொல்லிவிடுவாரோ என அவர்களுக்கு பயம். ஆனால், மன்னனின் பதில் மாறுபட்டதாக இருந்தது.

## 21. கல் யானைக்கு கரும்பு தந்த படலம்!

அமைச்சர்களே! முனிவர்களும் சித்தர்களும் ஆண்டவனையே தங்கள் பணியைச் செய்யும்படி கட்டளையிடும் சக்தி பெற்றவர்கள். சாதாரண மன்னனான என்னை அவர் இருக்கும் இடத்திற்கு வரச்சொன்னதில் என்ன ஆச்சரியம் இருக்கப்போகிறது? அவரை நானே சென்று பார்க்காமல், இங்கே வரவழைக்கச் சொன்னது என் தவறு தான். இதோ புறப்படுகிறேன், என்றவன், மீனாட்சியம்மன் கோயிலுக்கு மந்திரி பிரதானிகளுடன் விரைந்தான். சித்தரைச் சுற்றி நின்ற மக்கள் மன்னனைக் கண்டதும் விலகி மரியாதையுடன் கைகட்டி நின்றனர். சித்தர் அவன் வந்ததைக் கண்டுகொள்ளவே இல்லை. சித்தரிடம் சென்ற மன்னன், மாபெரும் சித்தரே! நான் மதுரையின் மன்னன் அபிஷேகப் பாண்டியன். தாங்கள் யார்? எங்கள் மக்களுக்கு இத்தகைய சித்துவேலைகளைக் காட்டுவதன் மூலம் அவர்களிடம் என்ன எதிர்பார்த்து வந்திருக்கிறீர்! மேலும், என்னால் உமக்கு ஆக வேண்டியது ஏதுமிருக்கிறதா!என்றான். சித்தர் கலகலவெனச் சிரித்தார். மன்னா! எனது ஊர் காசி. அங்கேவிஸ்வநாதரைத் தரிசித்த நான், தெற்கிலுள்ள புண்ணியம் வாய்ந்த மதுரையம்பதிபற்றி அறிந்து இங்கு வந்தேன்.

இந்தத் தலம் முக்தி ÷க்ஷத்திரம் என்பதை அறிவேன். வாழும் காலத்தில் பெரும் செல்வத்தையும், வாழ்விற்கு பிறகு பிறப்பற்ற நிலையாகிய முக்தியையும் தரும் இந்த ÷க்ஷத்திரத்திற்கு வருவோர் அடையும் பலன்கள் பற்றி கேள்விப்பட்டு இங்குவந்து தங்கியுள்ளேன். எனக்கு ஏதாவது வேண்டுமா என்றாயே! நான் கேட்பதைத்தரும் வல்லமை உன்னிடம் இருக்கிறதா! நான் நினைத்தால் விண்ணுலகை இந்த மண்ணுக்கும், மண்ணுலகை விண்ணுக்கும் மாற்றி விடுவேன். அப்படிப்பட்ட சக்தி

மிக்க என்னிடம், உனக்கு ஏதாவது வேண்டுமானால் கேள், தருகிறேன். உன் மக்கள் என்னிடம் என்ன கேட்கிறார்களோ அதை அவர்களுக்கு தருவது போல், உனக்கும் நீ கேட்பது கிடைக்கும், என்றார். சித்தர் சொன்னதைக் கேட்ட மன்னன்திகிலடைந்தான். இருப்பினும் அவரை சோதிக்க நினைத்த அவன், அங்கு நின்ற ஒருவர் வைத்திருந்த கரும்பைக் கையில் வாங்கினான். சித்தரே! நீர் வல்லமை மிக்கவர்என்பது உண்மையானால், இந்தக் கரும்பை, எங்கள் சுந்தரேஸ்வரரின் இந்திர விமானத்தை தாங்கி நிற்கும் இந்தக் கல் யானை சாப்பிடுகிறதா என பார்க்கவேண்டும். உம்மால் அது முடியுமா? என்றான். சித்தர் சிரித்தார். மன்னா!என்னைச் சோதித்துப் பார்க்க நினைக்கிறாயோ! என்றவர், கல்யானையை நோக்கி கண்ஜாடை செய்தார். அவ்வளவுதான்! கல் யானையின் கண்கள் நிஜக்கண்களாயின. அதுசுற்றுமுற்றும் பார்த்தது. அதன் தும்பிக்கை அசைந்தது. மேலும், கோயிலே நடுங்கும் வகையில் பிளிறியது. மன்னனின் கையில் இருந்த கரும்பைப் பிடுங்கித்தின்ற போது, கரும்புச்சாறு அதன் வாயில் இருந்து ஒழுகியது. சுற்றி நின்றமக்கள் ஆரவாரம் செய்தனர்.

மன்னன் என்ன செய்வதென தெரியாமல் விழித்தான். சித்தராக வந்த சுந்தரேஸ்வரர் அத்துடன் மன்னனை விட்டாரா என்ன! கல்யானையை நோக்கி அவர் மீண்டும் கண்ஜாடை காட்டினார். அந்த யானை மன்னனின் கழுத்தில் கிடந்த முத்துமாலையைப் பிடித்து இழுத்தது. கண் இமைக்கும் நேரத்தில் வாயில் போட்டு விழுங்கிவிட்டது. மன்னனுக்கு கடும் ஆத்திரம். அவனது ஏவலர்கள் வேல்கம்புகளுடன் சித்தரைத் தாக்க ஓடினர். தன்னை தாக்க வந்தவர்களை சித்தர் ஒரு பார்வை தான் பார்த்தார். அவ்வளவு தான். அனைவரும் கற்சிலை போல் அந்தந்த இடங்களில் நின்று விட்டனர். சித்தரின் அருமையை அபிஷேகப் பாண்டியன் புரிந்து கொண்டான். தனது தவறைப் பொறுக்கும்படி சித்தரின் திருவடிகளில் விழுந்து வேண்டினான். சித்தர் அவனை மன்னித்ததுடன், பாண்டிய மன்னா! அறியாமல் நீ செய்த பிழையைப் பொறுத்துக் கொண்டேன். உனக்கு வேண்டும் வரம் கேள், என்றார். என் குலப்பெருமை துலங்கும் படியாக எனக்கொரு மகன் பிறக்க வேண்டும், என பாண்டியன் அவரிடம் வேண்டிக்கொள்ளவே, அவ்வாறே குழந்தை பிறக்கும் என ஆசிர்வதித்தார் சித்தர். பின்னர் கல்யானை தான் விழுங்கிய மாலையை மன்னனிடமே ஒப்படைத்தது. அதைக் கண்டு அதிசயித்த மன்னன், அதைக் கண்களில் ஒற்றிக்கொண்டு நிமிர்ந்து பார்த்தான். அங்கே சித்தரைக் காணவில்லை. சிலை போல் நின்ற காவலர்கள் உயிர் பெற்று என்ன நடந்ததென தெரியாமல் திகைத்து நின்றனர். சித்தராக வந்தது சோம சுந்தரப்பெருமானே என்பதை அறிந்த அனைவரும் அவரது சன்னதிக்கு சென்று வணங்கினர். சில காலம் கழித்து அபிஷேகப் பாண்டியனுக்கு ஒரு ஆண்குழந்தை

பிறந்தது. குழந்தைக்கு விக்ரமன் என பெயர் சூட்டினர். அவன் பல கலைகளும் கற்றான். அவன் இருபது வயதை எட்டியதும் பட்டாபிஷேகம் செய்து வைக்கப் பட்டது. பின்னர் அபிஷேகப் பாண்டியன் இந்தப் பூவுலக வாழ்வை நீத்தான்

## 22. யானை எய்த படலம்!

விக்ரமப்பாண்டியனின் ஆட்சியில் தர்மம் தழைத்தது. மக்கள் இல்லை என்ற சொல்லையே அறியாமல் வாழ்ந்தனர். சைவத்தை வளர்த்த மன்னன் பிற மதங்களின் வளர்ச்சியை தடை செய்து விட்டான். இதனால் எங்கும் தேவாரம் ஒலித்தது. தர்மமும், பக்திமார்க்கமும் உள்ள நாட்டை யாரால் அசைக்க முடியும்? வீரத்தின் விளைநிலமான விக்ரமன் பல தேசங்களுக்கும் படையெடுத்துச் சென்றான். அந்த மன்னர்களையெல்லாம் தோற்கடித் தான். அனைத்து தேச மன்னர்களும் பாண்டியநாட்டுக்கு கப்பம் கட்ட வேண்டுமென உத்தரவு பிறப்பித்து வந்தான். விக்கிரமனால் பாதிக்கப்பட்ட மன்னன் ஒருவன் காஞ்சிபுரத்தில் இருந்தான்.அவனால் தனது தோல்வியைத் தாங்கவே முடியவில்லை. எப்படியாவது விக்ரமனைக்கொன்றே தீருவதென சபதமெடுத்தான். வீரத்தால் அவனைச் சாய்ப்பது கடினம்என்பதால், மதக்கலவரம் மூலமாக அவனைச் சாய்த்து விட திட்டம் போட்டான்.அக்காலத்தில், சைவ சமயத்தினருக்கும், சமண சமயத்தினருக்கும் தீராத சண்டை நடக்கும். சமணர்கள் மந்திர தந்திரங் களில் கைதேர்ந்தவர்கள். மந்திரம், பில்லி, சூன்யம் மூலமாக விக்ரமனை அழித்து விட காஞ்சிமன்னன் முடிவெடுத்து எட்டு மலைகளில் வசித்து வந்த சமண மத முனிவர்கள் எட்டாயிரம் பேரைகாஞ்சிபுரத்துக்கு வரவழைத்தான். சமணர்கள் அங்கு வந்து சேர்ந்தனர்.அவர்களுக்கு பெரும் வரவேற்பு நல்கிய மன்னன், தன் எண்ணத்தை அவர்களிடம் வஞ்சகமாக வெளியிட்டான்.

சமணர்களே! மதுரையில் பாண்டியன் சைவமதத்தை தவிர வேறெதுவும் வளர விடாமல் செய்கிறான். இப்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தேசத்து மன்னர்களும் அவனுக்கு அடிமையாகி விட்டார்கள். எல்லாருமே சைவத்தைப் பின்பற்றும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். இப்படியே போனால், உங்களது சமண மதம் அழிந்து விடும். நான் சமணத்தைப் பின்பற்ற விரும்புகிறேன். நம் மதம் வளரவேண்டுமானால் சைவம் அழிய வேண்டும். சைவம் அழிய வேண்டுமானால், விக்ரமன் மரணமடைய வேண்டும். அதற்கு நீங்கள் தான் வசியம் முதலான மந்திர சக்திகளைப்பயன் படுத்த வேண்டும், என்றான். சமணர்கள் கொதித்தனர்.எங்கள் மதம்வளர்வதற்காக நாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்வோம். மேலும் சைவர்கள்எங்களுக்கு நிரந்தர எதிரிகள். மன்னா! கவலைப்படாதே! பூவுலகமெங்கும் இனி உனதுஆட்சியே நடக்கும்.

சமணம் தழைக்கும். விக்ரமனைக் கொல்ல நாங்கள் நேரில்செல்லப்போவதில்லை. இங்கேயே யாகம் ஒன்றைத் தொடங்கப் போகிறோம். இந்தயாகத்தின் முடிவில், நாங்கள் அனுப்பும் சக்தியால் விக்ரமன் அழிந்து போவான், என்றனர். காஞ்சிமன்னன் தன் திட்டம் பலித்தது கண்டு எகத்தாளமாகச்சிரித்தான். யாகம் துவங்கியது. எட்டி என்னும் விஷமரத்தின் சுள்ளிகளை யாககுண்டத்தில் சமணர்கள் இட்டனர். மேலும் விஷ ஜந்துக்களின் உடலில் இருந்துதயாரிக்கப்பட்ட கொழுப்பை யாக குண்டத்தில் எண்ணெயாக ஊற்றினர். ஹோமகுண்டத்தில் போடப்பட்ட அனைத்து வஸ்துக்களுமே விஷக்காற்றை சிந்துபவை தான்! அதில் இருந்து எழுந்த புகை சுற்றுப்புறத்தை மாசுபடுத்தியது. நதிகளை வற்றச்செய்தது.

சில நாட்களில் அந்த ஹோம குண்டத்தில் இருந்து பயங்கரபிளிறலுடன் வழக்கத்தை விட கருமை நிறம் அதிகமான யானை ஒன்று வெளிப்பட்டது. கோபம் கொண்ட அந்த யானையைமயில்தோகையால் தடவிக்கொடுத்த சமணர்கள்,ஏ மாபெரும் சக்தியே! நீ நேரே மதுரைசெல். உன் உக்கிரத்தை அந்த நகரத்தின் மீது காட்டு. அந்நாட்டு அரண்மனைக்குள்புகுந்து அங்கிருப்போரை துவம்சம் செய். விக்ரமபாண்டியனைக் கொன்று விடு.இது நாங்கள் உனக்கிடும் கட்டளை, என்றனர். யானை வேகமாக தலையை அசைத்தது. அதன்உக்ரம்கடுமையாக இருந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் தன் உருவத்தை மேலும்மேலும் பெரிதாக்கியது. அதன் கால்கள் வானமளவுக்கு வளர்ந்தன. இரண்டே எட்டில்அது மதுரை நகர எல்லையை அடைந்து விட்டது. மதுரை நகரின் எல்லையில் இருந்ததோட்டங்களுக்குள் புகுந்து அவற்றை அழித்தது. வயல்சூழ்ந்த பகுதிகளுக்குள்புகுந்து பயிர் பச்சைகளை மிதித்து அழித்தது. அருகில் சென்று விரட்டமுயன்றவர்களை மிதித்துக் கொன்றது. மதம் பிடித்த அந்த யானையை அடக்க வழிதெரியாமல் மக்கள் மன்னனிடம் ஓடினர். மக்கள் பரபரப்புடன் அரண்மனை நோக்கி ஓடிவருகிறார்கள் என்பதை சேவகர்கள் மூலம் முன்கூட்டியே அறிந்த மன்னன்விக்கிரமபாண்டியன் உப்பரிகையில் வந்து நின்றான். மக்கள் அஞ்சும்முகங்களுடன் அவன் முன்னால் வந்து நின்றனர். மக்களில் ஒருவர், பாண்டியமாமன்னரே! நம் மதுரை மாநருக்குள் இதுவரை யாருமே பார்த்தறியாத யானை ஒன்றுவந்து கொண்டிருக்கிறது. அது வானத்தை எட்டுமளவு உயரமுடையதாக இருக்கிறது.இதுவரை இப்படி ஒரு யானையை நாங்கள் கண்டதே இல்லை. அதன் சிறுவிழிகளில்நெருப்பு பொறி பறக்கிறது. அது பயிர்பச்சைகளை அழிக்கிறது. துரத்தச் சென்றஎங்களில் பலர் அதன் கோபத்திற்கு ஆளாகி இறந்துவிட்டார்கள்.

தாங்கள் தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும், என்றனர். இதுகேட்டு மன்னன்

ஆச்சரியமும் அச்சமும் அடைந்தான். வானமளவு உயர்ந்த யானையா? அப்படியானால் அதன் வலிமை அபரிமிதமாக இருக்குமே! இதைக் கொல்ல வல்லவர் எம்பெருமானாகிய சுந்தரேசனைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? எனவே, மதுரை நகருக்குள் அது நுழையும் முன்பே அதைக் கொன்று விடும்படி நாம் இறைவனையே பிரார்த்திக்க வேண்டும். வாருங்கள்! நம் சோமசுந்தரப் பெருமானைச் சரணடைவோம், என்றான். மக்களும் மன்னன் பின்னால் ஓடினர். அனைவரும் அன்னை மீனாட்சியிடமும், சொக்கநாதரிடமும் மனமுருக வேண்டினர். அப்போது அசரீரி ஒலித்தது. விக்கிரமபாண்டியா! கவலைப் படாதே! பாண்டியநாடு என் தேசம். இங்கு மக்கள் கஷ்டப்படுவதை நான் சகிக்கமாட்டேன். நீ நம் ஊரின் வடக்கு எல்லையில் பதினாறு கால் மண்டபம் ஒன்றைக் கட்டு. நான் வேடனாக வேடம் தரித்து அங்கு மறைந்து கொள்வேன். அங்கிருந்தபடியே யானையைகொல்வேன், என்றான். விக்கிரமபாண்டியன் இறைவன் முன்னால் விழுந்து வணங்கி நன்றி தெரிவித்தான். சோமசுந்தரரே பாதுகாப்புக்கு வருவதாகச் சொன்ன பிறகு என்ன பயம்? மாலை நேரமாகி விட்டாலும் மக்களுடன் அவன் வடக்கு எல்லைக்கு விரைந்தான். கற்கள் கொண்டு வரப்பட்டன. மண்டபப் பணி ஆயிரக்கணக்கோருடன் விடிய விடிய நடந்தது. விடிவதற்குள் வேகமாக மண்டபப்பணி முடிந்து விட்டது. மறுநாள் மக்கள் ஆவலுடன் காத்திருந்தார். சோமசுந்தரக் கடவுள் தன் புலித்தோல் ஆடைக்கு பதிலாக சிவப்பு பட்டு வஸ்திரம் அணிந்து, வேல், வில், அம்பு தாங்கி யானையை அழிக்கப் புறப்பட்டார்.

அவர் பதினாறு கால் மண்டபத்தில் ஏறியதும், மக்கள் அவரது திவ்ய தரிசனத்தைக் கண்டனர். விக்கிரமபாண்டியன் அவரது பாதங்களில் விழுந்து சேவித்தான். மக்களையும் மன்னனையும் ஒதுங்கியிருக்கச் சொல்லிவிட்டு சோமசுந்தரர் நரசிம்ம பாணம் ஒன்றை தொடுத்தார். அது மின்னல் வேகத்தில் சென்று யானையின் உடலில் தைத்தது. ஓவென்ற பேரிரைச்சலுடன் வானுயர்ந்து நின்ற அந்த யானை ரத்தம் சிந்த தரையில் சாய்ந்து உயிர்விட்டது. அதை ஏவிய சமணர்கள் சிலரும், காஞ்சி மன்னனின் படையினரையும் பாண்டிய வீரர்கள் துரத்தினர். பலரைவிரட்டிப்பிடித்து கொன்றனர். தப்பி ஓடியவர்கள் வெகு சிலர் மட்டுமே! விழுந்தயானை பெரும் பாறையாக மாறியது. மதுரை நகர எல்லைக்குள் நுழையும் முன் ஒத்தக்கடை என்ற ஊர் இருக்கிறது. அங்கிருந்து பார்த்தால் இப்போதும் யானைபடுத்திருப்பது போன்ற பெரும் மலையைக் காணலாம். இப்போது அதை யானைமலை என்கிறார்கள். சிவன் விடுத்த நரசிம்ம பாணம் விழுந்த இடத்தில் பூமியில் இருந்தே நரசிம்மர் தோன்றினார். அவர் யானைமலையின் கீழே அமர்ந்தார். இப்போதும் யானைமலை அடிவாரத்தில் இந்தக் கோயில் இருக்கிறது. மதுரையின் பிரபல நரசிம்மர் கோயில் இது. அந்த பதினாறு

கால் மண்டபத்தில் சிவபெருமானைநிரந்தரமாகத் தங்கும்படி விக்கிரமபாண்டியன் கேட்டுக் கொண்டான். அவரும்அதற்கு சம்மதித்தார். இவ்வாறாக காஞ்சி மன்னனால் ஏற்பட்ட துன்பம் நீங்கிமக்கள் இன்பமடைந்தனர். காலம் ஓடியது. விக்கிரமபாண்டியனுக்கு ராஜசேகரன்என்னும் மகன் பிறந்தான்.

## 23. விருத்த குமார பாலரான படலம்!

விக்கிரம பாண்டியனுடைய ஆட்சிகாலத்தில் மதுரை மாநகரில் விருபாக்ஷர் என்னும் அந்தணர் வாழ்ந்து வந்தார். அவரது மனைவியின் பெயர் சுபவிரதை. தம்பதியர் ஒற்றுமையுடன் திகழ்ந்தனர். ஆனால், இறைவன் அவர்களுக்கு புத்திரபாக்கியத்தைக் கொடுக்கவில்லை. அவர்கள் அன்னை மீனாட்சியையும், சோமசுந்தரரையும் தினமும் தரிசித்து தங்களுக்கு குழந்தை வரம் அருளும்படிகண்ணீர் உகுத்துக் கேட்டுக் கொண்டனர். அவர்களது கண்ணீருக்கு அன்னை மீனாட்சிபதில் சொல்லும் காலம் வந்தது. ஆம்...சுபவிரதை கர்ப்பமானாள்.பத்துமாதங்களில் அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். மீனாட்சியேஅவ்வீட்டிற்கு வந்து விட்டது போல பேரழகு மிக்கவளாகத் திகழ்ந்தாள் அந்தக்குழந்தை, அவளுக்கு கவுரி என்று அம்பாளின் பெயரையே வைத்தனர். மழலைப்பருவத்திலேயே கவுரி மந்திரங்கள் சொல்லிப் பழகினாள். அன்னை மீனாட்சியையும், சொக்கநாதரையும் 1008 நாமங்களால் போற்றிப் பாடுவாள். கோயிலுக்கு வந்துஉளமுருகிப் பாடும் அவளது மழலைக்குரல் கேட்க மக்கள் ஏராளமாகக்கூடுவார்கள்.அவளுக்கு வயது பத்தை எட்டியது.ஒருநாள் அவள் தன் தந்தையிடம், அன்புத்தந்தையே! காரைக்கால் அம்மையார் சரிதத்தை நான் வாசித்தேன், அந்த அம்மையார் இந்த உடலோடு எப்படி கைலாயம் சென்றடைந்தார்களோ, அதே போல நானும்வீடுபேறு அடைய விரும்புகிறேன். அதற்குரிய வழியைச் சொல்லுங்களேன், என்றாள்.

மகளின் உயர்ந்த எண்ணத்தையும், பக்தியையும் எண்ணி உளம் பூரித்துப் போனார் விருபாக்ஷர். மகளின் ஆசைக்கு அவர் தடைவிதிக்கவில்லை. பல மந்திரங்களை அவளுக்கு போதித்த அவர், அவற்றைத் தொடர்ந்து ஓதிவரும் படி கூறினார். அவர்களது வீட்டுக்கு தினமும் உஞ்சவ்ருத்திக்காக (பிச்சை எடுத்தல்) பல சிவனடியார்களும், வைணவ அடியார்களும் வருவார்கள். கவுரி அவர்களுக்கு உணவளித்த பிறகே சாப்பிடுவாள். ஒருமுறை புயல் போல் வந்தான் ஒரு இளம் பிரம்மச்சாரி சன்னியாசி. அந்த இளைஞன் வைஷ்ணவ சம்பிரதாயத்தைச் சேர்ந்தவன். நெற்றி நிறைய திருமாலின் திருநாமம் அணிந்திருந்தான். அவனைப் பார்த்ததுமே விருபாக்ஷருக்கு ஏனோ பிடித்துப் போனது. நாம் சைவர்கள் தான். இவன் வைஷ்ணவ

சம்பிரதாயத்தைக் கடைபிடிப்பவனாக இருந்தாலும், ஏனோ என் மனதுக்குப்பிடித்துப் போய் விட்டது. இவனுக்கு நமது கவுரியைத் திருமணம் செய்துவைத்தால், மிகவும் நன்மையே ஏற்படுமென்றே என் உள்ளம் கணிக்கிறது. கவுரியிடமேஇதுபற்றி கேட்டு விடுவோமே என்ற எண்ணத்தில் அவளை அழைத்தார். இதற்குள்கவுரியும் சாப்பாட்டுடன் அந்த வைணவனுக்கு உணவிட வந்துவிட்டாள். அவள்அவனுக்கு உணவை வைத்துவிட்டு, உள்ளேவரும்போது, அம்மா! கவுரி, என கனிவோடு அழைத்தார் தந்தை. என் னப்பா! என்ற கவுரியிடம் அந்த வைணவ இளைஞனை பார்த்தாயா? அவனை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது.

அவனுக்கு உன்னை திருமணம் செய்துவிடலாம் என பார்க்கிறேன், என்றார் விரூபாக்ஷர். அக்காலத்தில் திருமணமாகாத பெண்கள் இளைஞர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அதிலும் கவுரி பக்தி சிரத்தையோடு வளர்ந்த பெண். அன்னத்தை அவனுக்கு இட்டாளே தவிர, வந்திருப்பவன் இளைஞன் என்பதால் அவனை ஓரக்கண்ணால் கூட பார்க்க வில்லை. இப்போது தந்தை இப்படி கேட்டதும் அவளுக்கு பதிலேதும் சொல்ல முடியவில்லை. தனது நோக்கம் இறைவனை அடைவது! பிறப்பற்ற வாழ்வை அடைவது! என்றிருக்க தந்தை தன்னை குடும்பவாழ்வில் ஈடுபடுத்த விரும்புகிறாரே என்றகுழப்பம் இருந்தாலும், தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற கருத்தும் அவளைஇன்னொருபுறம் குழப்பியது. இறுதியில் தந்தையின் மனதை மகிழ்ச்சிப்படுத்தும்எண்ணமே ஜெயித்தது. உம் என்று கூட அவள் சொல்லவில்லை. அப்படியெல்லாம் அன்றையபெண்கள் சொல்வதில்லை. நாணத்துடன் கூடிய புன்னகை ஒன்றைத் தான் குனிந்த தலைநிமிராமல் உதிர்ப்பர் அவர்கள். கவுரியும் இதற்கு விதிவிலக்கா என்ன! அன்னம்கேட்டு வந்தவன் வீட்டு அன்னக்கிளியாக செல்ல அவள் புன்னகையை மட்டும்தந்தையிடம் பதிலாகச் சொல்லி சம்மதித்தாள். வைணவ இளைஞனிடம் விரூபாக்ஷர்இதுபற்றி கேட்டார். அவனும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தான். பிறகென்ன!மறுதினமே நாள் நன்றாக இருந்ததால், அன்றே தன் பெண்ணை எளிமையான முறையில்கன்னிகாதானம் செய்து கொடுத்தார் விரூபாக்ஷர். மருமகனுக்குரிய சீர், மகளுக்குரிய நகைகள் என சீதனத்தை வாரி வழங்கி அவர்களை மணமகன் ஊருக்குஅனுப்பி வைத்தார். அவர்கள் கிளம்பும்போது, மணமகன் வீட்டில் இந்தளவுக்குபுயல் வீசுமென நினைக்கவே இல்லை. அவர்கள் வீட்டை அடைந்ததும், மணமகனின் தந்தை கொதித்தெழுந்து விட்டார்.

வைஷ்ணவ சம்பிரதாயத்தில் வளர்ந்த என் மகனை மயக்கி மணந்து கொண்டாயே பாவி! சைவர்களை நாங்கள் எப்படி ஏற்போம், நீயே மரியாதையாக உன் வீட்டிற்குப்

போய் விடு, என கத்தினார் அவர். கவுரியின் மாமியாரோ அதை விட துள்ளிக்குதித்தாள். அடியே! உன் குலம் என்ன! என் குலம் என்ன! என் மகனும் இது விஷயத்தில் உனக்கு உடன்பட்டு விட்டதால், உன்னை இந்த வீட்டுக்குள் அனுமதிப்பேன். ஆனால், நீ அவனோடு வாழக்கூடாது. இதோ! இவ்வீட்டு பணிகளை முடித்ததும் அந்த தனியறைக்குள்போய்விட வேண்டும். வெளியே வந்தால் உன்னை பூட்டி வைப்பேன். நாங்கள் எங்காவது வெளியில் சென்றால், உன்னை அந்த அறைக்குள் பூட்டி வைத்துவிட்டே செல்வேன், என்றாள். கவுரி இதற்காக கலங்கவில்லை. அவரவர் தலையில் இப்படித்தான்நடக்கவேண்டுமென ஆண்டவன் எழுதி வைத்து விடுகிறான். இது அவரவர் பூர்வஜென்மவிதிப்படி நடக்கிறது. இதற்கு விதிவிலக்காகி தப்பி ஓட நினைத்தாலும் அது முடியவே முடியாது. கவுரி இந்த தத்துவத்தில் அதிக நம்பிக்கையுடையவள். மதுரைமாநகரத்து ஆடல்வல்லான் இப்படியெல்லாம் தன்னை ஆட்டுவிக்கிறான். அவன்ஆட்டுவித்தபடியே ஆடிவிட்டு, இந்த உலகத்தை விட்டுப்பிரிந்து, அவன் நினைவாகவே இருந்து அவனை சென்றடைய வேண்டும் என்ற உறுதியோடு, கணவன் வீட்டில் தரப்பட்ட இந்த தண்டனையை மனமுவந்து ஏற்றுக்கொண்டான். வைணவ இளைஞனுக்கோ தன் பெற்றோர்செய்வது தவறென்று தெரிந்தாலும் அவன் அவர்களை தட்டிக் கேட்கவில்லை. பெற்றோர் கருத்தை ஏற்று அதன்படியே செயல்பட்டான். ஒருநாள், அவளது வீட்டார் பக்கத்து ஊருக்கு கிளம்பினர். வழக்கம் போல, தனியறையில் பூட்டப்பட்டாள் கவுரி. அப்போது நமசிவாய, சிவாயநம என்ற கோஷத்துடன் ஒரு வயோதிகர் அந்த தெரு வழியே வந்தார். ஜன்னலோரமாக நின்ற கவுரியைக் கண்ட அவர், மகளே! எனக்கு பசிக்கிறது. அன்னமிடு, என்றார். தான் அறைக்குள் அடைபட்டு கிடப்பதை அவரிடம் சொல்லி,தாங்கள் பசிக்கிறது எனக்கேட்டும் அன்னமிட முடியாத பாவியாகி விட்டேனே, என்றாள் கவுரி. மகளே! கலங்காதே! பூட்டில் கை வை. அது தானாகவே திறக்கும், என்றார் முதியவர். ஆச்சரியமடைந்த கவுரி அவ்வாறே செய்ய பூட்டு திறந்தது. கதவைத் திறந்து வெளியே வந்த அவள், சமையலறை பூட்டிலும் கையை வைத்தாள். பொருட்கள் வைத்திருக்கும் அறையில் கைவைத்தாள். எல்லா கதவுகளும் திறந்தன. பெரியவரை உள்ளே வரச்சொல்லி, அவரது கால்களை அலம்பி, தலையில் நீர் தெளித்து அவரை ஊஞ்சலில் அமர வைத்தாள். சுவாமி! சற்று நேரத்தில் சமைத்து விடுகிறேன். அதுவரை தாங்கள் வந்த களைப்பு தீர சற்று கண்ணயருங்கள், என்றாள்.

அந்த முதியவரும் கண்ணயர்ந்தார். சமையல் முடிந்ததும் அவரை எழுப்பி சுடச்சுட அன்னம் பரிமாறினாள். அவர் நன்றியுடன் சாப்பிட்டு மகிழ்ந்தார். கிளம்பும்நேரத்தில், மகளே! நீ சிறுவயதிலேயே முக்தியடைய நினைக்கிறாய் என்பதை நான்அறிவேன்.

அது விரைவில் நடக்கும், என வாழ்த்தினார். நம் மனதிலுள்ளதை இவர்எப்படி அறிந்தார்? யார் இவர்? கவுரி குழப்பத்துடன் அவரைப் பார்த்தபோது, சற்றும் எதிர்பாராத ஒரு அதிசயம் நிகழ்ந்தது. ஆம்...அந்த சாமியார் ஒரு கைக்குழந்தையாக மாறிவிட்டார். கவுரிக்கு ஆச்சரியம். சாமியார் எப்படி துறவியாகமாறினார்? இந்தக் குழந்தை எப்படி வந்தது? என்று யோசித்த போது, மதுரை சுந்தரேஸ்வரப் பெருமான் பேரழகுடன் அவளுக்கு காட்சி தந்தார். எம்பெருமானே!நீயே என் கையால் உணவருந்த வந்தாயா? இத்தனை நாளும் நான் செய்த பூஜையின் பலனை அடைந்தேன். எனக்கு குடும்ப வாழ்க்கையில் கஷ்டத்தைக் கொடுத்தது உன் தரிசனத்தைக் காட்டத்தானா? உன் தரிசனம் கிடைக்குமென்றால், இந்த வீட்டார் என்னைத் தீயில் தூக்கி வீசினாலும், அதையும் குளுகுளு பொற்றாமரையில் கிடப்பதாக எண்ணி மகிழ்வேனே! என மனதுக்குள் உருகி வணங்கும்போது மீண்டும் குழந்தையாகி விட்டார் சுந்தரேஸ்வரர். அந்தக் குழந்தையை மகிழ்ச்சியுடன் தன் மடியில் அமர்த்தி, ஈசனுக்கே தாயானாள் கவுரி. அப்போது வெளியில் சென்றிருந்த அவளது வீட்டார் வந்தனர். பூட்டிச்சென்ற வீடு திறந்தது கிடந்ததைப் பார்த்து அவர்களுக்கு அதிர்ச்சி, வீட்டுக்குள் ஓடிவந்து பார்த்த அவர்கள், கையில் ஒரு குழந்தையுடன் கவுரி இருப்பதை கண்டு மேலும் பேரதிர்ச்சி அடைந்தனர். கவுரியின் மாமியார், அடியே! நாங்கள் செல்லும்போது இந்த வீட்டை பூட்டிச் சென்றோமே! கள்ளச்சாவி எதுவும் தயார் செய்து வைத்திருந்தாயா? வீடு எப்படி திறந்தது? அதிருக்கட்டும், இந்தக் குழந்தை யாருடையது? இது எப்படி இந்த வீட்டுக்குள் வந்தது? என்று கேள்வி மேல் கேள்வியை அடுக்கினாள். அத்தை!நீங்கள் சென்றதும் தேவதத்தன் என்பவரும், அவரது மனைவியும் இங்கு வந்தனர். இந்தக் கதவு எப்படியோ திறந்தது. அவர்கள் இந்தக் குழந்தையை என்னிடம்கொடுத்தனர். தாங்கள் திரும்பி வரும்வரை பார்த்துக் கொள்ளும்படி கூறினர், என்றாள் கவுரி. இதை அத்தையும் மற்றவர்களும் நம்பவில்லை. நீ ஏதோ தகிடுதத்தம்செய்கிறாய். இனிமேல், இங்கே நீ வாழ முடியாது. வீட்டை விட்டு வெளியே போ, என விரட்டினர். அவள் என்ன செய்வதெனஅறியாமல் திகைத்த போது அவளது மாமியாரேவீட்டை விட்டு வெளியே இழுத்துத் தள்ளிவிட்டு கதவை அடைத்து விட்டாள். அனாதையாக வெளியில் குழந்தையுடன் நின்ற கவுரி கதறினாள். சுந்தரேசப்பெருமானே!ஏன் என்னை இப்படி சோதிக்கிறாய்? என்றாள். அப்போது அவளது கையில் இருந்த குழந்தை மறைந்தது. அவள் முன் சுந்தரேஸ்வரர் ரிஷபத்தில் தோன்றினார். மகளே! இளவயதிலேயே முக்தி மார்க்கத்தை அடைய நீ விரும்பினாய் என்பதால் குடும்ப வாழ்வில் கஷ்டத்தைக் கொடுத்தோம்! எல்லார் வாழ்விலும் எல்லாம் காரணப்படியே நடக்கிறது. உனக்கு முக்தியருளவே இத்தகைய நாடகத்தை நடத்தினோம். இனி, நீ

என் திருப்பாதங்களை அடைவாயாக, என்றார். கவுரியும் அவரது திருப்பாதங்களில் சரணடைந்து அவருடன் ஐக்கியமானாள்.

## 24. கால் மாறி ஆடிய படலம்!

இந்த சமயத்தில் மதுரையில் விக்கிரமபாண்டியனின் ஆட்சி முடிவுக்கு வந்தது.அவன் மறைந்து விட்டதால், அவனது மகன் ராஜசேகரன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். அவனும் தன் முன்னோர் களைப் போல சிவபக்தியில் ஆழ்ந்து கிடந்தான். அவனுக்கு ஆயகலைகள் அறுபத்து நான்கையும் படிப்பதற்கு ஆசை. அதில் அறுபத்து மூன்றை முழுமையாகப் படித்து தேர்ந்து விட்டான். ஒரே ஒரு கலையான நாட்டியக்கலை மட்டும் படிக்கவில்லை. அதிலும் பரதக்கலையில் வல்லுவனாக வேண்டும் என்பது அவனது ஆசை. மற்ற கலைகளை முடித்தவனுக்கு இதைக் கற்றுக் கொள்வதில் என்ன தடை இருந்திருக்க முடியும் என நீங்கள் நினைக்கலாம். அவன் சுந்தரேஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் போதெல்லாம், சன்னதியின் முன் உள்ள வெள்ளியம்பல நடராஜரைத் தரிசிப்பான். எம்பெருமானே! சகல கலைகளும் கற்றேன். பரதம் மட்டும் கற்கவில்லை. காரணம் அந்தக்கலைக்கு தலைவனாக நீ இருக்கிறாய். நீ ஆடும் இந்த மண்ணில், உனக்குச் சமமாக நான் ஆடலாமா? அது அபச்சாரம் இல்லையா? என்பான். நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும். எது வேண்டாம் என நினைக்கிறோமோ அது பலரது வாழ்வில் நடந்து விடுவதை கண் கூடாக இப்போதும் காணத்தானே செய்கிறோம்! அதனால் தானே தெய்வத்தின் பெயரை திட்டுவதற்காகவாவது பயன்படுத்துகிறோம். அடேய் சிவனே! ஏனடா இப்படி சோதிக்கிறாய்? என்று அவனிடம் மட்டும் தானே நம்மால் உரிமையுடன் கோபித்துக் கொள்ள முடிகிறது! அதுபோல, ராஜசேகர பாண்டியன் ஒன்று நினைக்க நடந்தது வேறொன்றாக இருந்தது. வெள்ளியம்பலகூத்தனான சுந்தேரஸ்வரர் அவன் வாழ்வில் சதிராட எண்ணினார். தனது விளையாடலைத்துவங்கி விட்டார்.

ஒருசமயம் சோழமன்னன் கரிகால் பெருவளத்தானின் அவைப்புலவர் மதுரைக்கு வந்தார். அவர் பாண்டியனின் அரண்மனைக்கு வந்ததும், ராஜசேகரன் அவரை வரவேற்று தனக்கு நிகரான ஆசனம் அளித்து கவுரவித்தான். இருவரும் பல்வேறு விஷயங்களைப் பற்றி பேசினர். அவர்களின் பேச்சு 64 கலைகளின் பக்கமாக திரும்பியது. பாண்டியமாமன்னரே! எங்கள் சோழச்சக்கரவர்த்தி கரிகால் பெருவளத்தான் 64 கலைகளிலும் வல்லவர். அவரைப் போல் அத்தனை கலைகளையும் அறிந்தவர் உலகில் யாருமில்லை, என்று பெருமையாகச் சொன்னார். பாண்டியனும் அதை ஆமோதித்து, சகலகலாவல்லவர் ஒருவர் இருப்பது உலகுக்கு

நன்மை தானே, என்றான். இப்போது, புலவர் தனது சேஷ்டையான பேச்சைத் துவக்கினார். அதிருக்கட்டும் மன்னா! தாங்கள் 63 கலைகளை மட்டும் கற்று, பரதக்கலையை மட்டும் கற்காதது குறித்து எங்கள் மன்னர்அடிக்கடி பேசுவார். அந்தக் கலை உங்களுக்கு வர மறுக்கிறதாம். பாண்டியனுக்குநடனமாட தெரியவில்லை என்பார். நீங்கள் ஏன் அதை மட்டும் கற்கவில்லை? என்றுபாண்டியனைக் குத்திக் காட்டுவதுபோல் குதர்க்கமாகப் பேசினார். ராஜசேகரபாண்டியன் இதற்காக கோபிக்கவில்லை. கரிகால் பெருவளத்தான் ஏவிய அம்பு இவன்!நமக்கும், அவனுக்கும் தான் பிரச்னை. மேலும், இவன் ஒரு புலவன். இவனிடம்கோபிக்கக்கூடாது, என்ற எண்ணத்தில், புலவரே! நடராஜப் பெருமானின் ஆட்டத்தைசற்றே கவனியுங்கள். அவர் ஆடுவதால் தான் இந்த உலகமே இயங்குகிறது.அப்படிப்பட்ட உயரிய ஆட்டத்தை சாதாரண மனிதனாகிய நான் கற்றுக் கொண்டால்சிவநிந்தனை செய்ததாக அர்த்தமாகும். அதனால் தான் நான் அதைக்கற்றுக்கொள்ளவில்லை, என்றான்.

மன்னனின் இந்தப் பதில் புலவரை வியப்பில் ஆழ்த்தியது. பாண்டியனிடம் தவறாகப் பேசிவிட்டோமே என வருந்தினார்.மன்னா! தங்கள் மனம் அறியாமல் தவறாகப் பேசிவிட்டேன். இருப்பினும், எம் சோழமன்னர் கரிகால்பெருவளத்தான் தங்களை இவ்வகையில் குறைத்துப் பேசுகிறார் என்பதை மட்டும் புரிந்து கொள்ளுங்கள், என்றார் புலவர். இன்னா செய்தவர்க்கும் இனியது செய்தல் என்பது பெரிய பண்பு. ராஜசேகர பாண்டியன் தன்னைக் குறைத்துப் பேசிய புலவர் மீது கோபம் கொள்ளாமல் அவருக்கு விலையுயர்ந்த பரிசுகளை அளித்து கவுரவப்படுத்தி விடை கொடுத்தான். நெகிழ்ந்து போன புலவர் மன்னனையும், பாண்டிய நாட்டு மக்களின் மாண்பையும் புகழ்ந்து பேசி புறப்பட்டார். புலவர் சென்ற பிறகு ராஜசேகரனின் மனம் அலை பாய்ந்தது.எனக்கு நாட்டியக்கலையும் தெரிய வேண்டுமென இறைவன் எதிர்பார்க்கிறானா? என்னை ஆட வைத்து பார்க்க வேண்டுமென்பதில் அவனுக்கு ஆர்வம் போலும்! எதற்கும், சொக்கநாதப் பெருமான் சன்னதிக்குச் சென்று, அங்கே நடனமாடிக் கொண்டிருக்கும் வெள்ளியம்பல வாசனான நடராஜரையே கேட்டுவிடுவோம், என அங்கு சென்றான். நடன சபாபதியான அவரை வணங்கி, இறைவா! பிறர் என்னைத் தனித்துகுறைத்து மதிப்பிட்டால் கவலைப்படமாட்டேன். இது பாண்டிய தேசத்தின் கலையுணர்வுக்கு வந்த இழுக்கு. நான் பரதம் படிக்க ஆர்வமாயிருக்கிறேன். உன்னுடைய அருட்கடாட்சம் வேண்டும், என்று கெஞ்சலாகச் சொன்னான். அப்போது, அவன் கண்களில் கண்ணீர் பெருகி விட்டது. அடியவரின் கண்ணீருக்கு உடனே பதிலளிக்கும் நடராஜப் பெருமான் அசரீரியாக ஒலித்தார்.

ராஜசேகர பாண்டியனே! என் அன்பு மகனே! தேசத்தின் புகழைக் காப்பாற்ற நீ உடனே

பரதம் படி. உனக்கு என் நல்லாசிகள், என்று கேட்டது குரல். ராஜசேகர பாண்டியன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. உடனடியாக பரதநாட்டியத்தில் தேர்ந்த ஒரு கலைஞர் அழைக்கப்பட்டார். அவருக்கு குருதட்சணை கொடுத்து பயிற்சியை துவக்கினான் பாண்டியன். அப்பப்பா! பரதம் என்றால் சாதாரண கலையா! ஏழு ஸ்வரங்கள், ஏழு வகை தாளம், ராகம், பாவம், இருபது வகையான அங்கபேதங்கள் என மிகுந்த அக்கறையுடன் கற்றான் அவன். ஒவ்வொரு நாளும் வகுப்புக்குச் சென்று திரும்பியதும், பஞ்சணையில் அப்படியே சாய்ந்து விடுவான் மன்னன். அவனது கால்கள் கடுமையாக வலிக்கும். சில சமயங்களில் வலி தாங்காமல் புலம்புவான். அப்போது அவன் மனதில் மின்னல் கீற்றாய் ஒரு எண்ணம் எழுந்து மறைந்தது. ஆம்! சில நாட்கள் தான் நாட்டியம் கற்றிருக்கிறோம், கால்களில் வலி தெறிக்கிறது. ஆனால், எம்பெருமான் நிறுத்தாமல் ஆடுகிறான். அதிலும் இடது காலை தூக்கிக்கொண்டு எத்தனை யுகங்களாக நிற்கிறானே! அவனுடைய கால்கள் எந்தளவுக்குவலிக்கும்? சற்று கால் மாறி ஆடினால், அவனுக்கு வலி குறையுமே! சரி... அந்தஈசனிடமே செல்வோம். காலை மாற்றி ஆடச் சொல்வோம், என்ற எண்ணத்துடன் கோயிலுக்குள் சென்றான்.

சபாபதியே! எம்பிரானே! சில நாட்கள் ஆடிய எனக்கே இந்தக்கதி என்றால், உன் கால்கள் எந்தளவுக்கு வலிக்கும்? காலை மாற்றி ஆடு, என்றான். நடராஜரோ அவனது பேச்சைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. ராஜசேகரன் இது விஷயத்தில் விடாப்பிடியாக இருந்தான். இதோ பார்! உடனே காலை மாற்று. இல்லாவிட்டால், உன் முன்னாலேயே வாளால் தலையைச் சீவிக்கொண்டு உன் திருப்பாதம் அடைவேன், என்று வாளை உருவினான். அப்போது அங்கே பேரொளி பிறந்தது. சிவபெருமான் ரிஷப வாகனத்தில் அவன் முன் காட்சி தந்தார். மகனே! உன் விருப்பம் போல் நடக்கும். இதோ என் காலை மாற்றுகிறேன், என்றார். அன்றுவரை இடதுகால் தூக்கி ஆடியவர் வலதுகாலை தூக்கி திருநடனம் புரிந்தார். பாண்டியன் அகம் மகிழ்ந்தான். கண்ணீர் ஆறாய் பெருகியது. எம்பிரானே! மற்ற தலங்களில் நீ எப்படி நின்றாலும், இந்த தலத்தில் வலதுகால் தூக்கியே ஆட வேண்டும். இந்த திருக்காட்சியை உலகம் உள்ளளவும் காண வேண்டும், என்று வரம் கேட்டான். சிவபெருமானும் அவ்வாறே அருளினார். இன்றுவரை மதுரையம் பதியில் உள்ள வெள்ளியம்பலத்தில் வலதுகால் தூக்கியே ஆடுகிறார். ராஜசேகரபாண்டியன் அதன் பிறகு சிவசிந்தனையிலேயே காலம் கழித்து இறைவனின் திருவடி எய்தினான்.

## 25. பழியஞ்சின படலம்!

ராஜசேகரபாண்டியன் மறைவுக்குப் பின் அவரது மகன் குலோத்துங்க பாண்டியன் ஆட்சிப் பொறுப்பேற்று செவ்வனே ஆட்சி நடத்தி வந்தான். அவனது மகன் அனந்தகுண பாண்டியன் அடுத்து பதவியேற்றான். இவனது ஆட்சிக்காலத்தில், மதுரையம்பதிக்கு திருப்புத்தூர் என்னும் ஊரைச் சேர்ந்த அந்தணர் ஒருவர் தன் மனைவி, குழந்தையுடன் வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் களைப்பு ஏற்படவே அவர்கள் ஒரு ஆலமரத்தடியில் தங்கினர். அந்தணர் அங்கு தண்ணீர் கிடைக்கிறதா என பார்க்கச் சென்றுவிட்டார். அவரது மனைவி களைப்பு தாங்காமல் அப்படியே கண்ணயர்ந்து விட்டாள். குழந்தை மணலைக் களைந்து விளையாடிக் கொண்டிருந்தது. காற்று ஜிலுஜிலுவென வீசியது. அப்போது விதி அந்த மரத்தில் இருந்து விளையாடியது. யாரோ ஒரு வேடன், அந்த மரத்தில் தங்கியிருந்த புறாக்களை வேட்டையாட எய்திருந்த அம்பு ஒன்று மரக்கிளையில் சிக்கியிருந்தது. காற்று வேகமாகவே, அந்த அம்பு மரத்தில் இருந்து கீழே விழுந்தது. மிக உயரத்தில் இருந்து விழுந்ததால் அது படுத்திருந்த அந்தணரின் மனைவி வயிற்றில்பாய்ந்தது. அவள் அலறித்துடித்தாள். சுற்றிலும் யாருமில்லை. அந்தணரும்வரக்காணோம். ரத்தப்பெருக்கு அதிகமாகவே, அவளது உயிர் பிரிந்து விட்டது. அந்த சமயத்தில், அந்தப் பக்கமாக ஒரு வேடன் வந்தான். அவன் இந்த அம்பை எய்த வேடன்அல்ல! புதியவன். அவனும் களைப்பால் அந்த மரத்தடிக்கு வந்தான். இறந்துகிடக்கும் அந்தணரின் மனைவியையோ, அவளது குழந்தையையோ அவன் கவனிக்கவில்லை. களைப்பு மிகுதியால் அவன் மரத்தின் மற்றொரு புறத்தில் படுத்து தூங்கிவிட்டான். தண்ணீர் கொண்டு வரச்சென்ற அந்தணர் திரும்பினார். தன் மனைவி ரத்த வெள்ளத்தில் கிடப்பது கண்டு துடித்தார்.

பக்கத்தில் குழந்தை ஏதுமறியாமல் விளையாடிக் கொண்டிருந்தது. அலறி அழுத அவர், சுற்றுமுற்றும் பார்த்தார். மரத்தின் மறுபுறத்தில் தூங்கிக் கொண்டிருந்த வேடனைக் கண்டார். அடப்பாவி! அநியாயமாய் என் மனைவியைக் கொன்றுவிட்டாயே! என்றபடியே அவனருகே சென்றார். உறங்கிக் கொண்டிருந்த வேடனை தட்டி எழுப்பிய அந்தணர், அடப்பாவி! என் மனைவியை அநியாயமாகக் கொன்று விட்டாயே! நாங்கள் உனக்கு என்ன பாவம் செய்தோம்? அவள் உனக்கு என்ன கேடு செய்தாள்? என்று கோபத்துடன் கேட்டார். தூக்கக்கலக்கத்தில் இருந்த வேடன் ஏதும் புரியாமல் விழித்தான். யார் இவர்? உறங்கிக் கொண்டிருந்த தன்னை எழுப்பி, சம்பந்தமில்லாமல் ஏதோ கேட்கிறாரே! எனக்கருதியவன், அதன்பிறகு தான் அங்கு நடந்த விபரீதத்தைப் புரிந்து கொண்டான். ஐயோ! நான் இந்தப் பெண்ணைக்

கொன்றேனா? ஆண்டவன் சத்தியமாக இல்லை ஐயா! நான் வேடன் தான்! ஆனால், மனிதர்களை நான் வேட்டையாடுவதில்லை. இந்தப் பெண் எப்படி இறந்தாள் என எனக்குத் தெரியாது. இவள் உடம்பில் பதிந்துள்ள அம்பு என்னுடையதல்ல, என்று கதறினான். அந்தணர் விடவில்லை. அடேய் பொய்யனே! வாடா அரண்மனைக்குப் போகலாம். குலோத்துங்க ராஜாவும், அவரது செல்வர் அனந்தகுண பாண்டியரும் அரண்மனையில் தான் இருப்பார்கள். அவர்களிடமே நீதி கேட்போம். அவர்கள் சொல்லும் தீர்ப்புக்கு கட்டுப்படுவோம், என்றார் அந்தணர். வேடனும் கலங்கவில்லை. தவறு செய்திருந்தால் தானே பயப்பட வேண்டும்.

தாராளமாக செல்வோம், வாருங்கள், என்று அந்தணரையும் அழைத்துக் கொண்டு சென்றான். தனது மனைவியின் உடலை அரண்மனை வாசலில் கிடத்திய அந்தணர் காவலன் மூலம் ராஜாவுக்கு சேதி சொல்லியனுப்பினார். அப்போது அரண்மனையில் இருந்த குலோத்துங்க ராஜா வெளியே வந்தான். அந்தணர் தனது வழக்கை அவனிடம் எடுத்துரைத்தார். குலோத்துங்கன் வேடனைபிடித்து உலுக்காத குறையாக கடுமையாக விசாரித்தான். வேடனோ, இந்தக் கொலையை நான் செய்யவே இல்லை ராஜா! என்றான். இருப்பினும், அவன் மீது ராஜாவுக்கு கடும் சந்தேகம் ஏற்பட்டது. வேடனை சிறையில் அடைத்து சித்ரவதை செய்தேனும் உண்மையை வரவழைக்க காவலர்களுக்கு உத்தரவிட்டான். அவர்களும் அவனை எவ்வளவோ சித்ரவதை செய்தும், அவன் தனது நிலையில் உறுதியாக இருந்தான். குலோத்துங்கனுக்கு என்ன செய்வதென தெரியவில்லை. அந்தணரே! உமது மனைவியின் உடலை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள். அதற்குரிய செலவைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஐந்துநாள் கழித்து இங்கு வாருங்கள். உங்களுக்கு சரியான தீர்ப்பு சொல்லப்படும், என்றான். அந்தணரும் கிளம்பினார். மன்னன் குலோத்துங்கன் மீனாட்சியம்மை திருக்கோயிலுக்குச் சென்றான். சுந்தரேஸ்வரரை மனதார வணங்கினான். சொக்கநாதப் பெருமானே! இக்கட்டான சூழலை எனக்கும், என் மகனுக்கும் உருவாக்கும் வகையிலான வழக்கு ஒன்று வந்துள்ளது. இதில் யார் குற்றவாளி என கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த வழக்கின் தீர்ப்பு ஒருவேளை தவறாகிப் போய்விடுமானால், மதுரையின் மாண்பு பாழாகி விடும். பாண்டியதேசம் நீதி தவறிய நாடு என்று உலகெங்கும் பறைசாற்றப்படும். எனது செங்கோல் வீழும். வெண்கொற்றக்குடை சாயும். இந்த நிலையில் இருந்து நீ தான் என்னைக் காத்தருள வேண்டும், என்றான்.

அப்போது பேரொளி ஒன்று பிறந்தது. அந்த ஒளியில் இருந்து ஒலி அலைகள் எழுந்தன. குலோத்துங்கா! கலக்கம் வேண்டாம், இன்னும் சில நாட்களில் செட்டியத்தெருவில் ஒரு திருமணம் நடக்க இருக்கிறது. அந்த மணவிழாவுக்கு நீயும்,

உன் அமைச்சரும் மாறுவேடத்தில் வாருங்கள். உண்மை புரியும், என்றது. சொக்கநாதரே தன்னிடம் நேரில் பேசியதாக மகிழ்ந்த மன்னன், கவலை நீங்கி புறப்பட்டான். செட்டியத்தெருவில் எப்போது திருமணம் நடக்கப்போகிறது என்ற விபரத்தை அமைச்சர் மூலமாகத் தெரிந்து கொண்டான். மணநாளன்று இருவரும் சென்று மணப்பந்தலில் கூட்டத்தோடு கூட்டமாக அமர்ந்து கொண்டனர். அப்போது எமகிங்கரர்கள் இருவர் தங்கள் உருவத்தை மறைத்துக் கொண்டு அந்த பந்தலுக்குள் வந்தனர். அவர்கள் மன்னனின் அருகில் அமர்ந்தனர். திடீரென ராஜாவுக்கும் அமைச்சருக்கும் அவர்களின் குரல் கேட்டது. சுற்றுமுற்றும் பார்த்தால் ஆள் யாரும் தென்படவில்லை. ஒரு கிங்கரன் மற்றொருவனிடம், ஏ எமதூதா! இதோ! இந்த மணமேடையில் வீற்றிருக்கும் மணமகனின் உயிரைக் கொண்டு வர வேண்டும் என்பது நமது தலைவர் எமதர்ம ராஜாவின் கட்டளை. இவன் உயிரை எப்படி பறிக்கலாம்? என்று யோசனை கேட்டான். அதற்கு இன்னொருவன், அட போடா! இதென்ன பிரமாதம்! கடந்த வாரம் மரத்தடியில் ஓய்வெடுத்த அந்தணரின் மனைவியின் வயிற்றில் மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த அம்பை விழச்செய்து உயிர் வாங்கினோமே! அதுபோல், இவ்வீட்டின் பின்னால் நிற்கும் மாட்டை அவிழ்த்து விடுவோம், அது நேராக மணமேடைக்கு ஓடி வந்து அவனைக் குத்திக் கொல்லட்டும். நாம் அவனது உயிருடன் திரும்பி விடலாம், என்றான். குலோத்துங்கனும் அமைச்சரும் அதிர்ந்துவிட்டனர். ஆனாலும், வேடன் மீது தவறில்லை என்ற உண்மை புரிந்து விட்டது. திடீரென பேச்சுக்குரல் நின்றது.

மன்னனும், அமைச்சரும் செய்வதறியாது திகைத்து நின்றனர். இதற்குள் கண்ணுக்குத் தெரியாத எமகிங்கரர்கள் அந்த வீட்டின் பின்னால் சென்றனர். அங்குகட்டி வைக்கப்பட்டிருந்த காளையின் கயிறு அவிழும்படியாகச் செய்தனர்.கட்டறுபட்ட காளை வேகமாக ஓடி வந்தது. மணமேடையை நோக்கிப் பாய்ந்தது.கூட்டத்தினர் சிதறி ஓடினர். மணமகள் அலங்கார கோலத்துடன் மணமேடையை நோக்கிவந்தாள். அவளும், அவளை அழைத்து வந்த தோழிகளும் நிலை குலைந்து ஓடினர். மணமேடையில் இருந்த மணமகன் கூட்டத்தின் நடுவே சிக்கிக் கொண்டான். காளை அவனை நெருங்கியது. அந்தக்காளை கூட்டத்தை இடித்து தள்ளிக்கொண்டு மணமகனை நெருங்கியது. மணமகனைக் காப்பாற்ற முயன்றவர்களை விரட்டியடித்தது. தன் கொம்புகளால் அவனைக் குத்திச் சாய்த்தது. அங்கிருந்து பாய்ந்து ஓடிவிட்டது. ரத்த வெள்ளத்தில் சாய்ந்த மணமகன் சற்றுநேரத்தில் இறந்தான். குலோத்துங்கனும், அமைச்சரும் அங்கிருந்து வெளியேறினர். அவர்கள் நேராகச் சிறைக்குச் சென்ற அப்பாவியான வேடனிடம் மன்னிப்பு கேட்டனர். அவனுக்கு இழைத்த கொடுமைக்காக வருந்தினர். அவனுக்கு வேண்டிய அளவு பொன்னைக்

கொடுத்து, அந்தணரிடம் நடந்த உண்மையை கூறினர். அவருக்கும் பெரும்பொருள் கொடுத்து மறுமணம் செய்து கொண்டு மகிழ்வுடன் வாழ வலியுறுத்தினர். வீண்பழி ஏற்று புண்பட்ட மனதுடன் உள்ளவர்களுக்கு புனுகு தரும் பூபதியாக விளங்குகிறார் சோமசுந்தரக் கடவுள்.

## 26. மா பாதகம் தீர்த்த படலம்!

மன்னன் குலோத்துங்கனின் ஆட்சியில் இன்னொரு அதிசய சம்பவமும் நிகழ்ந்தது. அவனது தேசத்தில் பல கொடியவர்களும் வாழத்தான் செய்தனர். அவர்களில் ஒரு அந்தண இளைஞனும் அடக்கம். அவன் சாதாரண கொடியவன் அல்ல! அவனது தந்தை ஆசார அனுஷ்டானங்களை தவறாமல் கடைபிடிப்பவர். ஆனாலும், முன்வினைப் பயனால், ஒரு கேடு கெட்ட பிள்ளை பிறந்தான். அவனுக்கு எந்த நேரமும் நாட்டியத்தாரகைகளின் வீடே கதியென இருந்தது. பெற்றவளின் அணி கலன்களைப் பிடுங்கிச் சென்று அவர்களிடம் கொடுத்து சந்தோஷம் அனுபவித்தான். வீடு, வாசல் என எல்லாவற்றையும் அவர்களிடமே கொடுத்து விட்டான். இப்போது ஒரு ஓலைக்குடிசைக்கு வந்த பிறகும், அவன் திருந்தவில்லை. கொடுப்பதற்கு பொருளே இல்லாத நிலையில், காமுகனான அந்தப்பாவி, தனது தாயையே நிர்ப்பந்தப்படுத்தினான். இந்தக் கொடுமை கண்டுமனம் தாளாத அவனது தந்தை, அவனைத் தடுத்தார். அந்தக் கொடிய மிருகம் தந்தையையேகொன்று விட்டது. பின்னர் வலுக்கட்டாயமாக தாயை இழுத்துச் சென்று விட்டான்.அந்தளவுக்கு கொடூர காமுகனான அவன், இப்போது அனாதையாக தெருக்களில் திரிந்தான். காமுகனாகத் திரிந்ததால் அவனது உடலில் கொடிய நோய் ஏற்பட்டது.உடல் மெலிந்தது. சக்தியை முழுமையாக இழந்த அவன், ஏதோ ஒரு ஜென்மத்தில் செய்த நல்வினைப்பயனால் மதுரை நகருக்கு வந்து சேர்ந்தான்.வானுயர்ந்த கோபுரத்துடன்நின்ற அன்னை மீனாட்சி சுந்தரேஸ்வரரின் ஆலயம் கண்ணில் பட்டது. அங்குவந்தவன், அதற்குள் நுழையும் தகுதி தனக்கில்லை என நினைத்து, கோயில் வாசலில் ஓரமாக அமர்ந்தபடி கதறியழுது கொண்டிருந்தான்.

அப்போது, மீனாட்சியும், சுந்தரேஸ்வரரும் மண்டபத்தில் அமர்ந்து யாரும்அறியாத வகையில் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தனர். நல்லவர்கள் பக்கம் இறைவனின் பார்வை எப்போதுமே வருவதில்லை. அவர்கள் இறப்புக்கு பின்பே நற்கதியடைகின்றனர். கெட்டவர்கள் நன்றாக இருக்க, இறைவன் ஏனோ அருள்புரிந்து விடுகிறான். இது ஆன்மிகத்தில் ஒரு நியதியாக இருக்கிறது. சுந்தரேஸ்வரராகிய பரமசிவன், மீனாட்சியாகிய பார்வதியிடம், தேவி! இதோ வாசலில் ஒருவனைப்

பார்த்தாயா? அவன் காமத்தால் தாயையே நிர்ப்பந்தம் செய்தவன். தன் தந்தையையே கொன்றவன். அவனிடம் தான் இன்று விளையாடப் போகிறேன், என்றார்.
பார்வதிதேவி என்ன நினைத்தாள் தெரியுமா? தனது மணாளன், அந்தக் கொடியவனை கொல்லப்போகிறார் போலும்! அவனுக்கு அது தேவை தான்! தாய்க்கே கொடுமை செய்தவன் இந்த தரணியில் வாழக்கூடாது என்றே நினைத்தாள். சிவபெருமானோ வேறுவிதமாக அவனுக்கு அனுக்கிரஹித்தார். அவர் பார்வதியுடன் வேடர்கள் வடிவில் அவனை அணுகினர். ஏனப்பா வாசலில் அமர்ந்து அழுது கொண்டிருக்கிறாய்? உள்ளே போ! அவன் முன்னால் அமர்ந்து, உன் கவலைகளையும், நீ செய்த தவறுகளையும் முறையிடு. அவர் அனுக்கிரஹம் செய்வார், என்றார், அந்தக் கொடியவன் தான் செய்த பாவங்களையும் அவர் முன்னால் கொட்டினான். தனக்கு விமோசனமே கிடையாது என்றான். பரமேஸ்வரன் அவனைத் தட்டிக் கொடுத்து, அப்பனே! தகப்பனைக் கொன்ற பழி, தாயையே நிர்ப்பந்திக்கும் நிலை ஆகிய கொடிய பாவங்களுக்காக மனம் வருந்து.

கதறியழு. அதற்காக மன்னிப்பு கேட்டு விட்டு, பொற்றாமரைக் குளத்தில் நீராடு. ஒரு வேளை மட்டும் உஞ்சவ்ருத்தி (பிச்சை) எடுத்து உணவருந்து. கோயிலில் அங்கபிரதட்சணம் செய். உன் தோஷம் நீங்கும், என அருள்பாலித்தார்.
பார்வதிதேவிக்கு இதுகண்டு வருத்தம். சிவனிடமே கேட்டாள். பக்தர்களுக்கு அருள பலகாலம் தாமதிக்கிறீர்கள்! ஆனால், இவனைப் போன்ற கொடியவர்களுக்கு அருள் செய்கிறீர்களே! இது என்ன நியாயம்? நீங்கள் செய்வது எனக்குப் பிடிக்கவில்லை. உங்களைப் புரிந்து கொள்ளவும் இயலவில்லை, என்றாள் செல்லமான சிணுங்கலோடு. தேவி! நல்லவர்கள் என்றும் நல்லவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் நிம்மதியாக வாழ வேண்டுமானால் கொடியவர்கள் திருந்த வேண்டும். இதோ! என் கழுத்தைப் பார்! இதை அலங்கரிக்கும் பாம்பு குணத்தில் கொடியது. கொடியதை காப்பதுவும் என் கடமையே என்பதால் தான் இதை ஆபரணமாக அணிந்துள்ளேன், என்றார் சுவாமி. தங்கள் திருவிளையாடலை அறியவல்லவர் யாரும் இல்லை. ஆடுபவரும் ஆட்டுவிப்பவரும் தாங்களே! என்றாள் பார்வதி. அந்த அந்தணகுமாரனும் பலகாலமாக வேடன் சொன்ன பரிகாரங்களைச் செய்தான். கோயிலுக்கு வருவோருக்கு தன்னாலான உதவிகளைச் செய்தான். அவனது தோஷம் நீண்டகாலத்துக்குப் பின் நீங்கியது. பலகாலம் மதுரையிலேயே ஒழுக்கசீலனாக வாழ்ந்த அவன் இறைவன் திருவடி நிழலை அடைந்தான்.

## 27. அங்கம் வெட்டின படலம்!

குலோத்துங்கனின் ஆட்சிக்காலத்தில் மதுரையில் வாள் பயிற்சிப் பள்ளி ஒன்று இருந்தது. முதியவர் ஒருவர் தனது மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வந்தார். அவரது மனைவியின் பெயர் மாணிக்கமாலை. அழகிலும் அழகு பேரழகு பெட்டகமாக அவள் திகழ்ந்தாள். முதியவருக்கேற்றபடி இல்லாமல் இளமை தவழும் முகத்துடன் இருந்தாள். அவளை பயிற்சிக்கு வந்த மாணவன் ஒருவனின் ஓரக்கண் அடிக்கடி வட்டமிட்டபடியே இருந்தது. அவனது பெயர் சித்தன். வாள் வித்தையில் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனாக விளங்கினான். அவனது வாள் வீச்சை சக மாணவர்கள் பாராட்டினர். ஒருவனுக்கு பாராட்டு கிடைக்கும் வரை அதற்காக ஏங்குவான்.கிடைத்து விட்டால் மிருகமாக மாறி விடுவான். தன்னை விட பெரிய ஆள் மதுரையில் இல்லை என்ற முடிவுக்கு அவன் வந்து விட்டான். அந்த மமதையுடன் தனது பெயரில் சொந்தமாக மற்றொரு வாள் பயிற்சிக் கூடத்தை ஆரம்பித்தான். அவனே பலருக்கு பயிற்சி கொடுத்தான். செல்வமும் கொட்டியது. இதன்பின்னர் அகம்பாவம் அதிகரித்தது. மாணிக்கமாலையை தொடர்ந்து நோட்டமிட்டான். குரு இல்லாத நேரங்களில், அவரது வீட்டிற்கு வருவான். தனியாக இருக்கும் அந்தப் பெண்ணிடம் பேச்சுக் கொடுப்பான். அவளைப் போல் அழகி யாருமில்லை என்று கவர்ச்சியாகப் பேசுவான். குருபத்தினியோ, அவனது பேச்சின் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொண்டு அவனை வெறுத்து ஒதுக்கினாள். நாட்கள் நகர்ந்தன. ஒருமுறை அவளை அடைந்த தீர வேண்டுமென்ற வெறியோடு, குரு வெளியில் சென்றிருந்த நேரத்தில் வீட்டிற்குள் நுழைந்தான். கதவைத் தாழிட்டான். மாணிக்கமாலை அதிர்ந்து விட்டாள்.

என் ஆசைக்கு இணங்குகிறாயா, இல்லையா? என்று அவளை மிரட்டினான். மாணிக்கமாலை அவனுக்கு தக்க அறிவுரை கூறினாள். ஆனால், அந்த காமந்தகன் கேட்பதாக இல்லை. அவளது கையைப் பிடித்து இழுத்தான். அவள் அலறினாள். எப்படியோ, அவனைப் பிடித்து கீழே தள்ளினாள். கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து விட்டாள். அந்தக் கொடியவனும் வெளியே வந்து, அடியே! இன்று நீ தப்பிவிட்டாய், ஆனால், என்றாவது ஒருநாள் உன்னை அடைந்தே தீருவேன், என சவால் விட்டு சென்றுவிட்டான். மாணிக்கமாலை அழுதாள். ஆனால், கணவரிடம் இதுபற்றி ஏதும் சொல்லவில்லை. கணவரிடம் சொன்னால், அவர் வாளெடுத்துச் செல்வார். சிஷ்யனிடம் சண்டைபோடுவார். ஒருவேளை அந்த சண்டையில் அவர் கொல்லப்படலாம், அல்லது சிஷ்யன் கொல்லப்படலாம். எதுவானாலும், அது அவருக்கு அவமானத்தையே ஏற்படுத்தும். சிஷ்யன் கொல்லப்பட்டால், ஒரு குருவே இப்படி செய்யலாமா? சின்னஞ்சிறுவனை ஒரு குரு வெல்வது என்ன உலகில் அதிசயமா?

என்ற பேச்சு எழும். அவர் தோற்றால், ஒரு சிறுவனிடம் தோற்றானே இந்தக் கிழவன் என்ற அவமானச்சொல் காதுகளைத் துளைக்கும்.அதைக் கேட்டு அவர் உயிரையே விட்டாலும் விட்டு விடுவார். இந்த இக்கட்டானநிலையில் அவள் சோமசுந்தரப்பெருமானை நாடிச் சென்றாள். மீனாட்சியம்மன்கோயிலுக்கு வந்து அன்னை மீனாட்சியிடம், தாயே! பராசக்தி, அம்மா! உன் ஆட்சிநடக்கும் மதுரையில் இப்படி ஒரு அநியாயம் நடக்கலாமா? பத்தினிப் பெண்களுக்கு பாதுகாப்பில்லை என்ற அவச் சொல் உனக்கு வரலாமா? இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கும் எனக்கு, அந்தக் கயவனிடமிருந்து விடுதலை கொடு. அவனை அழித்து விடு என்று கதறினாள்.

பின்னர் சோமசுந்தரர் சன்னதிக்குச் சென்று, மதுரை வேந்தே! என்னைக் காப்பாற்ற வேண்டியது உன் கடன்.திருவடி தூக்கி உலகையே ஆட்டுவிக்கும் நடராஜா! குஞ்சிதபாதா! அண்ணலே! எனக்கு அந்தக் காமாந்தகனிடமிருந்து பாதுகாப்பு கொடு என்று வேண்டினாள். நியாயமாக வேண்டியோர்க்கு வேண்டுவன தரும் அண்ணல் சோமசுந்தரரின் இதயத்தையே அவளது அழுகுரல் இளக்கி விட்டதோ என்னவோ! அவள் வெளியேறியவுடன், அண்ணலும் கிளம்பி விட்டார். மாணிக்கமாலையின் கணவரைப் போலவே வேஷமிட்ட அவர், சித்தன் நடத்திய பயிற்சிக்கூடத்துக்கு வந்தார். குருவைக் கண்டதும் சித்தன் அதிர்ந்து விட்டான். மாணிக்கமாலை ஏதாவது சொல்லிக் கொடுத்து இங்கே வந்திருக்கிறாரோ? என்னாகப் போகிறதோ என கலங்கினான். குருவாக வந்த சோமசுந்தரரோ அதுபற்றி எதுவுமே பேசவில்லை. மாறாக வம்புக்கு அவனை இழுத்தார். சித்தா! ஒரே உறையில் இரண்டு கத்தி இருக்கக்கூடாது. அதுபோல், ஒரே ஊரில் இரண்டு வாள் பயிற்சிப்பள்ளிகள் இருப்பதையும் நான் விரும்பவில்லை. நீதிறமையான மாணவன் தான்! ஆனாலும், என்னிடம் பயிற்சி பெற்றவன் என்பதை மறந்துவிடாதே. ஒருவேளை, உன் பயிற்சிக்கூடம் மட்டும் தான் இருக்க வேண்டுமெனநீ நினைத்தால், என்னுடன் வாள் போருக்கு வா. இருவரும் போரிடுவோம். நீஜெயித்துவிட்டால், உன் கூடம் மட்டும் மதுரையில் இருக்கட்டும். நான் எனதுபள்ளியை மூடிவிடுகிறேன், என்றார். ஆணவம் மிக்க சித்தன் இந்தச் சவாலை ஏற்றான். இதோடு குருவைத் தொலைத்து விடலாம். அதன் பிறகு மதுரையில் நமது ராஜ்யமே நடக்கும். குருபத்தினியையும் எளிதில் அடைந்துவிடலாம் என்பது அவன்கணக்கு.

சண்டை துவங்கியது. ஆரம்பத்தில் இருந்தே சோமசுந்தரரின் கை ஓங்கியிருந்தது. அவரை எதிர்க்கவல்ல அசுரர்களே இல்லாத போது, இம்மாதிரி மானுட ஜென்மங்கள் என்ன செய்யமுடியும்? சித்தன் திணறினான். அவனது வாள் பறந்தது. சோமசுந்தரர் அவன் முன்னால் ஆவேசத்துடன், அடே குரு துரோகி! குருவின் பத்தினியையை

அடையவா ஆசைப்பட்டாய். அவளை எப்படியெல்லாம் வர்ணித்தாய். அவளை ரசித்துப் பேசிய உன்நாக்கு இனி இருக்கக்கூடாது, என்று நாக்கைத் துண்டித்தார். ரத்தம் வழிய வழியவலி தாளாமல் அவன் மண்ணில் விழுந்து புரண்டான். சுவாமி அவனை விடவில்லை. அடேதுரோகி! குருவின் மனைவியை கையைப் பிடித்தா இழுத்தாய்? இந்தக் கைதானே இழுத்தது, இந்தக் கை தானே அவளை அணைக்க முயன்றது, என்று சொல்லி இரண்டு கரங்களையும் துண்டித்தார். சித்தன் அலறினான். ரத்தம் ஆறாகப் பெருகி ஓடியது.சண்டாளனே! உன்னை அங்கம் அங்கமாக வெட்டினாலும் என் ஆத்திரம் அடங்காது என்றவர், இந்தக் கால்கள் தானே குரு இல்லாத நேரத்தில் அவரது வீட்டுக்குச் சென்றன, என்று சொல்லி கால்களைத் துண்டித்தார். அவனது உடல் துடித்தது.சித்தனின் ஆவி கொஞ்சம் கொஞ்சமாக அடங்கியது. பின்னர் குரு வேடத்தில் இருந்தசோமசுந்தர பெருமான் மறைந்துவிட்டார். இதை கூடிநின்று பார்த்துக்கொண்டிருந்த மக்கள் குருவின் இல்லத்திற்கு சென்றனர். அங்கு அவர் இல்லை.அவர் எங்கு சென்றிருப்பார் என அறியாத அவர்கள், அவரது மனைவி மாணிக்கமாலையிடம், குருநாதர் இப்போதுதான் சித்தனை வெட்டிச் சாய்த்தார்.அதன்பிறகு அவரைக் காணவில்லையே. இங்கு வந்தாரா? என கேட்டனர். மாணிக்கமாலை அதிர்ந்து போனாள். அவர் அப்படி செய்பவர் அல்ல; மாணவன் என்னதான் தவறுசெய்திருந்தாலும் அவனை கொலைசெய்யும் அளவுக்கு துணியமாட்டார். சற்றுநேரத்திற்கு முன் வரை அவர் இங்குதான் இருந்தார். நீங்கள் குறிப்பிடுகிற நேரத்தில் வீட்டில் இருந்த அவர் சித்தனை எப்படி வெட்டியிருக்க முடியும்? கோயிலுக்கு அவர் சென்றிருக்கிறார். இப்போது வந்துவிடுவார் என அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே குரு வீட்டிற்கு வந்தார்.

அவரிடம் நடந்த சம்பவம் பற்றி மக்கள் கூறினர். வியப்படைந்த அவர் என் மாணவனை நானே கொல்வேனா? என்னை வஞ்சிக்க நினைத்த அவனை சோமசுந்தர பெருமானே சம்ஹாரம்செய்திருக்கிறார் என்றுதான் கருதுகிறேன். எனது வடிவில் அவர் வந்திருக்கிறார், என பரவசத்துடன் கூறினார். இந்த சம்பவம் ஊரெங்கும் பரவியது. குலோத்துங்க மன்னனின் காதுக்கும் விஷயம் எட்டியது. அந்த தெய்வ தம்பதியரை பார்ப்பதற்காக அவன் அவர்களது இல்லத்திற்கே விரைந்தான். அந்த தம்பதியர் மன்னனின் காலில் விழுந்து வரவேற்க சென்றனர். அதை தடுத்த மன்னன் நீங்கள் இருவரும் சோமசுந்தர பெருமானின் அருளை பெற்றவர்கள். உங்களுக்காக அவர் சித்தனுடன் போராடி அவனை அழித்துள்ளார். இப்படி அவரது பேரருளைப் பெற்ற நீங்கள் எல்லோராலும் வணங்கப்படும் தகுதியை அடைந்திருக்கிறீர்கள். நான்தான் உங்களிடம் ஆசி பெற வேண்டும், எனக்கூறி, அவர்களது பாதங்களில் விழுந்தான்.மேலும் குருவுக்கு பசுக்களையும் நிலமும் தானமாக அளித்தான்.

அவர்களை யானையில் அமரவைத்து ஊர் முழுவதும் பவனி வரச்செய்தான். இந்த சம்பவத்திற்கு பிறகு குலோத்துங்க பாண்டியன் தன்னுடைய மகன் அனந்தகுண பாண்டியனுக்கு பட்டாபிஷேகம் செய்து வைத்தான். சிலகாலம் வாழ்ந்த அவன் சோமசுந்தர பெருமானின் திருவடியை எய்தினான். அனந்தகுண பாண்டியனும் சிவபக்தியில் குறைந்தவன் அல்ல; சிவாய நம என்ற மந்திரம் அவனது இதயத்திற்குள் ஒலித்துக் கொண்டே இருக்கும். வெண்ணீறு பூசிய நெற்றியும் உடலும் பார்ப்பவர்களை கையெடுத்து வணங்க வைக்கும். ருத்திராட்ச மாலைகளையும் அவன் அணிந்திருந்தான். இந்த மன்னனின் சிவபக்தி கண்டு வியந்த மக்கள், தாங்களும் முன்பைவிட சோமசுந்தரபெருமானிடம் அதிக பக்தி செலுத்தினர். தன்னிடம் பக்தி கொண்ட மன்னனையும் மக்களையும் சோதித்துப் பார்க்க சோமசுந்தர பெருமான் ஆசை கொண்டார்.

Read more: http://www.penmai.com/forums/spirituality/56460-64-thiruvilaiyadal-puranam-64-a-3.html#ixzz2nzGOOSuv

## 28. நாகமெய்த படலம்!

அனந்தகுண பாண்டியனுனின் ஆட்சியால் அமைதியாக இருந்த மதுரை நகரில் மீண்டும் சமணர்களின் ஆதிக்கம் வேரூன்ற துவங்கியது. அவர்கள் சைவ மன்னனான அனந்தகுண பாண்டியனை ஒழித்துக்கட்ட திட்டமிட்டனர். இதற்காக வைகை கரை ஓரம் மிகப்பெரிய யாகசாலை ஒன்றை அமைத்தார்கள். அனந்தகுன பாண்டியனை கொல்வதற்காக அபிசார ஹோமம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்த ஹோமம் செய்யும்போது கெட்ட சக்தி ஒன்று வெளிப்படும். அந்த சக்தியை மன்னனின் மீது ஏவி அவனைக் கொல்வது சமணர்களின் திட்டம். யாகம் வெற்றிகரமாக துவங்கியது. சமணர்கள் எதிர்பார்த்தது போலவே கோரைப் பற்களும், கொடிய உருவமும், தீப்பொறி பறக்கும் விழிகளும் கொண்ட அரக்கன் ஒருவன் எழுந்தான். அவனது சிரிப்பொலி மதுரை நகரையே உலுக்கியது. அவன் சமணர்களை நோக்கி, எனக்கு கடுமையாக பசிக்கிறது. உடனடியாக எனக்கு உணவிடாவிட்டால் உங்களையே தின்று விடுவேன், என எச்சரித்தான். சமணர்கள் அவனிடம், அரக்கனே! உனக்கு மிகப்பெரிய விருந்து காத்திருக்கிறது. இந் நாட்டின் மன்னன் திடகாத்திரமானவன். அவனைப் போலவே திருநீறு அணிந்த பலர் இவ்வூரில் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரையும் சாப்பிட்டு உன் பசியை தீர்த்துக் கொள், என்றனர். அரக்கனின் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. உடனடியாக புறப்படுகிறேன், என்று கூறி அவர்களிடம் விடைபெற்று, நாகத்தின் வடிவெடுத்து ஊருக்குள் புகுந்தான். கொடிய விஷம் கொண்ட

நாகமாக அது இருந்தது.

அந்த பாம்பின் மூச்சுக்காற்று பட்டு மதுரையிலிருந்த அத்தனை நெல் வயல்களும் கரும்பு வயல்களும் பட்டுப்போயின. சாலையோரம் நடப்பட்டிருந்த மரங்கள் கருகிவிட்டன. அந்த பாம்பு தனது வாயை பிளந்தது. அது மிகப்பெரிதாக இருந்தது. வழியில் தென்பட்ட அத்தனை மிருகங் களையும் அது விழுங்கியது. அந்த பாம்பின் அட்டகாசம் குறித்து மன்னனுக்கு தகவல் சென்றது. மக்களும் மன்னனிடம் ஓடிச் சென்று தங்களுக்கு ஏற்பட்ட இன்னலை தெரிவித்தனர். அனந்தகுண பாண்டியன் அவர்களிடம், இதற்காக நீங்கள் அச்சப்படத் தேவையில்லை. நம் சோமசுந்தர பெருமான் ஆலகால விஷத்தையே அருந்தியவர். அவரது திருவடிகளை நம்பியிருக்கும் நாம் அவரையே சென்று பணிவோம். நானும் அந்த பாம்பை கொல்வதற்குரிய நடவடிக்கையை எடுக்கிறேன், என சொல்லி ஆயுதங்களுடன் புறப்பட்டான். படைகள் பின்தொடர்ந்தன. முதலில் மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் சென்றாலும் அம்பிகையை வணங்கி விட்டு, சுந்தரேசர் சன்னதிக்கு சென்று தன்னுடைய குறையை பணிவுடன் தெரிவித்தான். அப்போது பாண்டியனின் காதுக்கு மட்டும் கேட்கும் வகையில், பாண்டியனே! அந்த பாம்பைப் பற்றி எந்தக் கவலையும் வேண்டாம். நாகத்தை வெல்லும் ஆற்றலை உனக்கு அளிக்கிறேன். உடனடியாக புறப்படு, என்றார். மிகுந்த மகிழ்ச்சியுடன் பாண்டியன் அங்கிருந்து கிளம்பினான். அதற்குள் பாம்பு மதுரை நகரின் மேற்கு வாசலை எட்டிவிட்டது. சோமசுந்தரப் பெருமானின் திருவாக்கே கிடைத்துவிட்டதால், அனந்தகுணபாண்டியன் சற்றும் பயமின்றி அதை எதிர்கொள்ள அங்கு வந்து சேர்ந்தான். நாகாசுர பாம்பு அவனை நோக்கிப் பாய்ந்தது. பாண்டியன் தன் வில்லெடுத்து அம்பை அதன் மீது எய்தான்.

அது இரண்டு கூறாகப் பிளந்து கீழே விழுந்தது. ஆனால், அந்தக் கொடிய நாகம் வேறுவழியில் தன் வேலையை காட்டியது. தன் வாயைப் பிளந்து நஞ்சைக் கொட்டியது. நஞ்சுக்காற்று மதுரை நகரெங்கும் பரவியது. மக்கள் ஆங்காங்கே மயங்கி விழுந்தனர். அனந்தகுணபாண்டியனும் மயக்கநிலைக்கு வந்துவிடுவோமோ என்ற நிலையில், சற்று சுதாரித்துக் கொண்டு கோயிலுக்கு விரைந்து வந்து உள்ளே சென்றுவிட்டான். சோமசுந்தரர் சன்னதிக்குச் சென்று, நீலகண்டனே! அன்றொரு நாள் பாற்கடலை தேவர்கள் வாசுகி பாம்பு கொண்டு கடைந்தபோது, வெளிப்பட்ட விஷத்தை உண்டு அவர்களைக் காத்தாய். இன்று உன் ஆசியுடன் பாம்பை இரண்டாகப் பிளந்தும் கூட அதன் நஞ்சு எங்களைக் கொல்ல வருகிறது. நீயே காப்பாற்ற வேண்டும், என்று சரணடைந்தான். அப்போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. சோமசுந்தரப் பெருமான் நேரில் அங்கு தோன்றினார். அவரது தலையைச் சாய்த்து

தான் சூடியிருந்த சந்திரப்பிறையில் இருந்து அமிர்தத் துளி ஒன்றைச் சிந்தினார். அது ஊரெங்கும் பரவியது. பாம்பின் விஷத்தை அமிர்தம் முறித்தது. அந்த விஷம் யார் பாம்பை ஏவினார்களோ அவர்களை நோக்கிப் பாய்ந்தது. மதத்தின் பெயரால், தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொள்ள நினைத்த அவர்களில் பலர் அழிந்துபோனார்கள். செய்தார்க்கே செய்தவினை என்ற சொற்றொடரை உறுதிப் படுத்தியசிவபெருமான் மறைந்து விட்டார். மக்கள் மயக்கம் தீர்ந்து எழுந்து, நடந்த அதிசயத்தைக் கேள்விப்பட்டு, சோமசுந்தரரின் சன்னதிக்குச் சென்றுநன்றிக்கண்ணீர் வடித்தனர். பாம்பு விழுந்த இடமே நாகமலை என்ற பெயர் பெற்றது.

## 29. மாயப் பசுவை வதைத்த படலம்!

அனந்தகுண பாண்டியன் நாகத்தைக் கொன்று பெற்ற வெற்றி, அவனது பேருக்கும் புகழுக்கும் மேலுமொரு மகுடம் சூட்டுவதாக அமைந்தது. இதன்பிற்கும் சமணர்கள் திருந்தவில்லை. தங்கள் ஆதிக்கத்தை மதுரையில் நிலைநிறுத்த எண்ணிய அவர்கள் மீண்டும் அனந்தகுண பாண்டியனுக்கு தொல்லை கொடுத்தனர். அபிசார ஹோமம் நடத்தி, இன்னொரு அரக்கனை உருவாக்க எண்ணினர். இப்போது அவர்கள் ஒரு தந்திரத்தையும் கையாண்டனர். சைவர்கள் பசுவை புனிதமாகக் கருதுபவர்கள். அதை வழிபாடு செய்பவர்கள். அந்தப் பசுவின் மூலமே அவர்களை அழிக்க எண்ணினர் அவர்கள். ஹோமம் துவங்கியது. யாக குண்டத்தில் இருந்து அதிபயங்கர அசுரன் ஒருவன் தோன்றினான்.எஜமானர்களே! உத்தரவிடுங்கள். உங்களுக்காக நான் என்ன பணி செய்ய வேண்டும்? என்றான். பசுவாசுரனே! நீ ஒரு பசுவின் வடிவெடுத்து மதுரை மக்களை அழித்து விடு. பலம் கொண்ட மட்டும் உன் கொம்புகளால் முட்டிமோதி, மாளிகைகளையும், அங்காடிகளையும், இன்னும் மதுரையின் முக்கிய இடங்களை யெல்லாம் நொறுக்கி விடு, என்றனர். பசுவாசுரனும் புறப்பட்டான். நகருக்குள் புகுந்த அவன் வானத்துக்கும் பூமிக்குமாக பெரிய பசுவாக உருவெடுத்தான். தன் கூரிய கொம்புகளை தாழ்த்திப் பிடித்து பலரைக் குத்திக் கொன்றான். இந்த தகவல் அனந்தகுண பாண்டியனுக்கு வரவே, அவன் பசுவை அடக்க எடுத்த முயற்சிகள் பலிக்கவில்லை.

எல்லாம் அந்த சொக்கலிங்கப் பெருமானுக்கு தெரியுமல்லவா? அவர் முன்னால் யார் தான் நிற்க முடியும்? அவரையே சரணடைந்தான் அவன். தன் பக்தனின் கோரிக்கைக்கு செவிசாய்த்தார் சோமசுந்தரர். அவர் தன் பாதுகாவலரும், வாகனருமான நந்தீஸ்வரரை அழைத்தார். நந்தியே! நீ உடனே ரிஷப வடிவெடுத்துச் செல். மதுரையை அழிக்க வந்துள்ள அந்த மாயப்பசுவைக் கொன்று வா, என உத்தரவிட்டார்.

இறைவனின் ஆணையைப்பெற்ற நந்தி, கண்டவர் எவரும் அஞ்சும் வண்ணம் சினந்து எழுந்தது. அதன் கண்கள் வேள்விக் குண்டத்தழல் போல் கொதித்தன. நாக்கு நாசினியைத் துழாவியது. தலை வானுலகைத் தொட்டு நின்றது. வளைந்த கொம்பிலே செம்மணிப் பூண் சுற்றிக்கிடந்தது. முதுகிலே பொற்கவசம் மின்னியது. கழுத்தில் வீரமணி ஜொலித்தது. இப்படி ஆரவாரமாக கிளம்பினார் நந்தியெம்பெருமான். தன்னையும் விண்ணளவுக்கு உயர்த்திக் கொண்டு, கொம்புகளை வீசியபடியே வேகமாக சென்றார். மாயப்பசுவை வழிமறித்தார். இரண்டுக்கும் கடும் போர் நடந்தது. முடிவில், தன் கொம்புகளால் பசுவின் வயிற்றைக் கிழித்தார். பசு பயங்கர அலறலுடன் சாய்ந்து உயிரை விட்டு, மலை வடிவம் எடுத்தது. அதுவே பசுமலை என்ற பெயரில் இன்றளவும் மதுரையில் இருக்கிறது. இப்படியாக, அனந்தகுண பாண்டியன் சைவம் தழைக்க பல நற்பணிகளைச் செய்தான். அவனது காலத்திற்குப் பிறகு, அவனது மகன் குலபூஷண பாண்டியன் மன்னர் பொறுப்பேற்றான்.

## 30. மெய் காட்டிட்ட படலம்!

பூஷணின் ஆட்சிக்காலத்தில், சேதிராயன் என்ற குறுநில மன்னன், பல பெரிய நாடுகளிலும் புகுந்து தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி, தன்னை பேரரசனாக மாற்றிக் கொள்ள திட்டமிட்டான். 15 பெரிய நாடுகள் மீது அவனுக்கு கண் இருந்தது. அதில் பாண்டிய நாடும் அடக்கம். இந்தத் தகவல் ஒற்றர்கள் மூலமாக குலபூஷணனுக்கு கிடைத்தது. அப்போது, பாண்டியநாட்டின் சேனாதிபதியாக சவுந்தரசாமந்தன் என்பவன் இருந்தான். சாமந்தன் மிகப்பெரிய வீரன். அவனது தலைமையில்பாண்டியப்படைகள் ஏதாவது ஒருநாட்டிற்குள் நுழைகிறது என்றால், அந்த நாட்டின் தலைவன், யாரும் சொல்லாமலே ஓடிவந்து சரணடைந்து விடுவான். அந்தளவுக்குபலசாலியானாலும் பக்திமானாகவும் விளங்கினான் சாமந்தன். அவன் சிறந்தசிவபக்தன். கையில் வாளெடுத்து போர் செய்யும் கொடும் தொழிலுக்குச்சொந்தக்காரனாக இருந்தாலும், நெற்றி நிறைய திருநீறு அணிய அவன் மறந்ததில்லை. தினமும், மீனாட்சியம்மையையும், சொக்கநாதரையும் கோயிலுக்குச் சென்று வணங்கத்தவறியதில்லை. எங்கேனும் போர்க்களத்துக்கு சென்றுவிட்டால், அந்த இடத்தையே சொக்கநாதரின் கோயிலாக பாவனை செய்து வணங்குவான். அந்தளவுக்கு மகாபக்திமான் சவுந்தர சாமந்தன். அவனை அழைத்த குலபூஷணன், சேனாதிபதியாரே! குறுநில மன்னன் சேதிராயன் நம் நாட்டைத் தாக்கப் போவதாக தகவல் வந்துள்ளது. அவனது நால்வகைப் படையும் தயார் நிலையில் இருக்கிறதாம். அவன் வருவதற்குள் நாம் நமது படைபலத்தை மேலும் பெருக்க வேண்டும். இதற்கு பெரும் செலவு ஆகும். நீர் அரண்மனைக் கஜானாவிற்கு சென்று, வேண்டுமளவு

பொருள் எடுத்துக் கொள்ளும்.படைபலத்தைப் பெருக்க நடவடிக்கை எடும், என்றான். சாமந்தனும் அதை ஏற்று, அரசே! சேதிராயன் குறி வைத்துள்ள மற்றநாடுகளின் தலைவர்களிடமும் பேசுகிறேன்.படைபலத்தை விரைவில் பெருக்குகிறேன், என்றான். கஜானவிற்கு சென்ற அவன் பைநிறைய பொன்னும் பொருளும் அள்ளிக் கொண்டான். வீட்டிற்கு வந்த அவன்பணமூட்டையைப் பிரித்துப் பார்த்தான்.

என்ன உலகம் இது! ஆயுதங்களை அதிகரிப்பதற்கும், பிறர் மீது படையெடுத்து அவரவர் நிலத்தை ரத்த பூமியாக்குவதற்குமா இந்த செல்வம் பயன்பட வேண்டும். எந்த நாடாக இருந்தாலும், படைபலத்திற்கு தானே அதிகம் செலவழிக்க வேண்டியுள்ளது! பாதுகாப்புக்காக செலவிடும் இந்தத் தொகையை ஆன்மிகம் தழைக்க செலவிட்டால், பலருக்கும் பல வசதிகள் கிடைக்குமே! உலகத்தில் அமைதி பொங்குமே! என எண்ணினான். ஆம்...இந்த பணத்தை படைபலம் பெருக்க பயன்படுத்தக்கூடாது. சிவனடியார்களின் தொண்டுக்கு பயன்படுத்துவோம், என முடிவே செய்து விட்டான். களஞ்சியத்திலுள்ள பொருளை எடுத்துக் கொண்டு, சிவனடியார்களை நோக்கிச் சென்றான் சாமந்தன். அவர்களுக்கு தேவைப் படுமளவு வாரி வழங்கினான். திருக்கோயில்களை சீரமைக்க பெரும் பணத்தை செலவிட்டான். மனநிறைவு பிறந்தது. படை திரட்டாமல் போனால், பாண்டியன் தரும் தண்டனையை ஏற்கவேண்டும் என்பது அவனுக்குத் தெரியும். அதற்காக அவன் கவலைப்படவில்லை. ஆனால், இந்த பணத்தை இவனே பதுக்கிக் கொண்டதாக கெட்ட பெயர் வருமே! அப்படி ஒரு கெட்ட பெயர்வந்தால், மக்கள் மத்தியில் நடமாட முடியாதே! எல்லோரும் தனக்கு அரசதுரோகி என்று பட்டம் கட்டிவிடுவார்களே! என்றெல்லாம் கவலைப்பட்டான். தன் மனக்கவலைக்கு மருந்து தேடி சுந்தரேஸ்வரர் சன்னதிக்குச் சென்றான். இறைவா! நீயே எனக்கு துணை, என வணங்கிவிட்டு வந்தான். சில மாதங்களுக்குப் பிறகு குலபூஷண பாண்டியன், சாமந்தனை அழைத்தான்.

சேனாதிபதி! சேதிராயனை எதிர்க்கும் படை திரட்டுவதற்காக களஞ்சியத்தில்இருந்து பெரும் பொருளை எடுத்துச் சென்றீர்! ஏறத்தாழ ஒரு ஆண்டாக படைதிரட்டும் பணியில் ஈடுபட்டிருப்பீர்! அந்த பெரும்படையின் அணி வகுப்பை நான்காண வேண்டும். இங்கே நடக்கும் அணிவகுப்பு பற்றி அறிந்தவுடனேயே, சேதிராயன் ஒடுங்கி விட வேண்டும். நாளை மாலை நீர் இதுவரை சேர்த்துள்ள படையை என் முன் நிறுத்த வேண்டும். நான் அதைப் பார்வையிட வேண்டும், என உத்தரவிட்டான். சாமந்தனுக்கு தூக்கி வாரி போட்டது. எடுத்த பணத்தையெல்லாம்இறைப்பணிக்கு செலவிட்டோம். ஒரு நபரைக் கூட வேலைக்கு அமர்த்தவில்லை. இனி அந்த சுந்தரேஸ்வரப் பெருமான் தான் எனக்குத்துணை! சொக்கநாதா! சோமசுந்தரக்

கடவுளே! நீரே எனக்கு அபயமளிக்க வேண்டும். உன் அடியார்களுக்கே பணத்தை செலவிட்டேன். நீ குடியிருக்கும் இல்லங்களைச் சீரமைக்க பெரும் தொகையை தந்தேன். இப்போது, இக்கட்டில் சிக்கியிருக்கிறேன். என்னைக் காப்பாற்று, என்று கதறினான். அப்போது அசரீரி ஒலித்தது. சாமந்தா! கவலை கொள்ளாதே. நாளை மாலை மன்னனை மைதானத்துக்கு வரச்சொல். அங்கே, நாம் படைகளுடன் வருவோம், என அருள்வாக்கு பிறந்தது. சோமசுந்தரப் பெருமானே இவ்வாறு கருணை செய்துவிட்டதால், மகிழ்ச்சியடைந்த சாமந்தன், மறுநாள் மன்னனை வரச்சொல்லி விட்டு, மைதானத்தில் காத்திருந்தான். அணிவகுப்பைக் காண மக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இறைவனே வாக்குறுதி அளித்துவிட்டதால், சாமந்தன் நம்பிக்கையுடனும், பெருமிதத்துடனும் தனக்கே தெரியாத அந்த படையைக் காண தயாராக மன்னன் அருகில் நின்றான்.

குலபூஷணனும் ஆர்வமாயிருந்தான். சேனாதிபதியே! படைகளை வரச் சொல்லும் என்று ஆணையிட்டான். சாமந்தன் கண்களை மூடி சுந்தரேஸ்வரரை தியானித்தான்.சொக்கநாதப்பெருமானே! தாங்கள் எனக்களித்த வாக்குறுதிப்படி உடனே எழுந்தருளுங்கள், என்றான். அவ்வளவு தான்.... ஹோவென்ற பேரிரைச்சலுடன் மதுரை நகரே குலுங்கும் வண்ணம் படைகள் அணிவகுத்து வந்தன. நடுநாயகமாக, சொக்கநாதர் ஒரு வாலிபனின் வடிவில் வெள்ளைக்குதிரையில் ஏறி கம்பீரமாக தலைமை தாங்கி வந்தார். யானை, குதிரை, தேர்ப்படை, காலாட்படை என நால்வகைப் படைகளும் வந்தன. ஒன்றல்ல! இரண்டல்ல! சிவபெருமானைச் சூழ்ந்து 78 ஆயிரம் வீரர்கள்... அல்ல.. அல்ல... 78 ஆயிரம் சிவகணங்கள், மானிட வடிவெடுத்து படைவீரர்களைப் போல் சூழ்ந்து வந்தனர். அனைவரும் திருநீறு, ருத்ராட்சம் அணிந்து காட்சி தந்தனர். படைகள் எழுப்பிய புழுதிப்படலத்தில் நகரே மறைந்துவிட்டது. சாமந்தன் அதிசயத்து பரவசத்தில் நின்றான். மன்னன் குலபூஷணன் மகிழ்ச்சியில் திளைத்தான். அங்கம், வங்கம், கலிங்கம், சிங்களம், மாளவம், குலிந்தம், கொங்கணம், தெலுங்கு நாட்டுப் படைகள், சவுட, ஒட்டிய, கொல்ல, கூர்ச்சர நாடர் படைகள், விதேச, கடார, கேகய, மரகத, மராட்டியம், காஞ்சி நாட்டு வீரர்கள் பாரதமெங்கிலும் இருந்து படைகள் வந்து குவிந்தது கண்ட மன்னன், இப்போதே மலைநாட்டு மன்னன் சேதிராயன் தொலைந்தான் என வீரக்குரல் எழுப்பினான். சாமந்தனை பாராட்ட வார்த்தைகளே கிடைக்காமல், அவனை கட்டித் தழுவிக்கொண்டான். படைத்தலைவனாக வந்த ஈசனின் முகப்பொலிவை வைத்த கண் வாங்காமல் பார்த்தான். இவ்வளவு நேர்த்தியாகவந்த ஈசனை, சாதாரண மனிதனாகக் கருதி பொன்னும், பொருளும் வாரிக்கொடுத்தான்.சாமந்தனுக்கும் அவ்வாறே பல பரிசுகளைத் தந்தான். நல்ல நேரம் வந்தால் மொத்தமாக வந்து மனிதனை

திக்குமுக்காட வைத்துவிடும். இந்த இனிய நேரத்தில்ஒற்றன் ஒருவன் வந்து மன்னரை அடிபணிந்தான்.

பாண்டிய மாமன்னரே! தங்கள் சமூகத்துக்கு இனிய சேதி ஒன்று கொண்டு வந்துள்ளேன். நமது பகைவன் சேதிராஜன், காட்டுக்கு வேட்டைக்குச் சென்ற போது, புலி தாக்கி இறந்துவிட்டான், என்றான். மன்னன் இரட்டிப்பு மகிழ்ச்சியுடன், அந்த ஒற்றனுக்கு முத்துமாலைகள், நவரத்தினங்களைக் காணிக்கையாக்கினான். பின்னர் படை கொண்டு வந்த சோமசுந்தரரை நோக்கி,இப்போது படையெடுப்புக்கு அவசியமில்லாமல் போயிற்று. எதிரி மன்னன் மாண்டுவிட்டான். நீர் படைகளை பாசறைக்கு அழைத்துச் செல்லும். தேவைப் படும் போது இங்கு வரலாம், என்றான். அவ்வளவு தான்! படைத்தலைவரும் அங்கு நின்ற படைகளும் மறைந்து விட்டனர். மன்னன் திகைத்தான். சாமந்தன் தன் தன்மானம் காக்கப்பட்டது குறித்துமகிழ்வுடன் நின்றான். கஜானாவில் எடுத்த பணத்துக்கு சிவசேவை செய்தேனே தவிரபடை திரட்டவே இல்லை. சோமசுந்தரரிடம் என் நிலையை எடுத்துச் சொன்னேன். அவரே வருவதாக அசரீரி ஒலித்தது. அதுபோல் வந்தார். சேதிராஜனின் ஆயுளையும் முடித்தார். படைகளுடன் மறைந்து விட்டார், என்றான்.ஆஹா... சேதிராஜனைக் கொல்வதற்கு சோமசுந்தரரை நம்பாமல், படைகளைத் திரட்ட சொன்னேனே! என்னே என் அறிவீனம்! அதே நேரம், சாமந்தனின் முயற்சியால் தானே கடவுளே இங்கு வந்து காட்சி தந்தார். மதுரை மக்களெல்லாம் அவரால் தானே இறைவனின் காட்சியைத் தரிசிக்க முடிந்தது, எனச் சொல்லி, தன் களஞ்சியத்திலுள்ள செல்வம் முழுவதையும் சாமந்தனிடமே ஒப்படைத்தான்.சிவசேவைக்கு அந்த பெருஞ் செல்வம் செலவிடப்பட்டது. மதுரையில் வைகை வற்றாமல் ஓடியது. அறநெறி தழைத்த அதே வேகத்தில், நம்மை விட சிவபக்தியில் சிறந்தவர் யாருமில்லை என்ற அகந்தையும் மன்னன் உள்ளத்தில் வேர் விட்டது. அதனால், வேதம் கற்ற அந்தணர்களைக் கூட மதிக்கத் தவறினான். இதன் விளைவாக பாண்டியநாட்டுக்கு மீண்டும் சோதனை வந்தது.

## 31. உலவாக்கிழி அருளிய படலம்!

மன்னன் குலபூஷண பாண்டியன் பெரிய வள்ளல். சிவ புண்ணியங்களை தவறாது செய்து வந்ததால் பேரும் புகழும் பெற்றான். இதனால் அவனுக்கு அகந்தை ஏற்பட்டது. அகந்தை கொண்ட மன்னன் குலபூஷணனுக்கு மருந்து தர முடிவு செய்தார் சுந்தரேஸ்வரர். மன்னன் தவறு செய்தால் மக்களுக்கு பாவம். மக்கள் தவறுசெய்தால் மன்னனுக்கு பாவம் ஏற்படும் என்பது நியதி. இப்போது மன்னன் செய்த பாவத்தால்

மதுரை மக்களுக்கு சோதனை ஏற்பட்டது. மழை இல்லாமல் பயிர்கள் வாடின.வேதம் கற்ற அந்தணர்கள் யாகங்களைச் சிறப்பாகச் செய்து, வருணனுக்கு அவிர்பாகம் போய் சேர்ந்தால் தான், அவன் மகிழ்ச்சியுடன் மழையைக் கொடுப்பான்.அவ்வாறு மறுத்தால் ஒன்று பெருமழை கொட்டி பயிர்களை அழித்து விடுவான், ஆறுகளையும் குளங்களையும் கரை மீறி போகச் செய்து சேதப்படுத்தி விடுவான்.அல்லது பெய்யாமலேயே கெடுத்து விடுவான். இப்போது மதுரையில் மழை இல்லாமல் போய்விட்டது. வைகையில் சொட்டுத்தண்ணீர் இல்லை. குளங்களும் வற்றியதால் குடிநீருக்கே தட்டுப்பாடாகி விட்டது. இது நீண்டகாலம் நீடித்ததால், பசி, பட்டினி என மக்கள் வருந்தினர். மன்னனுக்கு தனக்குள் ஏற்பட்ட அகந்தைபுரியவில்லை. ஆனால், நான் என்னவெல்லாம் பூஜை செய்கிறேன்.

மக்களை நன்றாகத்தானே கவனிக்கிறேன், கஷ்டப்பட்டவர்களுக்கு வரி விலக்கெல்லாம் கொடுக்கிறேனே! சுந்தரேஸ்வரர் கோயிலில் ஆறுகால பூஜைக்கு குறையாமல் செய்கிறேனே! என்ன பிரயோஜனம், என் நாட்டில் மழை இல்லாமல் செய்துவிட்டாரே, இந்த பரமசிவன்! சோமசுந்தரக் கடவுளே! சுந்தரேஸ்வரா! தென்னாடுடைய சிவனே! இந்தசோதனையை ஏன் தந்தாய்? என்று அரற்றினான். கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கினான். அங்கே எந்த பதிலும் கிடைக்கவில்லை. அரண்மனைக்கு வந்து பஞ்சணையில் படுத்தான். என்ன தான் பட்டுமெத்தையில் படுத்து, சேடியர் சாமரம் வீசினாலும் கவலைப்படும் மனமுள்ளவன் தூங்கியதாக சரித்திரமில்லை. கண்கள் மூடியிருந்தாலும் இவனுக்கும் தூக்கம் வராமல் புரண்டான். அப்போது யாரோஒருவர் வந்து அவனது கையில் ஏதோ ஒன்றைக் கொடுத்தது போல் இருந்தது. இதன்பெயர் உலவாக்கிழி. இதிலுள்ள பொருளை மக்களுக்கு கொடு. இதில் இருந்து அள்ளஅள்ளக் குறையாது, என்று அவன் காதுகளில் ஒலி கேட்டது. திடுக்கிட்டு எழுந்த அவனது கையில் ஒரு பொற்கிழி இருந்தது. அதனுள் தங்க நாணயங்கள் ஏராளமாகஇருந்தன. சுந்தரேஸ்வரரே நேரில் வந்து தந்ததாக கருதிய அவன், சுந்தரேஸ்வரா! எங்கள் வறுமையை இந்த பொற்கிழியிலுள்ள தங்கக் காசுகளைக் கொண்டு சரி செய்துவிடுவோம். ஆனால், பஞ்சம் ஏற்பட்டதற்கான காரணம் தெரியாவிட்டால், நான் என்னதவறு செய்தேன் என்பது தெரியாமலே போய்விடுமே, என்று சொல்லிவிட்டு படுத்தான். சற்றே கண்ணயர்ந்த வேளையில் கனவு உருவானது.

குலபூஷணா! நீ எனக்குரிய பூஜைகளை ஒழுங்காகவே செய்கிறாய். ஆனால், என் மீது கொண்ட பக்தியைக் கொச்சைப்படுத்தி விட்டாய்! நீ மட்டும் தான் உலகில் உயர்ந்த பக்தன் என நினைத்தாயே! அது அகந்தை அல்லவா! பக்தனுக்கு ஆணவம் வரலாமா!

ஆணவத்தின் காரணமாக அறிவிழந்து வேத விற்பன்னர்களை அவமதித்தாய். அதன் பலனையே அனுபவிக்கிறாய். உன் ஒருவனின் தவறால், உன் மக்களும் கஷ்டப்பட்டனர், என்று ஒரு குரல் கேட்டது. மன்னன் திடுக்கிட்டு விழித்தான். சோமசுந்தரப் பெருமானே!தாங்களா இவ்வாறு அறிவித்தது! ஆணவத்தால் அறிவிழந்த என்னைத் திருத்தவா இந்த நாடகம்! என்னால், என் மக்கள் சிரமப்பட்டதற்காக வருந்துகிறேன். தாங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும், என்றான். மறுநாள், உலாவாக்கிழியை பொன் பட்டு ஒன்றின் மீது வைத்து பூஜை செய்து, மக்களை வரிசையாக வரச்செய்து, அனைவரும் பொன் வழங்கினான். உடனடியாக யாக பூஜைக்கும் ஏற்பாடு செய்தான். வேதம் கற்றஅந்தணர்களை வரவழைத்து தாராளமாகப் பொன்னும், பொருளும், பசுக்களையும் அழித்து, அவர்களை உதாசீனம் செய்ததற்காக மன்னிப்பும் கேட்டான்.பாண்டியநாட்டில் மீண்டும் எங்கும் யாக ஒலி கேட்டது. மகிழ்ச்சியடைந்த தேவர்கள் மழையைத் தந்தனர். பயிர்கள் செழித்தன. பசி பட்டினி நீங்கியது.

## 32. வளையல் விற்ற படலம்!

முற்காலத்தில் மதுரையிலேயே தாருகாவனம் என்ற பகுதி இருந்ததாகக் கருதப்படுகிறது. அங்கு பல ரிஷிகள் தங்கள் பத்தினியருடன் வசித்து வந்தனர்.அந்தப் பெண்களுக்கு தாங்களே உலகில் பேரழகு கொண்டவர்கள் என்றும், தங்களது கற்பே உயர்ந்ததென்றும் கர்வம் இருந்து வந்தது. இவ்வாறு நினைப்பதன் மூலம், உலகிலுள்ள மற்ற பெண்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் அவர்களது மனதில்வேர்விட்டது. இவர்களையும் விட உயர்ந்த பெண்கள் உலகில் உண்டு என்பதை அவர்களுக்கு அறிவுறுத்த திருவுள்ளம் கொண்டார் சோமசுந்தரர். இதற்காக அவர்பட்டுக்கோவணம் உடுத்தி, புலித்தோலை மார்பில் சுற்றி, திருநீறு அணிந்து, செக்கச்சிவந்த மேனியுடன், திருவோட்டுடன் தாருகாவனத்துக்குள் புகுந்தார்.இதுபோன்ற துறவிகள் வந்தால் பக்தியல்லவா பெருக் கெடுக்க வேண்டும்!தாருகாவனத்து ரிஷி பத்தினிகளின் உள்ளத்தில், ஆஹா... இவன் பேரழகனாகஇருக்கிறானே என்ற எண்ணம் எழுந்தது. அவர்கள் கற்பிலும், அழகிலும் உயர்ந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக மற்றவர்களை உதாசீனப்படுத்தும் புத்தி இருக்கிறதே! இதை அகற்றத் தானே இறைவன் வந்திருக்கிறார். வந்தவர், அவர்களது மனங்களை மயங்கச் செய்தார். தன்னை பேரழகன் என வர்ணிக்கும்படி செய்தார். திருமணமான பெண்கள் மாற்றானை பேரழகன் எனக் கருதினாலே அவர்களது கற்புக்கு பங்கம் வந்துவிடும். அந்தப் பெண்களும் தங்கள் கற்புத்திறனை இழந்தனர். தங்களையே மறந்து பிக்ஷை கேட்டு தங்கள் வீட்டுவாசலுக்கு வந்த சோமசுந்தரரைக் கண்டு மயங்கினர். நீயே

பேரழகன் என்று மயங்கிய அவர்கள் உடல் மெலிந்தனர். அவர்களது வளையல்கள் கழன்று திருவோட்டில் விழுந்தன. சில பெண்கள் இடையில் அணியும் மேகலைகளும் கழன்றன. அவற்றையும் தங்களையும் அறியாமல் அந்த திருவோட்டில் இட்டனர். பின்னர், ஓரளவுக்கு சுதாரித்து, தாங்கள் செய்த தவறை உணர்ந்தனர். ஒரு பிச்சைக்கார பேரழகனிடம் சற்றுநேரமேனும் தங்கள் மனதைப் பறி கொடுத்தது நினைத்து வருந்தினர். தங்களுக்கு ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

தங்களையறியாமல் நடந்த இந்த தவறு கணவன்மாருக்கு தெரிந்தால் நிலைமை என்னாகும்? மேலும், வளையலும், மேகலையும் எங்கே என அவர்கள் கேட்டால் என்ன பதில் சொல்வது? அவர்களது உடல் நடுங்கியது. அவர்கள் தங்களையும் மறந்து அந்த பிக்ஷக்காரனின் பின்னால் சென்றனர். வளையல்களையும், மேகலையையும் தந்துவிடும் படி கெஞ்சினர். சிவனோ, அதைக் கண்டு கொள்ளவே இல்லை. நடந்து கொண்டே இருந்தார். அவரிடம், தங்கள் பொருட் களைப் பெற முடியாததால் இல்லம் திரும்பிய அவர்கள், தங்கள் கணவன்மாருக்கு இது தெரிந்தால் என்னாவது என்ற கவலையுடன் இருந்தனர். முனிவர்களும் வந்துவிட்டனர். ரிஷிபத்தினிகள் மனம் பதைக்க நின்று கொண்டிருந்தனர். தங்கள் மனைவியரின் மனநிலை மாறிப்போனது கண்டு கோபமடைந்த ரிஷிகள், கமண்டல நீரை அவர்கள் மீது தெளித்து, பெண்களே! சோமசுந்தரரிடம் மன சஞ்சலப்பட்ட நீங்கள் அவர் வசிக்கும் மதுரையில் வசிக்கும் வணிகர் குலத்தில் பிறவி விடுங்கள், என்று கூறி விட்டனர். அந்தப் பெண்கள்தங்கள் கணவன்மாரிடம், தாங்கள் மீண்டும் முனிபத்தினிகளாக வரம் கேட்டனர்.பெண்களே! மதுரையில் நீங்கள் வசிக்க இருக்கும் வீடுகளுக்கு பிக்ஷ கேட்டு சோமசுந்தரர் வருவார். அவருக்கு பிக்ஷயிடும் போது, அவரது கைகள் பட்டு உங்களுக்கு சாபவிமோசனம் கிடைக்கும், என்றனர். அதன்படி அந்தப் பெண்கள்மதுரையில் வணிகர் குலத்தில் பிறந்தனர். அவர்கள் சோமசுந்தரரின் கோயிலுக்குதினமும் சென்று பெருமானை வணங்கி வந்தனர். சோமசுந்தரர் அவர்கள் மீது கருணை கொண்டார். மீண்டும் அவர்கள் ரிஷிபத்தினிகளாக தன் திருவிளையாடலைத் தொடங்கினார். ஒரு வளையல் வியாபாரி போல் வேடமணிந்தார். அந்தப் பெண்கள் முனிபத்தினிகளாக இருந்த போது தன்னைக் கண்டு கழன்று விழுந்த வளையல்களை எல்லாம் கோர்த்து தன் முதுகில் போட்டுக் கொண்டார்.

வளையல் வாங்கலையோ வளையல், என்று கூவியபடியே வணிகர்கள் வசிக்கும் தெருவுக்கு வந்தார். வணிகர் குலப்பெண்களாக பிறந்த ரிஷிபத்தினிகள் அந்தக் குரல்

கேட்டு வெளியே வந்தனர். கம்பீரமான அழகான இளைஞனாக வந்த சோமசுந்தரரைக் கண்டு வெட்கப்பட்ட அவர்கள், அவர் கைப்பிடித்து வளையல் இட்டால் வெட்கமாக இருக்குமே என அஞ்சினர். இருந்தாலும் வளையல் மீதான ஆசை விடவில்லை. அவர்கள் அந்த இளம் வியாபாரியை அழைத்து தங்களுக்கு வளையல் அணிவிக்கும்படி வேண்டினர். ஈசனும், அவர்களின் கைப்பிடித்து வளையல்களை அணிவித்தார். அப்போது அவர்களின் உள்ளம்எங்கோ பறந்தது. அவர்கள் தன்னிலை மறந்தனர். மீண்டும் மீண்டும் அவரிடம் கையநீட்டி வளையல் அணிவிக்க வேண்டும் போன்றதொரு உணர்வு தோன்றியது. வணிகரே! இந்தவளையல்கள் மிக அழகாக உள்ளன. இவற்றை எங்கே கொள்முதல் செய்தீர்? நாளைக்கும் இதே போல வளையல் கொண்டு வாருங்கள், என்றனர். பின்னர், வாங்கிய வளையல்களுக் குரிய பணத்தை நீட்டினர். அதை வாங்க மறுத்த சோமசுந்தரர், நாளையும் என்னை வரச்சொல்லி இருக்கிறீர்கள் அல்லவா? அப்போது, மொத்தமாக பணம் பெற்றுக்கொள்கிறேன், என்று சொல்லிவிட்டு, அவர்களின் பதிலுக்கு காத்திராமல் கிளம்பிவிட்டார். அந்தப் பெண்களுக்கு அவரை விட மனமே வரவில்லை. ஏதோ ஒருசக்தி உந்த, அந்தப் பெண்கள் எல்லாம் அவர் பின்னாலேயே சென்றனர்.கோயிலுக்குள் சென்ற அவர் சுந்தரேசரின் கருவறைக்குள் சென்றார். பெண்களும்பின் தொடர்ந்தனர். அவர் சிவலிங்கம் இருக்கும் இடம் வரை சென்று விட்டார்.அந்தப் பெண்கள் அதிர்ச்சியுடன் அவரை நோக்கினர். லிங்கத்தின் அருகில் சென்றஅவர், லிங்கத்துடன் ஐக்கியமாகி விட்டார். அதன்பின் தான் வந்தவர்சோமசுந்தரர் என்பதையும், வணிகர் குலத்தில் பிறந்த தங்களை ஆட்கொள்ள வந்தவர் என்பதும் புரிந்தது. சிவதரிசனம் பெற்ற அவர்கள் மதுரையில் பல்லாண்டு வாழ்ந்தபின், மீண்டும் ரிஷிபத்தினிகளாகும் பாக்கியம் பெற்றனர். ரிஷிபத்தினிகளின் கர்வத்தை அடக்கினார் சோமசுந்தரர்.

## 33. அட்டமா சித்தி உபதேசித்த படலம்!

ஒரு சமயம் கார்த்திகைப் பெண்களின் ஆணவத்தையும் அடக்க திருவிளையாடல் புரிந்தார் சோமசுந்தரர். கைலாயத்தில் ஒருமுறை அவர் உமாதேவியுடன் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அஷ்டமாசித்திகளும் எட்டுப்பெண்களாக உருமாறி, அம்பிகைக்கு சேவை செய்து கொண்டிருந்தன. அந்த சித்திகளின்மகிமை அளவிடற்கரியது. அந்த சித்திகளைப் பெற வேண்டுமானால் பெரும் தவம்செய்ய வேண்டும். கார்த்திகைப் பெண்களுக்கு அந்த சித்திகளைப் பெறும் ஆசைஇருந்தது. அதைப் பெறுவதற்காக கைலாயம் வந்த அவர்கள், சிவபெருமானை வணங்கி, ஐயனே! அஷ்டமாசித்தியை எங்களுக்கு அருளவேண்டும், என்று கேட்டுக்கொண்டனர். அவர்

அந்தப்பெண்களிடம், பெண்கனே! அஷ்டமாசித்திகளும் அம்பிகையின்பணிப்பெண்களாக உள்ளனர். அவற்றைப் பெற வேண்டுமானால் நீங்கள் அம்பாளை வழிபடவேண்டும். அவளைப் போய் கேளுங்கள், என சொல்லிவிட்டார். அப்போது, அந்தப்பெண்களின் விதிப்பலன் மாறும் சமயமாக இருந்தது. இதனால், புத்திகெட்டு போன அவர்கள் அம்பிகையை மதிக்காமல் அங்கிருந்து கிளம்பினர். அவளுக்குமரியாதை நிமித்தம் கூட வணக்கம் சொல்லவில்லை. தன் கட்டளையையும் மீறி, அம்பிகையையும் வணங்காமல் சென்ற அந்தப் பெண்களை சிவன் சபித்து விட்டார்.

ஏ பெண்களே! நீங்கள் என் கட்டளையையும் மீறி, அம்பாளையும் மதிக்காமல் சென்றதால் நீங்கள் பட்டுப்போன மரங்கள் போல் ஏதுமே இல்லாமல் போகக் கடவீர்களாக, என்றார். அந்தப் பெண்கள் பட்டுப்போன மரங்களைப் போல் தங்கள் அழகு, ஐஸ்வர்யம் அனைத்தையும் இழந்து பூலோகத்தில் வந்து விழுந்தனர். அவர்கள் விழுந்த இடமே பட்டமங்கை எனப்பட்டது. தற்போது சிவகங்கை மாவட்டத்தில் பட்டமங்கலம் என்ற பெயரில் இப்போதும் இந்த ஊர் உள்ளது. அவ்வூரில் அவர்கள் கல்லாகக் கிடந்ததாகவும் வரலாறு உண்டு. ஆயிரம் தேவஆண்டுகள் அவ்வாறு கல்லாகக் கிடந்த அவர்களை, அங்கிருந்த ஆலமரத்தின் பழங்கள் விழுந்து விழுந்து மூடின. சாப விமோசன நேரத்தில் அந்தப் பழங்களின் ஊடேயிருந்து அந்தக் கற்கள் வெளிப்பட்டன. அங்கே லிங்கவடிவில் இருந்த சுந்தரேஸ்வரரின் கருணைப் பார்வையால் விமோசனம் பெற்று தங்கள் இருப்பிடம் சேர்ந்தனர். உமாதேவியாரிடம் மன்னிப்பு கேட்டு, அஷ்டமா சித்திகளையும் வேண்டினர். அவர்களிடம்சிவபஂருமான், பெண்களே! சிவயோகிகள் இத்தகைய சித்திகளை விரும்பமாட்டார்கள்.அந்த சித்திகளின் பெருமையை மட்டும் உங்களுக்கு சொல்கிறேன். அவற்றைத்தெரிந்து கொள்ளுங்கள், என்று சொல்லி உபதேசித்தார். அந்தப் பெண்களும்உபதேசத்தைக் கேட்டு, சிவயோகினிகளாக மாறினர். பட்டமங்கலத்தில் உள்ள மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயிலில் கார்த்திகைப் பெண்களின் சிலைகள் இப்போதும் இருப்பது குறிப்பிடத்தக்கது. சித்திகள் எட்டு வகைப்படும். அவையாவன: அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாகும். இவை அஞ்ஞானம் நீங்கிய ஞானிகளின் விளையாட்டுகளின் வகைகளாகும்.

மிக நுண்ணிய உயிர்கள் தோறும் தான் மிக்க சிறுமையாகிய பரமாணுவாய்ச் சென்று தங்கும் நுண்மையே அணிமா ஆகும். மண் தத்துவம் முதல் சிவத்தத்துவம் வரை முப்பத்தாறு தத்துவங்களின் உள்ளும் புறமும் நீங்காமல், நிறைந்துள்ள பெருமையே மகிமா ஆகும். மேருமலை போலக் கனத்திருக்கும் யோகியை எடுத்தால், இலேசான பரமாணுவைப் போல் கனமற்று இருப்பதே இலகிமா ஆகும். லேசான பரமாணுவைப்

போல் மெலிந்திருக்கும் யோகியை எடுத்தால், மேருமலையின் பாரம் போலக் கனமாக இருப்பது கரிமா ஆகும். பாதலத்தில் உள்ள ஒருவன், பிரமலோகத்தில் புகுவது, மீண்டும் பாதலத்தை அடைவது பிராத்தி ஆகும். வேறு உடலிற் புகுதலும், விண்ணில் சஞ்சரித்தலும், தான் விரும்பிய இன்பங்கள் அனைத்தையும், தான் இருக்கும் இடத்திலே நினைத்த வண்ணம் வரச் செய்தலும் பிராகாமியம் ஆகும். சிவபெருமானைப்போல் ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும், தம் இச்சையின்படியே இயற்றி, சூரியன் முதல் ஒன்பது கோள்களும் ஏவல் கேட்க வீற்றிருப்பதுவே ஈசத்துவம் ஆகும். அவுணர், பறவை, விலங்கு, பூதம், மனிதர் முதலிய பல்வகை உயிர்களையும் இந்திரன் முதலிய திக்குப் பாலர் எண்மறையும் தன் வசமாகச் செய்து கொள்வது வசித்துவம் ஆகும். சிவபெருமான் இயக்கியர் அறுவருக்கும் இந்த அட்டமா சித்திகள் பற்றித் தெளிவுபட உபதேசித்தருளினார். இயக்கிமார்கள் அறுவரும் உமாதேவியாரின் தியான வலியாலே நன்கு பயின்றனர். பிறகு விண் வழியே சென்று கயிலை மலையை அடைந்தார்கள்.

### 34. விடையிலச்சினையிட்ட படலம்!

மதுரை மன்னன் குலபூஷணனின் காலத்தில் மேலும் ஒரு திருவிளையாடலை நிகழ்த்தினார் சொக்கநாதர்.பூஷணன் மதுரையில் மன்னனாக இருந்த வேளையில், காடுவெட்டி சோழன் என்பவன் சோழநாட்டின் மன்னனாக இருந்தான். அப்போது சோழநாடு காஞ்சிபுரம் வரை விரிவடைந்து இருந்தது. தலைநகரமும் காஞ்சியாகவே இருந்தது. காடுகளை வெட்டி மக்கள் வாழ சீர்திருத்தம் செய்து கொடுத்தவன் என்பதால், இந்த மன்னன் காடுவெட்டி என மக்களால் சிறப்பு பெயரிட்டு அழைக்கப்பட்டான். இவன் சிறந்த சிவபக்தன். காஞ்சிபுரம் வரும் சிவனடியார்களை நேரில் சென்று கவுரவிப்பான். நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை எந்நேரமும் இவனது வாய் ஓதியபடியே இருக்கும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோயிலிலுள்ள இறைவன் மீது ஈர்ப்பு இருக்கும். வாழ்க்கையில் ஒருமுறையாவது காசிக்குப் போய் விஸ்வநாதரை வணங்கி வந்து விடமுடியாதா என ஒருவர் நினைப்பார். இன்னொருவருக்கு காளஹஸ்தி சென்று காளத்தி நாதரை வணங்கி வந்து விடமுடியாதா என்ற எண்ணமிருக்கும். சிதம்பரத்துக்குப் போய் நடராஜரைத் தரிசித்து விட முடியாதா என்று ஒருவர் நினைப்பார். இவர்களைப் போல, மன்னன் காடுவெட்டிக்கு மதுரைக்குச் சென்று சுந்தரேஸ்வரரை வழிபட ஆசை. ஆனால், அவன் மதுரைக்குள் கால் வைத்தால் என்னாகும் என்பது அவனுக்கே தெரியும். அக்காலத்தில், பிறநாட்டவர் மற்ற நாடுகளுக்குள் நட்பு ரீதியாக அன்றி எக்காரணம் கொண்டும் உள்ளே வர முடியாது.

பாண்டியநாட்டுக்கும், சோழநாட்டுக்கும் அப்போது பகையாக இருந்ததால், காடுவெட்டிக்கு மதுரை வர அனுமதி கிடைக்காது. எனவே சுந்தரேஸ்வரரைத் தரிசிப்பது குதிரைக் கொம்பே என நினைத்தான் காடுவெட்டி.தன் மனக்குறையை அவன் சுந்தரேஸ்வரரை மனதால் நினைத்து தினமும் சொல்லி பிரார்த்தித்தான்.எம்பெருமானே! எந்தப் பிரச்னையும் வராமல் இருநாட்டும் உறவும் கெடாமல் நீயே என்னை மதுரைக்கு அழைத்துச் சென்று மீண்டும்காஞ்சிபுரம் கொண்டு சேர்க்க வேண்டும், என்று கண்ணீருடன் வேண்டிக் கொண்டான்.நாட்கள் பல ஓடின. ஒருநாள் இரவில் அவன் கண்ணயர்ந்த வேளையில், கனவொன்று வந்தது. கனவில் சிவபெருமான் தோன்றினார். மன்னா! கவலைப்படாதே. நானே உன்மதுரை தரிசனத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். என் சன்னதிக்கு வந்து வணங்கும்காலம் வந்துவிட்டது. நீ மாறுவேடம் அணிந்து மதுரை நோக்கிச்செல், மற்றது தானாக நடக்கும், என்றார். காடுவெட்டி திடுக்கிட்டு எழுந்தான். அவன் மனம்மகிழ்ச்சியால் துள்ளியது. தலைமை அமைச்சரிடம் மட்டும் கனவு விபரத்தைத்தெரிவித்து விட்டு, சிவனடியார் போல வேடமணிந்தான். உடலைத் திருநீறும், ருத்ராட்சங்களும் அலங்கரித்தன. காஞ்சிபுரத்தில் இருந்து நடந்தே மதுரைநோக்கிச் சென்றான். அவனது கால்களில் பாதுகை கூட இல்லை. சுட்டெரிக்கும் வெயில் கால்களை பதம் பார்த்தாலும், சிவாயநம என்னும் மந்திரம் மனதைக்குளிரச் செய்ய வேகமாக நடந்தான். சில நாட்களில் மதுரை நகரை அடைந்துவிட்டான்.மதுரையின் வடபகுதிக்கு வந்தவன், அங்கே குறுக்கிட்ட வைகையைக் கண்டான். ஆற்றில் பெருவெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது.

மரங்களையும், செடிகொடிகளையும் அடித்துக்கொண்டு வெள்ளம் பாய்ந்தது. எவ்வளவு பெரிய பலசாலியும் அதில் நீந்த முடியாதென்ற நிலை. சுந்தரேசா! இதென்ன சோதனை! ஊரின் எல்லைக்குள் வந்துவிட்டவன், மறுகரைக்கு வந்துவிட்டால் உன்னைத் தரிசித்து விடுவேன். இவ்வளவு தூரம் வந்தும் உன் தரிசனம் கிடைக்காது போலிருக்கிறதே! என் பிரார்த்தனை பலனின்றி போய் விடுமோ, என்று புலம்பினான். வைகையின் வெள்ளத்தைப் போல், அவனது கண்களில் தாரை தாரையாய் நீர் பெருகியது. அப்போது ஒரு குரல் கேட்டது. அடியவரே! ஏன் இங்கே நின்று கொண் டிருக்கிறீர்கள். ஆற்றைக் கடக்கும் வழி தேடுகிறீர்களோ? என்றது அக்குரல். குரல் வந்த திசையைப் பார்த்தான் காடுவெட்டி. அங்கே, ஒரு சித்தர் சிவப்பழமாக நின்று கொண்டிருந்தார். அவரது பாதங்களில் விழுந்த காடுவெட்டி, தனக்கு வெளியூர் என்றும், சுந்தரேஸ்வரரைத் தரிசிக்க வந்ததாகவும் சொல்லி, அந்த சொக்கநாதன் இப்படி என்னை சோதித்து விட்டானே, என்றான். சித்தர் அவனுக்கு ஆறுதல் சொன்னார்.

மகனே! கவலை வேண்டாம். இந்த ஆற்றுநீரை வற்றச் செய்வது என்பணி, என்று சொல்லி, வைகையை நோக்கி கையை ஆட்டினார். என்ன ஆச்சரியம்! ஆற்றில் தண்ணீர் வற்றிவிட்டது. சாதாரணமாக எல்லாரும் இறங்கி நடக்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. காடுவெட்டி சித்தருடன் முட்டளவு தண்ணீரில் இறங்கி, வைகையின் புனித நீரை தலையில் தெளித்துக் கொண்டு நடந்தான். ஒருவழியாக அவர்கள் தென்கரை வந்து சேர்ந்தனர். அப்போது இரவாகி விட்டிருந்தது. அவர்கள் கோயிலுக்குவந்து சேர்ந்தனர். நடையை அடைத்திருந்தார்கள். காலை வரை காத்திருந்தால் யார் கண்ணிலும் பட்டுவிடக்கூடாதே என்று காடுவெட்டிக்குப் பயம்.

சித்தர் அவனது மனநிலையைப் புரிந்துகொண்டார். கவலைப்படாதே! நான் எப்படியும் அடைத்த கோயிலுக்குள் உன்னைக் கூட்டிச் சென்று விடுவேன், என்றவர், கோயிலின் வடக்கு வாசலுக்கு அவனை அழைத்துச் சென்றார். அவர்கள் கதவை நெருங்கவும், கதவை மூடி பொருத்தியிருந்த மீன் முத்திரை தானாகக் கழன்று விழுந்தது. கதவுகளும் தானாகத் திறந்து மூடிக் கொண்டன. கோயிலுக்குள் சென்ற காடுவெட்டியை சித்தராக வந்த சுந்தரேஸ்வரர், தனது சன்னதிக்குள் அழைத்துச் சென்றார். சன்னதி கதவுகளும் தானாகத் திறந்தன. இரவில் ஏற்றிய ஒளிவெள்ளத்தில், எம்பெருமான் ஜோதியாய் ஜொலித்தார். மன்னன் அடைந்த பரவசத்துக்கு அளவே இல்லை. பலவாறாக ஸ்தோத்திரங்கள் சொல்லி வணங்கினான். பாடல்களைப் பாடி மகிழ்ந்தான். சொக்கநாதரைப் பிரிய மனமின்றி, கருவறை வாசலி லேயே அமர்ந்து விட்டான். சித்தர் அவனை அழைத்தார். மகனே! சீக்கிரம் கிளம்பு. காவலர்கள் கண்ணில்படும் முன்னால் சென்றுவிடுவோம், என்றார். காடுவெட்டியோ சுந்தரேஸ்வரரைப் பிரிய மனமின்றி தன்னிலை மறந்து அவரது பேரருள் வெள்ளத்தைப் பருகிக் கொண்டிருந்தான். ஒரு வழியாக அவனை இழுத்துக்கொண்டு வாசலுக்கு வந்த சித்தரான சிவன், ஆலயக்கதவில் கழன்று விழுந்த மீன் சின்னத்துக்குப் பதிலாக ரிஷப சின்னத்தை வைத்து மூடச் செய்தார். மன்னனுடன் வைகை வடகரை வரை வந்து வழியனுப்பி விட்டார். மன்னன் நன்றி சொல்லி கிளம்பினான். மறுநாள் கோயிலில் ஒரே களேபரமாக இருந்தது.

மீன் சின்னத்துக்குப் பதிலாக ரிஷப சின்னம் வந்தது எப்படி என்று ஒரேகுழப்பம். தகவலறிந்த மன்னன் குலபூஷணன் வேகமாக வந்து கதவில் ரிஷப முத்திரை பதித்திருப்பதைக் கண்டான். சுந்தரேசா! அங்கயற்கண் எம்பிராட்டி அருளும் இந்நகருக்கு மீன் முத்திரை தானே பொருத்தமானது! இதை ரிஷபமாக்கியது யார்? ரிஷப முத்திரை உனக்குரியதே ஆயினும், இவ்வாறு நடந்திருப்பது நன்மைக்கா, கெடுதலுக்கா? இதற்குரிய விடையை நீ தான் சொல்ல வேண்டும், என்று

கலக்கத்துடன் வேண்டினான். பின்னர் அரண்மனை திரும்பி விட்டான். அன்றிரவில் கனவில் தோன்றிய சிவன்,குலபூஷணா! காஞ்சி மன்னன் காடுவெட்டி சோழன் என்னிடம் மிகுந்த பக்தி கொண்டவன். உனது பக்திக்கு அவனது பக்தி எவ்வகையிலும் குறைந்ததல்ல. அவன் என்னை தரிசிக்க ஆசை கொண்டான். ஆனால், மன்னன் என்ற ரீதியில் இங்கே வந்தால் அவனுக்கு மதுரைக்குள் நுழைய அனுமதி கிடைக்காதே! போரல்லவா மூண்டுவிடும். எனவே சிவனடியார் போல் வேடமிட்டு இங்கு வந்தான். அவன் வைகையின் வடக்குகரையில் நின்று வெள்ளத்தில் இறங்கி கோயிலுக்கு வர முடியாமல் தவித்தான். நானே ஆற்றுநீரை வற்றச்செய்து இங்கே அழைத்து வந்தேன். அவன் என்னைத் தரிசித்து திரும்பும்போது, ரிஷப முத்திரையை நானே பதித்தேன், என்றார். குலபூஷணன் திடுக்கிட்டு விழித்தான். இறைவன் எல்லோருக்கும் பொதுவானவன் என்ற உண்மையை உணர்ந்தான். நடந்ததை அனைவரிடமும் எடுத்துரைத்தான். இதன்பிறகு ஆட்சியை தன் மகன் ராஜேந்திர பாண்டியனிடம் ஒப்படைத்துவிட்டு, சிவசிந்தனையிலேயே முழுவதுமாக ஈடுபட்டான். சிறிது காலம் சிவத் தொண்டு செய்து சிவனடி எய்தினான்.

## 35. தண்ணீர் பந்தல் வைத்த படலம்!

காஞ்சிபுரம் திரும்பிய காடுவெட்டி சோழனுக்கு தான் கண்ட சோமசுந்தரரின் திவ்யதரிசனத்தை மறக்க முடியவில்லை. எப்போதும் அவரையே நினைத்துக் கொண்டிருந்தான். அடிக்கடி மதுரை வந்து அவரைத் தரிசிக்க பேராவல் கொண்டான். தனது எண்ணம் நிறைவேற வேண்டுமானால், ராஜேந்திர பாண்டியனின் நட்பைப் பெறுவதே ஆகும் என்று எண்ணினான். நட்பைப் பெறுவதன் முதல் கட்டமாக தங்க, வைர ஆபரணங்களையும், பாண்டியநாட்டில் கிடைக்காத சில அதிசயப் பொருட்களையும் அமைச்சர் ஒருவர் மூலமாகக் கொடுத்தனுப்பி, பாண்டியநாட்டின் நட்பை வேண்டி ஒரு ஓலையும் எழுதியிருந்தான். ராஜேந்திர பாண்டியனுக்கு சோழனின் சிவபக்தி பற்றி தெரியும் என்பதால், அவனது காணிக்கையை அன்புடன் ஏற்றுக் கொண்டான். அந்த அமைச்சரிடம் பாண்டியநாட்டு முத்துமாலை களையும் இன்னும் வித்தியாசமானபொருட்களையும் பதில் காணிக்கையாக அனுப்பி வைத்தான். இப்படி இவர்களின் நட்புஎல்லை குடும்ப உறவை ஏற்படுத்தி கொள்ளுமளவுக்கு வளர்ந்தது. மன்னன்காடுவெட்டிக்கு பேரழகு மிக்க மகள் இருந்தாள். அவளை இளைஞனான ராஜேந்திரபாண்டியனுக்கு கொடுத்து சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்வதன் மூலம், இருதரப்பு உறவும் விரிவடைவதுடன், மகள் வீட்டில் தங்கி, தக்க மரியா௺தைகளுடன் அன்னை அங்கயற்கண்ணியையும், சோமசுந்தரரையும் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்குமே என அவன் எண்ணினான். ஆனால், இந்த

ஏற்பாட்டிற்கு வேட்டு வைக்க நினைத்தான் ராஜேந்திர பாண்டியனின் தம்பியான ராஜசிம்மன். அவன் பாண்டிய பரம்பரைக்கே ஒருகளங்கம். பழிபாவம் என்பதெல்லாம் அவனுக்கு சர்க்கரைப் பொங்கல் போல் இனிக்கும். எந்த ஒரு கொடிய செயலுக்கும் தயங்கமாட்டான். அண்ணனை ஆட்சிக்கட்டிலில் இருந்து கவிழ்த்து விட்டு, சோழராஜகுமாரியை மணந்து கொண்டு, இரண்டு நாடுகளையும் நிர்வகிக்கலாம் என திட்டமிட்டான். ஆசையிலும் இதுபேராசையல்லவா! அவன் அண்ணனுக்குத் தெரியாமல் சோழநாட்டுக்கு விரைந்தான். மன்னன் காடுவெட்டி அவனை இன்முகத்துடன் வரவேற்றான். மருமகனாகப் போகிறவனின்தம்பியல்லவா! வந்த விஷயத்தைக் கேட்டான். மன்னர்களின் பலவீனம் அறிந்துபேசுவதில் வல்லவன் ராஜசிம்மன்.

சோழமாமன்னரே! தாங்கள் என் சகோதரனுக்கு தங்கள் பெண்ணைக் கொடுத்து இருநாட்டு உறவையும் வளர்க்க எண்ணுகிறீர்கள். திருமண உறவுக்குப் பிறகும், அவர் எந்தளவுக்கு உங்களுடன் உறவு கொள்வார் என்பது சந்தேகத்திற்குரியதே! நான் அப்படிப்பட்டவன் அல்ல! ஒருவர் ஒரு உதவி செய்தால் அதை கடைசி வரை மறக்கமாட்டேன். எனவே, தங்கள் குலவிளக்கை நான் திருமணம் செய்து கொள்கிறேன். நாம் இருவரும் அனுசரணையாக இருக்கலாம், என்று பக்குவமாக பவ்யமாக பணிவு காட்டுவது போல பேசினான். பேசுவார் பேசினால் கல்லும் கரையுமே! ராஜசிம்மனின்பேச்சில் காடுவெட்டி கரைந்து போனான். மேலும், பாண்டியநாட்டைத் தேடி சோழன்சென்றான் என்ற அவச் சொல்லை விட, சோழனைத் தேடி பாண்டியன் வந்து உறவுகொண்டான் என்பது எவ்வளவோ உயர்வானதல்லவா என்று கணக்குப் போட்டான். மறுபேச்சின்றி, திருமணத்துக்கு சம்மதித்து விட்டான். அடுத்து ராஜேந்திரனை பதவியில் இருந்து தூக்கிவிட்டு, மருமகனை பாண்டிய மன்னனாக்க தீர்மானித்தும் விட்டான். ராஜேந்திரனுக்கு தெரியாமலேயே இவ்வளவும் முடிந்து விட்டது. உடனடியாக திருமண ஏற்பாடுகளைச் செய்த காடுவெட்டி, தன் நாட்டில் வைத்தே திருமணத்தையும் முடித்து விட்டான். பின்னர் பாண்டியநாட்டுக்கு ஓலை ஒன்றை அனுப்பினான். ராஜேந்திர பாண்டியரே! உமது சகோதரர் ராஜசிம்மன் என் மகளை மணந்து புது உறவை ஏற்படுத்திக் கொண்டார். இனி, பாண்டியநாடு எங்களுக்கே சொந்தம். நீரே நாட்டை ஒப்படைத்து விட்டால் போருக்கு இடமில்லை. மறுத்தால், இரு நாடுகளும் போர்ப்பிரகடனம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை, என அதில் எழுதப்பட்டிருந்தது. துரோகியான தன் தம்பிக்கும், சிவபக்தன் போல் வந்து தன் ஊரையே பிடிக்க வந்து விட்ட சோழனுக்கும் தக்க பாடம் புகட்ட முடிவு செய்துவிட்டான் ராஜேந்திரன். அவனும் நாட்டு மக்களுக்கு அறிவிப்பு செய்து துரோகிகளை வெல்வதற்கு படைகளைத் திரட்டினான். இதற்குள் சோழமன்னன்

மதுரை எல்லைக்கு வந்து காத்திருந்தான். ராஜேந்திரன் சொக்கநாதர் சன்னதிக்குச் சென்று, ஐயனே! சோழனின் அநியாயத்தைப் பார்த்தீர்களா! ஒரு துரோகிக்கா நீங்களே வழிகாட்டி கோயிலுக்கு அழைத்து வந்தீர்கள். அநியாயம் செய்பவருக்கு தாங்களே துணை போவது முறையா? இப்போது சொல்கிறேன். என் எதிரிப்படை ஊருக்குள் நுழையாத அளவுக்கு கோட்டைக் கதவுகளை தாழிடுவேன். எந்தக் கதவையும் திறக்கவிடாமல் செய்வது உம் பொறுப்பு என்றான். அப்போது அசரிரீ ஒலித்தது.

ராஜேந்திரா! கவலைப்படாதே! நாளை நீ உனது சதுரங்க சேனையுடன் சோழன் முகாமிட்டிருக்கும் மதுரையின் எல்லைக்குச் செல். உன் படைகளை அவனுடன் மோதவிடு. நான் பார்த்துக் கொள்கிறேன், என்றது. இதை சோமசுந்தரரின் கட்டளையாகவே ஏற்ற பாண்டியன் மனம் மகிழ்ந்தான். வெற்றி தனக்கே என்ற நம்பிக்கையுடன் அரண்மனைக்கு வந்து, சதுரங்க சேனையைத் தயார்படுத்த தளபதிகளுக்கு உத்தரவிட்டான். அன்றிரவு நிம்மதியாகத் தூங்கினான். மறுநாள் காலையில், தானே தலைமை வகித்து சதுரங்க சேனையுடன் நகரின் எல்லைக்குச் சென்றான். அங்கோ சோழர்படை கடல்போல் குவிந்து நின்றது. அந்த படைபலத்தின் முன் பாண்டியனின் படைபலம் மிகச்சாதாரணமே! சோமசுந்தரரின் துணையிருக்கும் போது, அதுபற்றி பாண்டியன் கவலைப்படவில்லை. சோழப்படையின் வியூகத்தை உடைத்துக் கொண்டு பாண்டியனின் படை நுழைந்தது. இரு தரப்புக்கும் கடும் போர். மன்னன் ராஜேந்திரன், காடுவெட்டியுடன் மோதினான். காடுவெட்டிக்கு ஆதரவாக இருந்த ராஜேந்திரனின் தம்பி ராஜசிம்மனும் போரிட்டான். அவர்களை மிகலாவகமாக ராஜேந்திரன் சமாளித்துக் கொண்டிருந்தான். அந்நேரத்தில், சோமசுந்தரர் தனது நாடகத்தைத் துவங்கினார். போர்க்களத்தில் நடந்த சண்டையில், ஆயுதங்கள் ஒன்றுக்கொன்று மோதும் போது ஏற்பட்ட நெருப்பு பொறிகளில் இருந்து கடும் உஷ்ணத்தை உண்டாக்கினார். இந்த வெப்பத்தைத் தாங்க முடியாமல், இருதரப்பினரும் சோர்வடைந்தனர். தாகம் நாக்கை வறட்டியது. சுற்றிலும் எங்கும் தண்ணீரும் இல்லை. இந்த நேரத்தில் சோமசுந்தரர் போர் நடந்த இடத்தின் ஒரு பக்கமாக தண்ணீர்ப்பந்தல் ஒன்றை உருவாக்கினார். சிவனடியார் போல் இடமிட்டு அங்கே அமர்ந்தார். நீர்மோர் பாத்திரங்களை அங்கு நிறைத்தார். இந்தப் பந்தலை நோக்கி படையினர் ஓடினர். சோமசுந்தரர் குவளைகளில் நீர்மோரை ஊற்றிக் கொடுத்தார். ஆனால், பாண்டியர் படைகளுக்கு மட்டுமே மோர் கிடைத்தது. சோழர் படையில் ஒருவருக்குக் கூட கிடைக்கவில்லை. ஊற்றியவர் சோமசுந்தரர் அல்லவா! மீண்டும் போர் துவங்கியது. தாகத்தால் சோர்ந்து போன சோழப்படையினரால் மேற்கொண்டு செயல்பட முடியவில்லை. எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும் தாகத்தால் தவித்த அவர்கள் சக்தியின்றி தோற்று ஓடினர். காடுவெட்டியும்,

ராஜசிம்மனும் தனித்துவிடப்பட்டனர். பாண்டியப் படையினர் அவர்களைச் சுற்றி வளைத்து கைது செய்தனர். இதெல்லாம் எப்படி நடந்தது என்று ராஜேந்திரனால் நம்பவே முடியவில்லை. எல்லாம் வல்ல அந்த ஈசன், தண்ணீர் பந்தல் அமைத்து மோர் வழங்கியதால் ஏற்பட்ட சக்தியே தங்களைக் காப்பாற்றியது என்பதை உணர்ந்து கண்ணீர் வடித்தான். இந்த சம்பவத்தின் மூலம், துரோகிகளுக்கும், அநியாயம் செய்பவர்களுக்கும் இறைவன் குடிக்கத் தண்ணீர் கூட இல்லாமல் செய்து விடுவான் என்பது தெளிவாகிறது. கைதான இருவரும் அரசவைக்கு விலங்குடன் இழுத்து வரப்பட்டனர். அவர்களுக்கு என்ன தண்டனை தரப்படுமோ என்ற ஆவலுடன் அனைவரும் எதிர்பார்ப்புடன்இருந்தனர்.அவர்கள் இருவருமோ தலை குனிந்து நின்றனர். ஆனால், யாரும் எதிர்பாராதவகையில் தீர்ப்பு வழங்கப்பட்டது.ராஜேந்திரன் காடுவெட்டியிடம், சோழ மன்னரே! என்னதான் நீர் மண்ணாசை கொண்டிருந்தாலும், சிவபக்தராக விளங்கினீர். உமக்கு பொன்னும், பொருளும் பரிசாகத் தருகிறேன். நீர் உமது நாட்டுக்குச் செல்லலாம், என்றான். அடுத்து துரோகியான தன் தம்பி ராஜசிம்மனிடம், தம்பி! உனக்கு பாண்டியநாட்டின் ஒரு பகுதியைத் தருகிறேன். அதன் அரசனாக நீ இருக்கலாம், என்றான். அவர்கள் தங்கள் தவறுக்காக ராஜேந்திரனிடம் மன்னிப்பு கேட்டனர். மிஞ்சிய படைகளுடன் காடுவெட்டி ஊருக்கு கிளம்பி விட்டான். ராஜசிம்மன் மன்னனாகி விட்டான். ராஜேந்திரன் மாபெரும் சக்தியாக விளங்கினான்.

## 36. இரசவாதம் செய்த படலம்!

மதுரை அருகில் திருப்பூவனம் என்ற ஊர் இருந்தது. (இப்போதைய பெயர் திருப்புவனம்) இங்குள்ள பூவனநாதர் கோயிலில் கணிகையர் எனப்படும் ஆடல்குலப் பெண்கள் சிவபெருமானை மகிழ்விக்கும் வகையில் நாட்டியாஞ்சலி நடத்தி வந்தனர். இவர்களில் ஒருத்தி பொன்னனையாள். கற்புக்கரசியான இந்தப் பெண்மணி தினமும் காலையில் தன் தோழிகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களை எழுப்பிக்கொண்டு, வைகையில் சென்று நீராடுவாள். பூவனநாதரை வணங்கி, நாட்டியமாடுவாள். பின்னர், தன் இல்லத்திற்குச் சென்று, அங்குள்ள சிவனடியார்களுக்கு உணவு பரிமாறுவாள். அதன் பிறகே சாப்பிடுவாள். இப்படி தினமும் விரதம் அனுஷ்டித்த பெண் அவள். இந்தப் பெண்ணின் புகழை பாரோர் அறிய திருவுளம் கொண்டார் பரம்பொருளான பூவனநாதர். அவள் நடராஜர் சன்னதி முன்பே நாட்டியமாடுவாள். அப்போது அந்தச் சிலையை உற்றுப்பார்ப்பாள். என் இறைவா! பக்தர்கள் உன்னைப் பொன்னே பொருளே என போற்றி மகிழ்கிறார்கள். அந்தப் பொன்னாலேயே உனக்கு சிலை செய்தால் என்ன? என்று வேண்டினாள். தங்கத்தில் சிலை செய்ய வேண்டுமானால், பெரும் பொருள் வேண்டுமே! இதைத் திரட்டும் சக்தியைத் தனக்கு தர வேண்டுமென அவள்

பிரார்த்தித்தாள். பலநாளாக உருகி உருகி வைத்த இந்தக் கோரிக்கையை ஏற்க இறைவனும் முடிவு செய்துவிட்டார். ஜடாமுடி தரித்து கமண்டலம், ஜபமாலையுடன் பொன்னனையாளின் வீட்டுக்கு ஒரு துறவி போல் எழுந்தருளினார்.

அங்கே சில அடியவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். இவர் அவளது வீட்டுத்திண்ணையில் அமர்ந்திருந்தார். பொன்னனையாள் இல்ல சேவகியர் துறவியை இல்லத்துக்குள் வந்து உணவருந்துமாறு வேண்டினர். அவரோ, உங்கள் எஜமானியை வரச்சொல்லுங்கள், என்றார். ஆகட்டும், என்ற அவர்கள் பொன்னனையாளை அழைக்க உள்ளே சென்றனர். தோழிகள் உள்ளே சென்று பொன்னனையாளை அழைத்து வந்தனர்.துறவியை வணங்கி எழுந்த அவளிடம், பெண்ணே! உன் மனதில் ஏதோ குறை ஒன்றுள்ளதைஇங்கு நுழைந்தவுடனேயே தெரிந்து கொண்டேன். உன் குறையை தீர்த்தபின் நீசிவனடியார்களுக்கு வழங்கும் அன்னத்தை ஏற்பதே முறையானது. குறையைச் சொல், என்றார். சுவாமி! நடராஜப்பெருமானுக்கு தங்கத்தில் சிலை வடிக்க வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் இருக்கிறது. ஆனால், அதற்கு எவ்வளவோ செல்வம் வேண்டுமே! அதனால் அந்த ஆசை நிறைவேறாமல் போய்விடுமோ என அஞ்சுகிறேன். இதைத்தவிர வேறு எந்த குறையுமில்லை, என்றாள் பொன்னனையாள். மகளே! இதற்கா கவலைப்படுகிறாய். உன் வீட்டிலுள்ள செம்பு, வெள்ளி, பித்தளை, இரும்பு, ஈயப் பாத்திரங்களையெல்லாம் எடுத்து வா. அவற்றை பொன்னாக மாற்றித்தருகிறேன். அவற்றை உருக்கி நீ சிலை செய்யலாம், என்றார். பொன்னனையாள் இதை நம்புவதா, இல்லையா என்ற குழப்பத்திற்கு ஆளானாள். இருப்பினும் அவர் சொன்னதைச் செய்தாள்.

அவர் அவற்றில் திருநீறு பூசி, இவற்றை இன்று இரவு முழுவதும்நெருப்பில் வைத்துவிடு, என்றார். உடனடியாக அங்கிருந்து கிளம்பிவிட்டார். சுவாமி!தங்கத்தில் சிலை வடித்ததும் தாங்களும் அதனைக் காண வேண்டாமா? இங்கே சில நாட்கள் தங்குங்களேன், என்றாள். பெண்ணே! நான் மதுரையில் தான் வசிக்கிறேன்.என்னை சித்தன் என்பார்கள். நீ பணிகளை முடி. பிறகு, எப்போது நினைக்கிறாயோ அப்போது வருவேன்,என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். பொன்னனையாள் அவர்சொன்னது போலவே பாத்திரங்களை தீயில் இட்டாள். மறுநாள் அவை பொன்னாகமாறியிருந்தது கண்டு அதிசயப்பட்டாள். வந்தது சாதாரண துறவியல்ல, அந்த ஈசனால் தான் இது முடியும் என பரவசப்பட்டாள். பூவனநாதர் கோயிலில் இருந்த நடராஜரைப்போலவே பொன்னில் சிலை வடித்தாள். துறவியை மனதால் நினைத்தாள். அவரும் அங்குவந்து சேர்ந்தார். பொற்சிலையை தேரில் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு வந்துபூவனநாதர்

கோயிலில் பிரதிஷ்டை செய்தாள். துறவியை சிவனாகவே போற்றிவணங்கினாள். பலகாலம் பொற்சிலையை வணங்கி இறைவனின் திருவடியை அடைந்தாள்.

## 37. சோழனை மடுவில் வீழ்த்திய படலம்!

பாண்டியநாட்டை சுந்தரேச பாதசேகர பாண்டியன் ஆண்டு வந்தான். அவனுக்கு போர்களில் நாட்டமில்லை. படைபலத்தைக் குறைத்து, அதில் மிச்சமாகும் பெரும் தொகையைக் கொண்டு சிவகைங்கர்யம் செய்ய ஆசை கொண்டான். படைபலத்தைப் பாதிக்கும் மேலாக குறைத்து விட்டான். தன் ஆளுகைக்கு உட்பட்ட சிவாலயங்களில் திருப்பணி மேற்கொண்டான். மதுரை நகராளும் சொக்கநாதரின் தீவிர பக்தனாக இருந்தான். பாண்டியன் படைபலத்தைக் குறைத்து விட்டான் என்ற செய்தி சோழமன்னனுக்கு ஒற்றர்கள் மூலம் தெரியவந்தது. இதுதான் பாண்டியநாட்டைப் பிடிக்க தகுந்த சமயமென திட்டமிட்ட அவன், உடனடியாக போர் அறிவிப்பு செய்தான். பாண்டியன் அதிர்ச்சியடைந்தான். தற்போதைய நிலையில், வெற்றி பெறுவது சிரமம் என்பதால், சொக்கநாதப் பெருமானைச் சரணடைந்தான். அண்ணலே! உன் திருப்பணிக்காகவே படைகளுக்கான செலவைக் குறைத்தேன். போர்களால் ரத்தம் தான் சிந்துகிறதே தவிர, யாருக்கு என்ன லாபம்? இந்த நல்ல எண்ணத்தைக் கூட புரிந்து கொள்ளாமல் சோழன் படையெடுத்து வருகிறானே! நீயே என்னையும், மதுரை மக்களையும் காப்பாற்ற வேண்டும், என்றான். அப்போது அசரீரி ஒலித்தது. பாண்டியா! கவலை வேண்டாம். படைகளைக் கிளப்பு. உன் படையில் நானும் பங்கேற்பேன். கவலையின்றிச் செல், என்றார். பாண்டியனும் இருக்கிற படைகளுடன் மதுரையின் எல்லைக்குச் சென்று சோழனின் பெரும்படையை எதிர்கொண்டான். அந்தப் போரில் வேடனைப் போல் இருந்த ஒருவன், பாண்டியப்படைக்கு ஆதரவாக போரிட்டான். அவனை யாரென்று யாருக்கும் தெரியவில்லை. வேகமாக சோழனை நோக்கி முன்னேறிய அவன், ஏ சோழனே! முதலில் நீ என்னுடன் மோது.

என்னை ஜெயித்துவிட்டு, பாண்டியன் அருகில் போ, என்று சபதம் செய்தான். ஒரு சாதாரண வேடன் தனக்கிட்ட சவாலை எண்ணி வெட்கமும் ஆத்திரமும் அடைந்த சோழன் அவனை நோக்கி வாளை நீட்டினான். அதை தன் ஈட்டியால் தட்டிவிட்டு, சுற்றி நின்ற வீரர்களையும் விரட்யடித்த வேடன், ஆயுதமிழந்து நின்ற சோழனை விரட்டினான். சோழன் பயந்து போய் குதிரையில் ஏறி தப்பி ஓடினான். இந்த அதிசயத்தைப் பார்த்த பாண்டியன், அந்த வேடன் சொக்கநாதரே என்பதை உணர்ந்து கொண்டான். சற்றுநேரத்தில் வேடனைக் காணவில்லை. சோழனை, பாண்டியன் தப்பி ஓடிய தனது குதிரையில் விரட்டிச் சென்றான். சற்றுதூரம் சென்றதும் சோழன்

பின்னால் திரும்பினான். தன்னை துரத்தி வந்த வேடனைக் காணாமல், பாண்டியன் துரத்தி வருவதைக் கண்ட அவன் சற்று தைரியமடைந்து குதிரையைத் திருப்பினான். இதைப் பார்த்த பாண்டியன் அச்சத்துடன், தன் குதிரையை போர்க்களம் நோக்கி திருப்ப சோழன் விரட்டினான். ஓரிடத்தில் பெரிய குளம் இருந்தது. அந்தக் குளத்திற்குள் அவன் ஏறி வந்த குதிரை விழுந்தது. பாண்டியன் நீச்சலடிக்க ஆரம்பித்தான்.பின்னால் வந்த சோழனின் குதிரையும் வந்தவேகத்தில் குளத்தில் விழுந்தது.ஆனால், அது விழுந்த இடத்தில் ஒரு பெரும் சுழல் இருந்தது. சுழலில் சிக்கியசோழன் அதில் இருந்து மீளமுடியாமல் மாண்டான். பாண்டியன் நீச்சலடித்துகரையேறினான். தூரத்தில் சுந்தரேசப் பெருமானின் கோபுரம் தெரிந்தது. அங்குநின்றபடியே விழுந்து வணங்கி சொக்கநாதரைப் போற்றினான். சோழப்படையினரைகைது செய்து ஆயுதங்களைக் கைப்பற்றினான். அவற்றையும் விற்று சேர்த்த செல்வத்தில் சொக்கநாதர் கோயிலுக்கு மேலும் திருப்பணிகள் செய்து இறையருள் பெற்றான்.

Read more: http://www.penmai.com/forums/spirituality/56460-64-thiruvilaiyadal-puranam-64-a-4.html#ixzz2nzH1nRcA

### 38. உலவாக்கோட்டை அருளிய படலம்!

மதுரையில் சோமசுந்தரப் பெருமான் நிகழ்த்திய லீலைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றைக் கேட்டாலே உள்ளம் சிலிர்க்கும். அடியார்க்கு நல்லான் என்பவர் தன் மனைவி தர்மசீலையுடன் இங்கு வசித்து வந்தார். அவர்கள் பெரும் செல்வந்தர்கள். தங்கள் வருமானத்தில் ஆறில் ஒரு பாகத்தை அரசுக்கு வரி செலுத்திவிட்டு, மீதியை சிவனடியார்களுக்கு அன்னமிடும் பணிக்காக வைத்துக் கொண்டனர்.தர்மத்தின் திருவுருவான நல்லானுக்கு செல்வவளம் வற்றாமல் இருந்தது. இவர்களதுவீட்டுக்கு எப்போது போனாலும் அன்னம் கிடைக்கும். இந்த நல்லவர்களைச்சோதிப்பதன் மூலம் அவர்களின் பெருமையை உலகறியச் செய்ய நினைத்தார்சோமசுந்தரர். அந்த குடும்பத்தில் வறுமையை உண்டாக்கினார். அடியார்க்குநல்லானின் வயல்கள், தோட்டங்கள் காய்ந்து போயின. இருப்பு தானியங்கள்குறைந்து விட்டது. நல்லான் கடன் வாங்கி தானம் செய்தார். ஒரு கட்டத்தில்யாரும் கடன் கொடுக்கவும் மறுத்துவிட்டனர். தங்கள் சாப்பாட்டுக்கே வழியின்றிதம்பதியர் பட்டினி கிடந்தனர். தங்கள் பட்டினியை விட, அடியவர்களுக்கு தொண்டு செய்ய முடியாமல் போய்விட்டதே என்ற வருத்தம் அவர்களை வாட்டியது.வாழ்வை முடித்துக் கொள்ளலாம் என எண்ணி, சுந்தரேசர் கோயிலுக்குச் சென்றனர்.தங்கள் நிலையைச் சொல்லி கண்ணீர் வடித்து, உனது அடியவர்களுக்கு சேவை செய்ய இயலாத எங்கள்

உயிரை எடுத்துக் கொள், எனக் கதறினர். அதற்கு மேலும் அவர்களைசோதிக்க பரமன் விரும்பவில்லை. குழந்தைகளே! வீட்டுக்குச் செல்லுங்கள். அங்கேஉலவாக்கோட்டை ஒன்று இருக்கும். அதில் அள்ள அள்ள குறையாமல் தானியம் வரும்.அதைக் கொண்டு, எனது அடியவர்களுக்கு திருத்தொண்டு செய்யுங்கள், என அசரீரி ஒலித்தது. அவர்கள் வீடு திரும்பினர். இறைவன் சொன்னதைப் போலவே அங்கு உலவாக் கோட்டை இருந்தது. உலவாக்கோட்டை என்றால், 24 மரக்கால் கொண்ட ஒரு அளவை. அந்த அளவைக்கு பூஜை செய்து, மீண்டும் அன்னதானப் பணியைத் துவங்கினர். காலம் முழுவதும் அந்தத் திருப்பணியைச் செய்து பரமனின் திருவடி எய்தினர்.

## 39. வரகுணனுக்கு சிவலோகம் காட்டிய படலம்!

வரகுணபாண்டியன் ஒருமுறை வேட்டைக்கு கிளம்பினான். மிருகங்களை வேட்டையாடி விட்டு, காட்டு வழியே குதிரைகளில் தனது படைகளுடன் வேகமாக வந்து கொண்டிருந்தான். அப்போது இருள் சூழ்ந்துவிட்டது. வரும் வழியில் அந்தணர் ஒருவர் படுத்திருந்தார். அதை வரகுணபாண்டியன் கவனிக்கவில்லை. அவனது குதிரை அவர் மேல் ஏறி மிதித்தபடியே ஓட, அந்தணர் அலறியபடியே இறந்துபோனார். குதிரைகளில் குளம்பொலி சப்தத்தில் யாருமே இதைக் கவனிக்கவில்லை. ஆனால், அந்தக் காட்டில் யாகம் முதலானவற்றுக்காக சுள்ளி பொறுக்க வந்த அந்தணர்கள் சிலர் இதைக் கவனித்து விட்டனர். அவர்கள் அந்தணரின் உடலை எடுத்து வந்து குதிரை மிதித்ததால், அவர் இறந்து போன விஷயத்தை மன்னனிடம் தெரிவித்தனர். வரகுணபாண்டியன் மிகுந்த துக்கமடைந்தான். அந்தணரைக் கொன்ற பாவம் பொல்லாததாயிற்றே,என்று கூறிய அவன், அவரது குடும்பத்திற்கு வாழும் வரை காலம் தேவையான பொன்னும் பொருளும் கொடுத்தான். தான தர்மங்கள் பல செய்தான். ஆனாலும், அவனை பிரம்மஹத்தி (கொலை செய்தவர்களை பிடிக்கும் தோஷம்) பற்றிக் கொண்டது. இதன்பிறகு மன்னன் பட்ட கஷ்டங்களுக்கு அளவே இல்லை. இதுகுறித்து பெரியோர்களிடம் ஆலோசனை கேட்டான். கொலைப்பழி தோஷம் தீர வேண்டுமானால், தொடர்ந்து பத்துநாட்கள் சுந்தரேஸ்வரரின் ஆலயத்திற்கு சென்று, 1008 முறை சுற்றி வழிபட வேண்டும், என அவர்கள் தெரிவித்தனர். மன்னனும், உடனடியாக அந்த வழிபாட்டை ஆரம்பித்தான். பத்தாம் நாள் முடிவில் அசரீரி ஒலித்தது.

வரகுணா! உன் வழிபாட்டை ஏற்றேன். நீ ஆலய வலம் வரும்போது எடுத்து வைத்த ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு அஸ்வமேத யாகம் செய்த பலன் கிடைக்கும். உன்

பிரம்மஹத்தி விலக திருவிளையாடல் புரியப் போகிறேன். உன்னை எதிர்த்து காவிரிச்சோழன் போருக்கு வருவான். அவனை நீ எதிர்த்து நில். அவன்புறமுதுகிட்டு ஓடும் போது, திருவிடைமருதூர் என்னும் திருத்தலத்தை அடைவாய்.அங்கு வீற்றிருக்கும் என்னை வழிபடு. உன் பிரம்மஹத்தி விலகும் என்றது. எம்பெருமானே அருளிய இந்த வார்த்தைகளால் மகிழ்ச்சியடைந்த பாண்டியமன்னன், சோழனின் வருகையை எதிர்பார்த்து காத்திருந்தான். படைகளை முன்கூட்டியே தயார்செய்து வைத்திருந்த பாண்டியன், உற்சாகத்துடன் அவனை எதிர்த்தான். சோழர் படைஇந்த தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் பின்நோக்கி ஓடினர். சோழனை விரட்டியடித்த பாண்டியன் திருவிடைமருதூரை வந்தடைந்தான். அங்குள்ள கோபுரத்தைக் கண்டதும் தன்னிலை மறந்து சுவாமியை வணங்கினான். இதற்குள் சோழன் தப்பித்தால் போதுமென ஓடி விட்டான். வரகுணபாண்டியன் கிழக்கு கோபுரம் வழியாக உள்ளே சென்றதும், அவனைப் பிடித்திருந்த பிரம்மஹத்தி அகன்று தனியாக நின்றது. சோழன் வெளியே வரும்போது பிடித்துக் கொள்ளலாம் என அது நினைத்தது. ஆனால், அசரீரி மீண்டும் தோன்றி, பாண்டியா! நீ மேற்கு வாசல் வழியே வெளியேறி விடு, என்றது. பாண்டியனும், அதன் வழியாக வெளியேறி மதுரைக்கு வந்துவிட்டான். (இப்போதும், அந்த பிரம்மஹத்தி கோயில் வாசலில் நிற்பதாக நம்பிக்கையுண்டு) மேற்குவாசலில் கோபுரம் ஒன்றைக் கட்ட ஏற்பாடு செய்தான். ஒருமுறை சிவபெருமானிடம், தனக்கு சிவலோகக் காட்சியை காட்ட வேண்டும் என பிரார்த்தித்தான். சிவபெருமானும் நந்திதேவர் மூலமாக அரிய அந்தக் காட்சியை காட்டியதுடன், தானும், பார்வதியும் விநாயகர், முருகன் முதலான குழந்தைகளுடன் இருக்கும் அரிய தரிசனத்தைக் கொடுத்தார்.

### 40. மாமனாக வந்து வழக்குரைத்த படலம்!

சுந்தரேச பாதசேகரனின் ஆட்சிக்காலத்தில் தனபதி என்ற வணிகர் தன் மனைவி சுசீலையுடன் மதுரை நகரில் வசித்து வந்தார். பெரும் செல்வந்தரான இவருக்கு குழந்தை பாக்கியம் இல்லை. ஆஸ்தியை வருங்காலத்தில் ஆள ஒரு குழந்தை வேண்டுமே! சுந்தரேச பெருமானிடம் அவர்கள் வைக்காத வேண்டுதல் இல்லை. வருடங்கள் ஓடியதே தவிர குழந்தை பிறக்கிற வழியைக் காணோம். எனவே, தன் தங்கை மகனை தனபதி தத்தெடுத்துக் கொண்டார். அந்தக் குழந்தையை சீரும் சிறப்புமாக வளர்த்தனர். தனபதியின் தங்கைக்கும், சுசீலைக்கும் இடையே அடிக்கடி தகராறு எழும். தனபதியும் தன் மனைவியின் சொல்கேட்டு தங்கையைத் திட்டுவார். ஒருமுறை ஆவேசமடைந்த தங்கை, என் பிள்ளையால் தானே உங்களுக்கு இறுதிக்கடன் நடந்து, நீங்கள் சொர்க்கத்தை அடைய முடியும். நான் இல்லாவிட்டால்

உங்கள் நிலை என்ன? என்று அண்ணனுக்கு குழந்தையில்லாத நிலையைக் குத்திக்காட்டி பேசிவிட்டாள். வருத்தமடைந்த தனபதி, சுந்தரேசா! எனக்கு குழந்தை இல்லாததால் தானே இப்படி ஒரு வசைக்கு ஆளானேன். இப்பிறவியில் என் வேண்டுதலை ஏற்க மறுத்தாய். அடுத்தபிறவியிலாவது அந்த பாக்கியத்தைக் கொடு, என வேண்டி விட்டு, தங்கை மகன் பெயரில் தன் சொத்துக்களை ஒப்படைத்து விட்டு, மனைவியுடன் காட்டுக்கு சென்று விட்டார். முழுமையாக ஆன்மிகவாழ்வில் ஈடுபட்டனர் அந்த தம்பதியர். தனபதிசென்றதும், அவரது பங்காளிகள் தங்களுக்கும் சொத்தில் பங்குண்டு என தனபதியின்தங்கையிடம் சண்டைக்கு வந்தனர். பொய் வழக்குகளைப் போட்டு, சொத்தை முழுமையாக அபகரித்துக் கொண்டனர். அவர்கள் நடுரோட்டுக்கு வந்துவிட்டனர். தன் அண்ணனின்மனம் புண்படும்படி பேசியதற்கு தனக்கு தகுந்த தண்டனை கிடைத்தது என்று உணர்ந்த தங்கை, சுந்தரேசர் கோயிலுக்கு மகனுடன் சென்று, இனி நாங்கள் என்ன செய்வோம்? என்று உருகி அழுதாள். அவளது கண்ணீர் சுந்தரேசரை உருக்கியது. மேலும், தன் பக்தனின் தங்கை அநியாயமாக ஏமாற்றபட்டதால், அவர் அவளுக்கு அருள்பாலிக்க திருவுளம் கொண்டார்.

மகளே! நீ ஊர் பெரியவர்கள் முன்னிலையில் வழக்குத் தொடு. நான் வந்து உன்னைக் காப்பாற்றுகிறேன், என்று அசரீரி ஒலித்தது. சுந்தரேசரே தனக்கு அருள்பாலித்து விட்டதால், அவள் வழக்குத் தொடுத்தாள். தனபதியின் பங்காளிகள் தங்களுக்கே சொத்து சொந்தம் என்றனர். அந்த சமயத்தில், தனபதியே அங்கு வந்துவிட்டார். தங்கை அவரது காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு கதறினாள். தனபதி அவளுக்கு ஆறுதல் சொன்னார். தன் தங்கை மகனுக்கே சொத்துக்கள் அனைத்தையும் கொடுத்ததாக தனபதி ஊராரிடம் சொன்னார். இந்த சமயத்திலும் கூட அந்த பங்காளிகள், இவர் தனபதியே அல்ல! அவரைப் போலவே தோற்றம் கொண்டவர். காட்டுக்குச் சென்றவர் எப்படி திடீரென வரமுடியும்? என வாதாடினர். நான் வேறு ஆளாக இருந்தால், உங்களை எனக்கு அடையாளம் தெரிந்திருக்காது. இதோ! இவரே ஊர் தலைவர். இவன் எனது பங்காளி சடையப்பன். இவன் முத்தப்பன், என்றெல்லாம் எல்லாரையும் அடையாளம் காட்டினார். மேலும், தனது சொத்து விபரங்களை புள்ளி விபரமாக எடுத்துச் சொன்னார். பஞ்சாயத்தாருக்கு தனபதி மேல் நம்பிக்கை வந்துவிட்டது. வழக்கு தொடுத்தவர்கள் இங்கிருந்து போய் விட வேண்டும். இல்லாவிட்டால், அரசவையில் ஒப்படைக்கப்பட்டு, கடும் தண்டனையை அனுபவிக்க நேரிடும், என எச்சரித்தனர். அவ்வளவுதான்! அடுத்த கணமே அங்குநின்ற எல்லாரும் ஓடிவிட்டனர். பின், தனபதி தன் சொத்துக்களை தங்கை மகன் பெயரில் சாசனம் செய்து வைத்தார். உடனடியாக மறைந்துவிட்டார். அதன்பிறகே வந்தவர் தனபதி அல்ல! சுந்தரேசரே மாமனாக வந்து வழக்குரைத்தவர் என்று பஞ்சாயத்தார்

புரிந்துகொண்டனர். மன்னன் சுந்தரேசபாதசேகரன் இந்த தகவல் அறிந்து சுந்தரேசரை வணங்கி மகிழ்ந்தான். சிலகாலம் கழித்து அவன் இறையடி எய்தினான். அவனது மகன் வரகுணபாண்டியன் பொறுப்பேற்றான்.

## 41. விறகு விற்ற படலம்!

வரகுணபாண்டியனின் ஆட்சிக்காலத்தில், வடநாட்டைச் சேர்ந்த ஹேமநாதன் என்ற யாழ் இசைக்கலைஞர் மதுரை வந்தார். அவரை வரவேற்ற வரகுணன், அவர் பல நாடுகளிலுள்ள யாழிசை விற்பன்னர்களை எல்லாம் வென்றவர் என்பதை அறிந்தார். தனது அரண்மனையில் தங்கிச்செல்ல கேட்டுக்கொண்டார். பாண்டியனின் உபசரிப்பால் மகிழ்ச்சியடைந்த ஹேமநாதனும் அதற்கு சம்மதித்தார்.ஹேமநாதன் இசையில் யாருக்கும் சளைத்தவர் அல்ல என்றாலும், அந்த திறமையே அவருக்கு அகந்தையையும் வளர்த்துவிட்டிருந்தது. அவர் தன்னோடு வந்த சீடர்களை பாண்டிய நாடெங்கும் அனுப்பி, யாழ் வாசிக்கச் சொன்னார். அவர்களது இசை நாட்டு மக்களைக் கவர்ந்தது. ஹேமநாதனின் புகழ் எங்கும் பரவியது. இயற்கையிலேயே அகந்தை மிக்க ஹேமநாதனுக்கு, இந்தப் புகழ் மேலும் கண்ணை மறைத்தது. மன்னரைப் பார்க்க அரண்மனைக்கு வரும்போது கூட அலட்சியமாக நடந்து கொண்டார். அவரது செருக்கை அடக்க முடிவெடுத்தான் வரகுணபாண்டியன். அவ்வூரில் பாணபத்திரர் என்ற யாழிசைக் கலைஞர் இருந்தார். அவரை அழைத்த வரகுணன், பாணபத்திரரே! இங்கே வந்துள்ள ஹேமநாதன் அகந்தை மிகுதியால் என்னையோ மற்ற கலைஞர்களையோ மதிப்பதில்லை. அவரது ஆணவத்தை அழிக்க நீரே தகுதியான நபர். நீர் இசைக்கும் யாழிசையின் முன்னால், அவரது இசை எடுபடாமல் போக வேண்டும். அவர் முன்னால் யாழிசைக்க நான் ஏற்பாடுசெய்கிறேன், என்றான். பாணபத்திரரும் ஒப்புக்கொண்டார்.

மன்னா! சோமசுந்தரப் பெருமானின் அருளாசியுடன் அந்தக் கலைஞனின் செருக்கை அடக்கியே தீருவேன். அவர் பெற்றுள்ள விருதுகள், வாங்கிய பரிசுகளை எனக்கு உரிமையுள்ளதாக செய்வேன், என சபதம் செய்தார். சபதம் செய்துவிட்டு அரண்மனையை விட்டு வெளியே வந்த பாணபத்திரனின் காதுகளில், தேனாறு பாய்வது போல யாழிசை கேட்டது. அதை வாசிப்பது யார் என எட்டிப் பார்த்தான். அனைவரும் ஹேமநாதனின் சீடர்கள். இப்போது தான் அவர் யோசிக்க ஆரம்பித்தார். அவசரப்பட்டு மன்னனிடம் சபதம் செய்து விட்டோமே! ஹேமநாதனின் சீடர்களே இவ்வளவு இனிமையாக பலபுதுமைகளைப் புகுத்தி யாழ் மீட்டுகிறார்கள் என்றால், ஹேமநாதனிடம் எவ்வளவு திறமை ஒளிந்திருக்கும்! இவர்களின் அளவுக்கு என்னிடம்

திறமை இல்லையே! என்ன செய்யலாம்? அவரை பயம் பிடித்து ஆட்டியது. அதே நேரம் இறைவனின் நினைவு வரவே, அவர் சுந்தரேஸ்வரர் கோயிலுக்குச் சென்றார். பெருமானை வணங்கி, ஐயனே! நீ ஆளும் பாண்டியநாட்டின் பெருமையை உலகறியச் செய்வது உன் பொறுப்பே, என்று மெய்யுருகி வணங்கி விட்டு சென்று விட்டார். அந்த பக்தனுக்காக தன் கால் நோக நடந்து, கை நோக விறகு வெட்டி, தலைநோக அதைச் சுமந்து சென்று விற்க தயாராகிவிட்டார் சுந்தரேஸ்வரர். விறகு வெட்டியாக வேஷம் பூண்டு மதுரை நகர தெருக்களில் அலைந்தார். ஒரு கிழிந்த ஆடையை உடுத்திக் கொண்டு, தலையில் இருந்த பிறைச்சந்திரனை அரிவாள் போல் ஆக்கி இடுப்பில் செருகி வைத்திருந்தார் அவர். கால்களில் ஒரு தேய்ந்த மரச்செருப்பு இருந்தது. பழைய யாழ் ஒன்றை அவரது தோளில் மாட்டிக் கொண்டார். விறகுக்கு அநியாய விலை சொல்லிக்கொண்டு யாருக்கும் விற்க மறுத்து, மாலை வரை நேரத்தை ஓட்டினார். பின், ஹேமநாதன் தங்கியிருந்த அரண்மனை போன்ற வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார். விறகு கட்டை இறக்கி வைத்து விட்டு, தன்னிடமிருந்த யாழை எடுத்து மீட்டத் துவங்கினார். ஆஹா... தேனினும் இனிய இசை அந்தப் பகுதியை நிறைத்தது. ஹேமநாதனின் சீடர்கள்இந்த இசை கேட்டு எழுந்தோடி வந்து தங்களை மறந்து ரசித்தனர். ஹேமநாதனையும்அந்த இசை ஈர்த்தது. உறங்க இருந்த அவர் விரைந்து வந்து அந்த இசையைரசித்தார். தன்னை மறந்து யாழிசைத்து முடித்த விறகுவெட்டியிடம் சென்ற அவர், தம்பி, நீ யாரப்பா? விறகு விற்கும் உன்னிடமா இவ்வளவு பெரிய இசைபுதைந்துள்ளது. நீ இசைத்தால் பொருட்கள் அசைவதையும், இசையை நிறுத்தினால் உயிர்களே அசைவில்லாமல் போய் விடுவதையும் கவனித்தேன். இப்படிப்பட்ட அரியஇசையை யாரிடம் கற்றாய்? என்றார்.

ஐயா! நான் ஒரு காலத்தில் இவ்வூரிலுள்ள யாழிசைக் கலைஞரிடம் பாடம் படித்தேன். எனக்கு வாசிக்கவே தெரியவில்லை என அவர் என்னை விலக்கி விட்டார். அவ்வப்போது, அவரிடம் படித்த பாடத்தை நினைவுபடுத்தி ஏதோ வாசிப்பேன். வயிற்றுக்காக விறகு விற்கிறேன், என்று ஏதுமறியாதவர் போல் சொன்னார் சுந்தரேஸ்வரப் பெருமான். ஹேமநாதர் கோபத்துடன், உன்னை வகுப்பில் இருந்து விலக்கிய அந்த முட்டாள் புலவன் யார்? என்றார். ஐயனே! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். அவர் தனது இசையால் இறைவனின் மனதையே தன் வசமாக்கி விடுபவர். யாழிசை மேதை, என்று அப்பாவியாய் சொன்னார் சொக்கநாதர். யார் அந்த புலவர் திலகம்? என்று விறகுவெட்டியிடம் ஹேமநாதன் கேட்கவே, அவர் பெயர் பாணபத்திரர். அரசவை யாழிசைக் கலைஞர், என்று சிவபெருமான் கூறவே அரண்டுவிட்டார் ஹேமநாதன். இந்த விறகுவெட்டியிடமே இவ்வளவு திறமை

இருந்தால், இவனது குருவிடம் எந்தளவுக்கு திறமை இருக்கும் என நினைத்தவர், பாணபத்திரருக்கு என் திறமை அனைத்தும் சமர்ப்பணம். என் பரிசுப் பொருட்களை இங்கேயே விட்டுச்செல்கிறேன். அவற்றை அவரிடமே ஒப்படையுங்கள், என எழுதிக் கொடுத்து விட்டு சீடர்களுடன் இரவோடு இரவாக கிளம்பிச் சென்றுவிட்டார். மறுநாள் அவையே பரபரப்பாக இருந்தது. ஹேமநாதன் காணாமல் போனது தான் அன்றைய சூடான விவாதமாக இருந்தது. இதற்குள்எம்பெருமான் பாணபத்திரரின் இல்லத்துக்குச் சென்று நடந்ததைச் சொல்லி மறைந்தார். தனக்காக விறகு சுமந்த அண்ணலை வணங்கி, மன்னரைக் காணச் சென்றார் பாணபத்திரர். அவரது பாதங்களில் விழுந்த மன்னன், இறைவனே உமக்காக பாதம் நோக பணிசெய்கிறார் என்றால், அவருக்கு பிடித்தமான உமது பாதங்கள் எனது வணக்கத்திற்குரியவை. இனி, நீர் என்னைப் புகழ்ந்து இசை மீட்டாமல், இறைவனின் புகழையே பாட வேண்டும், என கேட்டுக்கொண்டான். பாணபத்திரரும் அவ்வாறே செய்துவந்தார்.

## 42. திருமுகம் கொடுத்த படலம்!

காலப்போக்கில், ஹேமநாதன் மூலம் கிடைத்த பணம், மன்னர் பரிசாக அளித்தது எல்லாம் காலியாகி விட்டது. பாணபத்திரரின் குடும்பத்தில் வறுமை நிலைஏற்பட்டது. தனக்கேற்பட்ட கதியை பெருமானிடம் சொல்லி அழுதார் அவர். அப்போதுஅசரீரி ஒலித்தது. பாணபத்திரா! கவலை கொள்ளாதே. இதோ! இங்கிருக்கும்படிக்கட்டில் தினமும் ஒரு பொருள் இருக்கும். அதை எடுத்துச் சென்றுபிழைத்துக் கொள், என்றது குரல். இதை இறைவனின் திருவாக்காக கருதியபாணபத்திரர் மகிழ்ச்சியடைந்தார். சொன்னது போலவே, தினமும் ஒரு பொருள்கிடைத்தது. இதைக் கொண்டு வாழ்ந்து வந்த போது, மீண்டும் அவருக்கு வறுமையைஉண்டாக்கி திருவிளையாடல் புரிந்தார் ஈசன். பாணபத்திரரின் பக்தியின்பெருமையை உலகறியச் செய்யவே இவ்வாறு செய்தார் அவர். ஒருநாள் இரவில் கனவில்தோன்றிய சுந்தரேஸ்வரர், இதோ! சேரமன்னனுக்கு ஒரு திருமுகம் (திரைச்சீலையில்எழுதிய கடிதம்) தருகிறேன். இதைக் கொண்டு அவனிடம் கொடுத்து வேண்டுமளவுபொருள் பெற்றுக்கொள், என்றார். உடனே சோமசுந்தரக் கடவுள் வேதத்துக்குப்பொருள் அருளிச் செய்த திருவாக்கினால் ஒரு பாடல் இயற்றினார்.

மதிமலி புரிசை மாடக்கூடற் பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிற(கு) அன்னம்பயில் பொழில் ஆலவாயில் மன்னிய சிவன் யான மொழிதருமாற்றம் பருவக் கொண்மூப்படியெனப் பாவலர்க்(கு) உரிமையின் உதவி ஒளிதிகழ் குருமாமதிபுரை குவிவியக் குடைக்கீழ் செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க! பண்பால் யாழ்பயில்

பாணபத்திரன் தன்போல் என்பால் அன்பன் தன்பால் காண்பது கருதிப் போந்தனன் மண்பொருள் கொடுத்து வர விடுப்பதுவே.இவ்விதம் திருப்பாசுரம் ஒன்று எழுதிக் கொடுத்து விட்டு மறைந்தருளினார். பாணபத்திரர் திடுக்கிட்டு விழிக்க, அவரது கையில் திருமுகம் இருந்தது. ஆச்சரியமடைந்த அவர், இறைவனை வணங்கி சேரநாடு சென்றார். இதற்குள் சேரமன்னனின் கனவிலும் பாணபத்திரர் வந்துள்ள தகவலை இறைவன் அறிவிக்கவே, அவனே அவர் தங்கியிருந்த இடத்தைத் தேடி வந்து அரண்மனைக்கு அழைத்துச் சென்று வேண்டுமளவு பொன்னும் பொருளும் கொடுத்தான். மீண்டும் பாண்டியநாடு திரும்பிய அவரது பெருமையை அறிந்த வரகுணபாண்டியனும், பொன்னை வாரி வழங்க பாணபத்திரர் அறவே வறுமை நீங்கப் பெற்றார்.

## 43. பலகையிட்ட படலம்!

சோமசுந்தரக் கடவுளை மூன்று வேளையும் வணங்கி இசை பாடி வந்த பாணபத்திரர் இப்போது அர்த்த சாமத்திலும் இறைவனைப் பாட ஆரம்பித்து விட்டார். தன்னை இசையால் வசப்படுத்திய பாணபத்திரரிடம் மற்றொரு திருவிளையாடலையும் புரிந்தார் ஈசன். ஒருநாள், அவர் கோயிலுக்கு புறப்பட்ட போது கடும் மழை, இடி, மின்னல் என இருந்தது. யாழை ஒரு துணியில் சுற்றி எடுத்துக் கொண்டு, எப்படியாவது கோயிலுக்கு போய் விட வேண்டுமெனக் கருதிய பாணபத்திரர் கொட்டும் மழையில் நடந்து கொண்டிருந்தார். யாழை துணியில் சுற்றி வைத்திருந்தாலும் கூட, பலத்த மழையில் அது நனைந்ததைத் தடுக்க அவரால் முடியவில்லை. எங்கும் சேறு வேறு.குளிரில் உடல் நடுங்க கோயில் வந்து சேர்ந்தார். வழக்கம் போல யாழை எடுத்து மீட்ட ஆரம்பித்தார். கைகள் நடுங்கியதாலும், மழையில் யாழ் நனைந்து போனதாலும் இசை ஒழுங்காக வரவில்லை. அபஸ்வரம் போலத் தெரிந்தது. இதற்குள் வெளியே பெய்தமழை நீர் கோயிலுக்குள் புகுந்து பாணபத்திரர் நின்ற மண்டபத்தைச் சூழ்ந்தது.தண்ணீருக்குள் நின்றபடி பாணபத்திரர் கடும் முயற்சி செய்து யாழைமீட்டியபடியே இறைவனை புகழ்ந்து பாட ஆரம்பித்தார். கடும் முயற்சி இருந்தால், எந்தச் சூழலிலும் நமது பணியைத் திறம்படச் செய்யலாம் என்பதற்குபாணபத்திரரின் முயற்சியே உதாரணம்.

அங்கு ஏற்கனவே வந்து நின்ற பக்தர்கள் பாணபத்திரரின் இந்தச் செய்கையைப் பாராட்டியதுடன், அர்த்தஜாம பூஜை வேளையில் தங்களை மழை வெள்ளத்துடன் இசை வெள்ளத்திலும் நீந்த வைத்ததற்காக அவருக்கும், இறைவனுக்கும் நன்றி கூறினர். அப்போது பாணபத்திரரின் காதுகளில் ஒரு ஒலி கேட்டது. பாணபத்திரா!

எந்தச் சூழலிலும் தளராத உனது பக்தியின் பெருமையை உலகோர் உணரவே இந்த திருவிளையாடலைப் புரிந்தேன். நீ திடமானவன், வைராக்கியமானவன்.இதோ! இங்கு நிற்போர் அனைவரும் அதிசயப்படும் வகையில் தங்கத்தால் ஆன பலகை ஒன்றை உன் முன் தோன்றும்படி செய்கிறேன். நீ தினமும் அதன்மீது நின்று யாழிசைக்கலாம் என்றது. சொன்ன மறுகணமே வானில் இருந்து ஒரு தங்கப்பலகை கோயில் மண்டபத்துக்குள் புகுந்து, பாணபத்திரர் முன்னால் வந்தது. ஊரார் அதிசயித்தனர். சோமசுந்தரரின் கருணையே கருணை என்று வாழ்த்தினர். பாணபத்திரர்அதன் மீது ஏறி நின்று இனிய கீதம் இசைத்தார். பூஜை முடிந்ததும் தனக்கு இறைவன் தந்த தங்கப்பலகையை தலையில் ஏந்தி வீடு சென்றார் பாணபத்திரர். இந்தத்தகவல் மன்னன் வரகுணபாண்டியனின் கவனத்திற்கு வரவே, மறுநாள் காலையில் பாணபத்திரரின் வீட்டுக்கு பல்லக்கை அனுப்பி, அவரை அதில் ஏற்றி வரச்செய்தான். பாணபத்திரர் இறைவனால் தனக்கு அருளப்பட்ட தங்கப்பலகையுடன்அவைக்கு வந்தார். அந்தப் பலகை மீது பட்டு விரித்து அதன் மேல் பாணபத்திரரைஅமரச் செய்தான் மன்னன். அவரைப் பாராட்டிப் பேசினான். மதுரையின் நாயகன் எனபட்டம் கொடுத்தான். இவ்வாறு பாணபத்திரருக்கு அருள் செய்தார் சுந்தரேசர்.இதன் பின் சிலகாலம் வாழ்ந்த வரகுணப்பாண்டியன் சிவனடி சேர்ந்து விட்டார்.

## 44. இசை வாது வென்ற படலம்

வரகுணப்பாண்டியனின் புதல்வன் ராஜராஜ பாண்டியன் ஆட்சிக் கட்டிலில்அமர்ந்தான். இந்த சமயத்தில் பாணபத்திரரும் இறைவனடி சேர்ந்து விட்டார்.அவரது மனைவியும் யாழிசையில் வல்லவள். அவள் கணவன் விட்ட பணியைத்தொடர்ந்தாள். சோமசுந்தரரின் சன்னதிக்கு வந்து மயக்கும் பாடல்களால்பெருமானையும், பக்தர்களையும் பரவசப் படுத்துவாள். மன்னன் ராஜராஜன்சிவபக்தன் என்றாலும், ஒழுக்கமில்லாதவன். குறிப்பாக, பெண்கள் விஷயத்தில் பலவீனமானவன். பல பெண்களைத் தனது அந்தப்புரத்தில் ஆசை நாயகியாகவைத்திருந்தான். அவர்களில் ஒருத்தி, மிகச்சிறப்பாக யாழ் மீட்டி, மன்னனை புகழ்ந்து பாடுவாள். புகழ் போதை மிக்க ராஜராஜன் அவளது இசையை மட்டுமல்ல!அவளையும் மற்றவர்களை விட அதிகம் ரசிப்பான். அந்தப் பெண் இதனால் பெரும்கர்வம் கொண்டிருந்தாள். மன்னனுக்கு மிகவும் வேண்டபட்டவள் என்பதால், அரண்மனையில் அவளைத் தட்டிக்கேட்பார் யாருமில்லை. அவள் பாணபத்திரரின்மனைவியைப் பற்றி கேள்விப் பட்டாள். அவளது மயக்கும் இசை பற்றி அறிந்தாள்.உள்ளத்தில் பொறாமை பொங்கியது. தன்னை விட இசையில் உயர்ந்த ஒருத்தி மதுரைநகருக்குள் இருக்கக்கூடாது என்று வெறி கொண்டாள். ஒருநாள், மன்னனை மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டிருந்த

வேளையில், அன்பே! பாணபத்திரரின் மனைவிதன்னை விட இசையில் உயர்ந்தவர் இல்லை என்று கர்வம் கொண்டு திரிகிறாள். அவளைஅடக்க வேண்டுமானால், தாங்கள் ஒரு போட்டி வைக்க வேண்டும், என்றாள். மயங்கிக்கிடந்த மன்னன், தன் ஆசைநாயகி சொல்வதை அப்படியே கேட்டான். அதற்கு என்னசெய்ய வேண்டும்? நீ சொன்னதைச் செய்கிறேன் கண்ணே! என்று உளறினான்.

மாமன்னா! ஈழத்தில் யாழிசைக் கலையில் வல்ல ஒரு பெண்மணி இருக்கிறாள். அவள் எனக்குத் தெரிந்தவள். அவளை இங்கு வரவழைத்து இரு வருக்குமிடையே போட்டி வைக்க வேண்டும். அதில் பாணபத்திரர் மனைவி நிச்சயம் தோற்பாள். அவளது கர்வம் அடங்கும், என்றாள். மன்னன் சம்மதித்தான். ஈழத்தில் இருந்து அந்தப் பாடகியை வரவழைத்தான். அவள் தனது மாணவிகளுடன் மதுரை வந்து சேர்ந்தாள். மன்னன் பாணபத்திரர் மனைவியை அழைத்தான். பெண்ணே! நீ ஈழத்து பாடகியுடன் போட்டியிட வேண்டும். அவளை வெல்ல வேண்டும். நம் நாட்டின் கவுரவமே உன் கையில் தான் இருக்கிறது, என்றான். அன்று தன் கணவன் ஹேமநாதனை வென்றது போல, இன்று ஈழத்து பாடகியை நிச்சயம் வெல்வேன், பாண்டிய நாட்டின் புகழ் ஈழம் வரை பரவும் என்று அவள் உறுதியளித்தாள். மன்னனின் மனமோ வஞ்சக எண்ணத்தில் சிக்கியிருந்தது. இவள் எப்படி யாழிசைத்தாலும் சரி, இனிய குரலில் பாடினாலும் சரி...ஈழத்துப்பாடகியே வென்றாள் என்று தீர்ப்புக் கூறி விட வேண்டும். அத்துடன் இவள் யாழிசைக்க தடைவிதித்து விட வேண்டும் என்று திட்டம் வகுத்துவிட்டான். இதையறியாத பாணபத்திரனின் மனைவி போட்டிக்கு தயாரானாள். அரங்கம் நிரம்பி வழிந்தது. ஈழத்துப் பாடகி ஆணவத்துடனும், பாணபத்திரர் மனைவி அமைதியாகவும் அரங்கத்தில் வந்து அமர்ந்தனர். போட்டி ஆரம்பமானது.

ஈழத்துப்பாடகி மன்னரை நோக்கி, மாமன்னர் ராஜராஜபாண்டியரே! தங்கள் தேசத்தில் யாழிசைத்துப் பாடும் வாய்ப்பினை தந்தமைக்கு நன்றி. ஆனால், என் எதிரே யாழ் என்றால் என்னவென்றே அறியாத, ஏழு ஸ்வரங்களின் வாசனையே அறியாத ஒருத்தியை அமரவைத்து போட்டியிட்டு பாடச் சொல்கிறீர்கள். அவள் என்னோடு போட்டியிட தகுதியுள்ளவளா என்பதை அறிந்தபிறகே அவளோடு போட்டியிடுவேன். அதாவது, ஸ்வரங்கள் குறித்த சில கேள்விகளைக் கேட்பேன். அதற்கு அவள் பதில் சொல்ல வேண்டும். அதற்கு இஷ்டமில்லையென்றால், இப்போதே அவள் போட்டியில் தோற்றதாக ஒப்புக்கொண்டு விலகிக்கொள்ளலாம். எனக்கு அதில் எந்த ஆட்சேபமும் இல்லை, என அலட்சியமாகப் பேசினாள். அவளது பேச்சில் இருந்த ஆணவத்தைக் கவனித்த பாணபத்திரர் மனைவி, அரசே! அறிவிக்கப்பட்டது இசைப்போட்டி தானே ஒழிய வாதப்போட்டி அல்ல. ஒருவேளை, இந்தப் பெண்மணி என்னோடு போட்டியிட

பயந்து, வாதப்போருக்கு இழுக்கிறாளோ என்னவோ! யாழிசைக்கத் தெரியாவிட்டால் பரவாயில்லை. தோற்றதாக அறிவித்து விட்டு, அவளாகவே ஒதுங்கிக் கொள்ளட்டும். எனக்கும் அதில் எந்த ஆட்சேபமும் இல்லை, என பதிலடி கொடுத்தாள். கோபமடைந்த ஈழப்பாடகி பதிலுக்கு ஏதோ பேச, பாணபத்திரர் மனைவி அதை எதிர்த்துப்பேச, இசைமேடை, சண்டை மேடையாகியது. ராஜராஜ பாண்டியன் அவர்களை அடக்கி சமாதானம் செய்தான்.

நான் ஏற்கனவே அறிவித்தது போல் இசைப்போட்டி துவங்கட்டும். அதன் முடிவை நான் அறிவிப்பேன், என்றவன், தன் ஆசைநாயகியை ஓரக்கண்ணால் பார்த்தான். அவள் மெதுவாக விஷமப்புன்னகை சிந்தினாள். அந்தப் புன்னகையின் அர்த்தம் என்ன தெரியுமா? போட்டியின் போக்கு எப்படி இருந்தாலும் சரி...ஈழத்துப்பாடகியே வென்றதாக அறிவிக்கவேண்டும் என்பதைப் போல் இருந்தது. ராஜராஜனும் யாருமறியாமல் கண்ணசைத்து அதை ஆமோதித்தான். முதலில் ஈழத்துப்பாடகி யாழிசைத்து பாடினாள். அதில் அத்தனை சுவாரஸ்யம் இல்லாவிட்டாலும் ராஜராஜன் கைதட்டி ரசிப்பதைப் போல் நாடகமாடினான். பாடல் முடிந்ததும் அவளை வானளாவப் புகழ்ந்தான். அடுத்து பாணபத்திரர் மனைவி யாழிசைக்கவே அதை நிஜமாகவே ரசித்தான். அவன் மட்டுமல்ல! அவையே ரசித்தது. தீர்ப்பு சொல்லும் நேரம் வந்தது. இருதரப்பு இசையையும் கேட்டு ரசித்தேன். ஆனால், எனக் கென்னவோ ஈழத்துப் பாடகியின் யாழிசையே உள்ளத்தைக் கவர்வதாக இருந்தது, என்று சொல்லி நிறுத்தியதும் பாணபத்திரர் மனைவி மட்டுமல்ல, அவையோர் அதிர்ச்சிக்குள்ளாயினர். மன்னருக்கு என்ன ஆனது என்று அவர்கள் நினைத்தாலும், அவனை எதிர்த்துக் கருத்துச் சொல்ல யாரால் இயலும்? அவர்களும் மன்னனோடு இணைந்து ஆமாம் போட வேண்டியதாயிற்று. மன்னன், ஆசை நாயகியை திருப்திப்படுத்த இவ்வாறு சொன்னானே ஒழிய மனசாட்சி என்னவோ உறுத்தியது.

அவையோரே! ஈழத்துப் பாடகி சிறப்பாகப் பாடினார் என்றாலும், இப்போது நடந்த போட்டியின் அடிப் படையில் நான் தீர்ப்பளிக்க விரும்பவில்லை. ஏனெனில், ஒரே ஒரு பாட்டைக் கொண்டு இருவரது திறமையையும் மதிப்பிட முடியவில்லை. இன்னொரு நாள் போட்டி நடத்தி தீர்ப்பளிக்கிறேன், என சொல்லிவிட்டு அரியாசனத்தை விட்டு வேகமாக சென்று விட்டான். அதிர்ச்சியடைந்த பாணபத்திரர் மனைவி தன் பாடலைக் குறைத்து மதிப்பிட்டதால் அவமானம் தாங்காமல், நேராக சொக்கநாதரின் ஆலயத்திற்குச் சென்றாள். சொக்கநாதப் பெருமானே! என் கணவருக்காக அன்று விறகு சுமந்தீர். பாண்டியமண்ணின் பெருமையை உலகறியச் செய்தீர். இன்று எனக்கு சோதனை வந்துள்ளது. என்னை அவையோர் முன்னிலையில் அவமானப்பட வைத்தீர்.

இறுதி போட்டியில் வெற்றி பெறாவிட்டால் என் நிலைமை என்னாகுமென்றே எனக்குத் தெரியாது. மன்னர் தர்மத்துக்குப் புறம்பாக தீர்ப்பு சொன்னதை அனைவரும் அறிவர். நீரே இதற்கு நல்ல தீர்ப்பு சொல்ல வேண்டும், என கதறியழுது பிரார்த்தித்தாள். அப்போது அசரீரி குரல் கேட்டது. பெண்ணே! கலங்க வேண்டாம். நீயே வெற்றி பெறுவாய், என்று. அதைச் சொக்கநாதரின் வாக்காகவே மதித்த அவள், மறுநாள் மன்னனிடமே சென்றாள். அரசே! தாங்கள் செய்தது உங்களுக்கே நன்றாக இருக்கிறதா? உண்மையிலேயே, அவளது பாடல் நன்றாக இருந்தால், நானே என் தோல்வியை ஒப்புக்கொண்டு வெளியேறி இருப்பேன். தாங்களோ அவளது இசை தான் நன்றாக இருப்பதாகச் சொன்னீர்களே! உங்கள் ஆசைநாயகியின் கட்டளைக்கு அடிபணிந்தே அவ்வாறு செய்தீர்கள் என்பதை நான் அறிவேன், அடுத்த போட்டி சொக்கநாதர் ஆலயத்தில், கால்மாறி ஆடும் நடராஜப்பெருமான் முன்னிலையில் நடக்க வேண்டும். கூத்தாடும் அவரே இதற்கு தீர்ப்பளிக்கட்டும், என்று சொல்லிவிட்டு கிளம்பினாள். பத்திரரின் மனைவி சொன்ன வார்த்தை மன்னனைச் சிந்திக்கச் செய்தது. அவன் சற்று நடுங்கியும் போனான். மீண்டும் போட்டி நாள்குறிக்கப்பட்டது. இந்தப் போட்டியைக் காண மதுரை மக்களும் குவிந்து விட்டனர்.

மக்களே! இந்தப் போட்டியின் முடிவை நான் அறிவிக்கமாட்டேன். இதோ! கால்மாறி ஆடும் கூத்தபிரானே அறிவிக்கட்டும். தோல்வியடைந்தவர் வெற்றி பெற்றவருக்கு காலமெல்லாம் அடிமையாய் இருந்து சேவை செய்ய வேண்டும். இது போட்டியின் நிபந்தனை, என்றும் சொன்னான். போட்டி ஆரம்பிக்க இருந்த வேளையில், காவி கட்டி, திருநீறு பூசிய புலவர் ஒருவர் அரியாசனம் ஒன்றில் யாரிடமும்கேட்காமல் அமர்ந்தார். எவ்வளவு பெரியவராக இருந்தாலும், நம் வீட்டுக்குள் அனுமதியின்றி ஒருவர் நுழைவதை நாம் விரும்பமாட்டோம், அனுமதிக்கவும் மாட்டோம். மன்னன் ராஜராஜனும் அப்படியே தான் செய்வான் என அனைவரும் எதிர்பார்த்த வேளையில், தன்னையும் அறியாமல் அவன் அந்தப் பெரியவரைப் பார்த்துவணங்கினான். திடீரென வந்தது அந்த சோமசுந்தரப் பெருமானாகத்தான் இருக்கவேண்டும் என்று பாணபத்திரர் மனைவிக்குப் பட்டது. அவள் அவரைக் கையெடுத்துவணங்கினாள். மீண்டும் போட்டி ஆரம்பமானது. முதலில் ஈழத்துப்பாடகியாழிசைத்துப் பாடினாள். அவள் பாடி முடித்ததும் ஒரு சிலர் மட்டும்கைதட்டினர். பெரியவர் அவளது பாடல் பற்றி கருத்தும் சொல்லவில்லை, கைதட்டவும் இல்லை. அமைதியாக இருந்தார். அடுத்து பாணபத்திரர் மனைவி பாடி முடித்ததும்அவையே அதிரும் வகையில் கைத்தட்டல் ஒலி எழுந்தது. எல்லாரும் பெரியவரைக்கவனித்தனர். அவரும் அந்த இசைக்கு கைதட்டி மகிழ்ந்தார். அரியாசனத்தில்இருந்து எழுந்த அவர்,பாணபத்திரர் மனைவியே சிறப்பாகப் பாடினாள். அவளே வெற்றிபெற்றதாக அறிவிக்க வேண்டும், என்று

மன்னனைப் பார்த்துச் சொன்னார். அடுத்தகணமே அங்கிருந்து மறைந்துவிட்டார். மின்னலென மறைந்துவிட்ட அவர்சோமசுந்தரப்பெருமானே என்பதை ராஜராஜ பாண்டியன் உணர்ந்தான். தன் ஆசைநாயகியின்சொல்கேட்டு, இத்தகைய போட்டிக்கு ஏற்பாடு செய்ததையும், நீதி தவறி நடந்ததையும் எண்ணி வெட்கப் பட்டான்.

இங்கே வந்து தீர்ப்பளித்து மறைந்தவர் சாதாரணமானவரல்ல! அந்த சோமசுந்தரப் பெருமானே இவ்வாறு தீர்ப்பளித்திருக்கிறார். அவரது தீர்ப்பே எனது தீர்ப்பு. பாணபத்திரர் மனைவியே வென்றார். இங்கிருக்கும் ஈழத்துப்பாடகி அவளுக்கு அடிமையாக இருந்து சேவகம் செய்ய வேண்டும். இங்கு வந்து தீர்ப்பளித்த ஈசனின் தீர்ப்பே எனது தீர்ப்பும், என்றான். மன்னனின் ஆசைநாயகி இதுகேட்டுதலைகுனிந்தாள். அவர்களெல்லாம் அரண்மனையை விட்டு உடனே போய்விட வேண்டும்என்றும் மன்னன் சொல்லி விட்டான். அன்றுமுதல் ஒழுக்கமான வாழ்வு வாழ உறுதிபூண்டான். பாணபத்திரர் மனைவி மன்னனிடம், மாமன்னரே! நமது பாண்டியமண்ணின் புகழ் இறைவனே சொன்ன எனது வெற்றியால் பாதுகாக்கப்பட்டு விட்டது. அந்த மன திருப்தி ஒன்றே எனக்கு போதும். நாம் எல்லாருமே சோமசுந்தரரின் அடிமைகள். அப்படியிருக்க, மானிடப்பிறவியான எனக்கு இன்னொரு மானிட ஜென்மம் அடிமையாக இருக்க வேண்டும் என்று நான் விரும்ப வில்லை. ஈழத்துப்பாடகியை விடுவித்து விடுங்கள், என்றாள். மன்னனும், அந்தப் பாடகிக்கும், பாணபத்திரர் மனைவிக்கும் பரிசுகளை வழங்கி கவுரவப்படுத்தி அனுப்பி வைத்தான்.

### 45. பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம்!

மதுரை அருகில் குருவிருந்த துறை என்ற தலம் (தற்போது குருவித்துறை) உள்ளது. இவ்வூரில் சுகலன் என்பவன் தன் மனைவி சுகலையுடன் வாழ்ந்து வந்தார். இவர்கள் பெரும் பணக்காரர்கள். பணச் செல்வம் மட்டுமின்றி, பிள்ளைச் செல்வத்தையும் கடவுள் வாரி வழங்கியிருந்தார். ஆம்... இவர்களுக்கு 12 ஆண் குழந்தைகள். பணம் படைத்தவர்கள் என்பதால் 12 பேரும் மிகச்செல்லமாக வளர்க்கப் பட்டனர். இதனால், எல்லாரும் கெட்டுக் குட்டிச்சுவரானார்கள். காலப் போக்கில், சுகலனும், சுகலையும் இறந்துபோகவே, சொத்தை 12 பாகமாக பிரித்தெடுத்தனர். அவரவர் தங்கள் பங்கை செலவழித்து தீர்த்தனர். ஒரு கட்டத்தில் எல்லாம் போய்வறுமை நிலைக்குத் தள்ளப் பட்டனர். பசி அவர்களை வருத்தியதால், காட்டில் போய் வேட்டையாடி பிழைத்துக்கொள்ள எண்ணி அங்கு சென்று தங்கினர். தினமும்மிருகங்களை வேட்டையாடி உணவருந்தினர். ஒரு சமயம், இவர்கள் சென்ற வழியில் ஒரு துறவி கால் மடக்கி தவத்தில் இருந்தார். அவர் தான் தேவகுரு பிரகஸ்பதி. அவர்

யாரென்பதை அறியாத அந்த சகோதரர்கள் அவர் மீது மணலை வாரி இறைத்தனர். கற்களை வீசினர். அவரைச் சுற்றி நின்று ஆடிப்பாடி கேலி செய்தனர்.

அவர்களது இடைஞ்சலால் பிரகஸ்பதி தவம் கலைந்து எழுந்தார். மூடர்களே! நீங்கள் செய்த இந்த செயல் கண்டனத்துக்குரியது. படிப்பறிவில்லாதவன் கூட பிறரது தொழிலுக்கு இடைஞ்சல் செய்யும் உரிமையில்லாதவன். நீங்களோ, அமைதியாய் இருந்த எனக்கு இடைஞ்சல் செய்தீர்கள். எனவே, எல்லாரும் இந்தக்காட்டிலுள்ள பன்றியின் வயிற்றில் பிறப்பீர்களாக! என சாபம் கொடுத்தார். அமைதியாக இருப்பவர்களுக்கும், அப்பாவிகளுக்கும் இடைஞ்சல் செய்பவர்கள் பன்றியாகப் பிறப்பார்கள் என்பதை இதில் இருந்து புரிந்து கொள்ளுங்கள். குறிப்பாக, கல்லூரிகள் துவங்க உள்ள இந்த வேளையில், ராக்கிங் செய்வது எவ்வளவு தவறு என்பதையும் புரிந்து கொள்ளுங்கள். ராக்கிங் செய்பவர்கள் பன்றிகளாகப்பிறப்பது உறுதி. அந்த சகோதரர்கள் இந்த சாபத்தை எதிர்பார்க்கவில்லை. தங்கள்தவறுக்கு பிராயச்சித்தம் கேட்டார்கள். குழந்தைகளே! உங்கள் மீது இரக்கம் கொள்கிறேன். ஆனால், தவறு செய்தவர்கள் தண்டனை அடைந்தே ஆக வேண்டும்.பன்றிகளாகப் பிறக்கும் உங்களுக்கு சரியான உணவும் கிடைக்காது. பசியுடனேயேதிரிவீர்கள். இறுதியாக, மதுரையில் உறையும் சோமசுந்தரரின் அருளால்உய்வடைவீர்கள். மேலும், தவறை உணர்ந்த உங்களுக்கு மன்னனின் அவையில் அமைச்சர்பொறுப்பும் கிடைக்கும், என்றார்.

அந்த சகோதரர்கள் அங்கு சுற்றித் திரிந்த பன்றியின் வயிற்றில் பிறந்தனர்.மன்னன் ராஜராஜன் அந்தக் காட்டிற்கு வேட்டையாட வந்தான். காட்டுப்பன்றிகளைஅவன் வேட்டையாட எண்ணினான். காட்டுப்பன்றிப் படையின் தலைமை பன்றிக்கு இந்த தகவல் கிடைத்தது. எப்படியாவது மன்னனின் பிடியில் இருந்து தப்ப அது திட்டமிட்டது. ஆனால், அவற்றால் ஒன்றும் செய்ய முடியவில்லை. காட்டுப்பன்றிகள் மனிதர்களைத் தாக்கும் திறனுடையவை. எனவே, அவை ஒட்டுமொத்தமாகக் கூடி மன்னனின் படையைத் தாக்கின. ஆனால், ஆண்பன்றிகளின் தலைமைப் பன்றியை மன்னன் கொன்றுவிட்டான். பின்னர், பெண் பன்றியின் தலைமையில் மற்ற பன்றிகள் போரிட்டன. பெண் பன்றியைக் கொல்வது தவறு என்பதால், மன்னன் ஒதுங்கிக் கொண்டான். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான் அங்கு வந்த ஒரு வேடன். அரசே! என் பெயர் சருச்சரன். உங்கள் யுத்த தர்மப்படி பெண் பன்றியை நீங்கள் கொல்லாமல் இருக்கலாம். நானோ வேடன், எனக்கு எந்த மிருகமாக இருந்தாலும் ஒன்று தான். அந்த பன்றியைக் கொல்ல அனுமதிக்க வேண்டும் என்றான். மன்னனும் தலயைசைக்க பெண் பன்றியைக் கொன்றுவிட்டான்.

தாயையும், தந்தையையும் இழந்த குட்டிப்பன்றிகள் காட்டில் அனாதையாகத் திரிந்தன. பாலில்லை, உணவில்லை. அவை பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல, பசியால் அவை கதறின. இவற்றின் அவலக்குரல் சுந்தரேசப் பெருமானின் காதுகளில் விழுந்தது. வராஹ முகத்துடனும், மனித உடலுடனும் கூடிய பன்றியாக உருவெடுத்து வந்தார். குட்டிகளுக்கு பாலூட்டினார். அவை பசி தீர்ந்து மகிழ்ந்ததுடன், முந்தைய வடிவையும் பெற்றன.

### 46. பன்றிக்குட்டிகளை மந்திரியாக்கிய படலம்!

சோமசுந்தரக் கடவுளின் அருளால் சாபம் நீங்கப் பெற்ற சகலனின் பிள்ளைகள் சிவபூஜை செய்து வந்தனர். இவர்கள் சகல கலைகளிலும் வல்லவர்கள் ஆனார்கள். ஒரு சமயம் அன்னை மீனாட்சி, சுந்தரேஸ்வரரிடம் பேசிக் கொண்டிருந்த போது, சுவாமி! தாங்கள் அறிவற்ற பன்றிகளுக்கு கூட உணவுடன் ஞானத்தையும் ஊட்டிய காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாமா? என்றாள். தேவி! அறிவுள்ளவன், அறிவற்றவன் என்ற பேதம் மனிதர்களுக்கு மட்டுமே, எனக்கில்லை. எல்லாரும் எனக்கு ஒன்று தான். அதனால் தான் பசியால் கதறியது பன்றிகள் என்றாலும் கூட திருவருள் புரிந்தேன். அதனால் அப்பன்றிக் குட்டிகள் அளவில்லாத வலிமையையும், வெற்றியையும் கல்வி முதிர்வையும், ஞானத்தையும் பெற்றுக் கொண்டன. இனிமேல் அவர்கள் தங்கள் அறிவால் பாண்டியனின் அமைச்சர்களாவதுடன் சிவகணங் களாகும் பேறையும் பெறுவார்கள், என்றார் சுந்தரேஸ்வரர். அன்றிரவில், ராஜராஜப் பாண்டியனின் கனவில் தோன்றிய அவர், பாண்டியனே! பன்றிமலையில் வசிக்கும் பன்னிரு அறிவுஜீவிகளை உன் அமைச்சரவையில் சேர்த்துக் கொள், என்றார். மறுநாளே, சுவாமியின் விருப்பப்படி பன்றிமலையில் இருந்து அவர்களை வரவழைத்தான் மன்னன். அவர்களுக்கு அமைச்சர் பதவி அளித்ததுடன், முந்தைய அமைச்சர்களின் புத்திரிகளையும் திருமணம் செய்து வைத்தான். பன்றிமுக வீரர்கள்பன்னிருவரும், பாண்டியனுக்குக் கவசமும் கண்ணும் போல் விளங்கினர்.பன்னிரண்டு உடலுக்கும் ஓர் உயிரே என அனைவரும் கூறும்படி ஒற்றுமையாகஇருந்தனர். பன்னிருவரும் ஈகையும், அறமும், புகழுமள் பாண்டியனுக்குப்பெருகுமாறு எட்டுத் திக்கிலும் வெற்றியுண்டாகச் செய்து வாழ்ந்திருந்தனர்.அவர்கள் பலகாலம் பாண்டியனுக்கு உதவியாகச் செயல்பட்டு சிவபதவி பெற்றனர்.இந்நிலையில் ராஜராஜனும் இறைவனடி சேர்ந்தான்.

Read more: http://www.penmai.com/forums/spirituality/56460-64-thiruvilaiyadal-puranam-64-a-5.html#ixzz2nzIGpzVg

## 47. கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்!

ராஜராஜனின் மகன் சுகுணபாண்டியன், தன் தந்தையின் மறைவுக்குப் பிறகு பதவியேற்றான். அவனது ஆட்சிக்காலத்தில் கரிக்குருவி ஒன்று மதுரை அருகில் இருந்த ஒரு நகரில் வசித்தது. முற்பிறப்பில், இந்தக் குருவி வலிமை மிக்க ஆண்மகனாக விளங்கியது. ஆனால், அவன் செய்த பாவவினையால் இப்பிறப்பில் குருவியாகப் பிறந்திருந்தான். இந்தக் குருவியை பருந்துகளும், காகங்களும் விரட்டி விரட்டி அடித்தன. குருவி பயத்திலேயே காலம் தள்ளிக் கொண்டிருந்தது.இதனால், அவ்வூரை விட்டு கிளம்பி அருகிலிருந்த காட்டிற்குப் போய்விட்டது.அங்கே, காகம் போன்ற எதிரிப்பறவைகள் இல்லாததால் அங்கேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தது. ஒருமுறை, சிவனடியார் ஒருவர் அது தங்கியிருந்த மரத்தடியில் இளைப்பாறுவதற்காக அமர்ந்தார். அப்போது அந்த வழியாகச் சென்ற சிலர் அடியவரை வணங்கினர். அவர்களுக்கு அவர் அறிவுரைகளைச் சொன்னார். மேலும் மதுரை நகரின் பெருமைகளை எடுத்துச் சொன்ன அவர், அந்த ஊருக்குச் சென்றாலே போதும்! நமக்கு பிறவிப்பிணி நீங்கிவிடும். அங்குள்ள பொற்றாமரைக் குளத்தின் தீர்த்தம் உடலில் பட்டாலே போதும்! சகல வளமும் கிடைக்கும், மோட்சம் உறுதி, என்றார். இதை மரத்தில் இருந்து கேட்ட குருவி, சிவநாமத்தை உச்சரித்தபடியே மதுரை நோக்கிப் பறந்தது. கோயிலுக்குள் நுழைந்து பொற்றாமரைக் குள நீரில் தன் உடல் படும்படியாக உரசிக்கொண்டு மேலெம்பியது. பிரகாரத்தைச் சுற்றிப் பறந்து வலம் வந்து, மீனாட்சியம்மன் சன்னதிக்குள்ளும், சுந்தரேஸ்வரர் சன்னதிக்குள்ளும் இருந்த உத்திரத்தின் மேல் அமர்ந்து தெய்வதரிசனம் செய்தது.

மூன்று நாட்கள் தொடர் தரிசனம் செய்த அந்தக் குருவியைப் பற்றி அன்னை மீனாட்சி, தன் கணவரிடம் கேட்டாள். அதன் பூர்வஜென்மம் குறித்து அம்பிகையிடம் சுவாமி விளக்கினார். பின், அந்தக் குருவிக்கு மிருத்யுஞ்சய மந்திரத்தை அவர் உபதேசம் செய்தார். அது ஆயுள்விருத்திக்கும், பிறவித்துன்பம் நீங்குதலுக்கும் உரியதாகும். மந்திரம் கேட்ட குருவி, இறைவனிடம், இறைவா! என்னை மற்ற பறவைகள் துன்புறுத்துகின்றன. அவற்றை சமாளிக்கும் அளவு எனக்குபலத்தைத் தந்தருள வேண்டும், என்றது. இறைவனும் அதை ஏற்றார். குருவியே! உன்னைஇனி மக்கள் வலியன் என்று அழைப்பார்கள். நீ பலம் மிக்க குருவியாகஇருப்பாய். மற்ற பறவைகளை விரட்டும் ஆற்றல் பெறுவாய், என்று சொல்லி திரியம்பக மந்திரத்தையும் உபதேசித்தார். இந்த மந்திரத்தைக் கற்ற அந்தப்பறவை நீண்டகாலம் அதை உபதேசித்து இறையடி சேர்ந்தது. குருவிகளை நாம் தொந்தரவுசெய்யக்கூடாது. அவற்றின் ஒலியை மந்திரஒலியாகவே கேட்க வேண்டும். ஏனெனில், வலியன்

பறவைக்கு வரமளித்த இறைவன், உன் வம்சமும் இனி வலியன் என்றே அழைக்கப்படும், என்று சொல்லியுள்ளார். சுந்தரேஸ்வரப் பெருமான் குருவிக்கு உபதேசம் செய்தது மட்டுமல்ல! நாரைக்கும் முக்தி கொடுத்துள்ளார்.மனிதஜீவன்கள் மட்டுமின்றி, தனது எல்லா படைப்புகளுக்கும் அவர் கருணைசெய்துள்ளார்.

## 48. நாரைக்கு முக்தி கொடுத்த படலம்!

பாண்டியநாட்டின் தென்பகுதியில் இருந்த பெரிய தடாகம் ஒன்றில் வாழ்ந்தமீன்களை உண்டு நாரை ஒன்று வசித்து வந்தது. ஒரு சமயம் மழை பெய்யாமல் போனதால் குளம் வற்றிப் போனது. நாரைக்கு உணவு கிடைக்கவில்லை. எனவே, அது ஒரு வனத்திற்குள் சென்று, அங்கிருந்த நீர்நிலைகளில் சிக்கிய மீன்களைத் தின்று வாழ்ந்தது. அங்கு அச்சோ என்ற குளம் இருந்தது. இதன் கரையில் பல முனிவர்கள் தவம் செய்து வந்தனர். இந்த புண்ணியசீலர்கள் பயன்படுத்தும் குளத்தில் நிறைய மீன்கள் இருந்தன. இருந்தாலும், அந்த தவசீலர்கள் வசிக்கும் பகுதியில் மீன்பிடித்து சாப்பிடுவது மகாபாவம் என கொக்கு நினைத்தது. அங்குள்ள முனிவர்களில்ஒருவரது பெயர் சத்தியன். இவர் மதுரை தலம் பற்றியும், அங்கு குடிகொண்டிருக்கும் சுந்தரேஸ்வரர் பற்றியும் அருமையாக தன் சகமுனிவர்களிடம்பேசுவார். இதைக் கேட்ட நாரை மதுரை நோக்கிப் பறந்தது. பொற்றாமரைக் குளத்தின்நீர் தன் மீது படும்படியாக தலையை மூழ்கி விட்டு பறந்தது. அன்னை மீனாட்சிமற்றும் சுந்தரேஸ்வரர் சன்னதி மேலுள்ள இந்திர விமானத்தைச் சுற்றி சுற்றிப்பறந்தது 15 நாட்கள் இவ்வாறே செய்து, பதினாறாம் நாள் பொற்றாமரைக்குளக்கரைக்கு வந்தது.

குளத்தில் மீன்கள் துள்ளி விளையாடின. அவற்றைப் பிடித்து உண்ண எண்ணிய வேளையில், ஞானம் பிறந்தது. இப்படி செய்வது பாவமல்லவா? அது பசியைப் பொறுத்துக் கொண்டது. தனது இயற்கையான சுபாவத்தைக் கூட கருணையின் காரணமாகவும், தன் மீது கொண்ட நம்பிக்கையாலும் மாற்றிக்கொண்ட நாரையின் முன்னால் சுந்தரேஸ்வரர் தோன்றி, என்ன வரம் வேண்டும் நாரையே? என்றார். ஐயனே! எங்கள் இனத்தவர் மீன்களைப் பிடித்து உண்ணும் சுபாவமுடையவர்கள். ஆனால், இந்த புண்ணிய குளத்தில் அதைச் செய்யாமல் இருக்க தாங்களே அருள வேண்டும். எனவே, இந்தக் குளத்தில் மீன்களே இல்லாமல் செய்ய வேண்டும். மேலும், எனக்கு சிவலோகத்தில் தங்கும் பாக்கியம் வேண்டும், என்றது. பெருமானும் அவ்வாறே அருளினார். நாரை நான்கு புயங்களும், மூன்று கண்களும் பொருந்திய சிவ வடிவம் பெற்று, வானுலகத்தோர் தூவிய மலர் மாரியில் மூழ்கியவாறு விமானத்தில் ஏறித் தேவ துந்துபிகள் முழங்க சிவலோகத்தை அடைந்தது. பின்னர் நந்தி

கணங்களுள் ஒன்றாய்த் தங்கியிருந்தது. நாரையின் வேண்டுதற்கிணங்க இன்று வரை பொற்றாமரைக் குளத்தில் மீன்களே கிடையாது என்பது குறிப்பிடத் தக்கது.

## 49. திருவால வாயான படலம்!

பாண்டிய நாட்டில் பல அரசர்கள் ஆட்சி நடத்தினர். கீர்த்திபாண்டியன்என்பவன் காலத்தில் உலகம் அழியும் நிலை வந்தது. ஏழு கடல்களும் பொங்கின. எங்கும் வெள்ளம். உலகம் முழுக்க தண்ணீரால் நிறைந்தாலும், மீனாட்சியம்மனின் கோயிலுக்குள் மட்டும் வெள்ளம் வரவில்லை. விமானங்கள் உயர்ந்து நின்றன. பொற்றாமரைக் குளத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. மேலும்மதுரையிலுள்ள யானைமலை, நாகமலை, பசுமலை, பன்றிமலை, ரிஷபமலை ஆகியவையும் அழியவில்லை. ஒருவாறாக வெள்ளம் வடிந்தது. இறைவன் கருணை கொண்டு மீண்டும் உலகத்தைப் படைத்தார். மனிதர்கள் உள்ளிட்ட ஜீவராசிகள் தோன்றினர். ஒரு யுகமே முடிந்து அடுத்த யுகம் துவங்கியது. அந்த யுகத்தில் வங்கியசேகர பாண்டியன் என்பவன் ஆட்சியில் முதன்முதலாக அமர்ந்தான். அவன் மீனாட்சியம்மன் கோயிலை புதுப்பித்து, கும்பாபிஷேகம் நடத்தினான். கோயிலைச் சுற்றி தெருக்களைஉருவாக் கினான். அது ஒரு நகரம் போல இருந்தது. ஆனாலும் அந்த தெருக்களில் கட்டப் பட்ட வீடுகள் மக்கள் தொகைக்கு போது மானதாக இல்லை. வீடில்லாத மக்கள் மன்னனிடம் சென்று, தாங்கள் வெட்டவெளியில் மழையிலும், வெயிலிலும் வேதனைப்படுவதாக முறையிட்டார்கள். புதிய நகரம் ஒன்றை நிர்மாணிக்கும்படி கோரிக்கை வைத்தார்கள். இவர்களின் வேதனையைப் புரிந்து கொண்ட மன்னன், நகரை மேலும் விரிவுபடுத்த ஏற்பாடு செய்தான். எதுவரை விரிவுபடுத்தலாம் என்பது குறித்து முடிவு செய்ய வேண்டியிருந்தது. மிகப்பெரிய இந்த பொறுப்பை சுந்தரேஸ்வரரிடமே ஒப்படைப்பது என முடிவெடுத்து, ஆலயம் சென்று வணங்கினான். பெருமானிடம் தன்குறையைச் சொன்னான். அப்போது அசரீரி ஒலித்தது. இந்த நகரத்தை நானே நிர்மாணிப்பேன், என்றது.

ஒருநாள் சித்தர் ஒருவர் நகருக்குள் வந்தார். அவரது கைகளில் பாம்பு ஒன்று இருந்தது. அதைத் தடவிக்கொடுத்தபடியே வீதிகளில் நடந்தார். மக்கள் அவர் பின்னால் சென்றனர். தங்கள் நகருக்கு வந்த சித்தர் பற்றி வங்கியசேகரனுக்குதகவல் கிடைத்தது. அவரை அவன் வணங்கினான். சித்தர் அவன் முன்னிலையில், ஆலமே! நாகதேவா! இதோ, இந்த மன்னன், இந்நகரை நிர்மாணம் செய்யும் எல்லை பற்றி அறிய விரும்புகிறான். அதைக் காட்டுவாயா? என்றார். அப்போது, பாம்புக்குள் இருந்து நாகதேவன் வெளிப்பட்டான். ஐயனே வணக்கம்! நான் இவ்வூரின் எல்லையைக்

காட்டுகிறேன். அப்படி அமையும் நகருக்கு எனது பெயரைச் சூட்ட தாங்கள் உறுதி பெற்றுத் தரவேண்டும், என்றான். நானே அந்த வரத்தை உனக்கு தருகிறேன். உன் பெயரே இந்த நகருக்குச் சூட்டப்படும், என்றார் சித்தர். அந்த சித்தர் வேறுயாருமல்ல. சுந்தரேஸ்வரப் பெருமான் தான் சித்தராக உருமாறி அங்குவந்திருந்தார். உடனடியாக நாகம் வளைந்தது. மிக நீண்ட உருவம் எடுத்து தன்வாலின் நுனியைக் வாயால் கவ்விக் கொண்டது. அப்போது அது வட்ட வடிவமாகஇருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அந்த வட்டம் விரிந்து கொண்டே போனது. அந்தஎல்லையை மன்னன் குறித்துக் கொண்டான். பின், பாம்பு முன் போல் சுருங்கி சித்தரின் கையில் போய் சுருண்டு கங்கணம் போல் அமர்ந்தது. சக்கரம் போல வட்டவடிவமாக இருந்த அந்த நிலப்பரப்பைச் சுற்றி மதில் சுவர் எழுப்பினான் மன்னன்.அதற்கு சக்ரவாளகிரி என்று பெயரிடப் பட்டது. மதிலின் தெற்கு வாசல்திருப்பரங்குன்றம் என்றும், வடக்கு வாசல் ரிஷபமலை என்றும், மேற்கு வாசல் திருவேங்கடமலை என்றும், கிழக்கு வாசல் திருப்பூவணம் (திருப்புவனம்) என்றும்அழைக்கப்பட்டது. இந்த மதில் எல்லைக்குள் பிரம்மாண்ட நகரம், கண்கவர் தெருக்களுடன் எழுப்பப்பட்டது. ஆலமாகிய பாம்பு தன் வாயை, அடிப்படையாகக் கொண்டு எல்லை வகுத்ததால் ஆலவாய் என்று நகருக்கு பெயர் சூட்டப்பட்டது.

## 50. சுந்தர பேரம்பு எய்த படலம்!

சோழமன்னன் விக்கிரமன் பாண்டியன் மீது பகை கொண்டான். ஆலவாய் நகரைப் பிடிக்க திட்டமிட்டான். விக்கிரமனுக்குத் துணையாக வடதேசத்தில் இருந்த சில மன்னர்களும் இணைந்துகொண்டனர். அவர்கள் ஆலவாய் நகருக்குள் புகுந்து பெரும் அட்டகாசம் செய்தனர். மக்களை அடித்து விரட்டினர். வியாபாரிகள் வைத்திருந்த பொருட்களை கொள்ளையடித்தனர். பசுக்களை பிடித்துச் சென்றனர். இதைக்கண்டு மக்கள் அஞ்சி நடுங்கினர். பாண்டிய மன்னனுக்கு தகவல் சென்றதும் அவன் சுந்தரேசுவரப் பெருமானை மனதார நினைத்தான். அப்போது அசரீரி ஒலித்தது. வங்கிய சேகரனே! கவலைப்படாதே. உனது படைகளுடன் எதிரிகளின் படைகளை எதிர்த்து நில். நான் உனக்கு துணைபுரிவேன், என்று சுந்தரேஸ்வர் அருள்வாக்கு சொன்னார். பாண்டியன் அச்சத்தை விடுத்து போர்க்களத்தில் புகுந்தான்.பகைவர்கள் ஆங்காங்கே இருந்த ஏரிகளை உடைத்திருந்தனர். அவற்றையெல்லாம் செப்பனிடுவதற்கு படையில் ஒரு பகுதியை அனுப்பிவிட்டான். மற்றவர்களுடன் இணைந்து கடுமையாக போரிட்டான். இந்த நேரத்தில் பாண்டியப்படைக்குள் வேடன் ஒருவன் புகுந்தான். அவன் எதிரிகளை துவம்சம் செய்தான். அவனைப்போல் அம்புமழை பொழிவார் அந்தக்கூட்டத்தில் யாருமே இல்லை.

ஒரு பாணத்தை விடுத்தால் அது நூறு பேரை அழித்தது. இந்த மாயாவி எப்போது தனது படையில் சேர்ந்தான் என்பதை பாண்டியனால் அனுமானிக்க முடியவில்லை. எதிரியின் மார்பில் குத்தியிருந்த ஒரு அம்பைப் பிடுங்கி சோதனை செய்தான். அந்த அம்பில் ரிஷப முத்திரை இருந்தது. சுந்தரேசன் என்று பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அதன் பிறகே அங்கு நிற்பது சுந்தரேஸ்வரப் பெருமான் என்பது பாண்டியனுக்குத் தெரியவந்தது. இவ்விதம் வேடம் கொண்டு வந்த இறைவர் விடுத்த சுந்தரப் பேரம்பினால் சோழர் படை வலுவிழந்தது. அவர்கள் புறமுதுகிட்டு ஓடினர். இந்திர வில்லும், கரிய மேகமும் போலப் போர்களத்தில் வில் ஏந்திய கரிய உடலுடன் தோன்றிப் போர்புரிந்த சிவபெருமானாகிய வேட வீரர், பாண்டியனுடைய மலர்ந்த முகத்தை நோக்கினார். பின்னர் அவ்விடத்தை விட்டு மறைந்தார். வங்கியசேகரன் வெற்றிபெற்றான். பாண்டிய நாட்டுக்கு ஒரு இழுக்கு வந்தால், அதை துடைத்தெடுக்க பல சந்தர்ப்பங்களிலும் மீனாட்சிசுந்தரேஸ்வரர் உதவி செய்தார்.வெற்றியை அளித்த சோமசுந்தரருக்கு நிலையாக பூசனைப் பொருட்களை அளித்தான்.இரத்தின ஆபரணங்களும், ஒளி வீசும் மாணிக்கத்தால் இழைக்கப் பெற்ற வில்லும், சுந்தரப் பேர் எழுதிய அம்பும் செய்து சாத்தினான். நீதி வழுவாமல் அறம்தழைத்தோங்கி நெடுநாள் ஆட்சி புரிந்து வந்தான்.

## 51. சங்கப் பலகை கொடுத்த படலம்!

வங்கியசேகரனின் ஆட்சி பாண்டியநாட்டில் நடந்தபோது, வடக்கே உள்ள காசியில் பிரம்மா பத்து அசுவமேத யாகங்களை செய்தார். யாகம் முடிந்த மறுதினம் அவர் தனது துணைவியரான சரஸ்வதி, சாவித்ரி, காயத்ரி ஆகியோருடன் கங்கையில் நீராடச் சென்றார். செல்லும் வழியில் ஒரு கந்தர்வக்கன்னி யாழ் மீட்டிக்கொண்டிருந்தாள். அந்த இனிய இசையைக் கேட்ட சரஸ்வதி தனது வீணை இசையைவிட அந்தக்கன்னியின் யாழிசை இனிமையாக இருந்ததால் தன்னை மறந்து அங்கேயே நின்றுவிட்டாள். இதைக் கவனிக்காத பிரம்மா மற்ற மனைவியருடன் கங்கைக்குச் சென்றுவிட்டார். அவர்களுடன் இணைந்து நீராடி கரையேறினார். இசையில் லயித்திருந்த சரஸ்வதி அந்தக்கன்னி தன் இசையை முடித்ததும் தன்னிலைக்குத் திரும்பினாள். கணவரும் மற்ற தேவியரும் தன்னைக் கவனிக்காமல் முன்கூட்டியே சென்றுவிட்டது பற்றி அவளுக்கு வருத்தம் ஏற்பட்டது. நீராடிவிட்டு கரையில் நின்ற அவர்கள் அருகே சென்ற சரஸ்வதி பிரம்மாவிடம், நான் அந்தப் பெண்ணின் இன்னிசை யில் மயங்கி அந்த இடத்தில் நின்றுவிட்டேன். நான் பின்னால் வருகிறேனா என்பதைக்கூட கவனிக்காமல் நீங்கள் மூவரும்

சென்றுவிட்டீர்கள்.நான்வரும்வரை நீங்கள் கரையில் காத்திருந்திருக்கலாம். இணைந்தே நீராடியிருக்கலாம். ஆனால், சற்றும் என்னைப் பொருட்படுத்தாமல் நீங்கள் மட்டும் நீராடிவிட்டு கரையேறியது நியாயமா? என்று கேட்டாள். அவளதுகோபத்தைக் கண்ட பிரம்மா, நீ சொல்வது வித்தியாசமாக இருக்கிறது. இசைக்குராணியே நீதான். நீ இன்னொரு பெண்ணின் இசையில் லயித்து நின்றாய் என்றால்என்னால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? மேலும் முன்னே செல்லும் கணவனின்பின்னால் வருவதுதான் ஒரு பத்தினிக்குரிய கடமை. அதை மறந்து நீ இசையைரசித்தது மட்டுமல்லாமல் கோபப்படுவது முறையற்றது. எனவே கடமை மறந்த உனக்குஒரு சாபம் கொடுப்பேன்.

உனக்கு 48 வடிவங்கள் இருக்கின்றன. இந்த வடிவங்கள் அனைத்தும் பூலோகத்தில் புலவர்களாக பிறவி எடுக்கும். இந்த 48 பேருக்கும் பூலோகத்தில் உள்ள ஆலவாய் என்னும் மதுரை நகரில் உள்ள சுந்தரேஸ்வர பெருமான் தலைமைப்புலவராக இருப்பார். அவரது அருளால் உனது வடிவங்கள் ஒன்றிணைந்து மீண்டும் பிரம்மலோகத்திற்கு வருவீர்களாக, என்றார். பிரம்மாவின் சாபப்படி சரஸ்வதியின் 48 வடிவங்களும் மதுரையில் புலவர்களாக அவதரித்தனர். அவர்கள் 18 மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர். சுந்தரேஸ்வர பெருமானின் பக்தர்களாக அவர்கள் திகழ்ந்தனர். அந்தப் புலவர்களை சோதிக்கும் வகையில் சுந்தரேஸ்வர பெருமான் ஒருமுறை மற்றொரு புலவர் போல வேடமணிந்து அந்தப் புலவர்களின் முன்னால் தோன்றினார். புலவர்களே! உங்களைப் பார்த்தால் புலமையில் மிகவும் தேர்ச்சி பெற்றவர் களாக தெரிகிறது. நீங்கள் இப்போது என்ன பணியில் ஈடுபட்டிருக்கிறீர்கள்? என்று கேட்டார். அந்தப் புலவர்கள் அவரிடம், எங்களுக்கு ஒரு நல்ல தலைவரை தேடிக்கொண்டிருக்கிறோம். அவரது தலைமையில் நாங்கள் இதுவரை இயற்றிய நூல்களை அரங்கேற்றம் செய்ய முடிவு செய்துள்ளோம், என்றனர். அப்படியானால் என்னோடு வாருங்கள், என்ற புலவர் அவர்களை சுந்தரேஸ்வரரின் சன்னதிக்கு அழைத்துச் சென்றார். நேராக கருவறைக்குச் சென்றவர் அப்படியே லிங்கத்துடன் ஐக்கியமாகிவிட்டார். தங்களை அழைத்து வந்தது சுந்தரேஸ்வர பெருமானே என்பதை உணர்ந்த 48 புலவர்களும் அவரையே தங்கள் தலைவனாக ஏற்றனர். இதைப்பற்றி அறிந்த வங்கிய சேகர பாண்டியன், அந்தப் புலவர்களை தனது அவைக்கு வரவழைத்தான். அவர்கள் மன்னனை வாழ்த்தி பாமாலை பாடினர். இதைக் கேட்டு மகிழ்ந்த பாண்டியர் அவர்களுக்கு பொன்னும் பொருளும் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் கோயிலின் வடமேற்கு திசையில் மண்டபம் ஒன்றை கட்டிக் கொடுத்தான்.

அந்த மண்டபத்திற்கு சங்க மண்டபம் என்று பெயர் சூட்டப்பட்டது. 48 புலவர்களும் சங்கப் புலவர்கள் என அழைக்கப் பட்டார்கள். எங்கிருந்தோ வந்தபுதிய புலவர்களுக்கு இப்படி சலுகைகள் அளிக்கப்பட்டது மதுரை நகரில் ஏற்கனவேஇருந்த பழைய புலவர்களுக்கு பொறாமையை ஏற்படுத்தியது. எனவே வாதப் போட்டிஒன்றுக்கு ஏற்பாடு செய்து புதியவர்களை தோற்கடிக்க பழையவர்கள் முடிவுசெய்தனர். பாண்டியனும் வாதப்போட்டிக்கு ஏற்பாடு செய்தான். ஆனால், புதியவர்களின் வாதத்திறமையின் முன்னால், பழையவர்களின் வாதம் எடுபடவில்லை. அவர்கள் தோற்றோடினர். பின், சங்கப்புலவர்கள் அனைவரும் சுந்தரேஸ்வரரின் சன்னதிக்குச் சென்று தங்கள் புலமையை மேலும் வளர்க்க அருள்புரியும்படி வேண்டினர். சுந்தரேஸ்வரர் அவர்கள் முன் முன்னர் வந்த அதே புலவர் வடிவில் வந்தார். புலவர்கள் அவரை வணங்கினர். அவர் புலவர்களிடம் ஒரு பலகையைக்கொடுத்தார். புலவர்களே! இந்தப் பலகை பார்ப்பதற்கு குறுகியது. ஆனால், மந்திரசக்தி கொண்டது. ஒரு புலவர் தனது பாடலுடன் இந்தப் பலகையில் அமரவரலாம். பாடல் சரியாக இருந்தால் இது இடம் கொடுக்கும். அடுத்த புலவர் ஒருசரியான பாடலுடன் வந்தால் இது சற்று நீண்டு அவருக்கும் இடம் கொடுக்கும். நீங்கள் அனைவருமே சரியான பாடலுடன் வந்தால் 48 பேருமே அமருமளவுக்கு இதுவளரும். நீங்கள் மாற்றாருடன் பாடல் போர் செய்ய நேரிட்டால், உங்கள் பாடல் சரியானது தானா என்று அறிந்து கொள்ள ஒரு துலாக்கோல் (தராசு) போல இது உதவும், என்று சொல்லி மறைந்தார். சங்கப்புலவர்களான நக்கீரர், பாணர் போன்றவர்கள் இதில் சரியான பாடல்களுடன் முதலில் அமர்ந்தனர். மற்றவர்களும் வரிசையாக அமரபலகை இடம் கொடுத்தது. ஆனால், அனைவரது பாடலும் ஒரே பொருளைக் குறிப்பதாக அமையவே, ஒவ்வொருவரும் தங்கள் பாடல் எது என தெரியாமல் ஒருவருக்கொருவர் சண்டை போட்டனர். அப்போதும், சுந்தரேஸ்வரர் புலவர் வடிவில் வந்து, அவரவருக்குரிய சரியான பாடலைப் பிரித்துக் கொடுத்தார்.

## 52. தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்!

மதுரையில் தமிழ் வளர்ந்த நேரத்தில் வங்கியசேகர பாண்டியனின் மகன் வங்கிய சூடாமணி பாண்டியன் ஆட்சிப் பொறுப்பேற்றான். இந்த மன்னன் தான் மீனாட்சியம்மன் கோயிலில் நந்தவனம் அமைத்தவன். பல மரங்களையும் மலர்ச்செடிகளையும் அதில் நட்டான். அதில் பூத்த மலர்களே அம்பாளுக்கும் சுவாமிக்கும் மாலை கட்ட பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக செண்பக மலர்கள் இந்த நந்தவனத்தில் பூத்து மணம் பரப்பின. இதனால் இந்த நந்தவனத்தை செண்பகத்தோட்டம் என மக்கள் அழைத்தனர். சுந்தரேஸ்வரருக்கு செண்பகமாலையை

அணிவித்து செண்பகசுந்தரர் என்று செல்லப் பெயர் இட்டனர். தங்கள் மன்னனுக்கு செண்பகப்பாண்டியன் என்று புனைப்பெயர் சூட்டி அழைத்தனர். மரம் நட்டதற்காக பட்டப்பெயர் பெற்ற முதல் மனிதன் பூமியில் இவன் தான் போலும்! ஒரு சமயம் அந்த செண்பகவனத்தில் அருகில் இருந்த சந்திரகாந்த சலவை மண்டபத்திற்கு மன்னன் தன் ராணியுடன் வந்தான். மலர்களின் மணம் நாசியைத் துளைத்தது. அதை இன்பமாக நுகர்ந்தபடியே தன் ராணியுடன் கொஞ்சி மகிழ்ந்திருந்தான். அவளது கூந்தலை வருடினான். இந்த மணம் தோட்டத்தில் இருந்து வருகிறதா! இல்லை! என் தேவியின் கூந்தலில் இருந்து வீசுகிறதா! அப்படியானால், பெண்களின் கூந்தலுக்கும் இயற்கையாகவே மணம் உண்டோ? இருக்க முடியாதே... இவளும் செண்பகம், மல்லிகை என பல மலர்களை கூந்தலில் சூடுவாள். அந்த மணம் கூந்தலில் இருக்கத்தானே செய்யும்! அந்த மணம் இங்கே பரவுகிறதோ! என்று சிந்தித்தான். தன் சந்தேகத்தை மனைவியிடமே கேட்டான். மாமன்னரே! திடீரென இதென்ன சந்தேகம்! சந்தேகம் மனிதர்களுக்கு ஆகாது. அதை உடனடியாகத் தீர்த்துக் கொள்ளுங்கள். எனக்கு இந்த சந்தேகத்திற்குரிய விடை தெரியவில்லை. மலர்கள் சூடுவதாலும் வாசனை வரலாம்! இயற்கையாகவும் இருக்கலாம்! எனவே, நீங்கள் இதுபற்றி உங்கள் தமிழ்ச்சங்க புலவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள், என்றாள். பாண்டியன் அமைச்சர்களை அழைத்து, அமைச்சர்களே! பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டா என்ற சந்தேகம் என் மனதில் எழுந்துள்ளது. இதைத் தீர்த்து வைப்பவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசு தருகிறேன்.

பரிசுத்தொகையை பட்டு முடிப்பில் கட்டி, நமது தமிழ்ச்சங்க வாசலில் அறிவிப்பு பலகையுடன் தொங்கவிடுங்கள், என்று உத்தரவிட்டான். அமைச்சர்களும் உடனடியாக அதைச் செய்து முடித்தனர். அத்துடன் ஊரெங்கும் இதுபற்றி முரசும்அறையப்பட்டது. அவ்வளவு தான்! அரண்மனை முன்னால் பெரும் கூட்டம் குவிந்தது. வந்தவர்களெல்லாம் தங்கள் வாய்க்கு வந்ததையெல்லாம் மன்னனிடம் சொன்னார்கள். மன்னனுக்கு திருப்தியில்லை. தெளிவான பதில் தெரியவேண்டும், என்று சொல்லி அனுப்பிவிட்டான். மக்களும் ஓய்ந்து போனார்கள். மதுரை நகரில் தருமி என்னும் பெயருடைய ஆதிசைவர் ஒருவர் வசித்து வந்தார். அவருக்கு பெற்றோர் இல்லை, மனைவி இல்லை, சகோதர உறவிலும் யாருமில்லை. அனாதையாகத் திரிந்த அவருக்குதிருமணத்தின் மூலமாக ஒரு பந்தத்தை உருவாக்கிக் கொள்ளும் ஆசை இருந்தது. அனாதையாக இருந்தால் பரவாயில்லை... ஆகாரத்துக்கு கூட வழியில்லாதவனுக்கு யார்பெண் கொடுப்பார்கள்! தருமிக்கு பெண் கொடுக்க யாரும் முன் வரவில்லை. தருமிசுந்தரேஸ்வரரின் தீவிர பக்தர். பெருமானே! மன்னர் ஒரு போட்டிஅறிவித்திருக்கிறார். அதில் அறிவிக்கப்பட்ட பரிசு

எனக்கு கிடைத்தால், நானும் ஒரு மனிதனாவேன். ஆயிரம் பொன்னுக்கு அதிபதியானால், எனக்கும் ஒரு அழகு மங்கை மணவாட்டியாகக் கிடைப்பாள். நீ தான் அந்தப் பரிசு கிடைக்க அருளவேண்டும், என்று உருக்கமாக வேண்டினார். அப்போது அங்கே ஒரு புலவர் வந்தார். வந்தவர், சுந்தரேஸ்வரப் பெருமான் என்பது தருமிக்கு எப்படி தெரியும்! அவர் தருமியின் கையில், ஒரு ஓலைச் சுவடியைத் திணித்தார். தருமியே! நீர் மன்னனிடம் இந்த ஓலையுடன் செல்லும்! இதிலுள்ள பாடலை அவரிடம் வாசியும். மன்னனின் சந்தேகமும் தீரும்! உமக்கு பரிசும் கிடைக்கும்! நீர் கேட்ட அழகு மங்கையும் கிடைப்பாள், என்றார். தனக்கு பரிசை அள்ளித் தரப்போகும் பாட்டு கிடைத்ததோ இல்லையோ, தருமி தன் முன்னால் லிங்கவடிவில் இருந்த சுந்தரேஸ்வரரையே மறந்துவிட்டார். பணம் இருந்தால் போதும்! கடவுள் எதற்கு என்று கேட்பவர்கள், அன்றும், இன்றும், என்றும் இருப்பார்கள் போல் தெரிகிறது. நமக்கு இந்த பணமெல்லாம் திறமையால் வந்தது என்று மார்தட்டிக்கொள்பவர்கள், அந்தத் திறமை யாரால் வந்தது என்பதைச் சிந்திக்க மறந்துவிடுகிறார்கள். தருமியும், தனக்குத் தேவையானது கிடைத்ததும், தன்னை ஒரு திறமைசாலியாகக் கருதிக் கொண்டு செண்பகப் பாண்டியன் முன்போய் நின்று, வணக்கம் தெரிவித்தார். மன்னனின் கேள்விக்குரிய விடை அந்தப் பாடலில் இருப்பதாகச் சொன்னதும், மன்னன் மகிழ்ச்சியடைந்து அதை வாசிக்கச் சொன்னான்.

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழிஇய நட்பின் மயிலியிற்
செறியெயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே

என்று பாடினார். மன்னன் பெரிய தமிழறிஞன். பாடலின் உட்கருத்தை அறிந்த அவன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். பெண்களுக்கு இயற்கையிலேயே கூந்தலில் மணம் உண்டு என்பது இந்தப் பாடல் உணர்த்திய கருத்தாக இருந்தது. அத்துடன் அவனது கருத்தும், பெண்களுக்கு கூந்தலில் இயற்கை மணமுள்ளது என்பதாக இருந்ததால், தருமிக்கு பரிசுப்பொருளைக் கொடுக்க உத்தரவிட்டான். தருமிக்கு ஏக சந்தோஷம்! யாரோ ஒருவர் கொடுத்த பாட்டிற்கு, ஆயிரம் பொற்காசு பரிசு, அடுத்து திருமணம், குழந்தை குட்டிகள், வீடு, வாசல், தூரத்து சொந்தங்கள் கூட காசைக் கண்டதும் ஓடி வரும் நிலைமை... இதையெல்லாம் நினைத்து பரவசத்தில் மகிழ்ந்து நின்றார். தருமியைக் காவலர்கள் தமிழ்ச் சங்க மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கிருந்த தலைமை புலவர் நக்கீரர், விஷயத்தைக் கேள்விப்பட்டு தருமியின்

கையில் இருந்த ஓலையை வாங்கிப் படித்தார். பின்னர் மன்னனும் அங்கு வர மன்னா! தருமியின் பாட்டிலுள்ள சொற்களில் பிழையேதும் இல்லை. ஆனால் அதன் பொருள் பிழையானதாக உள்ளதே! இதற்கு தாங்கள் பரிசு அறிவித்திருப்பது ஆச்சரியமாக உள்ளது, என்று சர்ச்சையைக் கிளப்பினார். இந்த சர்ச்சைக்குபதிலளிக்க தருமி ஒன்றும் தமிழ்ப்புலமை மிக்கவர் இல்லையே! அதிலும்புகழ்மிக்க நக்கீரருடன் வாதம் செய்யும் திறமை யாருக்கு இருக்கிறது!மன்னனும், ஏதும் பேசாமல் நிற்கவே, தருமியிடம் ஓலை திரும்ப நீட்டப்பட்டது.தருமிக்க அழுகை பொத்துக்கொண்டு வந்தது. அதை அடக்கிக்கொண்டே சுந்தரேஸ்வரர்சன்னதிக்கு ஓடினார். பெருமானே! என் கையில் யாரோ ஒருவர் கொண்டு வந்த தந்தஓலை கிடைத்ததும், உன்னையே மறந்து பொருளாசையில் அரசவைக்கு ஓடினேனே! அதற்குதகுந்த தண்டனை கிடைத்துவிட்டது. இனி, என் ஆசை எப்படி நிறைவேறும்! நான், அனாதையாக வாழ வேண்டுமென்பது தான் என் விதி போலும்! எனக்கு இப்படி ஒருபிழையான பாட்டை ஏன் கிடைக்கச் செய்தாய்? என்று புலம்பினான்.

தன் பக்தனின் குரல் கேட்டும், தன் பாடலிலேயே குற்றம் கண்டுபிடித்தநக்கீரருடன் வாதம் செய்யவும் எண்ணிய சுந்தரேஸ்வரர், மீண்டும் புலவர்வடிவில் தருமி முன் தோன்றினார். தருமி நடந்த விஷயங்களை அவரிடம் சொல்ல, ஏதுமறியாதவர் போல் கேட்ட அந்தப் புலவர் கோபத்துடன், தமிழ்ச்சங்கத்துக்கு விரைந்தார். தங்கள் முன்னால் ஒரு புலவர் செந்நிற முகத்துடன், ஜோதிவடிவமாய்நிற்பதைக் கண்டு செண்பகப்பாண்டியன் வியந்தான். அவரது தோற்றம் அவனைத்தடுமாறச் செய்தது. புலவர் சிங்கம் கர்ஜிப்பது போல் பேசினார். எனது பாட்டில்பிழையிருப்பதாகச் சொன்னீர்களாமே! எனக்கென்ன இலக்கணம் தெரியாதா? என்று கேட்டார். அப்போது நக்கீரர், புலவரே! உமது பாட்டின் சொற்களில்குற்றமில்லை, பொருளில் மட்டுமே குற்றமிருப்பதாகச் சொன்னேன், என்றார். அவருக்கு வந்திருப்பது சாதாரணப் புலவரல்ல! இறைவனே என்பது அவரதுதோற்றப்பொலிவில் இருந்தே விளங்கிவிட்டது. இருப்பினும், தமிழ் மீது தான்கொண்ட பற்று காரணமாக ஈசனிடமே வாதிடத் தொடங்கி விட்டார். சுந்தரேஸ்வரர்அவரிடம், கற்புக்கரசிகள், தேவலோகப் பெண்கள் ஆகியோருக்கு கூட கூந்தலில்இயற்கை மணம் இல்லையோ எனக் கேட்டார். நக்கீரர் அவரிடம், நிச்சயமாக இல்லை, என மறுத்தார். சரி.. நீர் தினமும் வணங்கும் காளஹஸ்தீஸ்வரரின் துணைவியானஞானப்பூங்கோதை அம்மைக்கும் அப்படித்தானோ, என்றார். ஆம்...என் அன்னைஉமையவளுக்கும் கூட அப்படித் தான், என்று அடித்துச் சொன்னார் நக்கீரர்.அப்போது சுந்தரேஸ்வரர் ஆக்ரோஷமானார். தன் நெற்றிக்கண்ணை அவர் திறக்கநக்கீரர் நடுங்கவில்லை. நீர் இறைவனாகவே இருந்தாலும், உம் பாடலின் பொருள்தவறானது தான், என்று துணிச்சலுடன்

வாதிட்டார். அப்போது, சுந்தரேஸ்வரர் தன் கண்களிலிருந்து தீப்பொறிகளை அவர் மீது பாய்ச்ச, நக்கீரர் பொற்றாமரை குளத்தில் போய் விழுந்தார். சுந்தரேஸ்வரர் மறைந்து விட்டார்.

## 53. கீரனைக் கரையேற்றிய படலம்!

சுந்தரரின் கோபத்தால் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கினார் நக்கீரன். வந்தது ஈசன் என்பதை உணர்ந்த செண்பக பாண்டியன், உணர்ச்சியும் சோகமும் மேலிட நக்கீரரை மீண்டும் பெறும் பொருட்டு கோயில் நோக்கி ஓடினான். மற்றபுலவர்களும் தொடர்ந்து ஓடிச் சென்று, இறைவனிடம் மீண்டும் நக்கீரரை சங்கத்திற்கு தந்தருள கண்ணீருடன் வேண்டினர். இறைவனும் ரிஷபத்தில் தோன்றி, நக்கீரரை பொற்றாமரை குளத்தில் இருந்து வெளிவரச் செய்தார். முன்பு நக்கீரரைஅழற் கண்ணால் நோக்கிய சோமசுந்தரக் கடவுள் இப்போது அருட்கண்ணால் நோக்கியருளினார். அன்னை உமையவளின் கூந்தலுக்கு இயற்கை மணமில்லை என்றுசொன்னதற்காக வருத்தம் தெரிவித்தார். திருக்காளத்தியர் மீது நேரிசைவெண்பாவினால் கயிலை பாதி, காளத்தி பாதி என்னும் அந்தாதியைப் பாடினார்.கவிதாஞ்சலி செய்தார். அந்த அந்தாதியைத் திருச் செவிமடுத்து, நேரில் வந்து நக்கீரனுடைய கையைப் பிடித்து கரையின் கண் ஏற்றினார் எம்பெருமான். இறைவனின்கோபத்தைப் பெற்ற பாக்கியம் அடைந்த அவர், அதைப் பிரசாதமாகக் கருதி கோபப்பிரசாதம் என்னும் பாமாலை பாடினார். நக்கீரன் கருணைக் கடலாகிய சோம சுந்தரக் கடவுளையும், மீனாட்சியம்மையாரையும் வணங்கினான். தீமை செய்தோருக்கும் நன்மை செய்ததைப் பொளுஃகச் செய்யுளில் அமைத்துக் கை கொடுத்து கயிலை வாசனை ஏற்றிப் போற்றினான். சோமசுந்தரக் கடவுள் நக்கீரனுக்குத் திருவருள் கனிந்து முன் போலவே நன்கு புலவர் கூட்டத்தில் இருக்கக் கடவாய்! என்று அருளி மீனாட்சியம்மையோடு மறைந்து திருக்கோயிலினுள் வீற்றிருந்தார். தருமிக்கு பொற்கிழி பரிசு வழங்கப்பட்டதுடன், பலவித சலுகைகளையும் மன்னன் அளித்தான். தமிழுக்காக குரல் கொடுத்த நக்கீரரின் இலக்கண அறிவை மேலும் பலப்படுத்த எண்ணினார் இறைவன்.

## 54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்!

பரமேஸ்வரன் பார்வதியிடம்,தேவி! நம் பிள்ளை நக்கீரன் என்னையே எதிர்த்து வாதாடியதைக் கவனித்தாயா! அவனது தமிழ்ப்பணி வியப்பிற்குரியது. அவனுக்கு இலக்கணம் கற்றுத்தந்தால், தமிழை இன்னும் அவன் வளப்படுத்துவான்.ஆனால், அவனுக்கு இலக்கணத்தைக் கற்றுக் கொடுக்க யார் இருக்கிறார்கள்? அப்படி ஒரு நபரைத் தேர்வு செய்ய வேண்டும். என்ன செய்யலாம்? நீயே ஒரு யோசனை

சொல்லேன்! என்றார். பார்வதிதேவி அதற்கு விடை சொன்னாள். நாதா! இதைக்கேட்டதும் எனக்கு நமது திருமணநாள் நினைவுக்கு வருகிறது. அன்றைய தினம் தேவாதி தேவர்களெல்லாம் நம் திருமணத்தைக் காண வந்ததால் வடக்கு தாழ்ந்து தெற்கு உயர்ந்தது. எனவே உலகை சமநிலைப்படுத்த அகஸ்திய முனிவரையும், அவரது மனைவி லோபமுத்திரையையும் தெற்கே அனுப்பினீர்கள். அப்போது, நீங்கள் அகத்தியருக்கு இலக்கணம் கற்பித்தீர்கள். அவரை அனுப்பி நக்கீரனுக்கு இலக்கணம் கற்றுக்கொடுங்கள், என்றாள். பக்தனுக்கு ஒரு நியாயமான விஷயம் நடக்க வேண்டுமானால், முதலில் அம்மன் சன்னதிக்கு செல்ல வேண்டும். அங்கே போய் விஷயத்தைச் சொல்லிவிட்டு, சுவாமி சன்னதிக்கு வந்தால் அதற்குள் அம்மா விஷயத்தை தந்தையிடம் போட்டுவிடுவாள். பக்தன் சுவாமி சன்னதிக்கு வந்து, சுவாமியிடம் விஷயத்தை மீண்டும் சொல்லிவிட்டு வீடு திரும்புவான். அம்மாவின் சிபாரிசாயிற்றே! நடக்காமல் இருக்குமா! இவன் வீடு திரும்புவதற்குள் கோரிக்கைக்குரிய பலனோ, அதை செயல்படுத்துவதற்குரிய பாதையோ கிடைத்து விடும்.

சில பிள்ளைகள் அதிர்ஷ்டசாலிகள். அவர்கள் எந்தக் கோரிக்கையையும் இறைவனிடம் வைப்பதில்லை. ஆனால், கடமையைச் சரிவர நேரத்துக்கு எவ்வித தயக்கமும் இன்றி வேகமாக முடித்து விடுவார்கள். அவர்களுக்குரிய பலனை ஆண்டவன் சற்று தாமதித்தாலும், மொத்தமாக கொடுத்து விடுவான். நக்கீரர் இரண்டாம் ரகம். இறைவன் எழுதிய பாட்டு என தெரிந்தபிறகும், அதில் தவறுள்ளது என வாதிட்டு பின்வாங்காமல் நின்றார். இறைவனுக்கு இந்த மனஉறுதி பிடித்துவிட்டது. மனஉறுதியுள்ளவனே உலகில் எதையும் சாதிக்க முடியும். அவனைத் தேடி ஆண்டவன் பரிசை அனுப்பி விடுவான். அத்தகைய பரிசுதான் நக்கீரருக்கு இப்போது கிடைக்கப் போகிறது. அகத்தியரை பார்வதிதேவி நினைவுபடுத்தியதும், அகத்தியரை வரவழைத்தார் சிவன். அகத்தியர் அவரை வணங்கி, சர்வலோக காவலரே! இந்த எளியவனை எதற்காக வரச்சொன்னீர்கள்? என்றார். அகத்தியரே! நான் உமக்கு போதித்த இலக்கணத்தை, நீர் நக்கீரனுக்கு உபதேசிக்க வேண்டும், என்றார். இந்த உத்தரவை ஏற்ற அகத்தியர். தன் மனைவியுடன் மதுரை நகரை அடைந்தார். சுந்தரேஸ்வரர் கோயிலுக்குச் சென்று பொற்றாமரை குளத்தில் நீராடினார். எத்தகைய துன்பத்தையும் போக்கும் தீர்த்தம் அது. தனக்கு இலக்கணம் கற்பிக்க அகத்தியர் வந்துள்ளதை அறிந்த நக்கீரர் ஓடோடி வந்து அவரது திருப்பாதங்களைப் பணிந்து இலக்கணத்தைக் கற்றார். மற்ற புலவர்களுக்கும் கற்றுக்கொடுக்க அனுமதிபெற்றார். ஒருவன் தனக்கு தெரிந்த நல்ல விஷயத்தை மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பது இந்த இடத்தில் தெளிவாகிறது.

## 55. சங்கத்தார் கலகம் தீர்த்த படலம்!

தமிழ்ச்சங்கத்தில் 48 புலவர்கள் இருந்தனர். அகத்தியர் கற்றுத்தந்த இலக்கணத்திற்கு அகத்தியம் என்று அவரது பெயரைச் சூட்டினர். இலக்கணஅடிப்படையில் அதுவரை தாங்கள் இயற்றிய பாடல்களைப் புலவர்கள் சரிபார்த்துக்கொண்டனர். அதன்பின், இலக்கண அடிப்படையில் தங்கள் பாடலே சிறந்தது எனஒருவருக்கொருவர் வாதிட்டனர். யார் பாடல் உயர்ந்தது என ஒரு கலவரமே நடந்தது.காலப்போக்கில் இது பெருமளவில் உருவெடுத்து, சங்கமே அழியும் நிலை வந்துவிட்டது.இது தொடர்ந்தால் சங்கத்தைக் காப்பாற்ற முடியாது என்றநிலையில், அவர்கள் சுந்தரேஸ்வரரிடமே ஓடினர். இறைவா! எங்களில் யாருடைய பாடல்சிறந்தது என்று அறியும் ஆவலில் சண்டையிடுகிறோம். தாங்களே இவற்றைப்படித்து, எது சிறந்தபாடல் என விடையளிக்க வேண்டும், எனக்கூறி வணங்கினர்.அப்போது சுந்தரேஸ்வரர் அவர்கள் முன் தோன்றினார். புலவர்களே!உங்கள் பாடலில் எது உயர்ந்தது என்பதை நமது நகரில் வசிக்கும் வணிகர்தனபதியின் மகனாலேயே முடியும். நீங்கள் அங்கே சென்று, அந்தப் பிள்ளையிடம் சுவடிகளைக் கொடுங்கள். அவன் சொல்லும் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுங்கள், என திருவாய் மலர்ந்தார். புலவர்கள் தனபதியின் இல்லத்துக்கு விரைந்தனர். சங்கப்புலவர்கள் தங்கள் இல்லத்திற்கு வந்தது கண்ட தனபதியின் துணைவி குணசாலினி மிகுந்த ஆனந்தமடைந்தாள். அதே நேரம் அவர்கள் அங்கு வந்த காரணம் தெரியாமல் தவித்தாள்.

புலவர்கள் அவளிடம், அம்மா! வணிகர் எங்கே? உங்கள் பிள்ளை இருக்கிறாரா? என்றனர். இருவரும் இங்கு தான் உள்ளனர், என்றதும், உங்கள் பிள்ளை ருத்ரசர்மனை நாங்கள் காண வேண்டும். சுந்தரேஸ்வரப் பெருமானே அவரைப்பார்த்து, எங்கள் பாடல்களில் எது சிறந்தது என கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும், என்றனர். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அவனால் பிறவியிலேயே பேச முடியாதே. அவன் எப்படி உங்கள் பிரச்னையை தீர்த்து வைக்க முடியும் , என்றாள் அவள். புலவர்கள் சிரித்தனர். அம்மா! இந்தத் தகவல் எங்களுக்கு முன்பேதெரியும். இந்த விஷயத்தையும் சுந்தரேஸ்வரப் பெருமான் எங்களிடம்சொல்லிவிட்டார், என்றதும் ஆச்சரியப்பட்ட அந்தத்தாய் பேச முடியாத தன்பிள்ளைக்கு இத்தகைய ஒரு பெருமையா? சுந்தரேஸ்வரா! மதுரை மண்ணில் வசிக்கும்யாரையும் நீ கைவிட்டதில்லை, என கோயில் இருக்கும் திசைநோக்கி கைகூப்பி வணங்கினாள். சங்கப்புலவர்கள் ருத்ரசர்மனைச் சந்தித்தனர். தங்கள் பிரச்னையைஎடுத்துச் சொன்னார்கள். தமிழ்ச்சங்கத்திற்கே வந்துவிட்டார் ருத்ரசர்மன்.புலவர்கள் தங்கள் பாடல்களை பாட ஆரம்பித்தனர். அவற்றில் பிடித்தமானவற்றைதாளம் போட்டு

ரசித்துக் கேட்டார் அவர். இறுதியாக நக்கீரர்,கபிலர், பாணர் ஆகியோரின் பாட்டுகளே உயர்ந்தவை என தீர்ப்பளித்தான். அதற்காக மற்றபாடல்களையும் அவர் புறந்தள்ளவில்லை. அவற்றிலுள்ள குற்றங்குறைகளைத் திருத்திக் கொடுத்து, அவற்றையும் அவையில் அங்கீகரிக்கச் செய்தார்.

## 56. இடைக்காடன் பிணக்கு தீர்த்த படலம்!

இலக்கண, இலக்கியங்களில் கைதேர்ந்த குசேல வழுதி பாண்டியன், மதுரையை ஆண்டு வந்தான். அவன் சங்கப்புலவர்களுக்கு நிகராக செய்யுள் இயற்றும் திறமை பெற்றவன். ஒரு சமயம், சங்கப்புலவரான கபிலரின் நண்பர், இடைக்காடர் என்பவர் தான் இயற்றிய பிரபந்த நூல் ஒன்றை மன்னனிடம் படித்துக்காட்ட ஆசைப்பட்டார். மன்னனும் அவரை வரச்சொல்லி விட்டான். இடைக்காடர் தனது நூலை வாசிக்க ஆரம்பித்தார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த மன்னனின் கவனம் சிதறியது. சில இடங்களில், பாடல் வரிகள் மிகவும் ரசிக்கத்தக்கதாக அமைந்திருந்தது. ஆனால், மன்னன் அதை பெயரளவுக்கு கூட பாராட்டவில்லை. சில சமயங்களில், சுதாரித்துக் கொண்டு, தேவையில்லாத இடங்களில் சபாஷ் என பாராட்டினான். இதனால், இடைக் காடரின் மனம் மிகவும் வேதனைப் பட்டது. பாட்டு முடிந்ததும் அரசனிடம் சொல்லிக்கொள்ளக் கூட செய்யாமல், வெளியே சென்றுவிட்டார். மீனாட்சியம்மன் கோயிலுக்குச் சென்ற அவர், சுந்தரேஸ்வரப் பெருமானிடம், இறைவா! எவ்வளவு கஷ்டப்பட்டு பாட்டெழுதி வந்தேன். ஆனால், மன்னன் அதைக் கவனிக்காமல் அலட்சியம் செய்து அவமானப் படுத்தி விட்டானே! இந்த அவமரியாதை எனக்கு ஏற்பட்டதல்ல! தமிழுக்கும், தமிழ் வளர்க்கும் மதுரையின் நாயகனான உனக்கும், அன்னை மீனாட்சிக்கும் ஏற்பட்ட அவமரியாதை! ஐயனே! இதற்காக நீ பாண்டியனுக்கு பாடம் கற்பிக்க வேண்டும். புலவர்களை அவமானப்படுத்திய அந்த மன்னனின் பாடல்களில் பிழை ஏற்படச் செய்து, அவனை சங்கப் பலகையில் அமரவிடாமல் செய்ய வேண்டும், அவனது தவறை அவனுக்கு உணர்த்த வேண்டும், என்று கேட்டுக் கொண்டார். புலவரின் மனநிலையை பாண்டியனுக்கு உணர்த்த முடிவெடுத்தார் சுந்தரேஸ்வரர். வைகையின் தென்கரையில் ஒரு மண்டபத்தை எழுப்பும்படி தேவதச்சன் விஸ்வகர்மாவுக்கு உத்தரவிட்டார். விஸ்வகர்மாவும் அப்படியே செய்தார். அங்கிருந்த லிங்கத்தில் தன்னை மறைத்துக் கொண்டார் இறைவன். மறுநாள், மீனாட்சியம்மன் கோயில் நடை திறக்கப்பட்டது. அம்மன், சுவாமி சன்னதிகளைத் திறந்து அர்ச்சகர்கள் உள்ளே சென்றதும், ஐயோ! என அலறினர். அவரைப் பின்தொடர்ந்து சென்றவர்களும் ஆ...ஆ... இது என்ன விந்தை! என கதறினர்.

ஆம்...கருவறையில் அம்பாள் விக்ரகத்தையும், சிவலிங்கத்தையும் காணவில்லை என்றால், அதிர்ச்சியடைய மாட்டார்களா என்ன! அவர்கள் அரண்மனைக்கு விரைந்து சென்றனர். விஷயத்தைக் கேள்விப் பட்ட மக்களும் அதிர்ச்சியுடன் அவர்களைப்பின் தொடர்நது ஓடினர். பாண்டியனிடம் விஷயத்தைசொன்னதும், அவனுக்கு மயக்கமே வந்துவிட்டது. சோமசுந்தரா! சொக்கலிங்கப் பெருமானே! சுந்தரேஸ்வரா! அம்மா மீனாட்சி! எங்கள் தாயே! இதென்ன விளையாட்டு! நேற்று இரவு நடையடைக்கும் போது, உள்ளேயிருந்த நீங்கள், இப்போது காணாமல் போய்விட்டீர்கள் என்றால், நாங்கள் என்ன பாவம் செய்தோம்? எங்களை ஏன் உங்களுக்குப் பிடிக்கவில்லை? நாங்கள் என்ன தவறு செய்தோம்? கயிலைக்குச் சென்று விட்டாயா? மேருமலையை வில்லாக வளைக்க அங்கே போய்விட்டாயா? உங்களை அன்போடு வணங்கும் பக்தர்களின் மனதில் குடிபுகுந்து விட்டீர்களா? என்று புலம்பினான். அப்போது காவலர்கள் சிலர் வேகமாக ஓடிவந்தனர். மாமன்னரே! வைகையின் தென்கரையில் திடீரென ஒரு மண்டபம் தோன்றியிருக்கிறது. அதில் நம் சுந்தரேஸ்வரப் பெருமானின் திருவடிவமும், அன்னை மீனாட்சியின் அருள்வடிவமும் இருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டோம். தங்களிடம் விஷயத்தைத் தெரிவிக்கவே ஓடோடி வந்தோம், என்றனர். இதுகேட்ட மன்னன், மக்களுடன் மண்டபம் இருக்கும் திசை நோக்கி விரைந்தான். உள்ளே சென்ற அவன்,இறைவா! இது என்ன விளையாட்டு! அவ்வளவு பெரிய ஆலயத்தை விட்டு, இந்த சிறிய மண்டபத்துக்கு தாங்கள் பிராட்டியாருடன் எழுந்தருளிய காரணம் என்ன!நான் ஏதாவது தவறு செய்திருந்தால், அதை மன்னித்து, மீண்டும் தாங்கள் கோயிலுக்கு எழுந்தருள வேண்டும். நான் யாருக்கும் எந்த தீங்கும் செய்யவில்லையே! நிறைவாக தர்மம் செய்கிறேன். உன் ஆலயத்தில் எந்த ஒரு திருப்பணியையும் குறைவின்றி நிறைவேற்றி வைத்திருக்கிறேன்! சொக்கநாதா! நீ எனக்கு பதில் சொல்லாவிட்டால், இங்கிருந்து அகலமாட்டேன், என கண்ணீர் வழிய கெஞ்சினான். அப்போது அசரீரி ஒலித்தது.

குசேலவழுதி! இந்த மதுரை நகரில் ஏராளமான சுயம்புலிங்கங்கள் புதைந்திருக்கின்றன. அவற்றை தேவர்களும், முனிவர்களும், சித்தர்களும், ராட்சதர்களும், எனது பக்தர்களும் ஸ்தாபித்துள்ளனர். இவற்றில் 64 லிங்கங்கள் மிகச்சிறப் புடையவை. அந்த அறுபத்து நான்கில், எட்டு லிங்கங்களை திசைக் காவலர்களான அஷ்டதிக் பாலகர்கள் வழிபட்டனர். அவற்றில் வடக்கு திசைக்கு அதிபதியான குபேரன் பூஜித்த லிங்கம் இது. இப்போது இதை நான் தேர்ந்தெடுத்து ஐக்கியமாகியுள்ளேன், என்றது. மன்னன், சுவாமியை நோக்கி, சுவாமி! இப்போது, தாங்கள் இந்த லிங்கத்திற்குள் எழுந்தருளவேண்டிய அவசியம் ஏன் வந்தது? அன்னையாரும் இங்கு வந்துவிட்டாரே! என்ன காரணமென சொல்லுங்கள்? என

பதைபதைப்புடன் கேட்டான். அப்போது அசரீரி பதிலளித்தது. பாண்டிய மன்னா! நீஒரு பிழை செய்தாய். என் பக்தனும் புலவனுமான இடைக்காடனை அவமதித்தாய். பக்தனுக்கு மதிப்பில்லாத இடத்தில் நான் இருக்கமாட்டேன். அவன் எழுதிய பெருமை மிக்க அந்தாதிகளை அவன் வாசித்த போது அலட்சியம் செய்தாயே! நினைவிருக்கிறதா! என்றார். மன்னன் இறைவனிடம் மன்னிப்பு கேட்டான். ஆம் தெய்வமே! நான் செய்தது பெரும்பிழை தான். ஒப்புக்கொள்கிறேன். இடைக்காடரை கவுரவித்து விழா எடுக்கிறேன். என்னை மன்னியுங்கள் என்று நெஞ்சுருக கெஞ்சினான். இறைவனும் அவனிடம் மன்னித்தேன். இப்போது நீ அரண்மனைக்கு திரும்பு. நான் இங்கும் இருப்பேன், மதுரை கோயிலிலும் எழுந்தருள்வேன். இனி இந்தத்தலம் வடதிருவாலவாய் எனப்படும் என்றார். மன்னன் மீண்டும் இறைவன் மதுரைக் கோயிலில், எழுந்தருள்வதாகச் சொன்னது கேட்டு மகிழ்ந்தான்.திருப்தியுடன் அரண்மனைக்கு சென்றான். இடைக்காடரை வரவழைத்து விழா எடுத்தான். இடைக்காடரிடமும் தன் தவறுக்கு மன்னிப்பு கோரினான். பிற்காலத்தில் அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு அரு மருத்தபாண்டியன் என்று பெயரிட்டான். தந்தைக்குப் பிறகு அவன் பட்டம் ஏற்றான்.

Read more: http://www.penmai.com/forums/spirituality/56460-64-thiruvilaiyadal-puranam-64-a-6.html#ixzz2nzlwtcqx

### 57. வலை வீசிய படலம்!

ஒருநாள் கயிலாயத்தில் சிவபெருமான் சிவஞானபோதம் என்னும் சுவடியைப் படித்துக் கொண்டிருந்தார். அது வேதத்தின் உட்பொருள் பற்றிய நூலாகும். அந்த உட்பொருளை அவர் தன்னருகில் இருந்த துணைவி பார்வதி தேவிக்கு உபதேசித்தார். ஆனால், அம்பாள் அதை ஈடுபாட்டுடன் கவனிக்கவில்லை. ஆசிரியர் கற்றுக்கொடுக்கும் போது, குழந்தைகள் கவனமாகப் பாடத்தைக் கேட்க வேண்டும். அப்படி கேட்டாலே வீட்டில்போய் மனப்பாடம் செய்ய வேண்டியிருக்காது. இல்லாவிட்டால், பெற்றவர்களிடமும், ஆசிரியரிடமும் தண்டனை பெற வேண்டியிருக்கும். பார்வதிதேவிக்கும் தண்டனைகிடைத்தது. ஆசிரியராய் இருந்த சிவன், பார்வதியிடம், பெண்ணே! படிப்பைப்பற்றி கவலைப்படாத நீ, பூலோகத்தில் படிப்பறிவே இல்லாமல் இருக்கும் ஒரு மீனவரின் வீட்டில் போய் பிறப்பாய், என சாபம் கொடுத்து விட்டார். பார்வதிதேவி கண்ணீர் மல்க, இறைவா! என் பிழையை மன்னித்து விமோசனம்தாருங்கள், என்றாள். சிவனும் மனமிரங்கி,சாபத்தை மாற்ற இயலாது. இதுவும் என்திருவிளையாடலே, காரணத்துடன் தான் நான் இந்த சம்பவம்

நிகழ்ந்தது. உன்னை நானே வந்து ஏற்றுக் கொள்வேன்,என்றார். அம்பாளும் மனஆறுதலுடன் பூலோகம் சென்றுவிட்டாள். தங்கள் தாய்க்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கருதிய விநாயகரும், முருகனும் இதுகுறித்து தந்தையுடன் வாதம் செய்ய அவரது இடத்துக்குள் புகுந்தனர். நந்திதேவரின் அனுமதியின்றி சிவனின் இருப்பிடத்துக்குள் யாரும் நுழையக்கூடாது. விநாயகர், முருகனாயினும் இந்த விதி பொருந்தும். ஆனால், அவர் தடுத்தும் கேளாமல் பிள்ளைகள் தந்தை முன் சென்றனர். அவர் முன் அடுக்கி வைக்கப்பட்டிருந்த வேதச்சுவடிகளை எடுத்துவீசினர். அவை கடலில் போய் விழுந்தன. பிள்ளைகளாயினும், வேதங்களையே எடுத்தெறிந்த அவர்கள் மீது சிவன் கோபம் கொண்டார். விநாயகரை யாராலும் சபிக்கமுடியாது. அப்படி சாபம் கொடுத்தால் சாபம் கொடுத்தவரையே அது வந்தடையும்.எனவே, விநாயகர் மீதான தன் கோபம் முழுவதையும் முருகனிடம் காட்டினார்.முருகா! தந்தையை மதிக்காத தனயனே! நீ பூலோகத்திலுள்ள திருவாலவாய் என்னும்நகரில் வசிக்கும் வணிகர் குலத்தில் பிறப்பாய். உனக்கு ருத்ரசர்மன் என்றுபெயரிடுவார்கள் அந்தப் பெற்றோர். உனக்கு பேச்சு வராது, என்று சாபம் கொடுத்தார்.

நந்தியை அழைத்து, நந்தீஸ்வரா! என்னைக் காண வருபவர்கள் எத்தகைய சக்தி படைத்தவர்களாயினும், அவர்களை தடுத்து நிறுத்தியிருக்க வேண்டியது உன் பொறுப்பு. நீ அவர்களைத் தடுக்க இயலாததால் தானே அரிய வேதங்கள் கடலில் போய் விழுந்தன! எனவே, நீயும் கடலில் சுறாமீனாய் கிடப்பாய், என்றார். நந்திதேவர் சிவபெருமானின் பாதங்களில் விழுந்தார். ஐயனே! நான் என்ன செய்வேன்? தயவுசெய்து சாப விமோசனம் தாருங்கள், என்றார். ஈசனும் மனம் கனிந்து, நந்தீஸ்வரா! மீனவர் குலத்தில் அன்னை பார்வதி பர்வதகுமாரி என்ற பெயரில் அவதரிப்பாள். அவளை மணம் செய்துகொள்ள நான் வரும்போது உனக்கும் பழைய உருவம் கிடைக்கும், என்றார். நந்திதேவரும் சுறாமீனாக கடலில் விழுந்தார். பாண்டியநாட்டில் பாக்கம் என்ற ஊர் இருந்தது. இங்கு மீனவர்கள் பலர் வாழ்ந்து வந்தனர். மீனவர் குலத்தலைவனுக்கு குழந்தை இல்லை. அவனும், அவனது மனைவியும் மிகுந்த வருத்தத்தில் இருந்தனர். ஒருநாள் அவன் கடற்கரை பகுதிச் சாலையில் சென்று கொண்டிருந்தபோது, சாலை யோரத்தில் இருந்த ஒரு புன்னை மரத்தடியில் இருந்து, ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்பதைக் கவனித்தான். வேகமாக தனது சகாக்களுடன் அங்கு சென்றான். அந்த மரத்தடியில் ஒரு பெண்குழந்தை கிடந்தது. அழகோ பேரழகு. முகத்தில் அப்படி ஒரு பிரகாசம். ஆம்...பார்வதி தேவியே அங்குகுழந்தையாக அவதாரம் எடுத்திருந்தாள். மீனவர் தலைவனுக்கு இது தெரியுமா? மலைமகளை வளர்க்கும் பாக்கியம், அந்த கடல் தலைவனுக்கு கிடைத்தது. பிள்ளையில்லாத அவன், குழந்தையை எடுத்துச் சென்று

மனைவியிடம் கொடுத்தான்.பார்த்தாயா தேவி! பிள்ளையில்லாத நமக்கு, அந்த சுந்தரேஸ்வரப் பெருமான் அளித்த மாபெரும் பரிசு இவள். ஆம்... இவள் இனி நம் மகள். நாமே வளர்ப்போமே!என்றான். மீனவர் தலைவிக்கும் பேரானந்தம். மகளைத் தொட்டிலில் இட்டு பாராட்டி வளர்த்தாள். மீனவப் பெண் குழந்தை தங்கள் தலைவருக்கு கிடைத்த மகிழ்ச்சியில் ஊரே மகிழ்ந்தது. இதனிடையே கடலுக்குள் சுறாவாகப் பிறந்த நந்திதேவர், விநாயகர் மற்றும் முருகனால் கடலுக்குள் தூக்கி எறியப்பட்ட ஏடுகளை கரைசேர்த்து சிவபெருமானிடம் ஒப்படைத்தார். பின்னர் கடலுக்குள் வரும் படகுகளின் மீது முட்டிமோதி சின்னாபின்னமாக்கினார். மீனவர் தலைவருக்கு இந்தச் செய்தி தெரியவர, அதைப் பிடிக்க எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. பின், யார் அந்த சுறாவை பிடிக்கிறாரோ, அவருக்கு தன் மகளை மணம் முடித்து வைப்பதாக அறிவித்தார். ஆனாலும், உயிரைக் கொடுத்து அவளை மணம் முடிக்கும் அளவுக்கு யாரும் துணியவில்லை. இந்த நேரத்தில் சிவபெருமான் மீனவர் குப்பம் நோக்கி ஒரு மீனவனின் வடிவிலேயே வந்தார்.

அவரைக் கண்ட மீனவர்கள் அந்த புது மீனவன் யார்? எனத் தெரியாமல் குழம்பினார்கள். மீனவர் தலைவரை அவர் சந்தித்தார். தலைவரே! நான் மதுரை அருகில் வசிப்பவன். மீன் பிடிப்பதில் வல்லவன். இங்கே ஒரு சுறாமீன் கடலில் சுற்றித்திரிவதாகவும், அது மீனவர்களைத் துன்புறுத்து வதாகவும், அதைப் பிடிப்பவர்க்கு தங்கள் திருமகளைத் திருமணம் செய்து தர இருப்பதாகவும் அறிந்தேன். அதைப் பிடிக்கவே வந்துள்ளேன், என்று கம்பீரமாகப் பேசினார்.மீனவர் தலைவர், அந்த மீனவரைக் கேலி செய்யும் விதத்தில்,தம்பி! நீ நினைப்பது போல் அல்ல அந்த மீன். ஒருவேளை ஏதோ மீன் குஞ்சு என்று நினைத்தாயோ!கலங்களையே கூட கவிழ்த்து நொறுக்கி விடும் பெரிய சுறா. அதை உன்னால் பிடிக்கமுடியுமென நான் நினைக்கவில்லை, என்றார். மீனவர் தலைவரே! அந்த மீனின் வலிமைபற்றி எனக்கு கவலையில்லை. உங்களுக்கும் என் உயிரைப் பற்றிய கவலை வேண்டும். ஆக்குபவனும் நானே! காப்பவனும் நானே! அழிப்பவனும் நானே! என்று சித்தாந்தம் வேறு பேச ஆரம்பித்து விட்டார். மீனவர் தலைவரோ, வந்த வீரன் தற்பெருமை பேசுவதாக நினைத்துக்ெ காண்டார். அவர் அந்த வீர மீனவரிடம்,இளைஞனே! எனக்கென்ன! நான் சொல்வதை சொல்லி விட்டேன். சரி...அந்த மீனைப் பிடித்து விட்டால், என் மகள் உனக்குச் சொந்தம், என்று சொல்லி சத்தியமும் செய்தார். அந்நேரத்தில், யாரோ ஒரு வீரன் சுறாவை பிடிக்க வந்திருப்பது பற்றி அறிந்த பார்வதிதேவி, தன் வீட்டு மாடத்தில் நின்றபடி அந்த வீரனைப் பார்த்தாள்.மீனவர் வடிவிலிருந்த சிவபெருமானும் அவளைப் பார்த்தார். இருவர் கண்களும்காதல் மொழி பேசிக்கொண்டன. அவர் அவளை நோக்கி ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு

கடலுக்குள் இறங்கினார். படகில் அமர்ந்தபடி வலை வீசினார். வழக்கம் போல் படகைக் கவிழ்க்க பாய்ந்து வந்தது போல் வந்த சுறா, படகில் இருப்பவரைப் பார்த்ததுமே புரிந்துகொண்டது போல, தன்னடக்கமாக வந்து தானாக வலையில் சிக்கிக் கொண்டது. மீனவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவர்கள் பிடித்த சுறாவுடன் கரைக்குத் திரும்பினர். மீனவ இளம் பெண்களெல்லாம் இப்படியும் ஒரு வீரனா! இவன் தங்களுக்கு மணாளனாக கிடைக்கமாட்டானா! என்றுஏங்கியது கண்களில் இருந்தும், நெஞ்சின் விம்மலில் இருந்தும் புரிந்தது.மீனவர் தலைவர் அந்த வீரனை கட்டியணைத்து உச்சி மோந்தார்.வாய்ச்சொல்லில்மட்டுமே வீரனென நினைத்து உன்னைக் கேலி செய்யும் தொனியில் பேசியதற்காகவருந்துகிறேன். இதோ! என் மகளை ஏற்றுக்கொள், என்றார். இருவருக்கும் இனிதேதிருமணம் நடந்தது. அப்போது ஈசனும், பார்வதிதேவியும் சுயரூபம் காட்டி அவர்களுக்கு அருள் செய்தனர். சிவபெருமான், மீனவத்தலைவரிடம், என்னை மருமகனாகவும், என் துணைவியை மகளாகவும் பெற்ற நீங்கள் பூமியில் இன்னும்பல்லாண்டு சுகமாக வாழ்ந்து கைலாயத்தை அடைவீர்களாக, என வாழ்த்தினார். வலையில் சிக்கிய சுறாமீனை எழுப்பவே, அவர் நந்திதேவராக சுயரூபம் பெற்று, இறைவனின் திருக்கல்யாணக் கோலத்தை கண்டு உள்ளம் உருகினார். தங்களுக்குநந்தீஸ்வரரின் தரிசனமும் கிடைத்ததால், மீனவமக்கள் அடைந்த மகிழ்ச்சி இரட்டிப்பானது. ருத்ரசர்மனாக பூமியில் பிறந்த முருகப்பெருமானும் கைலாயம்வந்தடைந்தார்.

## 58. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்!

மதுரை அருகிலுள்ள திருவாதவூரைச் சேர்ந்த தனது பக்தருக்கு அருள் செய்ய தன் விளையாடலைத் துவங்கினார் சிவபெருமான். இவ்வூரில் திருவாதவூரார் என்னும் சிவனடியார் வாழ்ந்து வந்தார். இவர் வேத வித்தகர். நமசிவாய என்னும்ஐந்தெழுத்து மந்திரத்தை, இவர் தூங்கினாலும் கூட இவரது இதயத்தின் துடிப்புசொல்லிக் கொண்டிருக்கும். இவர் இலக்கணம், இலக்கியம், சாஸ்திரங்களைத் தெளிவாகக் கற்றவர். இவரது அறிவாற்றலைக் கேள்விப்பட்ட மன்னன் அரிமர்த்தனபாண்டியன், இவரை வரவழைத்து அமைச்சர் பதவியை அளித்தான். ஒருசமயம் மன்னன் அமைச்சரையும், தளபதிகளையும் வரவழைத்து, தங்கள் படை பலத்தைப் பெருக்குவது பற்றி உரையாடிக் கொண்டிருந்தான். அப்போது தங்கள் குதிரைப் படையின் பலம் குறைந்து விட்டது பற்றிய பேச்சு வந்தது. அதை சீரமைக்கும் பொறுப்பை தனது தலைமை அமைச்சரான வாதவூராரிடம் அளித்தான். அதற்குத் தேவையான பொன்னைக் களஞ்சியத்தில் இருந்து எடுத்துக் கொள்ள உத்தரவிட்டான். வாதவூராரும் பெரும் பொருளை எடுத்து தனியாக ஒதுக்கி வைத்து விட்டார். குதிரை வாங்கச்

செல்வதற்கு நல்லநாள் பார்த்தார். அந்தநாள் வரும் வரை தினமும் மீனாட்சியம்மன் கோயிலுக்கு சென்று அன்னையையும், அண்ணலையும் வணங்கி வந்தார். ஒருநாள் அவரது மனதில் மாற்றம் ஏற்பட்டது. குதிரைகளை வாங்கி ஏன் பொருளை வீணடிக்க வேண்டும்? அழியும் உயிரைக் காக்க, அழிவைத் தரும் படைபலத்தை அதிகரிப்பானேன்...!.அவரது சிந்தனை நீண்டது. அவர் மீனாட்சியம்மன் கோயிலுக்குச் சென்று சுந்தரேஸ்வரரை பிரார்த்தித்தார்.

பெருமானே! குதிரை வாங்குவதற்கென பாண்டியன் பெரும் பொருளை அள்ளித் தந்திருக்கிறான். படைபலத்தைப் பெருக்கினால் உலகம் அழியும், சமாதானம் ஒழியும். இந்த கொடிய நிலைக்கு இந்தப் பணம் பயன்படுவானேன்! இதை உன் கோயில் திருப்பணிகளுக்கு செலவிட்டால் நன்றாக இருக்குமே! உன் பக்தர்கள் வயிறார உண்பதற்குப் பயன்படட்டுமே! எனக்கு நீ தான் வழிகாட்ட வேண்டும், என்று உருக்கமாக வேண்டினார். இந்த நேரத்தில், அர்ச்சகர் அவருக்கு பூவும், திருநீறும் பிரசாதமாகத் தந்தார். இதை இறைவனின் அனுமதியாகவே கருதிக்கொண்டார் வாதவூரார். உடனடியாக படை, பரிவாரங்களுடன் குதிரை வாங்குவதாக மன்னனிடம் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார். குதிரை வாங்குவதற்கான பொருள்ஒட்டகங்களில் ஏற்றப்பட்டன. இதைத் தான் எதிர்பார்த்தேன் என்பது போல, சிவபெருமான் தன் திருவிளையாடலை நிகழ்த்த ஆரம்பித்து விட்டார். அவர் ஒருகுருவைப் போல வேடம் பூண்டு கிளம்பிவிட்டார். திருப்பெருந்துறை என்னும்தலத்தில் போய் ஒரு குருந்த மரத்தடியில், தன் பக்தனின் வருகைக்காக அமர்ந்திருந்தார். இந்த உலகம் தன் காலம் உள்ளளவும் உருகி உருகி பாடப்போகும், தேனினும் இனிய திருவாசகத்தை பாடப்போகிறோம் என்பதை வாதவூரார்அறிவாரா என்ன! அவர் சிவசிந்தனையுடன் தன் குதிரை மேல் வந்து கொண்டிருந்தார்.வழியிலுள்ள சிவத் தலங்களையெல்லாம் தரிசித்தார். முல்லை, பாலை நிலங்களைத் தாண்டி அவர் திருப்பெருந்துறையை நெருங்கி விட்டார். அவ்வூரின் எல்லையைத்தொட்டாரோ இல்லையோ... பக்தி வெள்ளம் உணர்ச்சிப் பெருக்கெடுத்து அவரதுஉள்ளத்தையும் உடைத்துக் கொண்டு பீறிட்டது. அதற்கு மேல் அவரால் பயணத்தைத்தொடர இயலவில்லை.

நாம் இந்த ஊரில் தான் தங்கவேண்டுமென இறைவன் திருவுளம் கொண்டு விட்டான் போலும்! இங்கேயே முகாமிட்டு விட வேண்டியது தான், என முடிவெடுத்து, படையினரையும் அங்கேயே தங்க உத்தரவிட்டார். அமைச்சரின் கட்டளையை ஏற்று அவர்கள் அங்கே கூடாரங்களை அமைத்தனர். வாதவூரார் கோயிலுக்குள் சென்றார். ஆத்மநாதப் பெருமான் அவரது வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இந்தக் கோயிலில் ஒரு விசேஷம் என்னவென்றால், இங்கு மூலஸ்தானத்தில் லிங்கம்

கிடையாது. ஆண்டவன் உருவமின்றி இருக்கிறான் என்பது இங்கு தத்துவம். ஆவுடையார் மட்டும் இருக்கும். மேலே லிங்கம் இருக்காது. லிங்கம் இருக்க வேண்டிய இடத்தில், அடையாளம் தெரிவதற்காக ஒரு குவளையை வைத்திருப்பார்கள். அங்குள்ள புஷ்கரணியில் நீராடி, உடலெங்கும் வெண்ணீறு பூசி, சிவப்பழம் போல் காட்சியளித்த வாதவூரார், கோயிலுககுள் சென்று உருவமற்ற இறைவனை, மனதுக்குள் உருவமாக்கி உருகி உருகி வணங்கினார். பின்னர் பிரகாரத்தை வலம் வந்தார். பிரகாரத்திலுள்ள குருந்தமரத்தடியில் தெட்சிணாமூர்த்தியாய் அமர்ந்திருந்தசடை தாங்கிய சிவத்தொண்டரைக் கண்டார். அவர் முன் விழுந்து வணங்கினார். பாமாலை பாடினார். அவர் தான் சிவம் என்று வாதவூராருக்கு உறுதியாகத் தெரிந்தது. அதற்கேற்றாற் போல், தன் திருவடியைத் தூக்கிய சிவன், தன் முன்னால் பணிந்து விழுந்து கிடந்த வாதவூராரின் சிரசில் வைத்தார். திருவடி தீட்சை என்றும், சிவ தீட்சை என்றும் இதைச் சொல்வார்கள். அவரது திருவடி பட்டதோ இல்லையோ, வாதவூராரின் மெய் சிலிர்த்தது. மளமளவென பாடல்கள் வெளிப்பட்டன. அந்தப் பாமாலைகளை இறைவனுக்கு சூட்டிநெருக்குருகிப் போனார்.

பாடியவர் மட்டுமல்ல! இறைவனே கூட அந்தப் பாடல்களை கேட்டு உருகிப் போனார். அப்பா! நீ செந்தமிழால் என்னைத் தாலாட்டினாய். ஒவ்வொரு வார்த்தையையும் முத்தென்பேன்... இல்லையில்லை... மாணிக்கமென்று தான் சொல்ல வேண்டும். நீ மாணிக்கவாசகனப்பா... மாணிக்கவாசகன், என்றார் பெருமான். அன்றுமுதல்வாதவூரார் மாணிக்கவாசகர் ஆகி விட்டார். இனி, அவரை மாணிக்கவாசகர் என்றே நாம் அழைப்போம். மாணிக்கவாசகருக்கு மீண்டும் ஆசியளித்து விட்டு, குருந்த மரத்தடியில் இருந்த தட்சிணாமூர்த்தி வடிவில் இருந்த சிவன் மறைந்துவிட்டார். சிவன் தனக்கு காட்சி தந்த அந்த ஊரிலேயே தங்கி சிவகைங்கர்யம் செய்யமாணிக்கவாசகர் முடிவு செய்தார். படையினரை அழைத்தார். குதிரை வாங்குவதற்கானஏற்பாடுகளை நான் செய்து விட்டேன். குதிரைகளுடன் நான் ஆடிமாதம் மதுரைக்குவருவதாக மன்னரிடம் சொல்லுங்கள். நீங்கள் எல்லாரும் இப்போது ஊருக்குகிளம்பலாம், என்றார். படையினரும், அமைச்சரின் கட்டளையை ஏற்று ஊருக்குப்புறப்பட்டனர். பின், தான் கொண்டு வந்த பணத்தைக் கொண்டு கோயிலைத் திருப்பணி செய்தார். கும்பாபிஷேகம் நடத்தினார். கையில் இருந்த செல்வமும் வேகமாகக்கரைந்தது. இதனிடையே ஆடி பிறந்துவிட்டது. குதிரை வாங்க வந்த ஞாபகமே மாணிக்கவாசகருக்கு மறந்து போனது. அவர் எப்போதும் சிவாயநம..சிவாயநம என உச்சரித்தபடியே இருந்தார். பாண்டியமன்னன், தன் அமைச்சரின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தான். திருப்பெருந்துறையில் அவர்தங்கியிருக்கிறார் என்பதை ஏற்கனவே

வந்த படைவீரர்கள் மூலம் தெரிந்திருந்த அவன், அவருக்கு ஒரு வீரன் மூலமாக ஓலை அனுப்பினான்.

ஓலையைப் படித்த பிறகு தான், அவருக்கு பழைய நினைவே திரும்பியது. நேராக ஆத்மநாதர் சன்னதிக்கு ஓடினார். ஐயனே! மன்னன் என்னை நம்பி மக்கள் பணத்தில் குதிரை வாங்க அனுப்பினான். நானோ, உன் திருப்பணிக்கென செல்வம் அனைத்தையும் செலவிட்டேன். இப்போது, குதிரைகளை அங்கு கொண்டு சென்றாக வேண்டுமே! எனக்கு வழிகாட்டு, எம்பெருமானே! என்று இறைஞ்சினார். அப்போது அசரீரி ஒலித்தது. கவலைப்படாதே மாணிக்கவாசகா! விரைவில் குதிரைகளுடன் வருவதாக பதில் ஓலை அனுப்பு. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன், என்றது அக்குரல். இறைவனின் குரல் கேட்ட மாணிக்கவாசகர், அவர் சொன்னபடியே மதுரைக்கு குதிரைகளுடன் வருவதாகப் பதில் ஓலை அனுப்பினார். அரிமர்த்தன பாண்டியனும் ஓலையைப் படித்து மகிழ்ந்தான். மன்னன் குறிப்பிட்டிருந்த காலம் நெருங்கியது. குதிரைகள் எப்படி வரும் என்ற கவலையில் இருந்த மாணிக்கவாசகரின் கனவில், தட்சிணாமூர்த்தி வடிவில் தோன்றிய இறைவன், மாணிக்கவாசகா! நீ உடனே கிளம்பு. நான் குதிரைகளுடன் வருகிறேன், என்றார். தனது மானத்தைக் காப்பாற்றுமாறு இறைவனிடம் வேண்டிய மாணிக்கவாசகர் பாண்டியநாட்டுக்கு கிளம்பினார். அரண்மனைக்குச் சென்ற மாணிக்கவாசகரிடம், அமைச்சரே! குதிரைகள் எங்கே? எத்தனை குதிரை வாங்கினீர்கள்? என்று கேட்ட மன்னனிடம்,அரசே! தாங்கள் இதுவரை பார்த்திராத குதிரை வகைகள் வரிசையாக வந்து சேரும், என்று பதிலளித்தார் மாணிக்கவாசகர்

## 59. நரியை பரியாக்கிய படலம்!

குதிரைகள் நீண்டநாட்களாக வரவில்லை. மன்னனுக்கு சந்தேகம் ஏற்பட்டது. மாணிக்கவாசகரை அழைத்து விசாரித்தான். அவர் மூன்று நாள் தவணை கேட்டார். அதுவும் முடிந்தது. இதன்பிறகு, பொறுமையிழந்த மன்னன், வாதவூரானின் முகத்தில் நான் விழிக்க விரும்பவில்லை. ஏமாற்றுக்காரனுடன் என்ன பேச்சு!அரசுப்பணத்தைக் கையாடிய அவனை மந்திரி பதவியில் இருந்து நீக்குகிறேன்.அவனைச் சிறையில் அடையுங்கள், சித்ரவதை செய்யுங்கள், என ஆணையிட்டான். மாணிக்கவாசகரின் இல்லத்துக்கு காவலர்கள் சென்றனர். அவர் ஓம் நமசிவாய என்றமந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருந்தார். காவலர்கள் அரசன் இட்ட ஆணையைச்சொல்லவே, அவர் ஏதும் சொல்லவில்லை. நடப்பதெல்லாம் அவன் திருவிளையாடல் என அமைதியாக இருந்தார். காவலர்கள் அவர் முதுகில் பெரிய பாறாங்கற்களை ஏற்றினர்.

அதே நிலையில் சிறைக்குள் தள்ளினர். அந்தப் பாரத்தைக் கூட சிவனுக்காக சுமப்பதாக கருதினார் மாணிக்கவாசகர். பாறாங்கற்கள் பஞ்சுபோல் இருந்தது.மறுநாள் காவலர்கள் வந்தனர். அந்தக் கற்களைச் சுமந்ததால் சோர்ந்துமயங்கியிருப்பார் என நினைத்து வந்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அவர்வழக்கத்தை விட உற்சாகமாக இருந்தார். அவரை இரும்புக்கருவி ஒன்றைக் கொண்டுதாக்கினர். கண்டபடி திட்டினர்.

அரசுப் பணத்தைக் கொள்ளையடித்ததாக ஒப்புக்கொள்ளாவிட்டால் மறுநாள் தண்டனை அதிகரிக்கும் என்று எச்சரித்து சென்றனர். இதற்குள் மன்னன் விதித்த கெடு காலமான ஆடி முடிந்து ஆவணி பிறந்துவிட்டது. அம்மாதத்தில் வரும் மூலம் நட்சத்திர நாளன்று சிவபெருமான் நந்தீஸ்வரரை அழைத்தார். நந்தி! என் பக்தன் மாணிக்கவாசகன், குதிரை வாங்கித்தராத குற்றத்திற்காக பாண்டியநாட்டு சிறையில் அவதிப்படுகிறான். நீயும், நம் பூதகணத்தவர்களும் காட்டிலுள்ள நரிகளை குதிரைகளாக்கி அங்கு கொண்டு செல்லுங்கள். நான் குதிரை வீரனாக உங்களுடன் வருவேன், என்றார். நந்தீஸ்வரரும் மகிழ்ச்சியுடன் அவ்வாறே செய்தார். ஆயிரக்கணக்கான குதிரைகள் மதுரை நகருக்குள் அணிவகுத்து வந்தன. குதிரைகள் பற்றி மன்னனுக்கு தகவல் சென்றது. அவன் பதறிப்போய் ஓடி வந்தான். மாணிக்கவாசகரை விடுவிக்க உத்தரவிட்டான். குதிரைகளைக் காண ஆவலுடன் மணிமண்டபத்தில் வந்தமர்ந்தான். இதற்குள் சிவபெருமான் தன் லீலையைத் தொடங்கி விட்டார். குதிரைகள் மக்கள் கண்களுக்கு தெரிந்தது. மன்னனின் கண்களுக்கு தெரியவில்லை. வாதவூரானே! என்ன விளையாடுகிறீரா! மற்றவர்களெல்லாம் குதிரைகளைக் கண்டு ஆரவாரம் செய்கிறார்கள், என் கண்களுக்கு தெரியவில்லையே, என்றான். மீண்டும் சிறைக்கு அவரை அனுப்பினான். சற்றுநேரத்தில், அரண்மனை கொட்டிலுக்குள் ஆயிரக்கணக்கான குதிரைகளும், வீரர்களும் நிற்பதைக் கண்ட காவலர்கள் மன்னனிடம் சொல்ல, இதென்ன புதுக்குழப்பம்? என்று அங்கு ஓடினான். இப்போது, குதிரைகள் கண்ணுக்குத் தெரிந்தன.

இப்படியும் அழகான குதிரைகளா! பாண்டியநாட்டு குதிரைப்படை போல், இனி எங்கும் குதிரைகளைக் காண முடியாது! அதோ! இந்த குதிரை படைக்கு தலைமை வகித்து வந்துள்ளானே ...ஒரு வீரன் (சிவன் அந்தக்குதிரையில் அமர்ந்திருந்தார்) அதைப்போல் சாமுத்ரிகா லட்சணம் கொண்ட குதிரை இனி பிறக்கவும் செய்யாது. பிறநாடுகளுக்கு கிடைக்கவும் செய்யாது! என பெருமையடித்தான்.மாணிக்கவாசகரை விடுதலை செய்து மீண்டும் மன்னிப்பு கேட்டு, அவரது அருமை தெரியாமல் இருந்ததுபற்றி தன் வருத்தத்தை தெரிவித்தான். குதிரைகள் மன்னனிடம்ஒப்படைக்கப்பட்டதும், தலைமை

வீரனாக வந்த சிவனும், அவருடன் வந்த பூதகணவீரர்களும் கிளம்பிவிட்டனர். சற்றுதூரம் சென்றதும் அவர்கள் மறைந்துவிட்டனர். மாணிக்கவாசகருக்கு மன்னன் அளித்த பரிசுக்கு அளவேயில்லை. அதைப்பெற்றுக்கொண்டு அவர் வீடு திரும்பிய போது, உறவினர்கள் எல்லாரும் அங்கு குவிந்திருந்தார்கள். அவர்களுக் கெல்லாம் தான் கொண்டுவந்ததில் பெரும்பகுதியை அள்ளி வழங்கினார் மாணிக்கவாசகர். பின்னர், பூஜையறைக்குச் சென்று சிவதியானத்தில் மூழ்கிவிட்டார். இரவாகி விட்டது. மக்கள் உறங்கும் வேளை... ஊ...ஊ... என எங்கும் ஒலி கேட்டது. காட்டுக்குள் அல்லவா நரிகள் ஊளையிடும்! நாட்டுக்குள் நரி சத்தம் கேட்கிறதே! மக்களுக்கு மட்டுமல்ல.... அரிமர்த்தன பாண்டியனுக்கும் அந்த ஒலி கேட்டது. மக்கள் சப்தம் வந்த திசை நோக்கி ஓடிவந்தனர்.

## 60. பரியை நரியாக்கி வையை அழைத்த படலம்!

குதிரைகள் கட்டப்பட்டிருந்த இடத்தில் அத்தனையும் நரிகளாக இருந்தன.பாண்டியன் கொதித்தான். இந்த அரிமர்த்தனனையே முட்டாளக்குகிறானா அந்ததிருவாதவூரான்! பிடியுங்கள் அவனை! முதலில் அழகிய குதிரைகளைக் காட்டினான்.இப்போது, நரிகளாக்கி விட்டான். மாயவித்தைக்காரனாக மாறிவிட்டானே!பணத்துக்காக இப்படி நாடகமாடுகிறான், என்று வசைமாரி பொழிந்தவன், பிடித்து வாருங்கள், அவனை மீண்டும், என்று கட்டளையிட்டான். காவலர்கள் சென்றனர். அவர்தியானம் செய்த அறைக்குச் சென்று கூச்சலிட்டு, பரிகளை நரிகளாகக்கி விட்டு, நீர் தியானத்தில் உள்ளீரா! வாரும் எங்களுடன், என இழுத்துச்சென்றனர். மன்னன்அவரைக் கடுமையாகப் பேசினான். பணத்தாசை பிடித்தவனே! உன்னைப் பார்க்கவேஎனக்கு கண்கள் கூசுகின்றன. உன்னை ஆரம்பத்திலேயே கொல்லாமல் விட்டேனே!அதுதான் நான் செய்த குற்றம். இருப்பினும், அரசுப் பணத்தை உம்மிடமிருந்துகைப்பற்றியாக வேண்டும். அது மக்கள் பணம். அதைக் கொடுத்து விட்டு மறுவேலைபாரும், என்றவன் யாரங்கே? என்று கைதட்டி காவலர்களை அழைத்து, இவனிடமிருந்து பணத்தைக் கைப்பற்றும் வரை வைகையில் சுடுமணலில் படுக்க வையுங்கள், என்று கட்டளையிட்டான்.

காவலர்கள் அவரது காலிலும் கையிலும் பெரிய பாறாங்கற்களை தூக்கி வைத்துக் கட்டி மணலில் படுக்க வைத்தனர். மாணிக்கவாசகருக்கு கால் சூடுபொறுக்க முடியவில்லை. ஆ ஆ..வென அலறினார். மீனாட்சியம்மன் கோபுரம் தூரத்தில் தெரிந்தது. இறைவா! இதென்ன சோதனை! குதிரைகளை நரிகளாக்கிய மர்மம் என்ன? இத்தகைய கொடுமைக்கு ஏன் என்னை ஆளாக்கினாய்? என்று கண்ணீர் விட்டார்.

இந்த அபயக்குரல், கோயிலுக்குள் இருந்த சுந்தரேஸ்வரப் பெருமானை உருக்கியது. ஆனாலும், அந்த ஈசன் நல்லவர்களுக்கு சோதனைகளைத் தந்த பிறகு தான் இரங்குவான் போலும்! சுடுமணல் நிறைந்து கிடந்த அந்த ஆற்றில் மழையே பெய்யாமல் திடீரென வெள்ளம் பெருகி வந்தது. காவலர்கள் அடித்து பிடித்துக் கொண்டு கரைக்கு ஓடினர். ஆனால், மாணிக்கவாசகரைக் கட்டியிருந்த கற்கள் உடைந்தன. அவர் எழுந்தார். அவர் நின்ற பகுதியில் மட்டும் வெள்ளம் அவரது பாதங்களை நனைத்துக்கொண்டு மூழ்கடிக்காமல் ஓடியது. சற்றுநேரத்தில் வெள்ளத்தின் அளவு மேலும் அதிகரித்து கரை உடைத்தது. மாணிக்கவாசகர் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. எம்பெருமானைப் புகழ்ந்து பாடியபடி குளிர்ந்த நீரில் நடப்பது நடக்கட்டுமென நின்றார்.

### 61. மண் சுமந்த படலம்!

வைகை நதியின் வெள்ளப்பெருக்கு மதுரை நகரை அலைக்கழித்தது. அரசன் அமைச்சர்களுடன் கலந்து வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை பற்றி ஆலோசித்தான். கரைகள் உடைத்து மதிற்சுவர்களையும் சாய்த்ததால், ஊருக்குள் வெள்ளம் வரும் முன், கரைகளை உயர்த்த ஆணை பிறப்பித்தான். வீட்டுக்கு ஒருவர் கரையை அடைக்கும் பணிக்கு வரவேண்டுமென முரசறைந்து அறிவிக்கப்பட்டது. மக்களும் வைகைக் கரையில் குவிந்தனர். மதுரையில் வந்தி என்னும் மூதாட்டி வசித்தாள். அவள் முதுமையிலும் பிட்டு விற்று பிழைத்தவள். முதல் பிட்டை சுந்தரேஸ்வரருக்கு நைவேத்யம் செய்வாள். அதை சிவனடியார் ஒருவருக்கு பிரசாதமாகக் கொடுத்து விடுவாள். பின்னர் அவிக்கும் பிட்டை விற்கஆரம்பிப்பாள். வந்திக்கிழவிக்கும் கரையை அடைக்கும் பணியின் ஒரு பகுதி தரப்பட்டது. அவளால் அந்த தள்ளாத வயதில் முடியுமா? ஆனாலும், கடமையுணர்வு மிக்க அவள், தன் இயலாமை பற்றி அதிகாரிகளிடம் சொல்லாமல், கூலிக்கு ஆள் தேடினாள்.சுந்தரேஸ்வரப் பெருமான் தனக்கு தினமும் பிட்டிட்டதுடன் தர்மமும் செய்து வணங்கிய அந்த பெருமூதாட்டிக்கு உதவி செய்ய முடிவெடுத்தார்.வந்தியின் முன் வந்து நின்றவர், பாட்டி! கூலிக்கு நீ ஆள் தேடி அலையுறதா என்காதுக்கு சேதி வந்தது. சரி..சரி... உன் பிட்டென்றால் எனக்கு அமிர்தம்மாதிரி. இந்தப் பிட்டை எனக்கு பசியாற கொடு. உன் பங்கு வேலையைச் செய்துவிட்டு வருகிறேன், என்றார். என்னவோ, என் பிட்டை தினமும் சாப்பிட்டவன் போல்பேசுறியே! சரி...இதோ சுவாமிக்கு நிவேதனம் செய்த பிட்டு. இன்று சிவனடியார்யாரையும் காணலே! உன்னையே சிவனா நினைச்சுக்குறேன்! பிட்டை சாப்பிட்டுட்டுவேலைக்கு போ, என்றாள். சிவபெருமானும் பிட்டை ரசித்துச் சாப்பிட்டார். தான்கொண்டு வந்த

மண்வெட்டி, கூடையுடன் கரைக்குச் சென்று, வந்திக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை அடைந்து சுறுசுறுப்பாக மண்வெட்டினார். அதன் பிறகு ஒழுங்காக பணி செய்யாமல், மண்ணை வெட்டுவது போலவும், பாரம் தாங்காமல் அதே இடத்தில் கூடையை கீழே தவற விட்டது போலவும் நடித்தார். சிறிதுநேரத்தில்சோம்பல் முறித்தார். திடீரென வந்தியின் வீட்டுக்குச் சென்று, பாட்டி பிட்டு கொடு, கூலியில் கழித்துக்கொள், என வாங்கி சாப்பிடுவார். ஒரு பகுதியை வேலைசெய்யுமிடத்தில் நின்றவர்களுக்கு கொடுத்தார். அவ்வப்போது ஆடினார், பாடினார். தன்னுடன் வேலை செய்தவர்களையும் ஆடவைத்தார் அந்த ஆடல்வல்லான். ஆக, அவரது இடத்தில் வேலை நடக்கவில்லை. அப்போது, தலைமை கண்காணிப்பாளர் அங்கு வந்தார்.

ஏய்! என்ன கூத்து இங்கே! வேலைக்கு வந்தாயா?ஆட வந்தாயா? கிழவியிடம் பிட்டை வாங்கித் தின்றுவிட்டு ஆட்டமா போடுகிறாய்?என்று கண்டிக்கவும், அரிமர்த்தனபாண்டியனே பணிகளைப் பார்வையிட அங்கு வந்து விட்டான். அந்நேரத்தில் கண்காணிப்பாளர் சற்று ஒதுங்கிச் சென்று விட, மன்னனைக் கண்ட லோகநாயகனான சுந்தரேஸ்வரர், ஒரு மரத்தடிக்குச் சென்று, உறங்குவது போல பாசாங்கு செய்தார். யாரோ ஒருவன் வேலை செய்யாமல் தூங்குவதைக் கவனித்து விட்ட மன்னன், அங்கே வந்தான். கண்காணிப்பாளரின் கையில் இருந்த பிரம்பைப் பிடுங்கினான். ஓங்கி முதுகில் ஒரு அடிவிட்டான். ஆவென அலறினான். அவன் மட்டுமல்ல! அங்கு நின்றவர்களெல்லாம் அலறினர். உலகமே அலறியது. அடி வாங்கியவர் எழுந்தார். ஒரு கூடை மண்ணைக் கரையில் கொட்டினார். வெள்ளம் வற்றிவிட்டது. தான் அடித்த அடி தன் மீது மட்டுமின்றி தன்னைச் சுற்றி நின்றவர்கள் மீதும் விழுந்தது கண்டு அதிசயித்தான் அரிமர்த்தன பாண்டியன்.மேலும், ஒரு கூடை மண்ணிலேயே கரை உயர்ந்து வெள்ளம் கட்டுப்பட்டது கண்டுவியப்பு மேலிட்டவனாய் கூலியாளாய் வந்தவரை பார்த்த போது அவர் மறைந்துவிட்டார். இந்த அதிசயம் நிகழக்காரணமாய் இருந்த மூதாட்டி வந்தியைக் காணச்சென்ற போது, வானில் இருந்து புஷ்பக விமானம் ஒன்று அவள் வீட்டு முன்புஇறங்கியது. அதில் வந்தவர்கள் அவளிடம், தாயே! நாங்கள் சிவகணங்கள். தங்களை அழைத்து வரும்படி சிவபெருமானே உத்தரவிட்டார்கள். தாங்கள் எங்களுடன்வாருங்கள், என்று அழைத்துச்சென்றனர். அவளும் மகிழ்வுடன் சிவலோகத்துக்குப்பயணமானாள். உடனே பாண்டியன், எனக்கெதற்கு அரசாங்கம்? இதனால், என்ன பலன் கண்டேன். பிட்டு மட்டுமே சமைத்து, அதையும் இறைவனுக்கு சமர்ப்பித்து, அதில் கிடைக்கும் சிறு வருமானத்தில் மனநிறைவுடன் வாழ்ந்தவளை சிவகணங்களே நேரில்வந்து அழைத்துச் செல்கின்றனர். நானோ, அரசு, ஆட்சி, பணம், பதவி, சொத்து, சுகம் என திரிந்தேன். இதனால், நான் இறைவனிடம் செலுத்திய பக்தியும்பயனற்றதாகி விட்டது.

இனியும் இந்த அரசாங்கம் எனக்கு வேண்டாம். இறைவா!என்னையும் ஏற்றுக்கொள், என புலம்பினான். அப்போது அசரிரீ ஒலித்தது.அரிமர்த்தனா! நீ சம்பாதித்த பொருளெல்லாம் தர்மவழியில் வந்தது.தர்மவழியில் வந்த பொருளையே நான் ஏற்பேன். மற்றவர்கள் பகட்டுக்காகவேண்டுமானால் எனக்காக செலவழிக்கலாம். அதை நான் ஏற்கமாட்டேன். உன் பொருளைமாணிக்கவாசகன் செலவழித்ததை நான் அன்புடன் ஏற்றேன். நரியைப் பரியாக்கி லீலைபுரிந்தது நானே! என்றது. பாண்டியன் வேகமாக சிறைக்குச் சென்றான். அங்கேமாணிக்கவாசகர் இல்லை. கோயிலுக்கு ஓடினான். சுந்தரேஸ்வரப் பெருமான் முன்புநிஷ்டையில் இருந்தார் மாணிக்கவாசகர். நடப்பது புரியாமல் சட்டப்படியாகநடந்ததற்காக அவரிடம் மன்னிப்பு கேட்ட மன்னன், மீண்டும் அமைச்சர்பொறுப்பேற்க வேண்டினான். மாணிக்கவாசகரோ அதை ஏற்காமல் அவனை ஆசிர்வதித்துவிட்டு, தில்லையம்பலமாகிய சிதம்பரத்துக்குச் சென்று விட்டார்.

## 62. பாண்டியன் சுரம் தீர்த்த படலம்!

அரிமர்த்தனின் மறைவுக்குப் பிறகு பலர் மதுரையை ஆண்டனர். அவர்களில் ஒருவன் கூன் பாண்டியன் என்னும் நெடுமாறன். நெடுமாறனின் போர்த்திறமையும்புகழும் சோழ மன்னனை ஈர்த்தது. அவன் தன் மகள் மங்கையர்க்கரசியை நெடுமாறனுக்கு திருமணம் செய்து வைத்தான். அத்துடன்,குலச்சிறையார் என்ற அறிவார்ந்த அமைச்சரையும் மதுரைக்கு அனுப்பி,தன் மருமகனுக்கு ஆலோசனைகள் வழங்குமாறுஅறிவுறுத்தினார். இந்நிலையில்,மதுரை மண்ணில் சமண மதத்தைச் சார்ந்தவர்கள்குடிபுகுந்தனர். மன்னன் நெடுமாறனை சமண மதம் ஈர்த்தது. மக்கள் சமண மதத்தைப்பின்பற்ற வேண்டுமென்ற உத்தரவையும் அவன் பிறப்பித்தான். இது மங்கையர்க்கரசியாருக்கும்,குலச்சிறையாருக்கும் பெரும் அதிர்ச்சியைஏற்படுத்தியது. ஆனால்,மன்னனிடம் பேசும் துணிச்சல் அவர்களுக்கேது!மீனாட்சியம்மன் கோயிலுக்கு வரவே மக்கள் பயந்தனர். கோயில் காலியாகக்கிடந்தது. இந்த அவலநிலை பற்றி,சுந்தரேஸ்வரப் பெருமானிடமே சென்றுபிரார்த்திக்க ராணி முடிவெடுத்தாள். குலச்சிறையாரையும் அழைத்துக் கொண்டுகோயிலுக்குச் சென்று, இருவருமாய் பிரார்த்தித்தனர். அப்போது அந்தணர் ஒருவர்சன்னதிக்கு வந்தார். கோயிலுக்குள் அர்ச்சகர்கள் உள்ளிட்ட யாருமே இல்லாதநிலையில்,இவர் மட்டும் மன்னன் கட்டளையை மீறி எப்படி துணிச்சலாக உள்ளேவந்தார் என்று அவர்கள் ஆச்சரியப்பட்டனர். வந்தவர் அரசியை வணங்கி,அரசியாரே!நான் சோழநாட்டில் வசிக்கிறேன். பல திருத்தலங்களுக்கும் சென்று வருகிறேன்.மதுரையில் எம்பெருமானையும் தரிசிக்க எண்ணியே இங்கு வந்தேன். இங்கே யாருமே

இல்லாததைக் கண்டு விசாரித்தேன். சமணத்தை மக்கள் பின்பற்றுவதால் யாருமே வருவதில்லை என அறிந்து வருத்தமடைந்தேன். இருப்பினும் மீண்டும் சைவத்தைக் கொண்டு வர ஒரு மார்க்கம் உள்ளது. சொல்லட்டுமா, என்றார்.கரும்பு தின்ன கூலியா? சொல்லுங்கள் அந்தணரே! என்றாள் அரசி.

சீர்காழியில் ஞானசம்பந்தன் என்னும் தெய்வமகன் இருக்கிறார். மூன்று வயதில் உமையம்மையிடமே பால் குடித்த குழந்தை அவர். அவரை இங்கு வரவழைத்தால் சைவம் தழைக்க வகை செய்வார், என்றார். உடனே ஓலை எழுதிய ராணி, அந்தணரே! தாங்கள் இதை ஞானசம்பந்தரிடம் எப்படியாவது சேர்த்து விடுங்கள். அவரை மதுரைக்கு வரச்சொல்லுங்கள், என்றாள். திருமறைக்காடு என்னும் வேத ஆரண்யத்தில் (வேதாரண்யம்) அவர் இருப்பதைக் கேள்விப்பட்ட அந்தணர் அங்கு சென்றார். அங்கே திருநாவுக்கரசரும் தங்கியிருந்தார். இருபெரும் சைவப்பழங்களைக் கண்ட அந்தணர் ஓலையை சம்பந்தரிடம் ஒப்படைத்து மதுரையின் நிலையை விளக்கினார். அதைப் படித்ததுமே அங்கு செல்ல முடிவெடுத்து விட்டார் சம்பந்தர். நாவுக்கரசர்அவரிடம், ஐயனே! சமணர்களைப் பற்றி தங்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.அவர்களால் பாதிக்கப் பட்ட எனக்கு அதுபற்றி நன்றாகவே தெரியும். மேலும் நாளும் கோளும் இப்போதைக்கு நன்மை தருவதாக இல்லை. நல்லநாள் பார்த்துகிளம்பலாமே! என்றார். சம்பந்தர் அவரிடம், திருநாவுக்கரசப் பெருமானே! ஐயனே!நாம் நமசிவாயத்தின் அடிமைகள். நமசிவாயம் இருக்க நாளும் கோளும் என்ன செய்து விடும், என்றவர், வேயுறுதோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி, என்று துவங்கி பாடல்களை வரிசையாக அடுக்கினார். இன்றும் கூட, நவக்கிரகங்களால் நமக்கு தொல்லை ஏற்படுமோ என்று அஞ்சுவோர் இந்தப் பதிகத்தைப் பாடி வருவதை நாம் அறிவோம். இதையடுத்து நாவுக்கரசர் ஏதும் சொல்லவில்லை. கிரகங்களை எல்லாம் சட்டை செய்யாமல் சம்பந்தர் கிளம்பி விட்டார். ஞனசம்பந்தர் மதுரை வந்ததும், மங்கையர்க்கரசியார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. முடங்கிக் கிடந்த சைவர்களும் எழுந்தனர். மன்னனின் தடையை மீறி சம்பந்தர் சுந்தரேஸ்வரர் கோயிலுக்குச் சென்றார். முடங்கிக்கிடந்தசைவர்களுக்கு இந்தச் செயல் புத்துணர்வை அளித்தது. மதுரையில் வாகீசமுனிவர்என்பவர் தங்கியிருந்தார். அவர் சம்பந்தரை தனது திருமாளிகைக்கு அழைத்துச்சென்று தங்க வைத்தார்.

கோபமடைந்த சமணர்கள் அந்த மாளிகைக்கு தீ வைத்து சம்பந்தரைக் கொன்று விட தீர்மானித்தனர். அவர்கள் ஒரு ஹோமம் நடத்தி அக்னி தேவனை வரவழைத்து மாளிகையை அழிக்கச் சொன்னார்கள். தீப்பற்றி எரிந்தது. இதைக் கண்ட சம்பந்தர்

கொதித்து விட்டார். மாளிகைக்குள் சிக்கிக் கொண்ட அவரை வெப்பம் வாட்டியது. இளம் தளிராயிற்றே அவர்! அந்த வேதனையைப் பொறுத்துக் கொண்டு செய்யனே திருஆலவாய்மேவிய எனத்துவங்கி ஒரு பதிகம் (11 பாடல்கள்) பாடினார். பாடலின் கடைசி வரியாக, இந்த துன்பம் தனக்கு ஏற்பட காரணமானவன் பாண்டியன் என்பதால், இந்தத் தீ அவனையே சாரட்டும் என்றரீதியில் கடைசி வரியை முடித்தார். அவர் பாடி முடித்தாரோ இல்லையோ... பஞ்சணையில் சந்தனம் பூசி குளுகுளுவென்ற தென்றலில் படுத்திருந்த பாண்டியன் உடலில் வெப்பம் பற்றிக் கொண்டது. அவன் அலறினான். கடும் ஜுரம் அடித்தது. வைத்தியர்கள் வந்தார்கள். பல மருந்துககைளக் கொடுத்தார்கள். அவனது வெப்பத்தைத் தணிக்க மயில்தோகையால் வருடினார்கள். எதற்கும் பலனில்லை. சமணர்களோ தங்களது மந்திரங்களை எல்லாம் பிரயோகித்துப் பார்த்தார்கள். முடியவில்லை. மதுரை வந்திருக்கும் சம்பந்தரை அழைத்து வந்து வைத்தியம் செய்தால் நோய் குணமாகும் என மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் மன்னனிடம் சொல்ல, நோயின் கொடுமை தாங்க முடியாத அவன் அதற்கு சம்மதித்தான். சம்பந்தர் வந்தார். இதைக் கேள்விப் பட்ட சமணர்களும் வந்தனர். மன்னரே! இந்த சம்பந்தரால் உங்கள் நோயைக் குணப்படுத்த முடியாது. இதோ! ஐந்து நிமிடத்தில் குணமாக்குகிறோம், என்று சொல்லி ஏதோ வைத்தியம் செய்ய, அது மன்னனின் வேதனையை அதிகமாக்கி விட்டது. போதாக் குறைக்கு அந்த வெப்பம் அருகில் இருந்த சமணர்களையும் தாக்கியது. அவர்கள் ஒதுங்கி நின்றனர். மன்னன் கத்தினான். சமணர்களே! ஒதுங்கி நில்லுங்கள். சம்பந்தரே எனக்கு வைத்தியம் பார்க்கட்டும், என்றான். சம்பந்தர் உடனே திருநீறை கையில் எடுக்க, அரசே! இந்தச் சிறுவன் உங்களை மயக்கப் பார்க்கிறான். இந்த திருநீறைக்கையில் எடுக்க விடாதீர்கள், என்றனர். மன்னன் என்ன செய்வதென தெரியாமல்விழிக்க, சம்பந்தர் வேறு ஏதும் வேண்டாம். கோயில் மடைப்பள்ளி சாம்பலைக்கொண்டு வாருங்கள், என்றார். சாம்பல் வந்தது. அதை மன்னனின் உடலில்தேய்த்ததுமே வெப்பம் குறைந்து விட்டது. மன்னன் சம்பந்தரைப் பாராட்டியதுடன், சிவாயநம என்னும் மந்திரத்தையும் அவர் உபதேசிக்கக் கேட்டு, அதை ஏற்று மீண்டும் சைவன் ஆனான். நெடுமாற பாண்டியன் கூன் உடம்பு கொண்டவன்.சம்பந்தரின் அருள் மழையால் அவனது கூனும் நிமிர்ந்து விட்டது. மன்னன்அவருடன் கோயிலுக்குச் சென்றான். மக்கள் ஆரவாரம் செய்து அவர்களை வரவேற்றனர்.

### 63. சமணரைக் கழுவேற்றிய படலம்!

சம்பந்தர் இறைவனிடம், சைவத்துக்கு இடைஞ்சல் செய்பவர்களைத் தண்டிக்க வேண்டுமென வேண்டிக்கொண்டார். இதனிடையே மன்னனின் நோயைக்

குணப்படுத்த முடியாமல் வீடு திரும்பிய சமணர்களை அவர்களது மனைவிமார் கேவலமாகப் பேசினார்கள். இதனால் சமணர்களுக்கு அவமானமாகப் போய்விட்டது.மனைவி கூட மதிக்கமறுக்கிறாளே என்று கோபபப்பட்ட அவர்கள் சம்பந்தரை ஒரு போட்டிக்கு அழைக்க முடிவு செய்தனர். அவைக்கு வந்து மன்னன் முன்னிலையில், இளம் பாலகனே! உன் மந்திரம் பெரிதா? எங்கள் மந்திரம் பெரிதா? என முடிவு கட்டவே இங்கு வந்துள்ளோம். நாம் இருதரப்பும் எழுதிய மந்திரங்களை அனலில் போடுவோம். அதுஎரியாமல் இருக்கிறதோ, அதுவே உயர்ந்த மந்திரம். இதுதான் போட்டி, என்றனர்.சம்பந்தர் தான் எழுதிய பாடல் ஏட்டைப் பிரித்து அதனிடையே கயிறைப் போட்டார். போகமார்த்த பூண்முலையாள் பொன்னகலம் என்று துவங்கும் திருநள்ளாற்றுப் பதிகம் கிடைத்தது. (ஏழரைச்சனி, அஷ்டமத்துச் சனியால் துன்பம் அனுபவிப்போர் இதைப் பாடுவது வழக்கம்) அதை அக்னி குண்டத்தில் போட்டார். சமணர்களும் தங்கள் மந்திரச் சுவடிகளைப் போட்டார்கள். குண்டம் அணைந்ததும் சமணர்களின் ஏடு சாம்பலாகி இருந்ததையும், திருநள்ளாற்றுப் பதிகம் முன்பை விட புதிய பொலிவுடன் இருந்ததையும் கண்டனர். இதுகண்டு மக்கள் ஆரவாரம் செய்தனர். சமணர்கள் விடவில்லை. நம் இருவரின் மந்திரங்களையும் வைகை ஆற்றில் விடுவோம். யாருடைய ஏடு நீரை எதிர்த்துச் செல்கிறதோ, அவரே வென்றவர், என்றனர். உடனே அமைச்சர் குறுக்கிட்டார். சமணர் களை கருவறுக்க இதுதான் தக்க சமயமென்பதை உணர்ந்து, சரி... தொடர்ந்து நீங்கள் தோற்று வருகிறீர்கள். இந்தப் போட்டியிலும் தோற்றால் என்ன செய்ய வேண்டும், என்று கேட்டார். வடைக்காக ஆசைப் பட்டு எலி, ஒரு பொறியில் சிக்கிக் கொள்வது போல, சமணர்கள் தங்கள் வாயாலேயே தங்கள் ஆயுளை நிர்ணயித்துக் கொண்டனர்.

அப்படி ஒருவேளை நாங்கள் தோற்றால் எங்களை கழுவில் ஏற்றிக் கொல்லுங்கள், என்றனர். கழு என்பது உடலைக் குத்தி இரண்டாகக் கிழிக்கும் அமைப்பு கொண்ட கருவி. மரத்தால் செய்யப்பட்டிருக்கும். அனைவரும் வைகைக் கரைக்குப் புறப்பட்டனர். மழைக்காலம் என்பதால், வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது ஏடுகளை ஆற்றில் போடுங்கள், என மன்னன் உத்தரவிட்டான்.அத்திநாத்தி என்னும் பெயர் கொண்ட தங்கள் கொள்கைகள் அடங்கிய ஏடுகளை ஆற்றில்போட்டனர். அவ்வளவு தான்! பெரும் வெள்ளத்தில் அது அடித்துச் செல்லப் பட்டது.சமணர்கள் தங்கள் உயிரை இழந்தோம் என கலங்கி நின்றனர். ஆசனத்தில் இருந்தசம்பந்தர் எழுந்தார். வாழ்க அந்தணர் வாழ்க ஆவினம் என்று எழுதப்பட்டபாடல்களைக் கொண்ட பதிக ஏட்டை பக்தியுடன் ஆற்றில் இட்டார். கையில் விழுந்தஏடு, தண்ணீரைக் கிழித்துக் கொண்டு எதிர்த்துச் சென்று ஓரிடத்தில் மாயமாய்மறைந்தது. அந்த இடத்தில் ஒரு வில்வமரம் இருந்தது. அந்த மரத்தடியில்சிவபெருமான் லிங்க

வடிவில் தோன்றி சம்பந்தருக்கு காட்சியளித்தார். உடனேசம்பந்தர் வன்னியமும் மத்தமமும் என்ற பாடலைப் பாடினார். சுயம்புலிங்கத்தைபலமுறை வலம் வந்து போற்றினார். அப்போது, சிவபெருமான் ஒரு முதியவர்வடிவத்தில் அங்கு வந்தார். சம்பந்தரை மார்போடு தழுவி, நீ எனது இளைய பிள்ளையைப் போல் இருக்கிறாய் என்றார். சம்பந்தர் அவரிடம்,ஐயனே! எனது ஏட்டை ஆற்றில் இட்டேன், அது இவ்விடத்தில் மறைந்து விட்டது. அரியபாடல்கள் கொண்டஅந்த ஏட்டைத் தந்தருள வேண்டும், என்றார். முதியவரும் அந்த ஏட்டை அவரிடம்கொடுத்து, சம்பந்தா! நீ பல தலங்களுக்குச் சென்று எம்மைப்பாடி மகிழ்ச்சிப்படுத்திய பின் என் திருவடி நிழலை வந்தடைவாய், என்று சொல்லி மறைந்து விட்டார். சம்பந்தரும் சைவத்தைக் காப்பாற்றிய மகிழ்ச்சியுடன் மன்னனிடம் விடைபெற்று கிளம்பினார்.

## 64. வன்னியும் கிணறும் லிங்கமும் அழைத்த படலம்!

சோழநாட்டிலுள்ள வணிகர் ஒருவரின் வாழ்வில் தன் விளையாடலைச் செய்தார் சிவபெருமான். அந்த வணிகருக்கு திருமணமாகி, நீண்ட காலத்துக்குப் பிறகு ஒரு பெண் குழந்தை பிறந்தது. வணிகர் தனது மகளை, மதுரையில் வசிக்கும் தனது தங்கை மகனுக்கு திருமணம் செய்து வைப்பதாக அவள் இளமையாக இருக்கும்போதே பேசி முடித்திருந்தார். தங்கையும், அவளது மகனும் கூட இதற்கு சம்மதம் தெரிவித்தனர். அந்தப் பெண் வயதுக்கு வந்துவிட்டாள். அந்த வாலிபனும் இளம் காளையானான். ஆனால், தன் மாமா மகளை மணப்பதாகக் கொடுத்த வாக்குறுதியை மீறி, மதுரையில் வசித்த இன்னொரு பணக்காரப் பெண்ணை திருமணம் செய்து கொண்டான். மாமாமகள் அதிர்ச்சியடைந்தாள். மாமனார் மருமகனிடம், என் மகளை மணப்பதாக வாக்குறுதி அளித்து அதை மீறி விட்டாயே, என தங்கை மகனைக் கண்டித்தார். அதனால் என்ன மாமா! உங்கள் மகளையும் திருமணம் செய்து கொள்கிறேன், இரண்டாம் தாரமாக. கொஞ்சம் பொறுங்கள், என்றான். இந்தக் கவலையிலேயே வணிகரும், அவரது மனைவியும் இறந்து விட்டனர். அனாதையாகி விட்டாள் அந்த அபலைப் பெண். அவள்பட்ட துயரத்திற்கு அளவேயில்லை. இருப்பினும், சில நல்ல உறவுக்காரர்கள் அவளுக்கு ஆறுதல் கூறி, பெண்ணே! அத்தை மகனை இரண்டாம் தாரமாக திருமணம் செய்துகொள்வதில் தவறில்லை. உன் விருப்பமும், உன் தந்தையின் விருப்பமும் அதுவாகத்தானே இருந்தது, என்றனர்.

வணிகர் மகள் ஊர் பஞ்சாயத்தில், தன் அத்தை மகனின் வாக்குறுதிப்படி, தன்னை இரண்டாம் தாரமாக அவருக்கே மணமுடித்து வைக்கவேண்டுமெனக் கோரிக்கை

வைத்தாள். பஞ்சாயத்திலுள்ள உறுப்பினர்களும், அனாதையான அவள் மீது இரக்கம் கொண்டு, அந்தப் பையனையே அவளுக்கு மணம் முடித்துவைக்க தீர்மானம் நிறைவேற்றி மதுரையில் இருந்த அவனுக்கு ஓலை அனுப்பினர். அந்தப் பையன் சோழநாட்டுக்கு வந்து அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு, வண்டியில் ஊர் திரும்பினான். அவனுடன் அந்தப் பெண்ணின் உறவினர்கள் சிலரும் வந்தனர். திருப்புறம்பியம் என்ற ஊருக்கு அவர்கள் வந்தார்கள். அவ்வூர் பந்தல், தோரணம், விளக்குகள் என விழாக்கோலம் பூண்டிருந்தது. சம்பந்தர் அங்கு வந்திருப்பதாகவும், அவரை வரவேற்கவே ஊர் விழாக்கோலம் பூண்டுள்ளதையும் அறிந்தனர். உடனே வண்டியில் வந்த எல்லாரும், இரவில் அங்கு தங்கி, மறுநாள் சம்பந்தரை தரிசித்து விட்டு மதுரைக்கு பயணத்தைத் தொடரலாம் என முடிவெடுத்தனர். ஒரு வன்னி மரத்தடியில் தங்கி களைப்பில் அயர்ந்து உறங்கினர். அப்போது ஒரு பாம்பு அங்கு வந்து வணிகரின் மருமகனைத் தீண்டி விட்டது. அவன் அலறினான். எல்லோரும் விழித்து பார்த்தபோது அவன் துடிதுடித்து இறந்தான். வணிகர் மகள் அழுது புரண்டாள். இரண்டாம் தாரமாகவாவது உங்களுடன் வாழலாம் என இருந்தேனே! இப்போது என்ன செய்வேன்? என தரையில் விழுந்து புரண்டாள். பொழுது விடிந்தது. ஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்துக்கு இந்த தகவல் கிடைத்து விட்டது. அவர் வன்னிமரத்தடிக்கு வந்தார். சம்பந்தரின் பாதங்களில் விழுந்து அந்தப் பெண் கதறினாள். பெற்றவர்களை இழந்த நான் கணவராக இருந்தவரையும் இழந்தேனே என அவள் வருந்தி அழுதது கண்டு, சம்பந்தரே உருகிப் போனார்.

கவலைப்படாதே மகளே! அந்த சிவபெருமான் தேவர்களுக்காக ஆலகால விஷத்தை உண்டு அவர்களைக் காத்தது போல, உன்னையும் காப்பார், என்றார். அந்த சிவனை நினைத்து, இறைவா! இவனை நம்பித்தானே இரண்டு சுமங்கலிகள் உள்ளனர்! அவர்களைப் பாதுகாக்க வேண்டியது உன் கடமை இல்லையா? என உருக்கமாக வேண்டினார். என்ன ஆச்சரியம்!அவனது உடலில் இருந்த விஷம் படிப்படியாக இறங்கியது. அவன் உயிர் பெற்று எழுந்தான். சுற்றியிருந்தவர்களும், மணப்பெண்ணும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மகனே! நீ இந்தப் பெண்ணை என் முன்னிலையிலேயே திருமணம் செய்துகொள், என்றார். அதற்கு அந்த பையன், ஐயனே! என் உற்றார் மதுரையில் உள்ளனர்.அவர்களை சாட்சியாக வைத்து மணந்தால்தானே நன்றாக இருக்கும், என்றான். அதற்கு சம்பந்தர்,இவ்வூர் சிவனே உன்னைக் காத்தார். அதற்கு காரணம் இந்தப் பெண் உன்மீது கொண்ட அன்பு தான். உனக்கு சாட்சி தேவை என்றால் இந்த வன்னிமரத்தையும், இவ்வூர் சிவாலயத்திலுள்ள கிணறு, சிவலிங்கம் ஆகியவை இருக்கின்றன. இதை விட வேறென்ன சாட்சியைத் தேடப்போகிறாய்? நான் சொல்வதைத் தட்டாதே. அவள்

கழுத்தில் தாலிகட்டு, என்றார். வணிகன் மகன் அதற்கு மேல் மறுத்துப் பேசவில்லை. சம்பந்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்தான். திருமணம் இனிதே நடந்தது. அவர்கள் அவரிடம் ஆசிபெற்று மதுரை சென்றனர். வணிகர் மகள் தன் தந்தை இறந்து போனதால் அவரது முழு செல்வங்களையும் இங்கு கொண்டு வந்திருந்தாள். எனவே மூத்த மனைவியும், அத்தையும் அவளை அன்போடு வரவேற்றனர். பணத்துக்கு எங்குமே மதிப்புதானே! ஆனால், இந்த சந்தோஷம் வெகுநாள் நீடிக்கவில்லை. தன் இரண்டாம் மனைவி கொண்டு வந்த செல்வத்தைக் கொண்டு, அந்த இளைஞன் தன் வியாபாரத்தை பலமடங்கு பெருக்கினான்.

அவர்களது இனிய இல்லறத்தில் ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. ஆனால், மூத்த மனைவி ஏராளமான குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். ஒருவனுக்கு ஒரு மனைவி என்றால் தான் இன்பம்! இன்னொருத்தி பக்கம் தலை வைத்து விட்டால், அவனுக்கு அன்றே நிம்மதி போய்விடும்! இந்த இளைஞனோ, சூழ்நிலைக் கைதியாய் இரண்டாம் திருமணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானவன். இரண்டாம் மனைவிக்கு குழந்தை பிறக்காத வரையில் பிரச்னை இல்லாமல் இருந்தது! ஆனால், பிறந்தவுடன் மூத்தவளின் பிள்ளைகள் முகம் சுழிக்க ஆரம்பித்து விட்டார்கள். இத்தனைக்கும் சிற்றன்னை கொண்டு வந்த பொருளைக் கொண்டு விருத்தியடைந்த வியாபாரத்தில் கிடைத்த பலனை அவர்களும் அனுபவிக்கத் தான் செய்தார்கள். சிற்றன்னையும் தன் கணவனுக்காக அதைப் பொறுத்துக் கொண்டாள். பொறுமையின் சின்னம் தான் அவள்! ஆனால், இரக்கமுள்ளவர்களைத் தான் உலகம் மதிக்காதே! அந்த இரக்கத்தை ஏமாளித்தனம் என எண்ணி ஏறி மிதிக்குமே! அந்த கதிக்கு ஆளானாள் இரண்டாம் மனைவி. மூத்தவளின் பிள்ளைகள் செலவாளிகள் மட்டுமல்ல! பணம் தந்த தைரியத்தால் மகாகோபக்காரர்களாகவும், முரட்டுப்பிள்ளைகளாகவும் இருந்தனர். இரக்கமுள்ள இரண்டாம் மனைவியின் மகனோ, அம்மாவைப் போல சாதுவாக இருந்தான். பெரியம்மாபெற்ற பிள்ளைகள், அந்த சாதுப்பிள்ளையிடம் வம்பு இழுப்பார்கள். சண்டை வலுக்கும். இப்படியாக, குடும்பத்தில் நிம்மதி போனது. இரண்டாம் மனைவி தனக்கும், தன் பிள்ளைக்கும் இழைக்கப்டும் அநீதி கண்டு விம்முவாளே தவிர, வணிகத்தில் கவனம் செலுத்தும் தன் கணவனிடம் இதுபற்றி சொல்லவில்லை. சொன்னால் அவனது நிம்மதி போய்விடக்கூடாதே என நினைத்தாள். துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு அமைதி காத்தாள்.

ஒருநாள், சண்டை வேறுமாதிரியாக திசை மாறியது. இரண்டாம் மனைவிக்கு அந்த வீட்டில் இருக்க உரிமையே கிடையாது என்பது போல பேச்சு எழுந்துவிட்டது. மூத்தவள் தன் பிள்ளைகளுக்கு ஆதரவாக இரண்டாமவளை அழைத்து, ஏய்! உனக்கும்,

இந்த வீட்டுக்கும் என்னடி சம்பந்தம் இருக்கிறது? நீ இந்த வீட்டுக்கு ஒழுங்காக வந்தவளா! பின்வாசல் வழியாக வந்தவள் தானே! என் புருஷன் உன் அத்தைமகன் என்பதால், அவரை மயக்கி எப்படியோ இந்த வீட்டுக்குள் வந்துவிட்டாய்!உனக்கும், அவருக்கும் கல்யாணம் நடந்துவிட்டதாக கதை கட்டினாய்!திருப்புறம்பியம் கிராமத்தில் வைத்து கல்யாணம் நடந்ததாகச் சொன்னாயே! அதற்குஎன்னடி ஆதாரம்? நீ முறையாக அவரை மணக்க வேண்டுமென்றால் மதுரைக்கல்லவா அழைத்து வந்திருக்க வேண்டும்! போடி போ! ஒழுங்கற்றவளே! என்று வாய்க்குவந்தபடி திட்டினாள். தனக்கு சம்பந்தப்பெருமான் முன்னிலையில் திருமணம்நடந்ததை எப்படி அவள் நிரூபிக்க முடியும்? ஊர் பஞ்சாயத்தாரிடம் சென்றாலும், நீ ஏதோ ஒரு ஊரில் திருமணம் நடந்ததாகச் சொல்கிறாய், அதற்கு சாட்சியாக யாரையாவது அழைத்து வா, என்று தானே சொல்வார்கள். என்ன செய்வது? என்று சிந்தித்தவளின் நினைவில்,ஆம்... சாட்சி இருக்கிறது. சம்பந்தப்பெருமான் சிலசாட்சிகளைச் சொன்னாரே! வன்னிமரமும், கிணறும், சிவ லிங்கமும் சாட்சியாக இருந்தனவே. இவற்றை விட சிறந்த சாட்சி என்ன! என எண்ணியவளாய், எனக்கு இவையெல்லாம் சாட்சியாக இருந்தன. சீர்காழி திருக்குமாரன், பார்வதியிடமே பால் குடித்த பாலகன் திருஞானசம்பந்தரே எங்கள் திருமணத்தை நடத்தி வைத்தார், என பெருமிதத்துடன் சொன்னாள் இரண்டாம் மனைவி.

ஏய் நம்புகிற மாதிரி கதை சொல்லு! லிங்கமும், கிணறும், வன்னிமரமும் பேசாது என்கிற தைரியத்தில் தான் இப்படியெல்லாம் பொய் சொல்கிறாய். நீ என் கணவரை அம்மி மிதித்து அக்னி சாட்சியாக திருமணம் செய்தாயா? இந்தக் கேள்விக்கு முதலில் பதில் சொல். இல்லாவிட்டால், நீ காதில் பூ சுற்றுவது போல கதை சொல்கிறாயே! வன்னி, கிணறு, லிங்கம் என்று...அவற்றை சாட்சிக்கு இந்த மதுரைக்கு வரவழைக்க வேண்டும். அப்படி செய்துவிட்டால், என் புருஷனுக்கும்,உனக்கும் திருமணம் நடந்ததை ஒப்புக் கொள்கிறேன், என்றார். திருப்புறம்பியத்திலுள்ள வன்னியும், கிணறும், லிங்கமும் சாட்சிக்கு மதுரைக்கு எப்படி வரும்? கடுமையான நிபந்தனை அல்லவா! இளையவளால் கண்ணீர் தான் வடிக்க முடிந்தது. ஆனாலும், நம்பிக்கையுடன் சுந்தரேஸ்வரர் கோயிலுக்குச் சென்றாள். பொற்றாமரைக்குளத்தில் நீராடினாள். சுவாமி சன்னதிக்குச் சென்று, இறைவா! எனக்கு வந்த சோதனையைப் பார்த்தாயா! தாய் தந்தையை இழக்க வைத்து அனாதையாக்கினாய்! இளமையிலேயே என்னை அவருக்கு திருமணம் செய்து வைக்க செய்த முடிவை மாற்றி, இன்னொருத்தியை அவருக்கு துணைவியாக்கினாய். போராடி பெற்றவாழ்க்கையை மீண்டும் பறிக்கப் பார்க்கிறாய். நானும் என் பிள்ளையும் என்னசெய்வோம்! சரி...இப்போதும் ஒன்றும் கெட்டு விடவில்லை. இனி திருப்புறம்பியத்தில் எனக்கும் என் கணவனுக்கும் நடத்தி

வைத்த திருமணம் நிஜமென்றால், அங்கே சாட்சிக்காக உன் லிங்கவடிவையும், வன்னியையும், கிணறையும் வைத்தாரே ஞானசம்பந்தர்! அந்த மூன்றும் இங்கே எழுந்தருள வேண்டும்! என்றாள். இளையவளின் உருக்கமான கண்ணீர், சுந்தரேஸ்வரப் பெருமானின் மனதையேகரைத்து விட்டது. அப்போது அசரீரி ஒலித்தது.

மகளே! வருந்த வேண்டாம். உன் திருமணத்திற்கு சாட்சியாகக் கேட்ட மூன்றும்இந்த கோயிலின் வடகிழக்கே தோன்றியுள்ளன. முதலில் நீ போய் அவற்றைப் பார்.பின்னர், உன் மூத்தவளை அழைத்து வந்து காட்டு! என்றது. அவள் ஓடிச்சென்றுஅவற்றைப் பார்த்து வணங்கினாள். ஆனந்தக் கண்ணீருடன் வீட்டுக்கு ஓடினாள்.மூத்தவளை அழைத்து வந்தாள். அவள் அந்த அதிசயத்தைக் கண்டு விக்கித்துநின்றுவிட்டாள். ஊராரும் அதைப் பார்த்து சிறியவளின் பக்தியைப் பாராட்டினர்.இந்த தகவல் அவளது கணவனுக்கும் தெரியவே, இளையவளைத் தனக்கே தெரியாமல் அவமானப்படுத்தியதற்காக மூத்தவளை கண்டபடி திட்டினான். அவள் தலை குனிந்து நின்றாள். அவளை ஒதுக்கி வைக்கப் போவதாகவும், இனி அவள் தன் மனைவியே அல்ல என்றும் அவன் ஊரார் முன்னிலையிலேயே சொன்னான். இரக்கம் மிக்க இரண்டாம் மனைவி, அன்பரே! அவ்வாறு சொல்லாதீர்கள்! அக்கா என்னை திட்டியதால் தான், இந்த அதிசயம் நிகழ்ந்தது. இதெல்லாம் அந்த சோமசுந்தரரின் திருவிளையாடல் என்பது புரியவில்லையா! இந்த விளையாடல் நிகழக்காரணமே இந்த சகோதரி தான்! அவர்களிடமும் நீங்கள் வழக்கம்போல் அன்புடன் இருக்க வேண்டும், என்றாள். இளையவளுக்கு துன்பமிழைத்தும், தன் மேல் அவள் அன்பு காட்டியது கண்டு தன்னை மன்னிக்க வேண்டினாள். மூத்தவளின் பிள்ளைகளும் தங்கள் சித்தியின் அன்பு கண்டு வெட்கத்தில் தலை குனிந்தனர். அதன்பின், அவர்கள் தங்கமான பிள்ளைகள் ஆயினர். மீண்டும் ஒற்றுமை ஏற்பட்டது அந்தக் குடும்பத்தில்! திருவிளையாடல் புராணம் படித்தால் லட்சுமி கடாட்சம் பெருகும் என்பது ஐதீகம். உங்கள் அனைவர் இல்லங்களிலும் செல்வவளம் பெருகட்டும்

Read more: http://www.penmai.com/forums/spirituality/56460-64-thiruvilaiyadal-puranam-64-a-7.html#ixzz2nzKgFKa9